
காதல்
சொல்ல
வந்தேன்
பாலகுமாரன்
விசா பப்ளிகேஷன்ஸ்
பாலகுமாரன்
காதல் சொல்ல வந்தேன்
விசா

# காதல் சொல்ல வந்தேன்

பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்
புதிய எண் 16, பழைய எண் 55,
வெங்கட்நாராயணா ரோடு,
தி.நகர், சென்னை - 600 017.
போன்: 4342899,4327696.

காதல் சொல்ல வந்தேன்

முதல் பதிப்பு : டிசம்பர் 2002

**No.of Pages : 344**

**விசா பப்ளிகேஷன்ஸ்**

விலை ரூ. 85.00

**KADAL SOLLA VANDHEN**
(Novel)
by
***Balakumaran***

First Edition : December 2002
Price Rs : 85.00

கிடைக்குமிடம் :
**திருமகள் நிலையம்**

Available at:
**Thirumagal Nilayam**
New No.16 Old No.58
Venkat Narayana Road,
T. Nagar,
Chennai – 600 017

Typeset & Printed by :
**Students Offset Services**
No.9, Sungurama Chetty St.,
Chennai - 600 001.

35838
5328632

பொய்மான், அருகம்புல், ஏழாவது காதல் என சமூக நாவல்கள் தொடர்கிறது. காதல் பற்றிய பார்வை மாற்றப்பட்டு விட்டது புரிகிறது. காதலை ஒரு பலமாக, ஆயுதமாக கிரியா ஊக்கியாக மாற்றிக் கொண்டேயிருக்கிறீர்கள். 18-21 வயது இளைஞர்களுக்கு இது புரிய வேண்டுமே என்று கவலை வருகிறது. புரியாமல் போனதால் படும் அவஸ்தைகளை யாருக்குச் சொல்ல. 'கடை விரித்தேன் கொள்வாரில்லை' கணக்காக காதல் பற்றி யோசிக்க இங்கே யாரும் வரவில்லை. சுட்ட பிறகு தீயை தெரிந்து கொள்ள வேகம். வேகம். வேகம். அது போகட்டும், இன்னும் சியாமளி தொடர்கின்றாளே. ஆச்சர்யமாக இருக்கிறது. காதல், காம உணர்வுகளின் பதிவுகளைப்பற்றி பிரமிப்பு ஏற்படுகிறது. எது, எப்படியிருப்பினும் நீங்கள், 'அகல்யா'– பாலகுமாரன் செத்துவிட்டதாகச் சொன்னது பொய். இலேசான மறைவாட்டம் அது. பொய் மானிலும், ஏழாவது காதலிலும் அந்த பழைய பாலகுமாரன் நுழைந்து பார்த்து விட்டு ஓடிப் போயிருக்கிறார் என்பதே நிஜம். மற்றபடி குடும்பத்தாருக்கும் உங்களுக்கும் என் பணிவான, அன்பார்ந்த வணக்கங்கள்.

–பெ. நாகமாணிக்கம், ஆனைக்கல்லானூர்.

என் வயது எழுபது கருதி ஆசீர்வாதம். உங்கள் திறமை கருதி நமஸ்காரம். நான் பெங்களூர் ஆசாமி. தமிழ் புத்தகங்கள் அவ்வப்போது படிப்பேன். உங்களுடைய ஒன்றிரண்டு நாவல்களை முன்பு படித்திருந்தேன். எழுத்தாளர்களின் பல்வேறு கதைகளை அவகாசம் கிடைத்தபோதெல்லாம் படிப்பதுண்டு. சில சமயம் சில கதைகள் படித்தபின் எழுத்தாளர்களை பாராட்டுவது உண்டு. எழுத்தாளர்களுக்கு என்று இதுவரை ஒரேயொரு கடிதம் தான் எழுதியிருக்கிறேன். பல பல வருடங்களுக்கு முன் தமிழ்வாணன் என்கிற லெ. ராமநாதன் என்ற எங்கள் ஊரான தேவகோட்டை இளைஞர் எழுதிய கதையும், என்னுடைய முதல் கதையும் 'மதுரமித்திரன்' என்ற பத்திரிகையில் வெளிவந்தபோது, அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். என்னுடைய இரண்டாவது கதையை இதுவரை எழுதவில்லை. ஆனால் எழுத்தாளருக்கு என்று எழுதும் என்னுடைய இரண்டாவது கடிதம் இதோ.

தமிழ்நாட்டிலிருந்த போது பாலகுமாரன் நாவல்களைப்படிக்க வேண்டுமென்று அவ்வப்போது நினைத்துக் கொள்வேன். இந்த ஊரில்

வாசக சாலையில் விரிகுடாப் பகுதி தமிழ் மன்றம் (Bay Area Tamil Manram) தமிழ் புத்தகங்களை அன்பளிப்பாக அளித்து தனது நற்பணிகளில் ஒன்றாக இதை செய்து வருகிறது. அதிலிருந்து தங்கள் நாவல்களை பெற்று படிக்க ஆரம்பித்தேன். முதலில் பாலகுமாரனைப் படிக்க வேண்டும் என்று தோன்றியது. பின் பாலகுமாரனையே படிக்க வேண்டும் என்று ஆகிவிட்டது. நேற்றுப்படித்து முடித்தது ''இனிய யட்சினி''.

ஐயா, அது கதையா, காவியம் அல்லவா. அதைப் படிக்க நேர்ந்தவர்கள் பாக்கியசாலிகள், விரிவாக விவரிக்க எனக்கு தகுதி போதாது. ஆனால் இலக்கண வழியாக கதை எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு அவரவர்கள் தங்கள் சௌகரியப்படி இலக்கணம் கற்பித்து கொள்வார்கள். உயர்ந்த கதை என்பது படிப்பவரின் மனதில் புகுந்து, சிந்தனையை கிளறி, ஆக்க சக்திகளை ஊக்கி, எண்ணங்களில் இனிமையும் இயல்பும், ஒழுக்கமும் ஏற்படுத்தி, அவனை ஒரு மேல் நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பது என்னை பொறுத்தமட்டில் இலக்கணம் ஆகும்.

இது தங்களது உயர்ந்த கதை மட்டுமல்ல, மிக உயர்ந்த கதை. அவரவர் செய்கைகளை அவரவரின் மூலமே எண்ணப்படுத்தி, முன்னிலையில் பேச வைத்து வார்த்தைகளை சுவையுறச் சேர்த்து, எழுத்தில் ஆளுமை சேர்த்து, ஆண் பெண் கலவியை கொச்சைப்படுத்தாது, அது ஒரு இனிய அனுபவம் என்கிற உண்மையை விபரப்படுத்தி, பெண்மைக்கு உயர்வும், ஆணுக்கு கம்பீரமும் கொடுக்கும் தங்கள் எழுத்துத் திறனை நினைத்து நினைத்து மகிழ்கிறேன்.

தாங்கள் நீடு வாழ்ந்து இன்னும் எழுதிக் கொண்டே இருக்கவும், அவைகளை நான் படித்துக் கொண்டேயிருக்கவும் இறைவனை வேண்டுகிறேன்.

தாங்கள் எப்படி எழுதுகிறீர்கள் என்பதே ஒரு அதிசயம். இந்தியா வரும்போது தங்களை எங்காவது சந்திக்கக் கூடுமென்று எண்ணுகிறேன். சந்தித்தோமானால் நான் ஒன்றும் சொல்லமாட்டேன். ஒன்றே ஒன்றைத் தவிர, ''தங்கள் எழுத்துக்கு தலை வணங்குகிறேன். தங்கள் திறமை வளர்க.''

—என். நாகரத்னம், SAN JOSE-CA 95116, U.S.A

36838
சி328632

# 1

மழை வலுத்துப் பெய்யத் துவங்கியது. அன்னபூரணியம்மாள் மழையை வேடிக்கை பார்த்துக் கொண்டே புடவைத்தலைப்பில் உடம்பை போர்த்திக் கொண்டாள். மழையால் ஏற்பட்ட குளிரை அனுபவிக்க, அனுபவிக்க சந்தோஷமாக இருந்தது. அந்தக் குளிரை போர்த்திக் கொண்டு அனுபவிப்பது இன்னும் ஆனந்தமாக இருந்தது.

நல்ல மழையில் வேண்டுமென்றே நனைவது ஒரு முரட்டுத்தனம். தீ மிதிப்பது போன்ற ஒரு பதற்றம். மழையில் நனைந்து ஓடக்கூடாது. ஒதுங்கி நின்று மேலே சாரல் படாமல் பாதுகாப்பு செய்து கொண்டு, நாலாபக்கமும் சுற்றிச்சுற்றி மழை பெய்வதைப் பார்க்க வேண்டும். மரங்கள் நனைவதை, பூமி நனைவதை, பறவைகளும் மிருகங்களும் ஒண்டிக் கொள்வதைப் பார்த்து ரசிக்க வேண்டும். மழை பெய்யத்

துவங்கியதும் சில ஆண்கள் வேட்டியை மடித்துக் கொண்டு தெருவில் இறங்கி வேண்டுமென்றே அலைவதைப் பார்த்திருக்கிறாள்.

''மழையில நனையிற மாதிரி சுகம் உலகத்துல எதுவும் இல்லை'' என்று அவர்கள் உரக்க அழுத்தந்திருத்தமாய்ப் பேசுவதைக் கேட்டு வியந்திருக்கிறாள். அப்படி அலைபவர்களை உற்றுப் பார்த்திருக்கிறாள். அவர்கள் மழையை அனுபவிப்பதாய் சொல்லுகிறார்களே தவிர, ஒரு பொழுதும் மழையை அனுபவிக்கவில்லை என்பது வெகு சீக்கிரம் புரிந்துவிட்டது.

மழைக்கு எதிரே ஒரு முரட்டுத்தனம் காட்ட அவர்கள் முயல்கிறார்கள். மழை பூமியில் ஒரு முரட்டுத்தனம் காட்ட பதிலுக்கு மழையை எதிர்த்துப் போராட முடிவு செய்கிறார்கள். அதனால்தான் தெருவில் இறங்கி முன்னும், பின்னும் அலைந்து தன் பலத்தைக் காட்டிக் கொள்கிறார்கள்.

மழையை அப்படி வரவேற்கக் கூடாது. எதிர்த்து உரக்க கூச்சலிடக் கூடாது. ராஜா வர, அவர் எதிரே கம்பு சுழற்றலாம். அது வரவேற்புதான். ஆனாலும், இரண்டு புறமும் உப்பரிகையில் நின்றுகொண்டு, அரசர்மீது பூ தூவுவது எத்தனை அழகு. அதில் அரசருக்கு எத்தனை சந்தோஷம். தூவுகிற பெண்களுக்கு எத்தனை சந்தோஷம். எவ்வளவு பெரிய சுகமான மரியாதை அது. மழையை அப்படித்தான் வராண்டாவிலோ, ஜன்னல் அருகிலோ, நான்கு புறமும் திறந்த கூரைக் கொட்டகையிலோ அமர்ந்து வேடிக்கை பார்க்க வேண்டும்.

இந்த வீட்டு மாடியில், மாடியைச் சுற்றி ரேழி இருக்கிறது. மிக பழங்கால அமைப்பு இது. அப்பாவின், தாத்தா கட்டிய வீடு இது. அந்த மனிதன் நல்ல ரசிகன். மழையை,



வெய்யிலை, காற்றை அனுபவிக்க மாடியெழுப்பி, மாடியில் இரண்டு அறைகளும், ஒரு பெரிய கூடமும் கட்டி, அதைச்சுற்றி சிகப்பு சிமெண்ட் தளம் போட்டு, அந்தச் சிமெண்ட் தளத்திற்கு கூரைபோட்டு ரேழியாக மாற்றி விட்டார். பின்புறம் சற்று இன்னமும் இடம்விட்டு திறந்த வெளி அமைத்து, வற்றல் உலர்த்திக் கொள்ளவும், துணி உலர்த்திக் கொள்ளவும் வகைகள் செய்திருக்கிறார்.

பகலில் மழை பெய்கிறபோது, இரவில் காற்று வேண்டுமென்று உடம்பு கேட்கிறபோது இப்படி இந்த ரேழியைச் சுற்றி மெல்ல நடந்தால் போதும். இயற்கையோடு ஒட்டி உறவாட முடியும்.

நகரின் நடுமையத்தில் சிந்தாதிரிப்பேட்டையில் இப்படியொரு வீடு கிடைத்திருப்பது மிகப் பெரிய பாக்கியம். மூத்தவர்களுடைய ஆசீர்வாதம்.

ஆனால், இந்த வீட்டை விற்று விடவேண்டுமென்று வீட்டிலுள்ள சிலர் விரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

''வேற இடத்துக்குப் போயிடுவோம். வீடு நல்லாயிருந்தா போதுமா சிந்தாதிரிப்பேட்டையை பார். குப்பைமேடு மாதிரி இருக்கு. எனக்குப் பிடிக்கவேயில்லை. பெசன்ட் நகர் போயிருக்கியா. தெருவும் மரமும் பார்த்தா மூச்சு முட்டி செத்துருவோம் போல ஆயிப்போச்சி. வீடுன்னா அங்க இருக்கணும். தெருவுன்னா அப்படி இருக்கணும். வா... உன்னை ஒரு தடவை மெட்ராஸ் சுத்திகாமிக்கிறேன். ஒவ்வொரு இடமும் என்னமா இருக்குன்னு பார்த்துக்க. அப்பதான். சிந்தாதிரிப்பேட்டை சாக்கடையை விட்டு வெளியே வருது. வெறும் மீன் மார்க்கெட் இது.''

பிள்ளை கத்தினான். மகன் சுகுமாருக்கு மெல்ல பேசவே தெரியாது. தான் சொன்னதை உடனடியாக எல்லோரும் புரிந்து

கொண்டு செயலாற்ற வேண்டும் என்பது போல், வேகமாய் உத்தரவாய்ப் பேசுவான். இப்படிப் பேசாதே என்று பலமுறை சொல்லியும் அந்தப் பழக்கம் அவனிடமிருந்து போகவேயில்லை.

சுகுமார் மிக நல்லவன்தான். அம்மாவுக்கு சின்ன தொந்தரவு ஏற்பட்டாலும் ஓடிப்போய் என்ன வேண்டுமென்று உடனே விசாரிக்கிறவன்தான். ஆனால், பேச்சு மட்டும் தான் கூரையைப் போய் இடிக்கிற வண்ணம் உரத்த குரலில் இருக்கும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் 'சுகுமாரன் ஏதோ சண்டை போட்டுக் கொண்டிருக்கிறான்' என்றே நினைத்துக் கொள்வார்கள்.

சுகுமாரன் மனைவி அவனுக்குப் பரிமாறிக் கொண்டே அவர்கள் இருவரையும் மாறி மாறி பார்த்தாள்.

''என்னம்மா. உனக்கு இந்த வீடு புடிக்கலையா. நீதான் வேண்டாம்னு சொன்னியா.'' மெல்ல அன்னபூரணி மருமகள் பக்கம் திரும்ப, கலாவதி கரண்டியைக் குழம்பில்போட்டு விட்டு ''ஐயையோ... நான் இல்லை மாமி'' என்று கைகூப்பினாள்.

''இந்த விஷயத்தை இவர் பேச ஆரம்பிச்சவுடனேயே தெரியும். உடனே நீங்க என் பக்கம்தான் திரும்புவீங்க; என்னைத்தான் கேள்வி கேட்பீங்கன்னு. நான் வாயே திறக்கலை மாமி'' என்று சொன்னாள்.

''ஏன். ஏன் பயப்படற எங்கம்மா என்ன புலியா, சிங்கமா உன்னை அடிச்சே தின்னுடுவாங்களா பெசன்ட் நகர் புடிச்சிருக்கும்னு நீ சொல்லலியா. காந்திநகர், அடையார், திருவான்மியூர் இதெல்லாம் உனக்குப் புடிச்சிருக்குன்னு சொல்லலியா. அம்மா கேட்டவுடனே நான் சொல்லலை..



நான் சொல்லலைன்னு எல்லாரும் ஓடிப் போயிடறீங்களே என்ன விஷயம் நீ சொன்னன்னு சொல்லு. என்னா பண்ணிருவாங்கன்னு பார்த்துவிடலாம்.'' மறுபடியும் மகன் கத்தினான்.

மருமகள் பின்வாங்குவதும் மகன் முன்னேறுவதும் பார்த்து அன்னபூரணி வாய்வட்டுச் சிரித்தாள்.

''பெசன்ட் நகர் பத்தி என்னா சொன்னேன்னு சொல்லேண்டி நான் என்ன அவன் சொன்னா மாதிரி அடிச்சி தின்னுடவா போறேன்'' மருமகளைப் பார்த்து சாதாரணமாகப் பேசினாள்.

''நான் அந்த இடமெல்லாம் போனதே இல்லை மாமி. நான் மெட்ராஸுன்னு வந்தா, எங்க சித்தப்பா இருக்கற வண்ணாரப்பேட்டையில் தங்குவேன். ஐலேண்ட் கிரவுண்டு எக்ஸிபிஷன் போவேன். சாந்தி தியேட்டர், கேஸினோ தியேட்டர், சித்ரா தியேட்டர்னு மூணுதான் போயிருக்கறேன். ஏதோ ஒரு தடவை மயிலாப்பூர் திருவிழாவுக்குக் கூட்டிட்டுப் போனாங்க. உள்ள போகமுடியலைன்னு ஒரு நாலு மூலை ரோடுக்குப் போய் நின்னுட்டு, அப்படியே திரும்பி வந்துட்டோம்.''

''அதனால... என்னா... அதைச் சொல்லு.'' பிள்ளை மனைவிக்கு எடுத்துக் கொடுத்தான்.

அவர்கள் இரண்டு பேரையும் அன்னபூரணி ஆச்சரியத்துடன் பார்த்தாள். மழை இன்னும் அதிகமாயிற்று.

''முந்தாநேத்து பெசன்ட் நகருக்குள்ள இவர் அழைச்சிட்டுப் போனவுடனே அப்படியே திகைச்சு போயிட்டேன். 'மெட்ராஸ்ல இப்படியொரு இடம் இருக்கா. ஃபாரின் மாதிரி இருக்கே' அப்படின்னு சொன்னேன். நான் சொன்னது இவருக்குப் புடிச்சுப் போச்சு. தெருத் தெருவா

ஸ்கூட்டர்ல சுத்துனாரு. அங்கேயிருந்து அடையார் போனோம். திருவான்மியூர் போனோம். அப்படியே கிண்டி பக்கம் இருக்கற இடத்துக்குப் போனோம். எல்லா இடமும் ரோடு முழுக்க மரமுமா, வீடு முழுக்க செடியுமா, பெரிய பெரிய பங்களாவா, அதிகமா ஆள் நடமாட்டம் இல்லாம இருந்தது. திரும்ப சிந்தாதிரிப்பேட்டைக்குள்ள நுழையும் போது ஐயோ... மறுபடியும் இங்க வரவேண்டியிருக்கேன்னு ஒரு நோவு இருந்தது நிஜம்தான்.''

''அதனாலத்தான் சொல்றேன். இந்த வீட்டை அப்படியே சப்ஜாடா சேட்டுக்கு வித்துட்டு பெசன்ட் நகர் பக்கம், திருவான்மியூர் பக்கம் போயிடலாம். இந்த வீடு எழுவத்தஞ்சு எண்பது ரூபாய்க்குப் போகும். பெசன்ட் நகர்ல நாப்பது, அம்பது ரூபாய்க்குத் தோட்டம் தொறவோட நல்ல வீடு வாங்கி நிம்மதியா செட்டில் ஆயிடலாம்.''

''அதுக்கப்புறம்...?'' அன்னபூரணியம்மாள் நிதானமாகக் கேட்டாள்.

''என்னா... அப்புறம்.''

''சாப்பாட்டுக்கு என்ன வழி.''

''எங்கனா.. எதுனா... வேலை பார்த்துக்க வேண்டியதுதான்.''

''எங்கனா...எதுனா... இதுவரைக்கும் நீங்க ஏன் வேலை பார்க்கலை.''

''கடைசியில... உடனே அதைக் குத்தி காமிச்சிடுவீங்களே'' சோற்றிலிருந்து பிள்ளை சுகுமார் கை உதறினான். மருமகள் கலாவதி அவன் தோளில் கைவைத்து அமைதியாக இருங்கள் என்பது போல சொன்னாள். உடனே அமைதியானான்.



மருமகள், மகனை - விரல் நுனியில் வைத்திருக்கிறாள் என்பது தெளிவாகப் புரிந்தது. மெல்லியதாய் சிரிப்பும் வந்தது.

''நான் 'டயர் கம்பெனியில வேலை பார்க்கலையா. அச்சாபீஸ்ல வேலை பார்க்கலையா. மகாராணி தியேட்டர்ல மூணு வருஷம் வேலை பார்க்கலையா. நாலு மாசம் சும்மா இருந்தா குத்தலாப் பேசறீங்களே.''

''அம்மா எங்க குத்தலா பேசினாங்க. ஏன் இத்தனை நாள் வேலை பார்க்கலேன்னுதான் கேட்டாங்க. அதுக்குக் காரணம் சொல்லுங்களேன்'' மருமகள் எடுத்துக் கொடுத்தாள்.

''இனிமே வேலைக்குச் சேர்ந்தா வுட்டுட்டு வராத வேலையா, நல்ல வேலையா சேரணும். அதனாலதான் நான் எல்லா இடமும் ஒத்துக்கலை.''

''என்னிக்கு கிடைக்கும் நல்ல வேலை.''

''எப்ப வேணா கிடைக்கும். ஆறேழு இடத்துல சொல்லி வச்சிருக்கேன்.''

''ரொம்ப சந்தோஷம். வேலை கிடைக்கட்டும். சம்பளம் வரட்டும். உன் சம்பளத்து யோக்கியதை வச்சுட்டு வீடு விக்கறத பத்தி தீர்மானம் பண்ணலாம்.''

''விலைக்கு வரபோது வித்துடலாமே.''

''டேய்... இது எப்பவுமே விலைக்குத் தயாரா இருக்கற பொருள். விக்கறேன்னு சொன்னா போதும் நாலா பக்கத்துலேர்ந்தும் ஜனங்கள் வந்து நின்னு என்னா விலை... என்னா விலைன்னு கேட்பாங்க. இது விக்க முடியாத விஷயம் இல்லை''

''ஆனா... இப்படியே போட்டு வச்சிருந்தீங்கன்னா கட்டடம் பாழாபோயி விலை மட்டமா போவும்.''

''இந்தக் கட்டடம் பாழாகறதுக்கு இன்னும் இருவது வருஷம் ஆகும். அதுக்கு முன்னாடி வித்துடலாம் கவலைப்படாத.'' மெல்லிய குரலில், ஆனால், உறுதியான முறையில் அன்னபூரணியம்மாள் மகளிடம் பேச, மகனும், மருமகளும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''ஏன்தான் இப்படிக் கோவிச்சுக்கறியோ தெரியலை'' மகன் சட்டென்று அலுத்துக் கொண்டான்.

யாராவது உறுதியாக, நிறைவாகப் பேசினால் சுகுமாரன் பயந்து விடுகிறான். எப்படி மாற்றுவது என்று தெரியாமல், எப்படி எதிர்ப்பது என்று புரியாமல் தடுமாறி விடுகிறான்.

இதுதான்... இதுதான்... கொட்டுகிற மழையில ஆடுகிற புத்தி. மழையோடு பேசத் தெரியாத புத்தி. மழையை எப்படி வரவேற்பது என்று அறியாத முட்டாள் தனம்.

நீ வேகமாக பூமியைத் தாக்குகிறாயா, நான் நடுவே நின்று உன்னை விட வேகமாக ஆடுகிறேன் பார். என்னைத் தாக்கிப் பார் என்று மழையை தேவையற்று சவாலுக்கு அழைக்கும் தெளிவற்ற குணம். மழை மனிதரைத் தாக்க வரவில்லை என்பது புரியாத புத்தி.

உலகத்தில் ஒவ்வொரு விஷயத்தோடும், ஒவ்வொரு விதமாகத் தொடர்பு கொள்ள வேண்டும். எதனோடு எப்படித் தொடர்பு கொள்ள வேண்டும் என்று தெரிந்தவர்கள் மிகச் சிலரே.

தனக்கு மட்டும் இந்த நிதானம் எப்படி வந்தது.

மழையை ரசிக்கின்ற புத்தி, கடலோடு பேசுகின்ற புத்தி, மணலில் அழுந்த நடந்து, அதை அனுபவிக்கிற புத்தி, காற்றை ஆழ இழுத்து நிதானமாய் சுவாசிக்கிற புத்தி, மேகங்களுக்கு நடுவே மிதக்கின்ற நிலவை குளிரக் குளிர பார்க்கின்ற புத்தி,



சூரியனை வணங்குகின்ற புத்தி, காடுகளுக்கும், மலைகளுக்கும் ஊடே போகும்போது அவைகளை அதிசயமாய்க் காணுகிற புத்தி தனக்கு மட்டும் எப்படி வந்தது.

தன்னுடைய புருஷனால் ஏற்பட்ட புத்தி இது. புருஷன் கற்றுக் கொடுத்து வரவில்லை. புருஷனுக்கு இந்தப் புத்தி இல்லை என்று தெரிந்ததும், புருஷன் இதற்கு எதிர்ப்பதமாய் இருக்கிறான் என்று தெரிந்ததும், புருஷனை விட்டு மனம் விலகி, புத்தி இப்படி இயற்கையை ஸ்நேகம் கொள்வதில் அதிகப்படுத்திக் கொண்டுவிட்டது.

''ஆஹா... ஆஹா... என்னா தொடை... என்னா தொடை.. எழுந்து நின்னா ஏழு அடி இருப்பா போலிருக்கு. எப்படித் தின்னாலும், எவ்வளவு தின்னாலும் போறாது'' என்று இருட்டு அறையில் சின்னத் திரையில் அவிழ்த்துப் போட்டு ஆடும், மெத்தையில் புரளும் ஐரோப்பிய பெண் பிள்ளைகளை ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, தன் புத்தி திசை மாறிவிட்டது.

''எதுனா டிரிபிள் எக்ஸ் இருக்குதா.''

கடையில் ஏறினவுடன் கூச்சமில்லாமல் விசாரிக்க, அவள் புருஷனால்தான் முடியும்.

கடைக்காரர் ரகசியமாய் எடுத்துக் கொடுக்க 'இதுதானே... இதைப் பார்த்திருக்கேன். எங்கிட்டயே இருக்குது. மொத்தம் நாப்பது கேசட் வச்சிருக்கேன்'' பல் தெரிய அந்த வியாபாரி கூச்சப்பட, உரத்த குரலில் பேச அன்னபூரணியின் புருஷனுக்கு இயல்பாய் வரும்.

''என்னா தப்பு. மனுஷாளா பொறந்தவன் நாலு விதத்தையும் அனுபவிக்கதான் செய்யணும். நம்ம என்னா அடுத்தவன் பொண்டாட்டியையா கைய புடிச்சி இழுத்தோம். இதுக்குன்னு ஆடறவங்களை ஆடவுட்டு வீடியோ போட்டு

விக்கறான். நாம துட்டை போட்டு வாங்கறோம். இதை ஏம்ப்பா... அரசாங்கம் தடை பண்ணியிருக்குது நம்மூர் சினிமால துணி போட்டுட்டு ஆடறாங்க. வெளியூர் சினிமால துணியில்லாத ஆடறாங்க. அவ்ளோ தானே வித்தியாசம். நான் மட்டும் சட்டசபையில நுழைந்தேன்னு வச்சுக்க நாக்கைப் புடிங்கிக்கற மாதிரி கேள்வி கேட்பேன்.''

ஆனால், நாக்கைப் பிடுங்கிக் கொள்வது போல் சாவு வந்துவிட்டது.

வயிற்றுவலி, மூச்சிரைப்பு, தலைசுற்றல், பசியின்மை, கடும் அயர்ச்சி, கைகால் அரிப்பு என்று பலவித காரணங்களுக்காக டாக்டரிடம் போக, எல்லாவற்றுக்கும் மருந்து எழுதி இரண்டாயிரம் ரூபாய்க்கு வாங்கிவிட்டு, ரத்தப் பரிசோதனையும் செய்துவிட்டு திரும்பி வரும் போது, டாக்டர் அவளைத் தனியே கூப்பிட்டு, ''உங்க புருஷனுக்கு எய்ட்ஸ் இருக்கும்மா. நீங்களும் தயவு செய்து செக் பண்ணிக்கோங்க'' என்று எச்சரித்து அனுப்பினார்.

அவளுக்கும் உடனடியாக ரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது. வியாதி இல்லை என்று சொல்லப்பட்டது. இதைச் சொல்வதா வேண்டாமா என்று வீடு தவித்தது.

சொல்வதில்லை என்று முடிவு செய்து சில காலம் காத்திருந்தது.

ப்ளட் டெஸ்ட் ரிப்போர்ட் வரவில்லையே என்று அவனாக சோதனைச் சாலைக்கு போன் செய்து 'ராமலிங்கம் ப்ளட் ரிப்போர்ட் வரலீங்களே'' என்று கேட்க ''சொல்லிட்டோமே. எய்ட்ஸ் இருக்குதே'' என்று அவர்கள் குரல் கொடுத்து விட்டார்கள்.

சமையல் அறைக்கு அருகேயுள்ள நாற்காலியில் அமர்ந்து அவன் முகத்தில் அறைந்து கொண்டு அழுதான்.



குப்புறப்படுத்துக் கொண்டான். யாராவது அருகில் வந்தால் தள்ளிப் போங்கள் என்று கத்தினான். கொன்னுட்டீங்களே... என்னைக் கொன்னுட்டீங்களே என்று உரக்கக் கூவினான்.

யார் கொன்றது என்று கடைசிவரை சொல்லாமல் இருந்தான். எதனால் ஏற்பட்டது என்பதை வாய் திறந்து பேசாதிருந்தான். கதறி அழுதான். அவள் காலைப் பிடித்துக் கொண்டு விக்கினான். உனக்குத் துரோகம் பண்ணிட்டேன்டி என்றான்.

டிரிபிள் எக்ஸ் கேசட்டையும் டி.வி.யையும் கல்லால் உடைத்து நாசமாக்கினான்.

விபூதி இட்டுக் கொண்டான். பூஜை அறைக்குப் போய் உட்கார்ந்து கைகூப்பி கைத்தல நிறைகனி.. என்று இரண்டு வரி பாடினான். மூன்றாம் வரி பாட முடியாமல் அழுதான். மறுநாள் காலை டைனிங் டேபிள் மீது சேர் போட்டு, சேர் மீது ஏறி நின்று, மேலே இரண்டு உத்திரங்களுக்கு நடுவே மின் விசிறி மாட்டுவதற்காக இருந்த இரும்புக் கழியில் கயிறு போட்டு இறுக்கி இழுத்து மறு முனையில் மாட்டிக் கொண்டு வெகு நேரம் நின்றபடி இருந்து பிறகு பளிச் சென்று உதைத்து இறந்து போனான்.

இரவு, நாற்காலி உருண்டு விழும் சத்தம் கேட்டு, எல்லோரும் எழுந்து கொண்டார்கள். என்னா... என்னா... சத்தம் என்று படுக்கையைவிட்டு எழுந்திருக்காமல் கேட்டார்கள்.

அன்னபூரணி மட்டும் கதவு திறந்து எங்கே சப்தம் என்று பார்க்க, புருஷன் தொங்கி ஆடிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு அலறினாள். ஓடிப்போய் காலைத் தூக்கினாள். ஆனால், அதற்குள் கழுத்து உடைந்துவிட்டது. இறக்கி தரைக்குள் படுக்க வைப்பதற்குள் பிராணன் போய்விட்டது.

மருந்து மாத்திரை சீட்டின் பின்பக்கத்தில் இரண்டே வரி எழுதி கையெழுத்து போட்டிருந்தான். அதன் மீது மருந்து மாத்திரை டப்பாவைக் கனமாக வைத்திருந்தான்.

''நான் மறுபடி பிறப்பேன் நல்லவனாய்'' ராமலிங்கம் தேதி, நேரம் எழுதியிருந்தான்.

அந்தத் தேதியும், நேரமும்தான் அவன் மரணத்தில் உறுதியாயிருப்பதை அவளுக்குத் தெரிவித்தது.

அந்தக் காகிதத்தை அவள் ஃப்ரேம் செய்து தன் அறையில் மாட்டிக் கொண்டிருக்கிறாள்.

மகன் புருஷனைப் போலவே எல்லாவற்றையும் பற்றிப் பேசுவதை அடிக்கடி வியப்போடு கவனிப்பாள். புருஷனைத் தவறவிட்டதுபோல், மகனைத் தவறவிட அவள் தயாராக இல்லை. அதே நேரம் இந்த வீட்டின் மேன்மைக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

ஏதேனும் செய்ய வேண்டும், மிக நிச்சயம் செய்ய வேண்டும். என்ன செய்யவேண்டும் என்று யோசிக்கத் தான் அடிக்கடி ரேழிக்கு வந்து விடுகிறாள்.

இப்போது ரேழிக்கு வந்தபோது, மழை கனத்துப் பெய்தது. மழை அதிகரிப்பில் ஏதோ தவறாகி மின்சாரம் சட்டென்று நின்றது. இருள் அடர்ந்து சுற்றிக் கொண்டது.

மருமகள் மெழுகுவர்த்தியோடு ரேழிக்கு வந்து மர ஸ்டூலில் நிற்க வைத்தாள். அவன் அருகே வந்து நாற்காலியில் உட்கார்ந்தாள்.

''வீடு விக்க வேணாங்கறியா'' மிருதுவான குரலில் கேட்டாள்.

''ஆமாம்'' அன்னபூரணி பதில் சொன்னாள்.



''வேற என்ன பண்ணலாங்கற'' இப்போது அவன் குரல் மெதுவாக இருந்தது.

இருட்டும், மழையும் அவளை மென்மைப் படுத்தியிருக்க வேண்டும்.

இயற்கை மனிதர்களுக்கு நல்ல குணங்களைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. வெகு சிலர்தான் கற்றுக் கொள்கிறார்கள். இருட்டிலிருந்து கற்றுக் கொள்வதற்கு நிறைய இருக்கிறது. ஒருவேளை மகன் சுகுமாரன் இப்பொழுதுதான் கற்றுக் கொள்ளத் துவங்கியிருக்கிறானோ தெரியவில்லை.

அவள் சுகுமாரனைப் பார்த்துத் திரும்பினாள்.

''கொஞ்ச நேரம் சும்மாயிரு.''

''எதுக்கும்மா. எதுக்கு சும்மாயிருக்கறது.''

''நல்லா யோசிக்கறத்துக்கு.''

அன்னபூரணி பதில் சொன்னாள்.

அவனுக்கும், மருமகளுக்கும் அவள் பேச்சு புரிய வில்லை. ஆனாலும், அவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

# 2

ஆனாலும் அவளும் இப்படித்தான் புலம்பிக் கொண்டிருந்தாள்.

''புருஷனா நீ. வெட்கமா இல்ல. ச்சீ..தூ''... என்று தேவையில்லாமல் வார்த்தைகளை இறைத்துக் கொண்டிருந்தாள்.

''ஊர்ல இருக்கற எல்லா பொம்பளைக்கும் நல்ல புருஷன் கிடைக்கும்போது, எனக்கு மட்டும் இப்படி ஒருத்தன் கிடைச்சிருக்கானே, கடவுளே... கடவுளே...'' என்று தலையில் அடித்துக் கொண்டிருந்தாள். இருபத்தேழு வருடங்களுக்கு முன்பு அவளுடைய இருபத்து மூன்றாவது வயதில் இந்த அலறல் அவள் வீடு முழுவதும் எதிரொலித்தது. அவள் அண்ணனும், தம்பியும் கடும் கோபமடைந்தார்கள். அப்பா என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார். அவரது மகன்களைச் சமாதானம் செய்தார்.

''வேகமாக எதுவும் செய்துவிடாதீர்கள். நம்முடைய குழந்தையின் வாழ்க்கைதான் கெட்டுப் போகும். அவன் திருந்துவதற்கு வாய்ப்பு கொடுங்கள்'' என்று சொன்னார்.

அவனிடம் குடிப்பழக்கம் இல்லை. சிகரெட் இல்லை. கஞ்சா இல்லை. வேறு போதை விஷயங்கள் இல்லை. ஆனால், பெண்கள் மீது அவனுக்கு சொல்லொண்ணா ஆசை இருந்தது. வர்ஜா வர்ஜமில்லாது, எல்லாப் பெண்களையும் எல்லா நேரமும் கூடுகின்ற ஒரு வேகமிருந்தது. கூடுகின்ற ஒரு சுகம் மட்டுமல்ல. ஒரு ஆபாசப் பேச்சு, ஒரு ஆபாச நடவடிக்கை, கொக்கரிப்பு இருந்தது. 'ஆமாம், நான் அப்படித்தான் பேசுவேன் யார், என்ன செய்ய முடியும்' என்கிற இறுமாப்பு. நடுச்சபையில் பெண்களை, அவர்களைச் சார்ந்தவர்களைக் கடும் இழிவாகப் பேசுதல். 'போகத்திற்கு மட்டுமே பெண்கள்' என்பது போல் நடந்து கொண்டான்.

''என்னா... உங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லையா. அப்புறம் நீ ஏண்டி இங்க உட்கார்ந்துட்டிருக்க, போ. எங்க மாமியாருக்கு உடம்பு சரியில்லைன்னா எனக்குப் பதிலா உனக்குப் பதற வேணாமா.''

கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக அம்மா வீட்டிற்கு அனுப்புவான்.



''வெறும் தும்மல், சளி, ஜுரம். இதற்காகவா ஓடிவந்தாய்'' அம்மா கடிந்து கொள்வாள்.

''போ. அவனைத் தனியே விட்டு வராதே'' என்று திருப்பி அனுப்புவாள். இரவோடு இரவாக பஸ் ஏற்றி சென்னைக்குத் திருப்பி அனுப்புவாள். துணைக்குத் தம்பி வருவான். நான்கு மணிக்குச் சென்னை வந்து, ஐந்து மணிக்கு வீட்டின் கதவைத் தட்ட, எவளோ கதவைத் திறப்பாள். உள்ளே போய் நின்றால் மூலைக்கொரு பெண்ணாய் ஆறு பெண்கள் படுத்துக் கொண்டிருந்தார்கள். சமையல் அறை முழுவதும் ஓட்டலில் இருந்து வாங்கி வந்த சாப்பாட்டுக் குப்பையாக இருந்தது.

எதிர்வீட்டில் பெருக்குகிற பெண்பிள்ளை, அடுத்த தெருவில் காய்கறி விற்கின்ற ஏழைப் பெண், ஏதோ ஒரு பேட்டையில் கஞ்சாவிற்கிற பெண் என்று கையெழுத்துக் கூட போடத் தெரியாத பெண்களை இழுத்து வந்து சரஸமாடுவான்.

''உன்னை யார் வரச் சொன்னது''- அவளை அடிக்கக் கை ஓங்கினான்.

பீரோவில் பல புடவைகள் காணாமல் போயிருந்தன.

இரண்டு பை நிறைய புடவையோடு கிளம்பிய ஒரு பெண்ணை நிறுத்தியபோது, அவள் 'இது நான் சம்பாதித்தது' என்று உரக்கச் சொன்னாள்.

''துணி வேணும்னா – துணி இல்லாத இருக்கணும்'னு உன் புருஷன்தான் சொன்னான்'' என்று அவள் மீண்டும் சொல்ல, அன்னபூரணி வெட்கமடைந்தாள். கை கூப்பி அவளை வெளியே அனுப்பினாள்.

எல்லோரும் வெளியே போய் விட நடுக்கூடத்தில் உட்கார்ந்து அழுதாள். தம்பி சொல்லிக் கொள்ளாமல்

வெளியேறினான். வீட்டிற்குப் போய் தாய் தந்தையரிடம் சொல்லியிருப்பான் போல. மறுநாளே அவர்கள் வந்தார்கள். 'இது நியாயமா' என்று கேட்டார்கள்.

''ஏதோ ஒரு தடவை தப்பா போயிடுச்சி. இனிமே நடக்காது'' என்று அவன் பதில் சொல்லி அவர்களைத் திருப்பி அனுப்பினான்.

''உங்க பொண்ணு சரியா இருந்தா... நான் ஏன் போறேன்'' என்று நடுவே ஒரு வார்த்தை உதிர்த்தான்.

அம்மா அவளுக்கு ஆயிரம் விதமாய் உபதேசம் சொன்னாள்.

''ஆண்கள் அப்படித்தான்' என்று சொன்னாள்.

ஆனால், அவன் புருஷனுக்கு ஈடு கொடுக்க அவளால் முடியவேயில்லை.

காதல் என்பது பூ எனில்; காமம் என்பது வாசனை. காதல் என்பது தேன் கூடு எனில்; காமம் என்பது தேன்துளி.

அவள் புருஷனுக்கு இடம், பொருள், ஏவல் முக்கியமில்லை.

எதற்குச் சாப்பிடுவது. தூங்குவதற்கு. எதற்குத் தூங்குவது. சாப்பிடுவதற்கு என்று ஒரு விஷவட்டத்தில் சிக்கிக் கொண்டிருந்தான்.

திருமணத்திற்கு முன்பே அவன் கெட்டுப் போனவன். 'அவனைத்தான் அவளுக்குப் பார்த்திருக்கிறது' என்று வெளியில் சொல்ல இரண்டு மூன்று பேர் திகைத்து நின்றார்கள். 'என்ன?' என்று கேட்டபோது 'ஒன்றுமில்லை. விளையாட்டுக்காரப் பையன். இனி உன் காலடியில் விழுந்துகிடப்பான்' என்று சிரித்தபடி சொன்னார்கள்.



''காசு இருக்கறவனைப் பத்தி பொறாமையா நிறைய பேர் பேசுவாங்கம்மா... பெருசா இதை மனசுல எடுத்துக்காதே'' – அப்பா சமாதானம் சொன்னார்.

ஆனால் அவரும் கவலைப்பட்டார். இதை நிறுத்தி விடலாமா என்று கூட ஒரு நிமிடம் அப்பா யோசித்தார். ஆனால் அடுத்தப்படி அவள் தங்கைக்கு வரன்கள் வந்து கொண்டிருந்தன.

அடுத்த இரண்டு பேர் நிச்சயம் திருமணம் செய்து கொள்கிறேன் என்று வந்திருந்தார்கள்.

வந்தவர்கள் நல்ல குடும்பத்தினர். இதை வேண்டாமென்று விலக்க ஊருக்கு நடுவே நிறைய பேச்சு வரும். உறவுகளுக்கு நடுவே நிறைய கேள்வி வரும்.

''வரட்டும். நான் பதில் சொல்லிக்கறேன். என் பொண்ணு வாழ்க்கை தான் எனக்கு முக்கியம்'' என்று தந்தை எழுந்தபோது, அவளே அடக்கி விட்டாள்.

''கொஞ்சம் முன்ன, பின்ன இருக்காங்க. அவ்ளோ தானே. நான் பார்த்து சரி பண்ணிக்கிறேன்ப்பா. இதுக்காக நம்ப குடும்ப கௌரவம், தங்கச்சி வாழ்க்கை எல்லாம் பாழ்பண்ண வேண்டாம்.''

''கொஞ்சம் மோசமா சொல்றாங்கம்மா அவனை. எப்படி ஒன்னுமே தெரியாத மாதிரி, கிணத்துல விழுந்த மாதிரி இந்த சம்பந்தம் செய்தேன். ஏன் இப்படி நடந்தது.''

அவர் தன்னைத்தானே நொந்து கொண்டார்.

திருமணம் என்கிற சந்தோஷம் அந்த வீட்டில் ஆரம்பக் கட்டத்திலேயே உடைந்து போயிற்று.

''உங்களோட அஞ்சு நிமிஷம் பேசணும் வரட்டுங்களா?''

திடீரென்று அவன் போன் செய்ய, அப்பா சரியென்று சொல்ல, வீடு தயாராகியது. அவன் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கினான்.

''நான் செய்யறது கார்மெண்ட்ஸ் வியாபாரம். விக்கறது, வாங்கறது, தயாரிக்கறதுன்னு எல்லா இடத்துலேயும் இங்க லேடீஸ் உண்டு. அவனவன் பத்து வருஷம் திண்டாடிக்கிட்டிருக்க, நான் மூணாவது வருஷம் நல்ல நிலைமைக்குப் போயிட்டேன். ஒண்ணு கடும் உழைப்பு. இன்னொண்ணு கடவுள் அருள். ரெண்டும் சேர்ந்து என்னைத் தூக்கி விட்டுடுச்சு. எல்லாத் தொழில்லேயும் போட்டி, பொறாமை உண்டு. எங்க தொழில்ல கூடவே உண்டு. லேடீஸ் நிறைய பேர் இருக்கற தொழிலுங்கறதுனால சட்டுனு அதைத்தான் குத்தமா சொல்வாங்க. இப்போகூட ஒண்ணும் கெட்டுப் போகலை. விட்டுடு அப்படின்னு சொன்னீங்கன்னா, நான் நகர்ந்துடறேன். உங்களுக்கு நிஜமாகவே பயமா இருந்தா இந்தத் திருமண ஏற்பாட்டை நிறுத்திடச் சொல்லிடறேன். இது என் தனிப்பட்ட போன். எதுவா இருந்தாலும் போன் பண்ணுங்க. பயப்படாதீங்க. பயந்தோமானா வாழ்க்கையில ஜெயிக்கவே முடியாது.''

அவன் சொல்லிவிட்டு இறங்கிப் போனான். அவன் நேர்மையை வீடு மெச்சியது. வீடு அவனை மெச்சியதைப் பார்த்து அவள் சந்தோஷப்பட்டாள்.

ஆனால், இது ஒருவகைத் தந்திரம் என்பது அவர்களுக்கு மெல்ல மெல்லத்தான் புரிந்தது.

''சொல்லிட்டேனே என்னைப் பத்தி எல்லாம் சப்ஜாடா சொல்லிட்டேன். அப்புறம் பொண்ணு கொடுத்தா என்னா அர்த்தம். போறும்டி இந்த மாப்பிள்ளைன்னு தானே அர்த்தம். அப்புறம் ஏன் என்னைப் பார்த்துக் கூவற. நான்



சொல்லலைன்னு சொல்லு'' என்று அவன் வெகுநாள் கழித்து அவள் எதிரே கத்தியபோது, அவளாலும் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அவள் தகப்பனாலும் எதிர்த்துப் பேச முடியவில்லை.

''ஊர்ல சொன்னாங்க இல்ல. பொம்பளை பொறுக்கின்னு சொன்னாங்க இல்ல. டப்புனு கத்தி போட்டு நிறுத்தியிருக்கணும். இது நமக்கு உதவாதுன்னு நிறுத்தி யிருக்கணும். நானும் நல்லா இருந்திருப்பேன். உன் பொண்ணும் நல்லா இருந்திருக்கும். இப்போ ரெண்டு பேரையும் சாவடிச்சிட்டு, நீ தலையில அடிச்சிகிட்டு அழுதா என்ன அர்த்தம். இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை. உன் பொண்ண வேணா கூட்டிட்டுப் போயிடு. ஏங்க.. அன்னபூரணி, நீங்க போறதா இருந்தா போங்களேன்'' என்று அப்பா எதிரே அவளிடம் மிக மரியாதையாகப் பேசுவதைப் போல் பேசினான்.

அவன் வாழ்வியல் நடிகன். எப்பொழுதும் நடித்துக் கொண்டிருப்பவன். எல்லா இடமும் நடித்துக் கொண் டிருப்பவன். நடிப்பதில் விருப்பமுள்ளவன். திரைப் படத்திலும், நாடகத்திலும் நடிப்பவர்களைவிட அவன் மிகத் தேர்ந்த நடிகனாக இருந்தான்.

''உன் பொண்ணை எதுனா கொடுமை பண்றேனான்னு கேளு. திட்றனா, அடிக்கறனா, சோறு போடாத இருக்கேனா. புடவை துணி வாங்காத இருக்கேனா. நான் பாட்டுக்கு என் வேலையை கொஞ்சம் வேகமா செய்துட்டு இருப்பேன். ஒரு இடத்துக்கு துணி வாங்கப் போறோம். நாலாயிரம் மீட்டர் வாங்கணும். ஆறு பொண்ணுங்க வச்சிருந்தோம்னா தான் பண்டல் போட்டு டக் டக்னு எடுத்துட்டு வர முடியும்.

முன்னாடி சீட்ல வேணாம்னு ரிஜக்ட் பண்ண துணி இருக்கு. டிரைவர் வண்டி ஓட்டறான். பின்னாடி நான்

உட்கார்ந்துட்டு இருக்கேன். என்னைச் சுத்தி நாலஞ்சு பொண்ணுங்க இருக்கு. நாலு பேர் உட்கார்ந்துக்கற சீட்ல அஞ்சு பேர் எப்படி உட்கார முடியும். யார்னா ஒருத்தர் மடியில உட்கார்ந்தாதானே முடியும். நான் யார் மடியிலயாவது உட்கார்ந்தா தாங்குமா. அதான் என் மடியில ரெண்டு பேரை உட்கார வச்சுக்கிட்டேன். ஆம்பளை மடியில பொம்பளை உட்கார்ந்தா சிரிப்பு வரத்தான் செய்யும். வெளியிலிருந்து பார்க்கறவன் என்ன சொல்வான். அஞ்சு பொண்ணுங்க மேல கை போட்டுக்கிட்டு சிரிச்சுட்டு போறான்டான்னு தான் சொல்வான். நாங்க துணி வாங்கப் போறது யாருக்குத் தெரியும். நான் சொல்றபடி நீ ஆட மாட்டயில்லை. ரொம்ப சந்தோஷம். அப்போ நான் ஆடறத வேடிக்கை பார். வேற ஒண்ணும் உனக்கு வழியில்லை.''

அவன் உரத்து வெளியே சொன்னதும் யாருக்கும் புரியவில்லை.

''அவன் என்ன ஆடச் சொன்னான். நீ என்ன மாட்டேன் என்றாய்?'' என்று வீடு கேட்ட போது, அவள் மௌனமாகத் தான் நின்றாள்.

அம்மாவுக்கு மட்டும் புரிந்தது.

தனியே கூப்பிட்டு ''ஆடேன்டி'' என்று சொன்னாள்.

''முடியாது'' என்று இவள் தலையசைத்து விட்டாள்.

இது கேவலம். பெண்மை என்கிற விஷயத்திற்கு ஒரு ஆண் செய்யும் கேவலம்.

அவளுடைய திமிர். அவனுடைய அகம்பாவம் இரண்டும் நேர் நேரே முட்டிக் கொண்டன.

அத்தனை அபிப்ராயத்திற்கு நடுவே குழந்தையும் பிறந்தது.



'ஆஹா... இந்த ஒரு குழந்தை போதும்.. புருஷன் இல்லாது போனால் என்ன' என்று அவள் உறுதி கொண்டாள்.

'உன்னைத் திருத்தவோ, உன்னை வழிநடத்தவோ என்னால் முடியாது' என்று புருஷனை விலக்கினாள்.

வெளிப் பார்வைக்குச் சிரிப்பு, புருஷன் – மனைவி என்கிற உறவு. மற்றபடி உள்ளுக்குள் எந்த ஒட்டுதலும், உறவும் இல்லை. எந்தச் சந்தோஷமும் இல்லை. எந்த மரியாதையும் இல்லை.

இரவுகள் வேதனை செய்தன. தனியாக இருப்பது அழுகையை வரவழைத்தது. மிகப்பெரிய நெட்டுயிர்ப்பைக் கொடுத்தது.

அப்பா அவள் முகத்தில் தோன்றிய கவலையைப் பார்த்து விட்டு முகத்தில் அறைந்து கொண்டு அழுதார்; 'தவறு செய்து விட்டேனே' என்று புலம்பினார்.

ஆனால், அவள் தடுத்தாள்.

இதுவும் நன்றாகத்தான் இருக்கிறது. எந்த ஜென்மத்தில் எந்தக் குடியைக் கெடுத்தேனோ, எந்த ஜோடியைப் பிரித்தேனோ தெரியவில்லை. இப்படி உறவு இருந்தும், இல்லாதபடியான ஒரு அபத்த நிலை உருவாகிவிட்டது. இதை நான் முழுமனதாக ஏற்றுக் கொள்கிறேன். மறுக்கிற பொழுதுதான் வேதனை. எதிர்க்கிற பொழுதுதான் சண்டை. இல்லையே என்று ஏங்குகிற பொழுதுதான் வருத்தம். இது ஒரு வகை சந்தோஷம் என்று தெரிந்து விட்டால், எனக்கு எந்த பாதிப்பும் வராது என்று உரத்துச் சொன்னாள். அவ்விதமே இருந்தாள்.

கெட்டிக்காரப் பெண்கள் காமம் என்பது தாக்கப்படுகிற பொழுது அதைத் தூக்கி எறிந்துவிட்டு உறுதியாக இருக்கத்

தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். ஆண்களுக்கு உள்ளது போல உடம்பு அவஸ்தை பெண்களுக்கு அதிகமில்லை. அவர்களால் வெகு எளிதாக புத்தியை உபயோகப்படுத்தி உடம்பினுடைய அவஸ்தை யைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.

ஒருமுறை அவளுடைய அடுக்கு மாடியில் எவளோ ஒரு பெண் வந்து, 'இவனோடு எனக்கு சம்பந்தம் இருக்கிறது; இவன் இல்லாது என்னால் இருக்க முடியாது; நான் இவனோடுதான் இருப்பேன்' என்று வந்தபோது, அவள் திரும்பி புருஷனைப் பார்த்தாள் அவன் பதில் சொல்லாது இருந்தான். தன் உடைமைகளைத் தூக்கிக் கொண்டு அவள் அப்பா வீட்டிற்குப் போனாள். அந்த வீடு அப்பா இறக்கும் பொழுது அவளுக்குச் சொந்தம் என்று எழுதி வைத்தார். அதை அவள் சகோதரர்களோ, சகோதரிகளோ எதிர்க்க வில்லை. 'அவளுக்கு வீடாவது இருக்கட்டும்' என்று எல்லோரும் சம்மதித்தார்கள். 'எங்களுக்கு வேண்டாம்' என்று எழுதிக் கொடுத்தார்கள்.

ஆனால், இவளுடைய வாழ்க்கையைவிட இவள் தங்கை விசாலட்சியின் வாழ்க்கை இன்னும் மோசமாக இருந்தது. அது வேறு விதமான ஒரு மோசம். அவன் மனைவியைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்த்ததில்லை என்பது உண்மை. ஆனால், மனைவி அவனை விட்டு ஒரு நிமிடம் கூட அகலக் கூடாது.

அவனுக்குப் பரிசுப் பொருட்கள் மொத்த வியாபாரம். பம்பாய், டெல்லி, கல்கத்தா, லக்னோ என்று பல வட இந்திய ஊர்களுக்குப் போய் பரிசுப் பொருட்களை அடுக்கடுக்காக வாங்கி வந்து, தமிழ்நாடு முழுவதும் விநியோகம்



செய்கிறவன். அவன் வெளியூருக்குப் போனால் தான் கொள்முதல் பண்ண முடியும். ஆனால், பத்து ரூபாய்க்கு வாங்கிய பொருளை நூறு ரூபாய்க்கு விற்கிற சாமர்த்தியம் அவனிடம் இருந்தது. வருடப் பிறப்பின்போதும், பண்டிகை நாட்களிலும் நல்ல கூட்டம் இருந்தது. இடைவிடாது சிறிய அளவில் விளம்பரம் செய்து செய்து அவன் கடையினுடைய தன்மையை வெளிப்படுத்தியிருந்தான். எந்த நேரமும் காசு பற்றிய சிந்தனையாக இருந்தான். ஆனால், வெளியூருக்குப் போகும் போதும், உள்ளூருக்கு வரும் போதும், வீட்டில் இருக்கும் போதும் அவனுக்கு மனைவி வேண்டும். இரவு மனைவி இல்லாமல் அவனால் தூங்க முடியாது.

சின்ன விஷயத்திற்குக்கூட பேயாய் கத்துவான். பலபேர் முன்னிலையில் அவமானப்படுத்துவான். ''நான் என்னா கேட்டா.. என்னா எடுத்துட்டு வர'' என்று கையிலிருக்கிற பொருளைக் கீழே எறிவான்.

அவள் பொறுக்க குனியும் பொழுது எட்டி உதைப்பான்.

அவமானம் என்பதற்கு முழு அர்த்தம் அவளுடைய வாழ்க்கையாக இருந்தது.

''கொஞ்சம் மிருதுவா நடந்துக்கக் கூடாதா'' மிகுந்த வேதனையோடு அன்னபூரணியின் அப்பா, மகள் விசாலாட்சி குறித்து மாப்பிள்ளையிடம் பேசும்போது, ''என்னா.. வந்து கம்ப்ளெயிண்ட் பண்ணாளா. என்னா குறை வச்சேன். நீங்க போட்டு அனுப்பினது பதினைஞ்சு சவரன். இன்னைக்கு தேதிக்கு அவகிட்ட நூத்தியிருவது சவரன் நகை இருக்கு. சொல்லியிருக்காளா. நாலு பட்டுப் புடவையோட அனுப்பினீங்க. நாப்பது பட்டுப் புடவை வச்சிருக்கா. எது கேட்டாலும் வாங்கித் தரேன். என் ஸ்பீடுக்கு அவ வந்துட்டான்னா நான் ஏன் கோச்சுக்கறேன்.

நிக்கிறதுக்கு ரெண்டு நிமிஷம். உட்கார்றதுக்கு ரெண்டு நிமிஷம். நடக்கறதுக்கு மூணு நிமிஷம். பரபரன்னு முப்பது வயசுல இருக்க வேணாம். என்னிக்குத்தான் நீ நடக்க கத்துப்ப.

நான் ஒண்ணு சொல்லட்டுமா. சொன்னா கோச்சுப்பீங்க. உங்க வீட்ல எல்லாருமே – உங்களை உட்பட – வாழறதுக்கு லாயக்கு இல்லாதவங்க. போராடறதுக்குத் தெரியாதவங்க. வட்டமா உட்கார்ந்து கைகூப்பி சாமி பாட்டு பாடறீங்க. பாடுங்க, வேணாம்னு சொல்லலலை. வேலை செய்துட்டு, சாமி பாட்டு பாடணும். வேலை செய்தாக்க சாமி பாட்டு பாடவே வேணாம். ரொம்ப சாமி கும்பிடறதுல என்ன தெரியுமா ஆயிடும். அவன் பார்த்துப்பான்னு ஒரு அசமந்தத் தனம் வந்துடும். பயம் வராது. பதட்டம் வராது. பயமும், பதட்டமும் வேலையை அதிகரிக்கும். ஆவலைக் கொடுக்கும்.

நாளைக்கு லட்ச ரூபா கலெக்ஷன் ஆகணுமே, என்னா பண்றதுன்னு யோசனை பண்ண வைக்கும். ஒரு லட்ச ரூபா கலெக்ஷன் ஆகணும்னா ரெண்டு லட்ச ரூபாய்க்கு குறி வைக்கணும். ஒரு வேலை முடிஞ்சவுடனே இன்னொரு வேலை ஆரம்பிக்கணும். வேலை முடியறபோதே அடுத்த வேலை என்னன்னு போகணும். ஒரு வேலை முடிஞ்சவுடனே, அப்பா... வேலை முடிச்சிட்டேன்னு மூணு நாள் உட்கார்ந்துட்டிருக்கா உங்க பொண்ணு.

அப்படித்தான் இருக்கும். நான் அவளைக் கைவிட்டுட மாட்டேன். அவளைத் தூக்கிப் போட்டுட மாட்டேன். கொஞ்சம் லொட்டு லொட்டுனு தலையில அடிச்சு வேலை சொல்லித் தருவேன். இது பின்னால அவளுக்கு உபயோகப்



படும். போங்க... பயப்படாத போங்க. ஆம்படையான் பொண்டாட்டி விஷயத்தில நீங்க தலையிடாதீங்க.''

அவன் அதட்டி அனுப்பினான்.

''ஏய். எழுந்திருடி.''

அப்பா எதிரிலேயே அவளை விரட்டினான். அப்பா எந்தப் பதிலும் சொல்லாது மௌனமாகத் திரும்பி வந்தார்.

ஆனால், எல்லாவற்றையும் விடக் கேவலமாக அவருடைய உடன் பிறந்த பெண்ணின் நிலைமை அந்த வீட்டிலிருந்தது.

திருமணமான அடுத்த வாரமே தாய்ப் பேச்சைக் கேட்டு அவளைத் தள்ளி வைத்து விட்டான்.

''ஜாதகம் சரியில்லை. இவ தொட்டா எந்தக் காரியமும் சரியா வரலை. எனக்கு இவ வேணாம்'' என்று வீட்டிற்கு அனுப்பி வைத்தான்.

வெறும் பெண்ணாய் பல வருடம் அப்பாவின் நிழலில் அத்தை இருந்திருக்கிறாள். எந்தப் புகாரும் புருஷனைப் பற்றிச் சொல்லாமல், அப்படித்தான் என் வாழ்க்கை என்று அமைதியாய் வாழ்ந்திருக்கிறாள்.

''அறுத்துட்டு இன்னொரு கல்யாணம் கட்டிக்கிறியா'' – அப்பா கேட்டார்.

''அடுத்தாளும் அறுத்துட்டான்னா நான் என்ன பண்றது சொல்லு'' பதிலுக்கு அவள் கேட்க, யாருக்கும் பதில் சொல்லத் தெரியவில்லை.

திலகவதி என்பது அவள் பெயர். அவளால் வீட்டில் பூஜை புனஸ்காரங்கள் அதிகரித்தன. வாழ்க்கையைப் பற்றி அவள் நோக்கம், விமர்சனம் வேறுவிதமாக இருந்தது.

# 3

"ஏங்க என் ஜாதகத்துல எதுனா தப்பு இருக்கா" திலகவதி ஜோசியரைக் கேட்டாள்.

"ஏம்மா, உள்ள நுழைஞ்சவுடனே இந்தக் கேள்வி கேட்கறீங்க. என்ன சமாச்சாரம்."

"நான் தொட்டது தொலங்காது. வெச்சது விளையாதுன்னு எங்க வீட்டுக்காரரு தினந்தோறும் சொல்றாரு. கேட்டக் கேட்டு நெஞ்சு வெடிச்சுப் போச்சு."

திலகவதி அழத் துவங்கினாள்.

ஜோசியர் கைகட்டி அவளையே பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"நீ போ... நீ போ... இங்க இருக்காத. இந்த வீட்டை விட்டுப் போ' அப்படின்னு துரத்திக்கிட்டே இருக்காக ஒரு தடவை சொன்னா பரவாயில்லை. ரெண்டு தடவை பரவாயில்லை. ஒரு நாளைக்கு இருவது தடவை சொல்றாங்க. என்னால அங்க இருக்க முடியாது சாமி. எனக்கு நல்ல மண வாழ்க்கை அமையற ஜாதகம் இல்லையாம். புருஷன் கூட இருந்தா புருஷனுக்கு நஷ்டமாம். அழிவாம். கிட்டத்தட்ட மரணத்துக்குக் கொண்டு போய் விட்டுடுவேனாம். அப்படியாப்பட்ட ஒரு மோசமான ஜாதகமாம். யாரோ ஜோசியர் சொல்றதக் கேட்டு இவர் ஆடி, என்னை வெளிய துரத்தராக. நீங்களும் ஜோசியர்தானே. சொல்லுங்க. இது உண்மையான்னு சொல்லுங்க. என் ஜாதகம் சுத்த ஜாதகம் இல்லையா. சொல்லுங்க."



"இருபத்தாறு வயதுப் பெண் விக்கி, விக்கி, அழுவதைப் பார்த்து ஜோசியர் கண் கலங்கினார். திரும்பி சாமி படங்களைப் பார்த்துக் கை கூப்பினார்.

"தாயே... குறையில்லாத மனுஷங்களே இல்லை. நூத்துக்கு தொண்ணூற்று ஒன்பது ஜாதகத்தில் எதுனா குறை கண்டுபிடிக்கலாம். தவறு கண்டுபிடிக்கலாம். அடுத்தவங் களைக் குத்தம் சொல்லணும்னா எதையாவது சாக்குவச்சு ஏதாவது பேசலாம். உன் ஜாதகம் நல்ல ஜாதகம். இதைவிட மோசமான ஜாதகங்களெல்லாம் நல்லபடியா உயர்வா, அம்சமா வாழ்ந்துகிட்டிருக்காங்க. வாழ்க்கையில் கஷ்டம்கறது வரும். போகும். எல்லா நேரமும் செழிப்பா இருக்கறவனும் இல்லை. எல்லா நேரமும் அழிஞ்சு தரையோட தரையா போனவனும் இல்லை. அழிந்தது துளிர்க்கும் வளர்ந்தது அழியும். அப்படித்தான் வாழ்க்கையும் இருக்கு. ஜாதகமும் இருக்கு.

நீ தொட்டா வளராது, பார்த்தா மலராதுங்கறது பொய். ஒரு களத்திர தோஷம் உன் ஜாதகத்தைப் பார்த்தவுடனே எல்லாரும் சொல்வாங்க. ஆனால் இதுனால எந்த சிரமமும் யாருக்கும் ஏற்பட்டுடாது. எதுவும் அழிஞ்சிடாது நான் சொன்னேன்னு உன் புருஷன்கிட்ட சொல்லு."

"அவா யார் பேச்சையுமே கேட்க மாட்டாரு சாமி. நீங்க சொல்லுங்க நான் சரியா, சரியில்லையான்னு சொல்லுங்க. நான் தவறான பொண்ணா, தப்பான பொறப்பா. என் கை ராசியில்லாத கையா. என்னால கூட நிக்கற யாருக்கும் அழிவுதானா? யார் பக்கத்துல இருந்தாலும் நான் முழுங்கி சாப்பிட்டுடுவேனா. இப்படியெல்லாம் ஜாதகம் சொல்லுமா. ஆமான்னு நீங்க சொல்லிட்டா. நான் என்னத்துக்கு வாழணும் நான் செத்துப் போறேன் சொல்லுங்க நான் அப்படிப்பட்ட ஜாதகமான்னு சொல்லுங்க."

திலகவதி தொடர்ந்து கதறி பேசினாள்.

''ஒண்ணு செய்வோம். என் காசு போட்டு வேப்பங்கன்னும், அரசங்கன்னும் நான் வாங்கித் தரேன் இந்த தெருமுனையிலேயே ஆத்தங்கரை ஓரமா ஒரு பொறம் போக்கு மனை இருக்கு அங்க நட்டு வேலி போட்டுடலாம். நீங்க வச்ச வேப்பங்கன்னும், அரசங்கன்னும் வளர்ந்து, பெருசாகி அந்த இடத்துல கோவில் வரலைன்னா என் பேரை மாத்திக்கறேன். நீங்க தொட்டது மலரும். நட்டது வளரும்.

ஆனா, இந்த புருஷன் கூட நீங்க இருக்க வேணாம். உங்களை விரட்டணுங்கறது அவருடைய நோக்கம். அதுக்கு ஜாதகம் ஒரு சாக்கு. அவருக்கு பொம்பளை தேவையில்லை. அவருக்குத் தவறா கல்யாணம் பண்ணி வச்சிட்டாங்க. ஜாதகம் பார்க்காத, கணக்குப் போடாத, என்னமோ பெரியவங்களா பார்த்து எந்தக் காரணத்துனாலயோ முடிவு பண்ணிட்டாங்க. உங்க கல்யாணத்துல ஏகப்பட்ட பொய் நடமாடியிருக்கு. இவரு பொம்பளையோட பழகறவரு இல்லை. ஆம்பளையோட பழகறவரு. இன்னொரு ஆம்பளைக்குத் துணையா இருக்கறவர். அவர் உங்களோட இருக்க முடியாது. உங்களைப் பார்த்தா அவருக்கு அருவருப்பா இருக்கும். கோபம் வரும்.. கத்தத் தோணும். அதனால செய்யறாரே தவிர, அது அவரு குறையே தவிர உங்களால எந்தத் தப்பும் இல்லை.

இவரை விட்டு விலகி வந்துருங்கம்மா. நான் சொன்னபடி மரக்கன்னு நடுங்க. அது வளர்ற வரைக்கும் மௌனமா இருங்க. அஞ்சு வருஷம் பொறுத்து மரக்கன்னு நட்ட இடத்துல பிரமாதமா கோயில் கட்டுவாங்க. வேற யாரோ கட்டுவாங்க. அந்தக் கோயில் கட்டி பெருசாகற போதெல்லாம் உங்க வாழ்க்கையும் பிரமாதமா வரும்.''



''அப்போ எனக்கு புருஷன் கிடையாதுங்களா.''

''அவரு புருஷனே இல்லைம்மா. விடுங்க அவரு வேற மாதிரி. அவரை மறந்துடுங்க.''

''என்னாங்க நீங்களும் இப்படி சொல்றீங்க?''

''நீங்க நல்லபடியா இருக்கணும்னு சொல்றேன். இல்லைன்னா ஒரு நாளைக்கு இருவது தடவை நீங்க சொன்ன மாதிரி வீட்டை விட்டு போயிடு... போயிடுன்னு ஒருத்தன் சொல்ல, அதை நீங்க கேட்டுட்டு இருக்கணுமா. சாப்பிட முடியுமா. வேணாம்மா. நல்லா சாப்ட்டு, பேசி, சிரிச்சு சந்தோஷமா இருங்கம்மா. விட்டுட்டு வந்துருங்க. நான் பெத்த பொண்ணுக்குச் சொல்ற மாதிரி உங்களுக்கு நான் சொல்றேன். உங்களுக்கு நான் கெடுதல் சொல்லவேயில்லை. காசு வேணாம். எப்போ – என்ன மனசுல கஷ்டம் இருந்தாலும் இங்க வாங்க. அஞ்சு நிமிஷம் பேசுங்க. நான் உங்க கஷ்டத்துலேர்ந்து தப்பிச்சுக்கறதுக்கு எதுனா யோசனை சொல்லித் தரேன்.

மரக்கன்னு நட்டு, தண்ணி ஊத்திட்டு வாங்க. பிறகு பேசுவோம். நாளைய மறுநாள் நாள் நல்லாயிருக்கு. காலையில பத்துலேர்ந்து பத்தரை ஹோரை நல்லாயிருக்கு நட்டவுடனே ஒரு போன் பண்ணுங்க. நான் போய் அதைப் பார்த்துட்டு, எங்க வீட்ல இருக்கற கங்கா ஜலத்தை அதுல ஊத்திட்டு வரேன். பிறகு பாருங்க. உங்க வாழ்க்கை வேற விதமா மாறும்.''

''இல்லீங்க. புருஷன் கூட இருக்க முடியாதா?

''இருக்க வேணாம்னு சொல்றேன்.''

அவர் கோபமாக திலவதியைப் பார்த்துப் பேச திலகவதி வாய் பொத்தி அவரையே பார்த்தாள்.

''நீங்க தனியா இருக்க முடியும்மா. திடமா இருக்க முடியும். புருஷன் கிட்ட இருந்து சாகறதவிட தனியா சந்தோஷமா இருக்கறது நல்லதுன்னு சொல்றேன். உட்கார்ந்து யோசனை பண்ணுங்க. நான் சொல்றது சரின்னு பட்டுதுன்னா அரசும், வேம்பும் பக்கத்துல பக்கத்துல நடுங்க. என்ன செய்யப் போறீங்கங்கறது இப்போ உங்க கையில இருக்கு. உங்க புருஷன் கையில இல்ல.''

அவர் சொல்லிவிட்டு எழுந்து நின்று கை கூப்பினார். திலகவதி வெளியே வந்தாள்.

மூன்றாம் நாள் அவர் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் அரசும், வேம்பும் அருகருகே நட்டு, சுற்றி வேலி போட்டு, நீர் ஊற்றினாள். சுற்றியிருந்த ஐந்தாறு பேர்கள் பார்த்து கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள். யாரோ கற்பூரம் கொண்டு வந்து ஏற்றி வைத்து, விழுந்து வணங்கினார்கள்.

''நீங்க எதுக்கு கீழவிழுந்து கும்பிடறீங்க.'' திலகவதி அதிசயத்தோடு கேட்டாள்.

''தெரியாத போல கேட்கறியே. அப்பனையும் ஆத்தாளையும் பக்கத்துல பக்கத்துல நட்டுட்டு எதுக்கு கும்பிடறேன்னு கேட்டா, சாமி இல்லையா அது.'' ஏதோ ஒரு கிழவி உரத்த குரலில் சொன்னாள்.

திலகவதிக்கு ஒன்றும் புரியவில்லை.

''சாமின்னா...''

''இது சக்தி அம்சம். வேப்பிலை. அது ஆண் குணம். அரச இலை. ரெண்டும் புடிச்சி செழிப்பா வளர்ந்ததுனாக்க டப்புனு இங்க கோயில் கட்டிடலாம். இடமோ இருக்கு'' இன்னொருவர் பதில் சொன்னார்.



அப்பொழுதுதான் அவளுக்கு ஜோசியர் சொன்ன சூட்சமம் புரிந்தது.

''இந்த இடத்துல வளருங்களா.''

''அதான் சுத்தி வேலி போட்டமே போறபோதும், வர்றபோதும் ஒரு கண்ணு வச்சுக்கனும். இந்தப் பக்கம் ஒரு பாட்டில் தண்ணி எடுத்துட்டு வந்து ஊத்திட்டுப் போகனும்'' இன்னொருவன் குரல் கொடுத்தான்.

அருகேயிருந்த அந்த ஆறேழு பேர்கள், அந்தச் செடிகளைக் கவனித்துக் கொண்டார்கள். அலுவலகத்திற்குப் போகும்போது ஒரு லிட்டர் பாட்டிலில் தண்ணீர் பிடித்து அந்த இடத்தில் ஊற்றி விட்டுப் போவதை ஒருவர் கடமையாகக் கொண்டார்.

அந்த வயதான ஜோசியர் வேலிக்குள் இருக்கிற செடிகளைப் பார்த்து விட்டு, தாமிர சொம்பில் இருக்கிற கங்கை ஜலத்தை 'வளர்க.. வளர்க..' என்று சொல்லி செடிகளுக்கு நடுவே ஊற்றினார். யாரோ அந்த புறம்போக்கு நிலத்தில் கடை போடலாம் என்று இருபது நாள் கழித்து முயற்சி செய்தபோது மக்கள் அதட்டி தடுத்து விட்டார்கள்.

''தழை பிடுச்சிக்கிச்சு. புதுசா நாலு இலை வந்துடுச்சு. இந்த இடத்துல நீ கடை போட்ருவியா. ஒரு சுமங்கலி கையால ஆத்தா இங்க வந்து உட்கார்ந்துட்டா. இங்க ஒருத்தனும் ஒண்ணும் பண்ண முடியாது. வேற எந்தப் பக்கமாவது போய் கடை போட்டுக்கோ. இங்க கடைபோடற நினைப்பையே விட்டுடு'' அதட்டினார்கள்.

''ஐயா, செடி மார் உசரம் வந்துடுச்சிங்க.''

''ஆமாம், பார்த்தேன். என்னா சொல்றாரு உன் புருஷன்.''

''சொன்னது சொன்னதுதான். நீவேணா கோர்ட்ல கேஸ் போட்டுக்க. டைவர்ஸ் வாங்கிடு அப்படின்னு சொல்றாரு.''

''வாங்கிடுங்களேன்.''

''ஊர்ல கேலி பண்ணுவாங்கய்யா.''

''எதுக்கும்மா. இதெல்லாம் சகஜமா போச்சும்மா. ஒண்ணு சரியில்லைன்னா அறுத்து தூக்கியெறியறத பொம்பளைங்க செய்ய ஆரம்பிச்சிட்டாங்க. இது நாட்டுப் புறமா. பட்டணம். ஏன் பயப்படற.''

''சரி... டைவர்ஸ் வாங்கி நான் என்ன செய்வேன்.''

''வேற கட்டலாமில்லை.''

''இல்லீங்க. எனக்கு வேற கட்டறதுக்கு மனசு வரலை.''

''சின்னப் பொண்ணா இருக்கியே தாயே.''

''வேணாம். ஏற்கனவே கல்யாணம் பண்ணது இல்லைன்னு ஆயிப்போச்சு. தெரியாத கல்யாணம் கட்டி அதுவும் இல்லேன்னு ஆயிப்போச்சுன்னா நான் எங்க போய் நிக்கறது'' சிறிது கூட ஊசலாட்டமில்லாமல் தெளிவாக இருந்தாள்.

''ஆனா அப்பப்போ மனசுல ஒரு வேதனை வருமய்யா. ஊர்ல எல்லாப் பொம்பளையும் புருஷனோடு நல்லா இருக்கற போது, நம்மள மட்டும் இப்படி எச்ச இலையா தூக்கி வெளிய போட்டுட்டாங்களேன்னு ஒரு அழுகை வரும். உட்கார்ந்து அழுதுகிட்டிருப்பேன்.''

''வேணாம் அழாதே.''

''நம்மளால... யாருக்கும் உபயோகம் இல்லீங்கய்யா. அதனாலதான் அழறேன்.''



''யார் சொன்னா. உன்னால யாருக்கும் உபயோகமில்லைன்னு. ஒரு முட்டாளுக்கு உபயோகமில்லைன்னா ஊருக்கே உபயோகமில்லைன்னு நினைச்சுக்கிட்டிருக்கியா. உனக்கு சொல்லித் தரேன். ஊர் முழுக்க உபயோகப் படும்படியா ஒரு வாழ்க்கை உனக்குச் சொல்லித் தரேன்.''

எதனாலோ ஜோசியர் திலகவதியின் வாழ்க்கையைத் தன் சொந்த மகளின் வாழ்க்கையைப் போல் எடுத்துக் கொண்டார். கோபப்பட்டார். ஆவேசமானார்.

''பதினெட்டு நாள் தினந்தோறும் வாசப்படிக்கு மஞ்சள், குங்குமத்தை வச்சுட்டு என்னை வந்து பார்.''

''ஏன். ஏன் பதினெட்டு நாள் வைக்கணும்.''

''உன்னால் பதினெட்டு நாள் ஒரு நாள்கூட விடாம வைக்க முடியுதான்னு நான் பார்க்கணும்.''

''வச்சிடலாங்க. அது ஒண்ணும் கஷ்டமில்லையே.''

''செய். செய்துட்டு வந்து சொல்லு.''

''ஏங்க.. வாசப்படி மழமழன்னு ஆயிப்போச்சு. கையப் பாருங்களேன். மஞ்சா போகவேயில்லை.''

அவள் உள்ளங்கையைக் காட்டி உள்ளங்கை முழுவதும் மஞ்சள் பளபளத்தது.

ஜோசியர் சந்தோஷமானார்.

''எப்போ ஒரு சொல்லுக்கு விடாப்பிடியா பதினெட்டு நாள் உன்னால தபஸ் இருக்கற மாதிரி ஒரு வேலை செய்ய முடியுதோ, நான் சொல்ற எல்லா விஷயத்தையும் செய்ய முடியும். தினமும் தலைக்கு குளிச்சிடு. காலையில டிபன் சாப்பிடாத. ஈரத்தலையோட கோயிலுக்குப் போயிட்டு வந்து மத்தியானம் சாப்பாடு சாப்பிடு. தினம் சாப்பாட்ல கீரை

சேர்த்துக்க. உடம்புல இருக்கற கெட்ட நீர் வடியட்டும். உடம்பு தகடு மாதிரி ஆகட்டும். நெல்லிக்காய், பாகற்காய், வெந்தயம் இதுங்களை உடம்புல சேர்த்துக்க. அப்படியே சாப்பிடு. ஒரு மாசம் கழிச்சு வா. உன் முகம் மாறியிருக்கணும் மாறியிருந்தா வேற ஒரு விஷயம் சொல்லித் தரேன்.''

''நான் மாறணும்னு நினைச்சு ஒரு பொண்ணுக்கு அப்பா சொல்லித் தரா மாதிரி பிரியமா சொல்லித் தர்றீங்க. நான் மாறாத இருப்பேனா.''

திலகவதி சந்தோஷமானாள்.

அவர் சொன்ன எல்லாக் கட்டளைகளையும் ஒரு மாதம் குறைவற நிறைவேற்றினாள்.

''எப்படியிருந்தது திலகவதி.''

''ரெண்டு மூணு நாள் தடிமன் பிடிச்சு பேரவஸ்தைப் பட்டேன். விட்டுடலாமா தலைக்கு விட்டுக்கறதைன்னு நினைச்சேன் என்னா... தடிமன் புடிச்சு செத்துப் போவோம். சளி ஜாஸ்தியாகி நெஞ்சு அடைக்கும். அவ்ளோதானே. பார்த்துக்குவோம்னு விடாப்பிடியா தலைக்கு ஊத்திக் கிட்டேன். அஞ்சா நாளே உடம்பு அந்தக் குளுமையை ஏத்துக்கிச்சு. நெல்லிக்காய் சாப்பிட சாப்பிட சளி குறைஞ்சு போச்சு. அடிக்கடி நெல்லிக்காய் சாப்பிடணும்னு ஒரு தாகமே வந்துடுச்சி போங்களேன். உலர்த்தின நெல்லிக்காய் – நெல்லி முள்ளினு சொல்வாங்க – அதை வாங்கி வச்சி போக வர சாப்டுட்டிருந்தேன். தடிமன் வரவேயில்லை. சளி புடிக்கவேயில்லை. நீங்க சொன்னா மாதிரி உடம்பு தகடா இருக்கு.

என்னா – கொஞ்சம் ராத்தூக்கம் குறைஞ்சு போயி முழங்காலைக் குத்திட்டு வச்சு வெறுமனே வெளிய



வேடிக்கை பார்த்துட்டிருக்கேன். எதுனா நினைச்சுட்டு உட்கார்ந்திருக்கேன். அதுதான் கொஞ்சம் பேஜாரா இருக்கு.''

''அதாவது தூங்கற நேரம் குறைவாயிடுச்சு இல்லையா?''

''ஆமாங்க. தூக்கமே வரலை. தூங்கறது கூட கோழித் தூக்கம்தான். உடம்புதான் தூங்குதே தவிர புத்தி தூங்க மாட்டேங்குது.'

''அடடா.. அழகா சொல்ற. இதுதான் நான் எதிர்பார்த்தது. தன்னை மறந்து அடிச்சுப் போட்டாப்பல தூங்கறது தப்பு. உடம்புல சக்தியில்லாதவன்தான். சக்தி விரயம் அதிகம் பண்றவன்தான் இந்த மாதிரி அடிச்சுப் போட்டப் போல தூங்குவாங்க. மூளை பலம் இருக்கறவனுக்கு இப்படி தூங்க முடியாது.''

''சரி – எனக்கு மூளை பலம் வந்து என்னா – யாருக்கு உபயோகம்.''

''ஊருக்கு உபயோகம் தாயே. உன்னை மாதிரி பல பொண்கள் இங்க இருக்காங்க. அவங்களுக்கெல்லாம் நீ வழிகாட்டியா இருக்கணும்.''

''அறுத்துப் போட்டதெல்லாம் ஒண்ணா நின்னு சங்கம் வைக்கணுமா?''

''இதை எளக்காரமா பேசாத. என்னான்னு இன்னும் உனக்குப் புரியலை. சின்ன வயசு. யோசிக்க யோசிக்கப் புரியும். இனிமே நான் உன்னை யோசிக்க வைக்கப் போறேன். நல்லா யோசிக்கறதுக்கு முதல் விஷயம் என்ன தெரியுமா? நல்லா மூச்சுவிட கத்துக்கணும்.''

''இப்போ சரியாதானே விடறேன்.''

''நம்ம விடற மூச்சு சரியில்லை தாயே. ஒழுங்கா, சீரா மூச்சு விடறதுக்கு நான் சொல்லித் தரேன்.''

அவர் பல பயிற்சிகள் சொல்லிக் கொடுத்தார். பல பூஜை முறைகள் கற்றுக் கொடுத்தார்.

# 4

'சிவமானஸ பூஜைன்னு ஒண்ணு இருக்கு. கேள்விப்பட்டிருக்கியா.'' ஜோசியர் கேட்டார்.

''அதெல்லாம் ஒண்ணுமே தெரியாதுங்க சாமி.'' திலகவதி பதில் சொன்னாள்.

''மனசுக்குள்ளேயே சாமிக்கு எல்லாவிதமான உபசாரமும் பண்றது. இதுக்கு பூஜைக்குன்னு போகவேணாம். இதுக்குன்னு ஒரு நேரம் வேணாம். நீ சொன்னியே ராத்திரி தூக்கம் வரலையேன்னு, உடனே பூஜை ஆரம்பிச்டலாம்.''

''நட்டநடு ராத்திரியிலயா.''

''ஆமாம். மனசுகுள்ளயே சாமியை வான்னு சொல்றது. இங்க உட்காருன்னு சொல்றது. கொடி காட்றது. சாமரம் வீசறது. வந்து உட்கார்ந்த சாமிக்கு தண்ணி கொடுக்கறது. கால் அலம்பி விடறது. நைவேத்தியம் வைக்கறது. கற்பூரம் காட்றது. மை வைக்கறது. அந்த மாதிரி மனசுக்குள்ளேயே உபசாரங்கள் செய்யற ஒரு பூஜை இருக்கு. அது மானஸ பூஜை; அதாவது மனசுக்குள் செய்கிற பூஜை. அதை எழுதி வச்சு என்ன அர்த்தம்னு எதிர்ப்பக்கமும் விளக்கமா எழுதித் தரேன். பல தடவை படிச்சு மனப்பாடம் பண்ணிக்க. புரிஞ்சு செய். புரியாத செய்யாத. ஒவ்வொரு வார்த்தைக்கும் என்ன அர்த்தம்னு தெரிஞ்சு செய். தெரியாம பண்ணாத.''



ஜோசியர் மிகுந்த அக்கறையோடு சொல்லிக் கொடுத்தார். அவளும் ஆர்வமாகக் கற்றாள்.

''அப்பா வீட்ல தண்டத்துக்கு உட்கார்ந்திருக்கோமே எந்த புண்ணியமுமில்லாம வெறும் செலவா வச்சுட்டிருக் கோமே' அப்படின்னு உள்ளுக்குள்ள ஒரு ஏக்கம். ஒரு கட்டி கற்பூரம் கேட்கறதுக்குக்கூட பயம். யாரும் ஒண்ணும் சொல்றதில்லை. சொல்லிடுவாங்களோன்னு ஒரு அச்சம். இப்போ அஞ்சு பைசா செலவில்லாத நீங்க சொல்லிக் கொடுத்த மந்திரத்தை நல்லா புரிஞ்சுகிட்டுச் சொல்லி உள்ளுக்குள்ளேயே சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியம் வெத்தலை பாக்கு, தேங்காய், பழம் நைவேத்தியம், மணியடிக்கிற உபசாரம் அப்படின்னு நிறைய பண்றேன். இன்னிக்கு மட்டும் பத்து தடவை பண்ணிட்டேங்க. வேற ஒன்னும் வேலை இல்லை. பொழுது போகலை. திரும்பத் திரும்ப பூஜை பண்ணிகிட்டே இருக்கேன் மனசுக்குள்ள தப்புங்களா.''

''ரொம்ப நல்லது தாயே. பத்து என்ன நூறு தடவை செய்யலாம். சிவனுக்கு மட்டுமில்லை. எந்த தேவதையையும் கூப்பிட்டுச் செய்யலாம். உனக்கு மட்டுமில்லை. இந்த ஜோசியர் நல்லாயிருக்கணும். இவருக்கு உடம்பு சரியில்லை. ரொம்ப இருமுது. தொண்டை யெல்லாம் புண்ணா இருக்கு. அதனால அவருக்காக பூஜை செய்யறேன்னு செய்யலாம். தொண்டைப் புண்ணு சரியாப் போகும்.''

''நிஜமாங்களா. உடனே செய்யறேங்க'' திலகவதி கைகூப்பிவிட்டு காலில் விழுந்து நமஸ்கரித்துவிட்டுப் போனாள்.

ஜோசியருக்கும் திலகவதிக்கும் எந்த உறவும் இல்லை. எந்த ஒட்டும் இல்லை. எதனாலோ ஒருவர் மீது ஒருவர் மிகுந்த அக்கறையோடு இருந்தார்கள்.

உறவுகளே அக்கறை இல்லாமல் இருக்க, உறவு இல்லாதவர் மீது, லேசாக பாசங்காட்டியவர் மீது, சிறிதளவு அன்பு செலுத்தியவர் மீது, மெல்ல வழிகாட்டியவர் மீது அவளுடைய அன்பு திரும்பியது.

''ஜோசியருக்கு உடம்பு நல்லாயில்லையாம்.''

''என் சிவனே என் சிவனே. வடை, பாயசம், வெண்பொங்கல் மூணும் வச்சிருக்கறேன். எடுத்துகிட்டு ஜோசியர் ஐயா தொண்டையை சரி பண்ணிடணும். இருமலை உடனே நிறுத்திடணும்.''

அவள் உள்ளுக்குள் மானஸ பூஜையைச் செய்ய ஆரம்பித்தாள்.

பூஜை முடித்த பிறகு குழந்தைபோல் போன் செய்து ஜோசியரைக் கேட்டாள்.

''எங்க. இப்போதான் பூஜையை முடிச்சேன். உடம்பு நல்லாயிருக்குங்களா.''

''இல்லைம்மா. அப்படித்தான் இருக்கு. ஆனா, சாயந்தரத்துக்குள்ள சரியாப் போயிடும். முடிஞ்சா இன்னொரு தடவையும் பண்ணு திலகவதி.''

மிக மென்மையாக ஜோசியர் அவளைக் கேட்டுக் கொண்டார்.

இதையும் யாரோ நம்பியிருப்பது பற்றி திலகவதிக்கு சந்தோஷம் வந்தது. அவள் மறுபடியும் தீவிரமாகச் செய்தாள்.

ஜோசியருக்கு அன்று இரவே உடம்பு பூரண குணமாகியது.

அவர் டெலிபோன் செய்து ''திலகவதி, இருமல் நின்னு போயிடுச்சு கண்ணு'' என்று மிகப் பிரியத்தோடு சொல்ல, திலகவதி குதூகலித்தாள்.



அன்று இரவு மூன்று முறை மானஸ பூஜை செய்தாள். அவளை விரட்டிய புருஷனுக்காகவும், அவளை ஆதரித்த அப்பாவுக்காகவும், அப்பொழுது ஆட்சி செய்து கொண்டிருந்த தமிழ்நாட்டின் முதல்வருக்காகவும் அவள் பூஜை செய்தாள்.

மறுநாள் காலை தெருக்கோடியிலிருக்கிற பிச்சைக்காரிக் காகவும், மத்தியானம் வாழைப்பழம் விற்கின்ற பெண்ணுக்காகவும் பூஜை செய்தாள்.

அவள் பூஜை செய்த அடுத்த சில நிமிடங்களிலேயே அவர்கள் சரியாகி விடுகிறார்கள் என்பதாய் ஒரு உணர்வு அவளுக்குத் தோன்றியது. பூஜையின்மீது அவளுக்குப் பற்று ஏற்பட்டது.

''வேலி தாண்டி ரெண்டு மரமும் செழிப்பா வளருதுங்கய்யா. ஒண்ணை ஒண்ணு தொட்டுக்கிட்டு நிக்குதுங்க.''

''நிக்கட்டும். தொட்டுக்கிட்டு நிக்கறதோட இல்லாம ஒட்டிக்கிட்டு வளர ஆரம்பிக்கணும். அது ஒட்டிக்கிட்டு வளர ஆரம்பிச்சுதுன்னா அந்த இடமே மாறிப்போயிடும்.''

வழியிலே போகிற தோட்டக்காரர் நின்று அந்த மரங்களை வேடிக்கை பார்த்தார்.

இடுப்புக் கத்தியைப் பிரித்து மெல்ல மரங்களின் பட்டையை இரண்டு பக்கமும் சீவி, மரங்களை இழுத்து தேங்காய் நார் போட்டுக் கட்டினார். தேங்காய் நாரில் தண்ணீர் ஊற்றினார். பிரியாதிருக்க முருங்கைப்பிசின் தடவினார். இரண்டு மாதத்தில் மரங்கள் பிரிக்க முடியாமல் ஒட்டிக் கொண்டன. தினமும் நீர் ஊற்ற மிக வேகமாய் வளர்ந்தன.

வழியோடு போகின்ற எரு வண்டியை நிறுத்தி, இரண்டு கூடை வாங்கி செம்மண்ணும், எருவும் கலந்து யாரோ அதில் தெளித்தார்கள். செடியின் அடிப்பக்கத்தில் தண்ணீர் தேங்கும்படி குழியாக்கினார்கள். நைந்துபோன வேலியை நீக்கிவிட்டு சிமெண்ட் ஜன்னல்களால் வேலி அமைத்தார்கள்.

மஞ்சள், குங்குமம் தடவினார்கள். பூமாலை போட்டார்கள்.

அந்த இடம், குப்பையாக இருந்த ஆற்றங்கரை வேறுவிதமாக மாறியது.

ஜோசியரும், திலகவதியும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த பொழுது அந்தப் பக்கம் வசிக்கிறவர்கள் ஜோசியரிடம் கூட்டமாய் வந்தார்கள்.

''ஒரு வேப்பமரம், அரசமரம் வச்சி வளர்த்துக்கிட்டு வரோம்'' என்று தாங்களே செய்தது போல பெரிதாய் நீட்டி முழக்கிப் பேசினார்கள்.

''அந்த இடத்துல ஒரு அம்மன் சிலை வச்சிடணும்னு பார்க்கறோம். ரேணுகாதேவி வச்சிடலாங்களா. இல்ல, வேற எதுனா செய்யலாங்களா. அதைக் கேட்கறத்துக்காக உங்ககிட்ட வந்தோம். நீங்க இந்த மாதிரி விஷயங்களெல்லாம் நல்லா சொல்றதா வெளிய பேசிக்கிட்டாங்க.''

திலகவதியும், ஜோசியரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

''வெறுமே கும்பலா வராத ஒரு அமைப்பா வந்தீங்கன்னா நல்லாயிருக்கும். உங்களுக்குள்ளயே கலந்து பேசி, யாரு பிரசிடென்ட், யாரு செயலாளர், யாரு பொருளாளர் அப்படின்னு பிரிச்சுட்டு, இன்னன்ன ஆளுக்கு இன்னன்ன பொறுப்புன்னு வந்தீங்கன்னா, பொறுப்புள்ள வங்களோட



நான் பொறுப்பா பேச முடியும். வெறும் கும்பல்கிட்ட பேசி என்ன புண்ணியம். நீங்க சொல்ற இடத்தை நான் பார்த்திருக்கேன். அற்புதமான இடம். ஆத்தங்கரை மேடான பகுதி. மரங்கள் ரெண்டும் முட்டி தளதளன்னு வளர்ந்திருக்கு. ரொம்ப கரிசனத்தோட சிமெண்ட் வேலி போட்டிருக்கீங்க. இடத்தைச் சுத்தம் பண்ணி வச்சிருக்கீங்க. போறவர பொண்ணுங்க. அத்தனை பேரும் மஞ்சளும், குங்குமமும் கொட்டி அந்த இடத்தை மணக்க வைக்குதுங்க. அந்த இடத்துல நீங்க சொல்றாப்போல சிலை வைக்கணும். அதைப் பிரசன்னம் போட்டுப் பார்த்துடலாம். ஒருநாள் அமைப்பா வாங்க. உதிரியா வராதீங்க. வேலை ஆரம்பிச்சுட்டு எனக்குத் தெரியாது, உனக்குத் தெரியாதுன்னு போகாத, எனக்குத் தெரியும், நான்தான் பொறுப்புன்னு சொல்ற மனுஷனோட தான் நான் பேசறது நல்லாயிருக்கும்'' என்று அவர் விளக்கிச் சொல்ல, அவர்கள் மறுபடியும் கலைந்து போனார்கள்.

ஒருவாரம் கழித்து இன்னும் பெரிய ஆட்களோடு வந்து நின்றார்கள்.

''அடடா.. வாங்க.. வாங்க. ஐயா வந்திருக்கீங்களே'' என்று ஜோசியர் எழுந்து நின்று கைகூப்பினார்.

''என்னை பிரசிடென்ட்டா போட்டுட்டாங்கய்யா. விவரம் தெரியாம முழிக்கிறேன்.''

''நான் இருக்கேன் எல்லா விவரத்துக்கும். நீங்க எதுக்கு முழிக்கறது. நீங்க ஆர்வமா இருக்கீங்கன்னா நான் பெருசு பெருசா இல்ல சொல்லுவேன்.''

''ஐயா, பார்த்துச் சொல்லுங்க. நீங்க பாட்டுக்குத் தடாலடியா எதுவும் பண்ணிடாதீங்க.''

''உங்களாலயோ, என்னாலயோ உலகம் ஓடலை. உலகம் ஓடறபோது நாம ரெண்டு பேரும் அதுல கலந்துட்டு

இருக்கோம். எங்கயோ ஓடிட்டு இருந்தவரை அம்மா திருப்பி இந்தப் பக்கம் ஓடவிட்டிருக்கா. உங்களை மாதிரி பெரியவங்க. இந்த விஷயத்துல ஈடுபடறது ரொம்ப சந்தோஷம்.

அம்மன் சிலை வைக்கணும். முதல்ல யந்திரம் வைக்கலாம். யந்திரம் வச்சு மேடை கட்டி, அந்த மேடைக்கு பூஜை பண்ணுவோம். நாப்பத்தஞ்சுநாள் ஆனபிறகு மத்த விஷயங்களை யோசனை பண்ணுவோம்.''

அவர் நல்லநாள் பார்த்து யந்திரம் எழுதிக் கொடுத்தார். அவரும் போய் கலந்து கொண்டார்.

திலகவதி ஒரு ஓரமாகக் கைகூப்பி நின்றிருந்தாள்.

ஊர்முழுக்க சர்க்கரைப் பொங்கல் வினியோகத்துடன் அந்த இடத்தில் கோவிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

ஜோசியர் மெல்ல திலகவதியோடு பேசியபடியே வீடு திரும்பினார்.

''உன் கை நல்ல கை இல்லையா. நீ தொட்டா வளராதா. நீ தொட்டா மலராதா. எவன் சொன்னான் பார். ஒன்றரை வருஷத்துல ஒஹோன்னு ஆயிப்போச்சு இந்த இடம். உன் புருஷனுக்கு கொடுப்பினை இல்லை. நீ ஒருத்தனுக்கு வாக்கப்பட்டு, ஒரு சின்ன குடும்பத்துக்குப் போராடறத விட ஊர் முழுக்கப் போராடு அப்படின்னு அம்மா உன்னை ஒதுக்கமா வச்சுட்டா. கல்யாணமாகி நாற்பது வருஷம் ஆச்சு. எனக்கு குழந்தைகள் இல்லை தாயி, ஆனா உன்னைப் பார்க்கற போதெல்லாம் என் பொண்ணு, என் பொண்ணுன்னு மனசு பதறும். நீ வருத்தப்பட்ட போதெல்லாம் என் மனசும் வருத்தப்படும். இப்போ உன் மூஞ்சியில இருக்கற சந்தோஷம் பார்த்துட்டு எனக்குள்ளும் சந்தோஷம் இருக்கு தாயி. நீ நல்லா



இருப்ப. ரொம்ப நல்லாயிருப்ப. நாலு லட்சம் பேருக்கு நல்லது பண்ற பெரிய பொம்பளையா இருப்ப.''

அவர் கை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

திலகவதிக்குள்ளும் அந்த நம்பிக்கை திடமாக இறங்கியது. அவள் கண்கள் மலர்ந்தன. முகத்தில் அவள் கண்கள் மலர்ந்தன. முகத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டது. புருஷன் இல்லை. விரட்டிவிட்டான். அதனால் என்ன... வாழ முடியாதா. முடியும் என்ற வீராப்பும் நம்பிக்கையும் தோன்றின.

நம்பிக்கை என்ற விஷயம் ஒவ்வொருவருக்குள்ளும் வருவதற்கு ஒவ்வொரு காரணங்கள். திலகவதிக்கு கடவுள் விஷயம், நம்பிக்கையாகப் பிரகாசித்தது.

''கடவுள் இருக்கிறாரா, இல்லையா.''

திலகவதி தனக்குள் கேட்டுக் கொண்டாள்.

பலநாட்கள் கேட்டபிறகு இந்த விஷயத்தை தன்னால் கண்டுபிடிக்க முடியாது என்று தெரிந்து கொண்டாள்.

''கடவுள் இருக்கிறாரா, இல்லையா.''

மறுபடியும் கேட்டுக் கொண்டாள்.

''தெரியவில்லை'' என்று பதில் சொன்னாள்.

ஆனால், இருக்கிறார் என்று நம்புவது சுகமாக இருக்கிறது. நாளை நன்றாக இருக்குமா, மோசமாக இருக்குமா.

தெரியாது. ஆனால், நாளை வாழ்க்கை நன்றாக இருக்கும் என்று நம்புவது சந்தோஷமாக இருக்கிறது. ஆரோக்கியமாக இருக்கிறது. அதுபோலவே கடவுளும். நாளை நல்லபடியாக

விடியும் என்பது ஒரு வெற்று நம்பிக்கை. கடவுளும் அது போலவே. இதைக் குறித்து எவரும் எந்தவித உத்தரவாதமும் தரமுடியாது. கடவுளை எவருக்கும் எவரும் காட்டமுடியாது. விருப்பப்பட்டால் நம்பலாம். வேண்டாமென்றால், விலகலாம்.

நாளை நன்றாக இருக்குமென்று யார் நம்புவார்கள்.

நாளை நன்றாக இருக்க வேண்டுமென்று யார் ஆசைப் படுகிறார்களோ, அவர்கள்தான் நாளை விடியும் என்று நம்புவார்கள். அதே போலதான் சுகமாக இருக்க வேண்டும், தன் சுற்றத்தார் நலமாக இருக்க வேண்டும்மென்று ஆசைப்படுகிற அத்தனை பேருக்கும் கடவுள் நம்பிக்கையும் இருக்கும்.

கடவுள் நம்பிக்கை ஆசையோடு சம்பந்தப்பட்டது. ஆசை அறுத்தவருக்கே முற்றிலும் தந்தவருக்கே கடவுள் என்கிற விஷயம் அப்பால் போகும் மற்றபடி கடவுள் இல்லையென்று சொல்கிறவர்கள், இருக்கிறது என்று சொல்பவர்களுக்கு எதிராகப் பேசவேண்டுமென்ற ஆசையே தவிர வேறு எதுவும் இல்லை.

திலகவதிக்கு சட்டென்று ஒரு தெளிவு ஏற்பட்டது.

எந்தத் திட்டமிடலும் சிரிப்பாய் சிரிக்கும். எந்த எதிர்பார்ப்பும் குலைந்து, உடைந்து போகும். எனவே, நாளை என்ற விஷயத்தின், நல்லது நடக்க வேண்டுமென்ற ஆவலின் வேகத்தைத் தணித்துக் கொள்வது நல்லது. எந்தவித மோசமான நிலைமைகளுக்கும் தன்னைத் தயார்படுத்திக் கொள்வது உத்தமம். அதே நேரம் நாளை விடியும், நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையும் கூடவே ஊடாடிக் கொண்டிருப்பது இன்றைய வாழ்க்கையை ரசிக்கத்தக்கதாகச்



செய்யும். இல்லையெனில், இன்றைய சிரிப்புகள், பேச்சுகள் எல்லாமும் வெறுமையாய், வெறித்தனமாய் மாறிவிடும்.

திலகவதி தொடர்ந்து சிந்தித்து தன்னைப் பக்குவப் படுத்திக் கொண்டாள். எதிர்பார்ப்புகளைக் குறைத்துக் கொண்டாள். கடவுள் நம்பிக்கையை அதிகப்படுத்திக் கொண்டாள்.

''எதிர்வீட்டுப் பிள்ளைக்கு திடீர்னு வலிப்பு வந்துருச்சாம். வாரித் தூக்கிட்டு ஆஸ்பத்திரிக்குப் போயிருக்காங்க.''

''ஐயையோ... காலையில கூட விளையாடிட்டு இருந்துதே.''

''ஆமாம் இதுதான் முதல் தடவையாம்.

என்னா பண்றதுன்னு தெரியாத அந்தம்மா வாயில வயித்துல அடிச்சுட்டு ஓடுது.''

''ஒண்ணும் ஆவாது... ஒண்ணும் ஆவாது'' ஒன்றும் ஆகக்கூடாது என்பதை திலகவதி அவ்வாறு உரக்கக் கூறினாள்.

ஓடிப்போய் பதட்டத்துடன் கைகால்களைக் கழுவிக் கொண்டாள். முகம் கழுவி மறுபடியும் பொட்டிட்டுக் கொண்டாள். ஒரு சால்வையை மேலே போர்த்திக் கொண்டு கிழக்குப் பார்த்து உட்கார்ந்து அவளுக்குத் தோன்றிய கடவுள் பெயர்களை யெல்லாம் சொன்னாள்.

''குழந்தை வந்துருச்சா... குழந்தை வந்துருச்சா...'' என்று பதட்டத்துடன் கேட்டாள்.

பெற்றோர்கள் குழந்தையைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டார்கள். ஒன்றுமில்லை என்று சொன்னார்கள். ஊட்டச்சத்து கொடுக்கச் சொன்னார்கள். அதிகம் ஆத்திரப் படாமல், கோபப்படாமல் குழந்தையை அணுக

வேண்டுமென்று சொன்னார்கள். குழந்தைக்கு அந்த உணர்ச்சிகளைக் கொடுக்கக்கூடாது என்று எச்சரித்தார்கள். அந்தப் பெண் குழந்தை சோர்ந்து படுத்துக்கொண்டிருந்தது. திலகவதி திருநீறு வாங்கி, 'நன்றாக இரு' என்று மனதில் நினைத்து நெற்றியில் இட்டாள். வீட்டிற்கு வந்தாள்.

அவள் வீட்டிற்கு வந்து வேறு ஏதோ வேலை செய்யும் பொழுது உள்ளே நாலைந்து ஆட்கள் வந்தார்கள்.

''நீங்கதாம்மா குழந்தைய காப்பாத்துனீங்க. நீங்கதான் குழந்தை கூடவே இருந்தீங்க. குழந்தை சொல்றா. நாங்க சொல்லலை. 'இந்தம்மாதான் எங்கிட்ட, 'கூட இருந்து, நான் பார்த்துக்கிறேன்டி, பயப்படாதடி' அப்படின்னு அவ மயக்கமான நேரத்துல சொன்னீங்களாம். நீங்க வந்து ரொம்ப விசாரிச்சிங்களாம். போர்த்திட்டு உட்கார்ந்து மந்திரஜபம் பண்ணீங்களாம். ரொம்ப முடியாம படுத்துட்டு இருந்தவ திருநீறு இட்டதும் எழுந்து உட்கார்ந்துட்டாம்மா.''

தாயும், தாயின் தமக்கையும், வேறு யாரோ ஒரு பெண்ணும் காலில் விழுந்து வணங்கினார்கள்.

திலகவதிக்கு ஒன்றும் புரியவில்லை.

''நான் அப்படியெல்லாம் ஒண்ணும் பண்ணலீங்க, சாதாரணமா சாமி கும்பிட்டேன். நல்லபடியா ஆவணு மேன்னு நினைச்சேன்.''

''இல்லீங்க. சில பேர் சாமி கும்பிட்டா எதுவும் நல்லபடியா ஆவும். இந்தக் குழந்தைய நீங்கதான் பார்த்துக்கணும் 'த்தே... விழுந்து கும்பிடு'' குழந்தையைக் கும்பிட வைத்தார்கள்.

திலகவதி கைகூப்பினாள்.



''இந்தப் பேரே பாரேன், திலகவதின்னு எவ்வளவு கம்பீரமா இருக்குன்னு.'' வெளியில் சொல்லிக் கொண்டார்கள்.

மெல்ல மெல்ல திலகவதியின் அனுமதியின்றி, திலகவதியின் விருப்பமின்றி அவளுக்கு வேறு விதமாய் ஒரு அங்கீகாரம் கிடைத்தது. கிட்டத்தட்ட அது கடவுள் அங்கீகாரம் போல் இருந்தது.

35838

# 5

அன்னபூரணியின் அப்பா வினாயகத்திற்கு வாழ்க்கையில் ஒன்றன்பின் ஒன்றாக வந்த இடிகள் பெரிதும் கலவரமூட்டின. தன் வீட்டுப் பெண்கள் எவருமே சந்தோஷமாக இல்லை என்பது நெஞ்சைத் தாக்க தினந்தோறும் புலம்பலும், அழுகையும் சுருண்டு தூங்குகிற வாழ்க்கையாயிற்று.

எனவே, ''என் பொருட்டு நீ வருத்தப்படாதே. திலகவதியின் பொருட்டும் வருத்தப்பட வேண்டாம். விசாலாட்சிக்கு ஆசை இருக்கிறது. வாழவேண்டும் என்கிற விருப்பம் இருக்கிறது. விசாலாட்சிக்கு டைவர்ஸ் வாங்கிக் கொடு. வேறு இடத்தில் திருமணம் செய்ய முயற்சி செய்'' என்று அன்னபூரணி அப்பாவுக்குச் சொல்ல, விசாலாட்சி மறுத்துவிட்டாள்.

''ஏதோ ஒருத்தருக்கு வாழ்க்கை சரியில்லைன்னா பரவாயில்லை. அத்தனை பேருக்கும் வாழ்க்கை சரியில்லைங்கறபோது இது சாமிக்குத்தமாகவோ, மூத்தோர்

குத்தமாகவோ இருக்குன்னு படுது. எங்கம்மா சொல்லி யிருக்காங்க, எங்க தாத்தாவோட மூத்த சம்சாரம் தூக்குமாட்டிக்கிட்டு செத்துப் போனதா. அப்படிச் சாகறபோது அவளுக்கு பதினெட்டு வயசாம். மூணுமாச கர்ப்பிணியாம். புருஷன் அடிச்சது தாங்காம செத்துப் போயிட்டாளாம். அவ செத்துப் போனபோது எந்த சடங்கும் ஒழுங்கா செய்யலை. நீத்தார் கடனும் நிறைவா செய்யலை. 'வீட்ல ஒரு பொண்ணை அடிச்சு சாகடிச்சுட்டு மத்த பொண்ணுங்க நல்லா வாழணும்னா முடியுமா?' அப்படியின்னு அம்மா சொல்லியிருக்காங்க'' விசாலாட்சி வேதனையோடு பேசினாள்.

''அந்தப் பொண்ணைப் பெத்தவா, அந்தப் பொண்ணுக்கூடப் பிறந்தவன் எத்தனை வேதனைப்பட்டிருப்பா. எவ்வளவு மண்ணு தூத்தியிருப்பா. அத்தனை மண்ணும் நம்ம வாழ்க்கையில தானே வந்து விழும். அப்படின்னும் பேசியிருக்கா. அதனால இதை சாபம்னு எடுத்துக்கிட்டு வாயை மூடிட்டு இருக்க வேண்டியதுதான்.''

''ஏன் அப்படி இருக்கணும். ஏதாவது நீத்தார் கடன் இப்போவாவது பண்ணுவோமே.''

''நீத்தார் கடன்னா என்ன? செத்தவளுக்குச் சோறு போடறதா. உங்க சோறு யாருக்கு வேணும். சாபம்னு ஒண்ணு வீட்ல விழுந்துடுச்சு இல்ல. அதுக்கு எதிரா அந்த சாபம் நீர்த்துப் போகணும்னா, பலிக்காம போகணும்னா ஆசீர் வாதம்னு ஒண்ணு வேணும். வாழ்த்துன்னு ஒண்ணு வேணும். நம்ம வீட்ல யாராவது வாழ்த்தியிருக்காங்களா. எதுக்காக வாவது வாழ்த்தியிருக்காங்களா. வாழ்த்தறபடியா ஏதாவது பண்ணியிருக்கோமா... ஒண்ணும் பண்ணதில்லையே.

மயிலாப்பூர் அறுபத்து மூவர்க்கு, சிந்தாதிரிப் பேட்டையிலிருந்து வைரசாமி போகும். போற வழி



யெல்லாம் பொங்கலும், புளியோதரையும் போடுவான். நம்ம வீட்டு வாசல்லதான் ஒரு விளக்கும் இல்லாத கும்மிருட்டா இருக்கும். எல்லார் வீட்டு வாசல்லயும் சீரியல் லைட் போட்டிருப்பான். நீர் மோர் கொடுப்பான். சுக்குக் காபி கொடுப்பான். சாம்பார் சாதம் ஊரெல்லாம் இறைபடும். என்னிக்காவது கூப்பிட்டு நூறு ரூபா கொடுத்திருக்கோமா?''

''கொடுத்தா சரியாப் போயிடுங்கறியா'' உரக்கத் கத்திய விசாலாட்சியிடம் திலகவதி கேட்டாள்.

''இந்தக் கேள்வியே தப்பு. இந்தக் கேள்வியே திமிர். உனக்கு கொடுக்க மனமில்லை. அதனால கொடுத்தா சரியாப் போயிடுமான்னு கேள்வி கேட்கற, கொடுக்கற மனசு வரட்டும் அப்புறம் சரியாப் போகுமா, போகாதாங்கறதப் பத்தி இன்னொரு நாள் யோசிப்போம். என்னிக்குக் கொடுக் கணும்னு தோணுதோ, அன்னிக்குத்தான் இந்த வீடு விடியும்.''

ஆனால், அப்பாவிற்குத் தோன்றவேயில்லை. துக்கம், அவமானம் பழக்கமாகிவிட்டது. வீட்டில் மூன்று பெண்கள் வாழாவெட்டிகளாக இருப்பது ஆரம்பத்தில் சற்று தலை குனிவாய், இன்னொரு வீட்டிற்குப் போக முடியாத வேதனையாய் இருப்பினும், மெல்ல மெல்ல அது மறந்துபோய், அப்படி அவர்கள் இருப்பதே இயல்பு என்றாகி தன்னைப் பற்றிய எந்த அக்கறையும் அவருக்கு வராமல் போய்விட்டது.

காசு இருந்தது. பணம் சம்பாதிக்கத் தெரிந்திருந்தது. சம்பாதித்த பணத்தில் உண்ணவும், தின்னவும் தெரிந்திருந்தது. ஆனால், ஊருக்கு உதவத் தெரியவில்லை. உதவி கேட்டு வருபவர்களைக்கூட அவர்கள் உற்சாகப்படுத்தியதில்லை.

''அந்தப் பொம்பளை தூக்குமாட்டிக்கிட்டு செத்தபிறகு, தாத்தா இன்னொண்ணு கட்டினாரு. தாலி கட்டறதுக்கு

முன்னாடி சிந்தாதிரிப்பேட்டை ரயில்வே கேட்கிட்ட ஒரு பொம்பளைய குடிசைமாற்று வாரியத்தில ஒரு பொம்பளைய வச்சுகிட்டிந்தாரு. கல்யாணத்துக்கு அவருக்கு துணிக்கு துட்டு கொடுத்தா, அதைக் கொண்டு போய் அவளுக்குப் புடவை வாங்கிக் கொடுத்தாரு. அவங்க வீட்டுக்கு சமையல் பாத்திரம் வாங்கிப் போட்டாரு. இன்னும் கேவலமா கல்யாணத்து அன்னிக்கு சாயந்தரம் சலூனுக்குப் போயி முடி வெட்டிகிட்டு வந்துடறேன்னு சொல்லிவிட்டு, அவ வீட்டுக்குப் போய் படுத்து புரண்டுட்டு வந்தாரு. பொண்ணைக் கட்டிக்கொடுத்த இடத்துல, ஆள்வச்சு எல்லாம் வேவு பார்த்து, அவரை கையும் களவுமா பிடிச்சிட்டாங்க.

''வேண்டாம். இத்தோட நிறுத்திக்கோ. இதுக்கு மேல் எதுனா ஆடினேன்னு தெரிஞ்சது சிவிடுவேன் சிவி'' அப்படின்னு மாமனார் மிரட்ட, பயந்துபோய் எல்லாத் தையும் உதறிட்டாரு. அப்புறம் பாட்டி வச்சதுதான் சட்டம். மூச்சுத் திணறி செத்துப் போயிட்டான்னு பொய் சொல்லியிருந்தாங்க. தூக்கு மாட்டிக்கிட்டு செத்துப் போயிட்டான்னு தெரிஞ்ச பிறகு ரெண்டாவது சம்சாரம், அதான் பாட்டி. அவருக்கு தன் கையால சோறே போடலை. சோத்தை வச்சிட்டு வெளிய போயிடுவா. இவரா எடுத்துப் போட்டுட்டு சாப்பிடுவாரு.

ரெண்டாவது சம்சாரத்துக்குப் பிறந்தவர்தான் அப்பா, அவர் தம்பிங்க. அவகூட பேசிச் சிரிச்சு, அவ யாரு என்னன்னு சிந்தாதிரிப்பேட்டை பொம்பளைங்ககிட்ட விசாரிச்சு, அவங்க அப்பாகிட்ட சொல்லி ராவோட ராவா நாயடி பேயடி அடிச்சு வெளியூருக்குத் துரத்திட்டாங்க. ''புருஷனைக் காயப்போடாதடி எங்கனா போயிடப் போறான்'' அப்படியின்னு அவங்க வீட்ல சொன்னதுனால இவங்க புள்ள பெத்துக்கிட்டாங்களே தவிர புடிச்சி புள்ளை பெத்துக்கலை. புருஷனை மதிச்சு புள்ளை பெத்துக்கலை.



புள்ளைப் பேறுக்கு எல்லாரும் தாயார் வீட்டுக்குத்தானே போவாங்க. இந்தம்மா போகலை. இவரு எங்கனா தறிகெட்டு அலைவாருன்னு சொல்லிட்டு, தாயாரை, அம்மா வீட்டு வேலைக்காரியை, எடுபிடி ஆளை எல்லாரையும் இங்க கொண்டுவந்து வச்சு, இங்க சாம்ராஜ்ஜியம் நடத்தினாங்க. போட்டோல பாரு எல்லாப் போட்டோலயும் பாட்டி கடுகடுன்னு இருப்பாங்க. கரெக்டா ஒன்றரை அடி தள்ளிதான் இருப்பாங்க.

எண்பத்தாறு வயசு வரைக்கும் இருந்தாங்க. ரொம்ப தள்ளாட்டமா இருக்கும்போது சொன்னாங்க, 'அப்போ தெல்லாம் இந்த மாதிரி அறுத்துப் போடறதுங்கறது தப்புன்னுவாங்கடி. இப்போ மாதிரி இது சரின்னு தெரிஞ்சிருந்தா அந்த ஆளை நான் மறுநாளே அறுத்துப் போட்டிருப்பேன். அப்போ என்ன, இப்போ பார்த்தாலும் எனக்கு அருவருப்பாத்தான் இருக்கும்' அப்படின்னு நம்ம அப்பாகிட்ட சொல்லியிருக்காங்களாம். பொம்பளைய தொந்தரவு பண்ணக் கூடாது. வினாயகம், பொம்பளைய அவமானப்படுத்தக் கூடாது. பொம்பளைய அதட்டிப் பேசக் கூடாதுன்னு அவங்க சொல்லிச் சொல்லி நம்ம அப்பாவை வளர்த்தாங்க. ஆனா, அம்மா ராட்சஸி. ரோஹிணி நட்சத்திரம். சர்ப்ப ஜாதகம். பேசறபோதே சீறலாத்தான் பேசுவா. அம்மாவால அப்பா அடங்கியிருந்தாரு. பொண்டாட்டியால பயந்து நடுங்கிட்டிருந்தாரு. நம்ம வீடு மாதிரி ஒரு கூத்துப் பட்டறை உலகத்துல எதுவும் இல்லை. யாரும் எப்போவும் எதுக்காகவும் சந்தோஷப்படக் கூடாதுன்னு இந்த வீட்ல ஒரு கங்கணம் கட்டிக்கிட்டு இருந்தா மாதிரி, எல்லா நேரமும் அழுது வடிஞ்சிட்டு இருக்கற வீடு. சரியே பண்ண முடியாதான்னு நான்தான் அம்மாகிட்ட கேட்டேன். பாட்டிகிட்ட கேளுன்னாங்க.

நானும், அம்மாவும் பாட்டிகிட்ட போய் உட்கார்ந்தோம். ஏன் நம்ம வீடு மட்டும் அழுது வடிஞ்சுக்கிட்டே இருக்கு. இதை நேர் பண்ண முடியாதான்னு கேட்டோம். அன்ன பூரணியால நேராகும்னு சொன்னாங்க.

அன்னபூரணியே சிரிப்பா சிரிச்சிட்டு இருக்கா. அவளால எப்படி நேராகும் அப்படின்னு கேட்டோம். 'ஆவும் போடி' அப்படின்னு பாட்டி சொல்லிடுச்சு. என்னிக்கு ஆகப்போகுதோ, எப்படி ஆகப் போகுதோ தெரியலை. பெரிய வீடு. மழமழன்னு சிமெண்ட் தரை. முத்தத்துல செம்பருத்தி, குட்டை அரளி, விருட்சி அப்படின்னு வளர்க்கறோம். கொல்லைப்புறம் வாழைமரம் இருக்கற ஒரே வீடு நம்ம வீடுதான். ஒரு சினிமா ஆள் வந்து பார்த்துட்டு 'சித்தாரிப்பேட்டையில இத்தினி அழகா அரண் மனை போல ஒரு வீடு இருக்கே' அப்படின்னு சொன்னாரு'' என்று உரக்கச் சொல்லிவிட்டு, வாய்விட்டுச் சிரித்தாள்.

'மூத்தாரை ஏமாத்தினது மட்டுமில்லை. தாத்தா சொந்த தங்கச்சியையும் ஏமாத்தியிருக்காரு. அதுவந்து இந்த வாசல்ல மண்ணு இறைச்சுட்டு போயிருக்கு. அது ஒரு தனிக்கதை. அது தெரியுமா?''

''கொஞ்சம் கேள்விப்பட்டிருக்கேன்'' அன்னபூரணி சொல்ல, விசாலாட்சி அந்தக் கதையை எடுத்துவிட ஆரம்பித்தாள்.

''நூறு பவுன் நகை போடறேன்னு சொல்லி, போட்டாங்க. அதுல இருவத்தேழு பவுன் கவரிங். கவரிங் வர ஆரம்பிச்ச நேரம் அது. தினசரி போட்டுக்கற நகை, எப்போவாவது போட்டுக்கற நகையில தான் கவரிங் கலந்திருந்தது. ஏழு வருஷம் கழிச்சு கண்டுபிடிச்சாங்க. ஆனா, தாத்தாவோட தங்கச்சி புருஷன் ஒண்ணுமே சொல்லலையாம்... உங்க



வீட்டைப் பத்தி நான் முன்னாடியே கேள்விப்பட்டேன். 'ரொம்ப ஏமாத்துக்கார ஃபேமிலி. ஜாக்கரதையா நடந்துக்கோ'ன்னு எனக்கு சொல்லித்தான் அனுப்பினாங்க. 'இதுவரைக்கும் என்னை ஒண்ணும் ஏமாத்தலையேப்பா, நல்லபடியா தானே நடத்தறாங்க' அப்படின்னு, சொன்ன வங்களுக்கெல்லாம் நான் பதில் சொல்லிக்கிட்டிருந்தேன். இப்போதான் தெரிஞ்சுது. கல்யாணத்து அன்னிக்கே ஏமாத்திட்டாங்கன்னு தெரிஞ்சது. போனாப்போகுது போ. உன்னுடைய அன்புக்கு முன்னாடி இந்த இருவத்தேழு பவுன் ஒண்ணும் பெரிசு இல்லை. இதைப்போய் கேட்டு பெரிசு பண்ணி அழுதுட்டு வராத அப்படின்னாங்க.

ஆனா, அத்தைப் பாட்டி கேட்கலை. மைசூர்லேர்ந்து வண்டி பிடிச்சு இங்க வந்து வீட்டு வாசல்ல நின்னு ''என்ன இப்படி பண்ணிட்டியே'' அப்படின்னு அண்ணனைப் பார்த்துக் கேட்டப்போ, ''நான் பண்ணலை. உங்க வீட்டுக்காரனே அப்படி பண்ணியிருப்பான். எதுக்கும் அவனை விசாரிச்சுப் பாரு. நான் கொடுத்ததெல்லாம் சொக்கத் தங்கம்''னுட்டாரு. அந்தம்மா நேரா ஆச்சாரிகிட்ட போச்சு. 'எங்க வீட்ல எனக்கு நகை பண்ணிப் போட்ட தெல்லாம் நீதானே. நீ சொல்லு எப்படிப் பண்ணாங்கன்னு.'

அவன் உண்மைய சொல்லிட்டான். காதுல போட்டிருக்கற கம்மல் கூட மாத்து கம்மியான தங்கம்தான்னு. 'உன் புருஷன் வீட்லேர்ந்து நாப்பது அம்பது பொம்பளை வந்தாங்க. அதுல ஒருத்தி தூங்கறபோது கழுத்துலேர்ந்து பனிரெண்டு பவுனுக்கு நகைய கழட்டி, அதை எங்கிட்ட கொடுத்து, எங்கிட்ட இருக்கிற நகைய வாங்கிட்டுப் போனாங்க. அப்படியொரு ஏமாத்து வேலையும் நடந்தது'ன்னு சொல்லிட்டான். அத்தைப் பாட்டி ஆடிப் போயிட்டாங்களாம். அவ புருஷன் இடிஞ்சு போயிட்

டானாம். மறுபடியும் இந்த வீட்டு மண்ணை மிதிச்சாலும் தப்பு. அந்த கெட்ட புத்தி நமக்கு வந்துரும் அப்படின்னு ஊருக்குக் கிளம்பிட்டாங்களாம். போகறதுக்கு முன்ன ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போறோம் அப்படின்னாளாம் அத்தைப் பாட்டி.

அவ புருஷன் சொன்னானாம்... சண்டை போடாத. அதற்குண்டான பலனை அவங்க அனுபவிப்பாங்க. மைசூர்ல தர்ம ஸ்தலான்னு ஒரு இடம் இருக்கு. அங்க போய் நின்னு 'நான் எந்த தப்பும் பண்ணலை. என்னை இவங்க ஏமாத்திட்டாங்க. இது நியாயமா' அப்படின்னு கேட்போம். அந்த இடத்துக்குப் போய்க் கேட்டா அந்த ஆள் நியாயம் கேட்கற விதமே வேற. அதனால கோபப்படாத வா அப்படின்னாங்களாம். ஆனா, அத்தைப் பாட்டி கேட்கலை. படியேறாம ரோட்ல நின்னு ஊர் அத்தனையும் கூட்டி உரக்க நாக்கு பிடுங்கிக்கறா மாதிரி நூறு கேள்வி கேட்டுட்டுத்தான் போனாங்க. நீ செத்துப் போயிட்டடா, நீ செத்துப் போயிட்டடான்னு ஒரு தவலை தண்ணி வாங்கி தலையில ஊத்திக்கிட்டு அப்படியே ஈரத்தோட வீட்டைவிட்டு நடந்து போனாங்க. சம்பந்தமில்லாதவங்களெல்லாம் வாய்விட்டு அழுதாங்களாம். பொண்ணு வயித்தெரிச்சலை இப்படி கொட்டிக்கறியேன்னு கைநீட்டி திட்டினாங்களாம்.

அத்தைப் பாட்டியோட புருஷன் வீடு கர்நாடகாவில இருக்கிற தமிழ் முதலியாருங்க. ரொம்ப நல்ல மாதிரி. ரொம்ப இளகின மனசு. யார் வந்தாலும் சாப்பாடு போட்டுட்டுத்தான் பேச்சே ஆரம்பிப்பாங்களாம். யார் வந்தாலும் 'சாப்பிட்டீங் களா, பசிக்குதா, முதல்ல சாப்பிடுங்க அப்புறம் பேசுவோம்'னுவாங்களாம். குடிக்கறதுக்கு ஒரு லோட்டா தண்ணியும், டீயும் கொடுத்துட்டுத்தான் உட்கார வைப்பாங் களாம்.



அத்தைப் பாட்டி புருஷன் வேணாம்... வேணாம்னு சொல்ல தர்மஸ்தலாவுக்கு நேந்துகிட்டு போய் 'என்னை எங்க வீடு ஏமாத்திடுச்சி. அவன் மனசு நோகும்படி எங்க வீடு நடந்தது. நீ கேள். நீ நியாயம் கேள்' அப்படின்னு உரக்க அங்க கன்னடத்துல கத்திப் பேசி வந்திருக்காங்க. அன்னிக்கு பிடிச்சது நம்ம வீட்டுக்கு சனி.

அந்தம்மா இந்த விஷயத்தை தர்மஸ்தலா சிவபெருமான்கிட்ட விட்டுட்டு புருஷன் வீட்டை அப்படி கொண்டாடினாங்களாம். பொண்ணோட நாத்தனாருங் களுக்கு மூணு பிள்ளைப் பேறு, நாலு பிள்ளைப் பேறுன்னு ஆறு நாத்தனாருக்கு செய்தாங்களாம். நாத்தனார் குழந்தைங்களை தான் வீட்ல உட்கார வச்சு சாப்பாடு போட்டு அதுங்கள படிக்க வச்சு, பெரிய ஆளா மாத்தினாங்களாம். அவங்களுக்கு தீபாவளி, பொங்கல்னு எதுவும் பண்டிகை யில்லையாம். புருஷன் பிறந்த நாள்தான் பெரிய பண்டிகையா கொண்டாடுவாங்களாம். பெரிசு பெரிசா மூணு அண்டா சோறு வடிச்சு, குழம்பு, ரசம், மோர் அப்படின்னு பாயசத்தோட யார் வந்தாலும் சாப்பாடு போடுவாங்களாம்.

என் புருஷனுக்கு பிறந்த நாள். எல்லாரும் நல்லா சாப்டுட்டு அவர் வாழ்கன்னு சொல்லணும் அப்படின்னு வாங்களாம். எங்க புருஷன்னு கேட்டாக்க, அவரு தர்மஸ்தலா போயிட்டாரு பிறந்த நாளைக்கு, நான் அவரு பிறந்த நாளைக் கொண்டாடறேன்னுவாங்களாம். புருஷன் முன்னாடி தினமும் விழுந்து நமஸ்காரம் பண்ணி ''நான் தெரியாத்தனமா ஏதாவது தப்பு பண்ணியிருந்தா மன்னிச்சுக்கணும்'னு உரக்க கன்னடத்துல கேட்டு இன்னொரு தடவை நமஸ்காரம் பண்ணிட்டு, சாப்பாடு பரிமாறுவாங்களாம். வேணாம்... இப்படி பண்ணாதன்னு எவ்வளவு சொல்லியும் கேட்கலை யாம்.

எங்க வீடு உங்களை அசிங்கப்படுத்திச்சு. ஆனா, நீங்க என்னை உள்ளங்கையில வச்சு தாங்கறீங்க. எனக்கு கோயில், குளம் எல்லாம் நீங்கதான். உங்களை விட்டா எனக்கு வேற தெய்வம் இல்லைன்னு சத்தியம் பண்ணி சொல்வாங்களாம்.''

''கேட்கறதுக்கே எவ்வளவு நல்லாயிருக்கு இல்லை.''

''அவங்க ஒரு க்ரூப் போட்டோ காண்பிச்சாங்க. அப்போ அத்தைப் பாட்டிக்கு அறுவது வயசு. அவருக்கு ஒரு எழுவது வயது இருக்கும். ஏகப்பட்ட பசங்க, பேரப் புள்ளைங்க, பேத்திங்க, பேத்திக்குப் பிறந்த குழந்தைங்க அப்படின்னு ஒரு பெரிய பட்டாளம். அத்தைப் பாட்டி புருஷன் அப்படி வலது கையைத் தூக்கி அவர் தோள்ல போட்டு பக்கத்துல இறுக்கி உட்கார வச்சிருக்காரு. அப்போ போட்டோ எடுத்துட்டாங்க. ஏதோ ஜோக் அடிச்சிருப்பாரு போல, எல்லாரும் அவங்கள பார்த்து சிரிக்கிறாங்க. அந்தக் கிழவர் முகத்துல என்னா சந்தோஷம் தெரியுமா? அந்தக் கிழவர் முகத்துல என்ன கம்பீரம் தெரியுமா? சுத்தியிருக்கற வங்க முகத்துல எத்தினி ஆனந்தம் தெரியுமா? இப்படியொரு போட்டோ என் வாழ்நாள்ல நான் பார்த்ததேயில்லை.''

விசாலாட்சி சொல்லச் சொல்ல அன்னபூரணி அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

## 6

**தா**த்தாவ தர்மஸ்தலா சிவன் சும்மா விட்டாரா.' அன்னபூரணி தொடர்ந்து கேட்டாள். திலகவதியும் அவளுடன் கலந்து கொண்டாள்.



''அதெப்படி சும்மா' விடுவாரு. கத்தியில குத்திட்டாங்க இல்ல. அப்போத்திய சிந்தாதிரிப்பேட்டை ரௌடி சண்டைக்குப் பேர் போனதாச்சே. பசங்க சண்டை–அதுவும் காத்தாடி சண்டை. அது பெரியவர்களுக்கு போய் இவரு ஏதோ சமாதானம் பண்ணி வைக்க, 'போடா வாய மூடிட்டு' ன்னு யாரோ சொல்ல, இவரு 'டாய்...' அப்படின்னு எழுந்திருக்க, சதக்...சதக்குனு இறக்கிட்டாங்க. துருப்பிடிச்ச கத்தி. இரண்டு வருஷம் குடல் முழுக்க அழுகி இல்ல செத்தாரு.'

''மூனு தலைமுறைன்னா எத்தினி வருஷம். அன்னபூரணி ஆவலாகக் கேட்டாள்.

''நூறு வருஷம்னு வச்சிக்கோயேன்.'' விசாலாட்சி பதில் சொன்னாள்.

''எங்கேர்ந்துடி பிடிச்ச இதெல்லாம்.'' அன்னபூரணி சட்டென்று கேட்டாள்.

''குத்துப்பட்டு, குடல் அழுகி ஜுரத்துல அழுது கிட்டிருந்த தாத்தா கூப்டு கூப்டு சொன்னதா நம்ம அம்மா சொல்வாங்க. நூறு வருஷம் முன்னாடி இருந்த ஒரு தாத்தாவை 'சவுக்கு சுபேதார்'னு கூப்பிடு வாங்களாம்.''

''சுபேதார்னா... ஜாதியா...''

''இல்லை, பதவி. சுபேதாருங்கறதே ஒரு உருதுப் பேர்.''

''அதென்ன சவுக்கு.''

''பணம் கொடுக்காதவனை, வம்பு தும்பு பண்றவனை அடிக்கறதுக்குன்னு ஒரு ஆளு. தாத்தாவுக்குப் பெரிய தாத்தா, அவரு வேலையே இது தான். வீட்ல ஆறேழு சவுக்கு இருக்குமாம். தோல் சவுக்கு, கயிறு சவுக்கு, சுறாமீன்

சவுக்குன்னு வச்சிட்டிருப்பாராம். எங்க போனாலும் இடுப்புல ஒரு சவுக்கு கட்டிக்கிட்டிருப்பாராம். குதிரை வண்டியில ஒரு சவுக்கு சுருட்டி வச்சிருப்பாராம். யாராவது பட்டாக்கத்தியால சண்டை போட்டாக்க, இவரு சவுக்கால சண்டை போடுவாராம். மரத்துல நிறைய கத்தியை குத்திட்டு, ஒவ்வொரு கத்தியா சவுக்கால எடுப்பாராம்.''

''எப்படி?''

''ஒரு சொடுக்கு விட்டாக்க ஒரு குறிப்பிட்ட கத்தியை மட்டும் கவ்வி சவுக்கு கொண்டு வந்துருமாம்.''

''அப்போ துப்பாக்கி வந்துடுச்சா.''

''வந்துடுச்சு. இருந்தாலும் லோக்கலா இருக்கற ஜனங்களை மிரட்ட இவரை மாதிரி ஆளுங்களைத் தான் வெள்ளைக்காரன் உபயோகப்படுத்தியிருக்கான். நல்ல உரமாம். பெரிய மீசையாம். முரட்டு புத்தியாம். எப்பவும் தண்ணியில இருப்பாராம். காலையில எழுந்தவுடனே கள்ளு குடிப்பாராம். சவுக்கு சுபேதார்...அப்படின்னு குரல் கேட்டா போதும்,பின்னாலேர்ந்து பாய்ஞ்சு வருவாராம். எதிர நிக்கறவனை சவுக்கால விளாசுவாராம். அப்படி அடிக்கறதுல ஒரு கம்பீரமாம். பெருமையாம். ரத்தம் சொட்டச் சொட்ட அடிச்சிருக்காராம். அவரு அடியை வாங்கி பல பேர் செத்துருக்காங்களாம்.''

''கடவுளே... கடவுளே... போறும், போறும். இந்தக் கதை இத்தோட போறும்.''

திலகவதி காது பொத்திக் கொண்டு அலறினாள்.

''அந்தாள் எப்படி செத்தாரு தெரியுமா? அதுவும் சொல்லியிருக்காங்க.''

''எப்படி?'' அன்னபூரணி ஆவலானாள்.



''கணுக்காலை உடைச்சு படுக்கப் போட்டு குதிரையில கையகட்டி, குதிரையை சவுக்குல அடிச்சு துரத்தியிருக்காங்க. கோட்டையில அடி வாங்கின குதிரை திருவான்மியூர் போய் நின்னுது. பாதி உடம்பு தலையோட போயிடுச்சாம். எலும்பு தான் நின்னுச்சாம்.''

''என்னடி எழவு இது?'' பெண்கள் மாற்றி மாற்றிப் பேசினார்கள்.

''எதுக்கு அப்படி பண்ணாங்களாம்.''

''மறுநாள் சவுக்கால அடிக்க வேண்டியவனை அடிக்காதன்னு சொல்றதுக்கு அவன் பொண்டாட்டி வர், அவன் பொண்டாட்டிய உபயோகப்படுத்திகிட்டு, அவங்கிட்டேர்ந்து ரெண்டணா காசு வாங்கிட்டாராம்–லஞ்சம். வெள்ளைக்காரன் கண்டுபிடிச்சிட்டான். ஆளு வச்சி வேவு பார்த்துட்டான். மறுநாள் கார்த்தால யாரு அடிபட வேண்டியவனோ அவனை கட்டு அவுத்து துரத்திட்டு, இவரை சவுக்குல அடிச்சு காலை ஒடிச்சி, குதிரையில கட்டித் துரத்திட்டாங்களாம். கூட்டம் ஒரே கைதட்டலாம். வெள்ளைக்காரனுக்கு ஜே... போட்டாங்களாம். வெள்ளைக்காரன் அடிக்கடி அப்படி பண்ணுவானாம். நம்மூர் ஆளையே நமக்கெதிரா திருப்பிவிட்டு அடிக்க வச்சி, மிரட்ட வச்சி, பிறகு எவன் அடிச்சானோ, எவன் மிரட்டினானோ அவனுக்குத் தண்டனை கொடுத்து, ஜனங்களைத் தன் பக்கம் இழுத்துக்குவானாம். தான் நல்லவனாக வெள்ளைக்காரனுக்கு இது ஒரு தந்திரமாம். சரியா மாட்டிக்கிட்டு செத்தாராம் அந்நாளு. போறும் போ, நான் எங்கனா ஆடுமாடு மேய்க்கற குடும்பத்துல பிறந்திருக்கக் கூடாதான்னு புலம்பினாராம்.

ஆரம்பத்துல நம்ப மூத்தோரெல்லாம் ஆடு, மாடு, மான் மேய்ச்சிட்டிருந்தாங்களாம். அப்போ கறிக்காக

ஆடுதான் வெட்டுவாங்களாம். வெள்ளைக்காரன் கேட்டான்னு சொல்லிட்டு, நம்ம மூதாதையர் மாடு வெட்ட ஆரம்பிச்சாங்களாம். ஊர்ல எத்தனை பேர் தடுத்தும், அதுக்கு நல்ல விலை இருக்குன்னு சொல்லி, பசு மாடு கொன்னு கறி கொண்டு போய் கொடுப்பாங்களாம். அதுவும் இளங்கன்னா கொடுப்பாங்களாம். ஊர் வந்து இதை எதிர்க்குதுங்கறதனாலயும், இழிவா பேசுதுங்கறதனாலயும் கன்னுக்குட்டியை கால கட்டி எடுத்துட்டுப் போய் படகுல போட்டு, நடுக் கடல்ல கொண்டுபோய் அங்க கன்னுக் குட்டியை வெட்டித் தோல உரிச்சு படகுலயே உட்கார்ந்து கறியை சிறுசு சிறுசா நறுக்கி கூடை யில போட்டுக் கொண்டு வந்து ராவோட ராவா கோட்டைக்கு எடுத்துட்டுப் போவாங்க. மாட்டுக்கறிக்கு வெள்ளைக்காரன் அப்படி பறப்பானாம். எலும்பெல்லாம் கடல்லியே போட்ருவாங் களாம். தினம் இப்படி படகுல போய் கறிவெட்டறதுனால அந்தப் பக்கம் சுறாமீன் நடமாட்டம் ஜாஸ்தி ஆயிடுச்சாம். படகு வந்தாலே சுறாமீனெல்லாம் ஒண்ணா கூடி எகிறி கவ்வுக்குமாம். சுறாமீன் தின்றதுக்குன்னு செத்த மாடுங்களைக் கூட்டிக்கிட்டுப்போய் தள்ளி விட்ருவாங்களாம். அப்புறம் கன்னுக்குட்டியை அறுப்பாங்களாம்.''

''எப்போடி இது.''

''நூத்தி அம்பது வருஷத்துக்கு முன்னாடின்னு வச்சுக்கோயேன்.''

''ஏண்டி... நம்ம வம்சத்துல நல்லவங்களே இல்லையா.''

''இருந்திருக்காரு. ஒரு படம் வரையறவர் இருந்திருக் காரு.''

''படம் வரையறவருன்னா யாரு?''



''சாமி படம் வரையறவரு. வீடு வீடா போய் பூஜை ரூம்ல வெள்ளை அடிச்சு, ஊதுவத்தி, கற்பூரம் கொளுத்தி பூஜை போட்டு கரிக்கோல்ல சாமி படம் எழுதுவாராம்.''

''என்னா சாமி?''

''ரிஷிபத்துல சிவபெருமான், பார்வதி, வள்ளி தெய்வயானை, முருகர், ஆஞ்சநேயர், பள்ளி கொண்ட பெருமாள் அப்படின்னு எழுதுவாராம். திருவல்லிக் கேணியில பல வீடுகள்ல பார்த்தசாரதி பெருமாள் படம் வரைஞ்சிருக்காராம். உயரமா பார்த்தசாரதி, பக்கத்துல அடக்கமா ருக்மணி, வலதுபுறம் வடக்குப் பார்த்து கிருஷ்ணருடைய அண்ணன் பலராமர், அந்தப் பக்கம் கிருஷ்ணருடைய பையன், பேரன் எல்லாமுமா படம் வரைவாராம். பார்த்தசாரதி படம் வரையறதுக்கு மட்டும் பதினஞ்சு ரூபாயாம். மத்த படம் வரையறதுக்கு அஞ்சு ரூபாயாம். கரிக்கோட்டுல படம் வரைஞ்சு செம்மண்லேயும், நீலக் கலர்லேயும் அதன் மேல எழுதி கீழல்லாம் முனிவர்கள், ரிஷிகள், படம் போட்டு அவங்க வீட்டு பெரியவங்க படமெல்லாம் வரைஞ்சு, அவங்களும் வைகுண்டத்துல இருக்கறா மாதிரி பண்ணி கண்ணு திறந்து வைப்பாராம். ஊரே ஓடியாந்து பார்க்குமாம். பல பேர் மாலை போடறதா நேந்துக்கு வாங்களாம். சுவர்ல பக்குவமா ஆணி இறக்கி படம் மாட்டறதுக்கெல்லாம் இடம் பண்ணுவாங்களாம். ஈரம் பட்டாலும் சாயம் போவாதாம். சீக்கிரம் அழியாதாம்.

அவரை எழுதறவரேன்னு தான் கூப்பிடுவாங்களாம். ஒரு படம் வரைய ஒரு வாரம், பத்து நாள் ஆகுமாம். தினசரி அங்கயே காபி, டிபன் சாப்பாடு. அவர் வீட்லயே தூக்கம்னு ரொம்ப மரியாதையா இருப்பாராம். மரியாதையா படம் வரையறதையே தொழிலா வச்சுட்டிருந்ததுனால கடைசி மட்டும் கல்யாணமே பண்ணிக்கலையாம். பிரம்மச்சாரியா

இருந்தாதான் படம் வரைய வரும். அதுவும் குறிப்பா ஆஞ்சநேயர் படம் வரைய வரும் அப்படின்னு சொல்லிட்டு, கடைசி வரைக்கும் ரொம்ப கடுமையான பிரம்மச்சாரியா இருந்தாராம். யாருக்கு உடம்பு சரியில்லைன்னாலும் துளசியை அரக்கி துளசி தீர்த்தம் கொடுப்பாராம். தொண்ணூத்தாறு வயசு வரைக்கும் இருந்து தனக்கு சாவு வராது அப்படிங்கற எண்ணத்துல கடல்ல இறங்கி செத்துட்டாராம். இறங்கி நாப்பதடிதான் போயிருப்பாராம். பெரிய சுறா மீன் வந்து கவ்விக்கிட்டுப் போனதைக் கண்ணால பார்த்தாங்களாம்.''

''கடவுளே என்னாடி கோரம் இது.. நீ நிஜம் சொல்றியா, பொய் சொல்றியான்னே தெரியலை.''

''நான் என்னாத்துக்குப் பொய் சொல்லணும். இந்தக் கதை ரொம்ப நாளா பேசப்பட்டு வருது. நம்ம ஜாதிக்காரங்க, நம்ம குடும்பத்தைச் சேர்ந்தவங்க விழுப்புரத்துல இருக்காங்க. போய்க் கேளு. இதைவிட பெரிய கதையெல்லாம் சொல்றாங்க.''

''வேணாம். இதுக்கு மேல எனக்கு வேணாம்.'' திலகவதி கைகூப்பினாள். அன்னபூரணி வாய் விட்டுச் சிரித்தாள்.

அந்த மூன்று பெண்களும் பிற்பகலில் உட்கார்ந்து முற்றத்தில் அரிசி புடைத்தபடி, பருப்பில் கல் நீக்கியபடி இந்தக் கதைகள் பேசுவார்கள்.

பாட்டியின் நகைகள் இருந்தன. வங்கியில் காசு இருந்தது. எப்போதோ, எப்படியோ சம்பாதித்த வெள்ளிப் பாளங்கள் இருந்தன. சென்னை அண்ணா சாலைக்கு நடுவே ஒரு சிறிய சந்தில் மஞ்சக்காணி சீதனமாய் வந்த ஒரு பழங்காலக் கட்டிடம் இருந்தது. அதை நிதானமாய்ப் பேசி நல்ல விலைக்கு அன்னபூரணியின் அப்பா விற்க, அந்தக் காசு



அப்படியே வங்கியில் போடப்பட்டு, அதன் வட்டியில் குடித்தனம் நடந்து கொண்டிருந்தது.

''இந்த வீட்ல அவரு படம் ஒண்ணுகூட இல்லியே. அவரு வரைஞ்ச படம் வேற எங்க இருக்கு.''

''அட்டையில வரைஞ்ச படம் ஒண்ணு மியூசியத்துல இருந்ததுன்னு சொன்னாங்க. மத்தபடிக்கு வீட்ல அவரோட படம் ஒண்ணுகூட இல்ல. முதன்முதல்ல அவரு வரைஞ்ச படம்தான் அச்சுல ஏறிச்சுன்னு சொன்னாங்க. அதுவும் மியூசியத்துல ஒட்டி வச்சிருக்காங்க. மத்தபடிக்கு அவரு உயிரோடு இருக்கும் போது இந்த வீடு வாங்கலை. இந்த நிலம் மட்டும்தான் இருந்தது. இந்த நிலம் தென்னந்தோப்பா இருந்தது. இப்போ நாம் உபயோகப்படுத்தறமே கிணறு அது அவரு குளிக்கிற கிணறா இருந்தது.''

''அப்போ அந்தப் படம் எழுதறவரு இங்க வாழ்ந்திருக்காரா.''

''இங்கதான் வாழ்ந்திருக்காரு. அவங்க வீடு ஜார்ஜ்டவுன் பக்கம். அந்தப் பக்கம் பொண்ணுங்க நடமாட்டம் ஜாஸ்தி. இந்தப் பக்கம் தென்னந்தோப்பா இருக்கறதுனால இங்க குடிசை போட்டுக்கிட்டு கிணறுல குளிச்சிக்கிட்டு இங்கேர்ந்து தான் வீடுகளுக்குப் போய் படம் எழுதுவாராம். படம் எழுதறதுக்கு இங்கதான் தேடிட்டு வருவாங்களாம். பொண்ணுங்களைப் பார்க்கக் கூடாதுங்கறத் துக்கும், ராத்திரி தனியா நடமாடணும்ங் கறத்துக்காகவும் இந்த மாதிரி ஒரு காட்டுல வந்து இருந்தாருன்னு சொல்வாங்க.''

''அப்போ, சிந்தாதிரிப் பேட்டை காடா இருந்துதா.''

''ஆமாம். காடா இருந்திருக்கணும்.''

விசாலாட்சி உரக்கச் சொன்னாள். பெண்கள் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''தற்கொலை பண்ணாக்க உடனே குடும்பத்துல வந்து கவிழ்ந்துடறது, நம்ம வாழ்க்கை பாழாகுதுன்னாங்க. நல்லது பண்ணாரே, நமக்கு நல்லது நடக்கணுமில்லை, ஒரு நல்லதும் நடக்கலையே.'' விசாலாட்சி அன்னபூரணியைப் பார்த்துக் கேட்டாள்.

''இந்த வீடு நம்மகிட்ட இன்னும் இருக்கே. அது அவரு ஆசீர்வாதம்தானே. இந்த வீட்டுக்குள்ள எவனும் கால் எடுத்து வச்சு நம்மள மிரட்ட முடியலையே. இது அவரு அனுக்கிரகம்தானே. இன்னிக்கு இப்படி உட்கார்ந்து சோறு திங்கறோம், எதிரும், புதிருமா உட்கார்ந்து பேசறோம் அப்படின்னா அது அவரு பாதுகாப்புதானே. நம்ம அப்பாக்கு வயசாயிடுச்சி. நாம மூணு பேரும் வெறும் பொம்பளைங்க இருக்கோம். யாராவது படியேறி வந்தா எதுனா தப்பா பேசியிருக்காங்களா. ஒரு பால்காரன் துட்டு கொடுக்கறதுக்கு லேட் ஆச்சுன்னு அசிங்கமா பேசினான். மறுநாளே மாடு முட்டி இடுப்பு ஒடிஞ்சிடலை. அவன் நடமாடறதுக்கு ரெண்டரை வருஷம் ஆவலை. நல்ல பொம்பளைங்கள தப்பா சொன்னியே அதான் மாடு முட்டிடுச்சுன்னு அவன் பொண்டாட்டியே அவன குத்திக்காட்டலை.

நம்ம வீட்டுக்குள்ள ஒருத்தன் படியேறி தப்பான ஆள் வர முடியாது. நம்ம ஆளுங்க தப்பு பண்ணாதான் உண்டு.''

அன்னபூரணி உரத்துக் கூறினாள். அதற்குப்பிறகு மெளனமாய் அவரவர்கள் வேலையில் ஈடுபட்டார்கள். சமைத்ததை இறக்கி வைத்தார்கள். அது சனிக்கிழமை என்பதால் சிறியதாய் திருப்பதி சாமிக்குப் படையல் போட்டார்கள். படையலை எடுத்து வைத்து பகிர்ந்து உண்ணத்



துவங்கினார்கள். எழுந்து போய் பால் வாங்கி வந்து காய்ச்சி காபி குடித்தார்கள்.

''திரும்பத் திரும்ப சாப்பிடறதும், காபி குடிக்கறதும் மறுபடியும் தூங்கறதுமா பொழுது போகுது. வேற எதுனா நாம பண்ண முடியாதா? ரொம்ப கோயிலுக்குப் போறதும் பிடிக்கலை. எதுனா உருப்படியா பண்ணணும்னு தோணுது. இந்த வீட்டை வித்துட்டு கொஞ்சம் வேற பக்கம் போய் குழந்தைங்களுக்கு ஒரு காப்பகம் ஆரம்பிக்க முடியாதா. வயசானவங்களுக்கு முதியோர் இல்லம் ஆரம்பிக்க முடியாதா. இன்னும் தெற்கு தாம்பரம் தாண்டி நிலம் வாங்கி, வீடுகட்டி அனாதைக் குழந்தைகளுக்கு உதவி செய்ய முடியாதா. அப்படி யொண்ணு இருக்காமே இந்தப் பக்கம். அந்த மாதிரி வேற ஒண்ணு ஆரம்பிக்கக் கூடாதா.''

''இல்லை. எனக்கு சிந்தாதிரிப்பேட்டையை விட்டுப் போகறதுக்கு இஷ்டம் இல்லை.'' அன்னபூரணி திடமாகச் சொன்னாள்.

''அப்போ இங்க உட்கார்ந்து என்ன பண்ணமுடியும்னு நினைக்கற.'' திலகவதி கேட்டாள்.

''ஒரு வருஷம் பொறுத்துக்கோ.''

''ஏன் ஒரு வருஷம் பொறுக்கணும்''

''அந்த ஒரு வருஷமும் என்னா பண்ணுவோம், என்னா பண்ணுவோம்னு யோசனை பண்ணலாம். அனாதைங்களுக்கு சோறு போடறது, முதியோர்களைப் பாதுகாக்கறது, குழந்தைகளை வச்சு காப்பகம் நடத்தறது இதெல்லாம் யார் வேணா பண்ணலாம். யாரும் பண்ண முடியாதா. இன்னும் நிறைய பேருக்கு உதவி செய்யற விஷயமா எதுவும் பண்ண முடியாதா.''

''இதுல என்ன பெரிய உதவி வேண்டியிருக்கு. அப்பா, அம்மா வேணாம்னு ஊர்ல நிறைய பேர் தள்ளி விட்டுடறாங்க. நிறைய அப்பா, அம்மா அனாதையா இருக்காங்க. நீ இன்னிக்கு போர்டு போடு, நாளைக்கு காலையில நூறு பேர் நிப்பான் கீழ. எங்கப்பா அம்மாவ எடுத்துக்கோ, எங்க அத்தை பாட்டியை எடுத்துக்கோ, எங்க சித்தியை எடுத்துக்கோன்னு ஏகப்பட்ட பேர் வந்து நிப்பாங்க...'' விசாலாட்சி அலுப்புடன் பேசினாள்.

''அதுல ஒரு தப்பு தெரியும்தும்மா.''

''என்ன தெரியுது?'' திலகவதி வேகமாகக் கேட்டாள். அன்னபூரணி அவளைக் கூர்மையாகக் பார்த்தாள்.

# 7

அன்னபூரணி திலகவதியை கூர்மையாகப் பார்த்துக் கொண்டே தன் பேச்சைத் தொடர்ந்தாள்:

''நீ எப்போடா ஆரம்பிப்பேன்னு காத்துக்கிட்டு, பெத்தவங்களைத் தாங்கறவன்கூட, சகிச்சுகிட்டிருக்கிற வனெல்லாம் கூட கொண்டுவந்து தள்ளிவிடப் பார்ப்பான். 'முதியோர் இல்லம்னு ஒரு இடம் இருக்கே. தள்ளி விட்டுட்டு வாங்களேன்'னு பொண்டாட்டி சொல்ல, உடனே தரதரன்னு இழுத்துட்டு வந்துருவான். இப்படி ஒரு இடம் இல்லைன்னா அவனே வச்சுட்டு காலம் தள்ளுவான். எதுக்கு ஒரு முதியோர் காப்பகம் ஆரம்பிச்சு அவன் கூட்டத்தை நாம பிரிக்கணும்.''

''ஆமாம். நீ பேசறதுல ஒரு நியாயம் இருக்கத்தான் செய்யுது. அதுக்காக... இதை ஆரம்பிக்காத விட்டுடறதா.



அவன் பொண்டாட்டி சொல்லி, அவன் நடுத்தெருவில தள்ளமாட்டானா. எங்கேயாவது கூட்டிட்டுப் போய் ஊர் தெரியாத ஊர்ல தாயார இறக்கிவிட்டு 'பிச்சையெடுத்துப் பொழைச்சிக்கோடி நாயே' அபபடின்னு திரும்பி வந்துடமாட்டானா.''

''அது ரொம்ப அதீதமான கேஸ். அப்படி எல்லாரும் இருப்பாங்கன்னு நினைக்கலை. எங்கயே மனசு ஆடும். தசை ஆடும். கொஞ்சமாவது ஈரம் இருக்கும். ஐயோ.... பெத்தவளைப் பிச்சை எடுக்க விட்டுட்டோமேன்னு ஒரு வேதனை இருக்கும். பொண்டாட்டி என்னதான் கத்தினாலும், 'பொறுமையா இருடி'ன்னு அவங்கையால சோறு போட்டாவது அம்மாவை வச்சுருப்பானே தவிர, அந்த மாதிரி அனுப்புவான்னு தோணலை. நீ சொல்ற மாதிரி ஆளுங்க ரொம்ப கம்மி. ஆனால், நீ முதியோர் இல்லம் ஆரம்பிக்கறேன்னா கொண்டு வந்து சேர்க்கறதுக்கு, வச்சு காப்பாத்தறவன்கூட யோசிக்க ஆரம்பிச்சுடுவாங்கறது ஒரு பரிதாபமான விஷயம். ' ஒரு மாசம் அங்க இருந்து பாரேன்' அப்படின்னு அனுப்பிடுவாங்களோன்னு எனக்குப் பயமாயிருக்கு.

குழந்தைகள் காப்பகத்தை தாம்பரம் தாண்டி ஆரம்பிக்க முடியாது. சிட்டிக்கு நடுவுல ஆரம்பிக்கணும். சிந்தாதிரிப் பேட்டையில வேலைக்குக் போறவங்க கம்மி. மயிலாப்பூர்ல, மேற்கு மாம்பலத்துல, பெசன்ட் நகர்ல, அடையார்ல இது நல்லா வரும். இதுக்காக இடம் மாத்திட்டுப் போக முடியுமா. அதனால குழந்தைகள் காப்பகமும் எனக்கு பெருசா படலை.''

''அனாதைச் சிறுவர் இல்லம்.''

''எனக்கு அது பிடிக்கலை. எத்தனை நாளைக்கு அவன் சிறுவன். வளர்ந்த பிறகு அவன் எங்க போவான். பத்துலேர்ந்து

பதினஞ்சு வரைக்கும்தான் அவன் சிறுவன். பதினஞ்சு வயசுப் பையனே பொம்பளைய தப்பா பார்க்கற காலம் இது. பெரியவனானவுடனே அவனை என்ன பண்ணறது. வெளியில துரத்திட முடியுமா. அதுக்கப்புறம் தானே அவனுக்கு நல்ல துணை வேணும். இருவத்தஞ்சு வயசு வரைக்கும் நாமளே வச்சுக்கறதா. அந்த இடம் தெளிவில்லாத அதை ஆரம்பிக்கக் கூடாது. பதினஞ்சு வயசுல அவனுக்குப் புத்தி மாறி பொம்பளை மேல நாட்டம் வரும்போது அல்லது பதினஞ்சு வயசு பொம்பளைக்கு ஆம்பளை மேல நாட்டம் வரும்போது நம்ம கதி என்ன. நாம என்ன சொல்லி அவன் என்ன கத்துக்குவான்.

சிறுவர் இல்லம் அப்படிங்கறது ரொம்ப நாளைக்கு சிறுவர் இல்லமா இருக்காது. அது இளைஞர் இல்லமா மாறுகிற ஒரு நாள் வரும். அப்போ அவனுக்கு என்ன கதி. என்ன வழி. அவனை அனுப்புறபோது எப்படி அனுப்புவோம். இங்கயே இருந்து ருசி கண்டவன் வெளிய போவானா?'' அன்னபூரணி கேட்டாள்.

''அப்படித்தான் வெளிய அனுப்பறாங்க. பதினெட்டு வயசானதும் போடா வெளிய, எங்கேயாவது போய் சம்பாதிச்சுக்கன்னு துரத்திடறாங்க.''

''வளர்த்து துரத்தறதுக்காகத் தான் நாம அவனை வளர்க்கறோம், இல்லையா. ஆடு வெட்டறதுக்காகத்தான் அதுக்குப் புல்லுபோடறோங்கற மாதிரி ஆயிடாதா?''

''அதனால... அனாதை சிறுவர் இல்லம் ஆரம்பிக்காம விட்டுடறதா. பசங்க பாழாப் போகுமே.'' திலகவதி உரத்துப் பேசினாள்.

''நீ சொல்றது புரியது. ஆனால்.. பசங்கள வளர்க்கறதுக்கு நம்ம மாதிரி லேடீஸ் மட்டும் போறாது. கொஞ்சம் உரமா, திடமா, லேசான முரட்டுத்தனம் காண்பிக்கற ஆம்பளையும் இருக்கணும். அப்படிப்பட்ட ஆம்பளை நம்மகிட்ட இல்லை. அப்படி எவனாவது ஒருத்தன் இருந்தான்னா அவன் முரட்டுத் தனத்தை நம்ம கிட்டயும் காண்பிப்பான். இதுவரைக்கும் அந்தமாதிரி ஆம்பளையால நாம பட்டது போதும். இன்னொருத்தனைக் கொண்டுவந்து பிரின்சிபால்... அல்லது கேர்டேக்கர்னு வச்சு, அவன் முரட்டுத்தனத்துக்கும் நாம அலறிட்டு இருக்க வேணாம். அதனால அந்த யோசனை வரபோதெல்லாம் நான் தள்ளிடறேன்.''



''என்னதான் பணணலாம்னு நினைக்கறீங்க. சொல்லுங்களேன்'' திலவகவதி வேகமாய் அன்னபூரணியைக் கேட்க, ''யோசிப்போம்...யோசிப்போம்....''

''எவ்வளவு நாள்.''

''ஒரு வருஷம் யோசிப்போம்.''

''அப்பா....யோசிக்கறதுக்கு ஒரு வருஷமா.''

''அவ்ளோ முக்கியமான விஷயம் அது. திரும்பத் திரும்ப யோசிக்கணும். எது சரின்னு படறதோ அதையே நூறு விதமா கேள்வி கேட்கணும்.''

''நீங்க சொன்ன மாதிரி நான் கேள்வி கேட்டேன். ரொம்ப கேள்வி கேட்டேன். நம்மளால ஒண்ணும் முடியாது. நாம எதுக்கும் லாயக்கில்லை. தின்னுட்டு.. தின்னுட்டு இடுப்பு அகட்டி வளர்ந்து வெறுமனே தூங்கத்தான் லாயக்கு. நான் ஒரு உருளை, நீங்க ஒரு உருளை, அவ ஒரு உருளை அப்படின்னு உருளைக் கட்டையா மூணு பேரும் இருக்கப் போறோம். தூக்க முடியாம சுடுகாட்டுக்குத் தூக்கிட்டுப் போகப் போறாங்க. அவ்ளோ குண்டாதரிகளா போயிடப் போறோம். நம்மால எதுவும் சரியா வராது. அதுதான் தோணுது.'' விசாலாட்சி கூவலாய்க் குறுக்கிட்டாள்.

''இதைத் தூக்கிப் போடு முதல்ல.'' திலகவதியிடம் அன்னபூரணி வேகமாய்க் கடிந்து கொண்டாள்.

''முடியும்னு யோசனை பண்ணுன்னா, முடியாதுன்னு மூணு மாசம் கழிச்சு வந்த நிக்கறியே. உன்னை நம்பி எதுனா செய்துட முடியுமா. நீ சொல்றேன்னு சொல்லிட்டு அனாதைப் பள்ளிக்கூடம் ஆரம்பிச்சிருந்தா, நீ என்ன பண்ணியிருப்ப. நான் வரலைம்மா இந்த விளையாட்டுக்கு நீங்களே நடத்திக் கோங்கன்னு ஓரம் போயிருப்ப. இப்போ தெரியுதா உன் லட்சணம். புரியுதா எவ்வளவு மோசமான புத்தி உனக்குன்னு. இத்தனை நாள் கழிச்சு முடியாதுன்னு புத்தி வந்துருக்கு இல்ல. என்ன முடியும்னு பாரு. யோசனை பண்ணு, அதனால தான் மறுபடி மறுபடி சொல்றேன். ஒரு வருஷம் யோசனை பண்ணலாம்னு சொல்றேன்.

குண்டாகறதோ, இளைக்கறதோ ஒரு விஷயமே இல்லை. புத்தியில பலசாலியா இருக்கறதுதான் முக்கியம். வைராக்கியமா இருக்கறது தான் முக்கியம். நீ எப்போ பார்த்தாலும் உடம்பு பத்தியே நினைச்சுட்டிருக்காத. புத்திய பத்தி யோசனை பண்ணு. உன் புத்திக்கு என்ன வலிவுன்னு யோசனை பண்ணு. உன் புத்திக்கு என்ன வேலை செய்ய முடியும்னு யோசனை பண்ணு. உனக்கு இங்கிலீஷ் தெரியாது. கணக்கு தெரியாது. வேற என்னென்ன தெரியும் அப்படின்னு யோசனை பண்ணு.''

அன்னபூரணி இடித்துச் சொன்னதும் திலகவதி மௌனமானாள். விசாலாட்சி தலைகுனிந்தாள்.

சட்டென்று சாப்பாடு குறைத்தாள். குழம்பு, ரசம், மோர், காய் கூட்டு என்று உண்டவள் கூட்டோடு ஒரேயொரு கவளம் சாதம் கலந்து சாப்பிட்டுவிட்டு, ரசம் குடித்து விட்டு, கைப் பிடி சாதத்தில் மோர் ஊற்றி கரைத்துக் குடித்து விட்டு போதும் என்று எழுந்துவிட்டாள்.



''கொலைப் பட்டினி கிடக்காத'' என்று திலகவதி சொல்ல,

''இல்லை. கொலைப் பட்டினி இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிடறேன். அவ்வளவுதான்.''

மயிலாப்பூரிலுள்ள அழகு நிலையத்திற்குப் போய் வயிறு குறைக்கவும், எடை குறைக்கவும் உடற்பயிற்சிகள் கற்றுக் கொண்டு வந்து அந்தப் புத்தகம் வாங்கி வந்து, அதேபோல் கடுமையாக காலையும், மாலையும் வீட்டில் செய்யத் துவங்கினாள். வெறும் கீரையை வதக்கி உப்பும், காரமும் போட்டு அதே நேரம் இரண்டு துண்டு ரொட்டியுடன் சாப்பிடக் கற்றுக் கொண்டாள். அவர்களையும் சாப்பிடச் செய்தாள்.

''வயிறு இப்படியிருக்க காரணமே, வாயு உபத்திரவம் தான். இப்படி தினம் கீரை சாப்பிட்டோம்னாக்க வயிறு சுத்தமாயிடும். வாயு தங்காது. பதினஞ்சு நாளுக்கு ஒரு தடவை ஒருபொழுது இருப்போம். அன்னிக்கு கீரையும், ப்ரெட்டும் மட்டும் சாப்பிடுவோம்'' என்று முடிவெடுத்தாள். அவர்களை அதைப் பின்பற்றச் சொன்னாள்.

கால் குடைச்சலும், கை குடைச்சலும், பித்த வாந்தியும் தலைச்சுற்றலும் இருந்த அந்தப் பெண்களுக்கு உடம்பு வெகு வேகமாய் சீராகியது.

''ஏய்....அன்னபூரணி தெரியுமா சேதி. எதிர்வீட்டுப் பங்கஜம் கோயில் ஐயரோட ஓடிப்போயிட்டாளாம்.'' ஒரு பிற்பகல் விசாலாட்சி எங்கோ போய்விட்டு வீட்டிற்குள் பரபரப்பாய் நுழைந்தாள்.

''என்னாது.'' அன்னபூரணி திகைத்து எழுந்திருந்தாள்.

கேஸ் ஸ்டவ்வின் பர்னரை ஊசியால் துடைத்து, கரி நீக்கிக் கொண்டிருந்த திலகவதி அதை தொப்பென்று கீழே போட்டாள்.

அந்த முற்பகல் அந்த வீட்டிற்குள் சர வெடி வெடித்ததுபோல் அந்த விஷயம் தரையிறங்கிறயது. பேசப்பட்டது.

''யாரோட ஓடிப் போயிட்டான்னு சொன்ன.''

''கோயில் ஐயரோட.''

''எந்தக் கோயில் ஐயரோட.''

''என்னாடி விளையாடறியா.

அந்தாளுக்கு முப்பத்தஞ்சு, நாற்பது வயது இருக்காது.''

''இருக்கும்''

''இவளுக்கு இருவத்தேழு, இருவத்தெட்டு வயசாச்சே.''

''ஆமா... அவங்க ரெண்டு பேரும்தான் ஓடிட்டாங்க.''

''எங்படி?''

''யாருக்குத் தெரியும். கோயிலாண்ட ஒரே அடிதடி ரகளை. மத்த ஐயருங்களை பிடிச்சு ஜனங்க பொத்து பொத்துன்னு அடிக்குது.''

''ஐயோ பாவமே... அவங்க என்ன பண்ணாங்க.''

''அவங்கதான் காரணம்னு சொன்னாங்க.''

''ஏன்?''

''இது மொத்தமும் நடந்தது கோயில்லதானாம்.''

''எது மொத்தமும்.''

''எல்லா அசிங்கமும்...''

''என்னாடி சொல்றத தாங்கவே முடியலையே.''

''இந்த ஐயருங்களெல்லாம் கை கால் வாங்கிடணும்.''



''அவன் என்னடி பண்ணுவான். பொம்பளை கண்ணு காட்டாத ஆம்பளை வரவே முடியாது. பொம்பளை சரின்னு சொல்லாத ஆம்பளை தொடவே முடியாது. நீ இழுத்துப் போத்திட்டு நின்னா எவனாயிருந்தாலும் விலகித்தான் போவான். என்னா, ஏதுன்னு தேவையில்லாத பேச்சைத்தான் ஆம்பளை பேசுவாங்க.''

''ஒரு ஐயரு அப்படி நடந்துக்கலாமா?''

''அவனும் மனுஷன் தானே. இந்த நாய்க்கு எங்க போச்சு புத்தி. அவ மேலயும் குத்தம் இல்லை. இருவத்தேழு வயசு. பதினெட்டு வயசுல கல்யாணம் பண்ணிக் கொடுத்து, புருஷன் சரியில்லைன்னு கொண்டு வந்து விட்டுட்டாங்க. அவ என்ன பண்ணுவா – கோயிலுக்குப் போனா எல்லாம் விடிஞ்சு போயிடும்னாங்க. அதான் தினம் கோயில் – கோயில்னு சுத்திக்கிட்டிருந்தா.''

''ஏன்? என்ன தகராறு புருஷன்கூட''

''முடியாதுன்னான். அவ்ளோதான்.''

''யார் சொன்னது உனக்கு.''

''அவதான் சொன்னா.''

''அதுக்கு விட்டுட்டு வந்துடறதா.''

''வேற என்ன பண்றதுன்னு கேட்கறா.''

''அவனுக்கு வலுவு இல்லைன்னாலும் மானம், மரியாதையா குடித்தனம் பண்ண வேண்டியது தான்.''

''முடியலையாமே. என் புள்ளைக்கு முடியாட்டி என்ன, என்னால முடியும் வா அப்படின்னானாம் மாமனாரு. இவ பயந்து போயி, பொட்டிய எடுத்துக்கிட்டு ராவோட ராவா வந்துட்டா. அங்கேர்ந்து ஆ... ஊ..ன்னு மிரட்டறதுக்கு ஆள்

வந்தாங்க. இங்க என்னான்னு கேட்டாங்க. இவங்க வீட்ல இந்த மாதிரிதான் சமாச்சாரம்னு சொல்லவே, 'மரியாதையா திரும்பிப் போயிடுங்க. இல்லைன்னா நாங்க நடந்துக்கறதே வேற'ன்னு சொல்லவே, அவங்க திரும்பிப் போயிட்டாங்க. இனி இந்தப் பெண்ணே வேணாம்னு முடிவு பண்ணிட்டாங்க.''

''சரி, இப்போ அதெல்லாம் சாதாரணமாகி, இது இல்ல அசிங்கமாப் போச்சு.''

''அந்த அசிங்கத்துனாலதான் இந்த அசிங்கம் நடந்தது''. திலகவதி ரௌத்திரமாகக் கூறினாள். ''கல்யாணம் பண்ணி வைக்கறது, கல்யாணம் பண்ணி வச்சிட்டு தான் அனுபவிக்கணும்னு பார்க்கறதுன்னு ஒரு கிழவன் முயற்சி பண்ணாக்க, அவனை வந்து உயிரோட விடலாமா. தூக்கி நெருப்புல போட வேணாம்.''

''கடவுள் போடுவாரு.''

''அதெல்லாம் போட மாட்டாருங்க. எந்தக் கடவுளும் எதுவும் பண்ண மாட்டாரு.'' திலகவதி மறுபடியும் ரௌத்திரமாகக் கத்த, அன்னபூரணி அவளைத் திகைப்போடு பார்த்தாள்.

''கடவுள் பண்ணுவாரு, கடவுள் பண்ணுவாருன்னு தான் இந்தப் பொண்ணு நம்பி வந்தது. எதுனா வழி பொறக்கும்னு நம்பி வந்தது. என்ன வழி பொறந்தது. இப்போ கூடுதலான அவமானம். ஒரு தங்கச்சி இருக்கு. தம்பி இருக்கான். அப்பன் இருக்கான். ஆத்தா இருக்கா. எல்லாம் இருக்கும். எல்லாம் போயி அவமானம் வந்து சேர்ந்து போச்சு.''

''சரி, எனக்கு ஒண்ணு புரியலை.''

''என்னா?''



''இவளுக்கு ஆளே கிடைக்கலையா. டைவர்ஸ் வாங்கின வேற ஜாதிக்காரனோ அல்லது சின்னப் பையனோ அல்லது இவங்க ஜாதியிலயோ, ரெண்டாந்தாரமாவோ, மூணாம் தாரமாவோ வாழ்க்கைப்பட்டா அது நல்லா இருக்காதா. என்னத்துக்கு ஒரு கோயில் ஐயரோட போயி...''

''அந்தாளுக்கு வேற கதை. பொண்டாட்டி நோயாளி. கட்டினதுலேர்ந்து ஒரு குழந்தை பெத்ததுலேர்ந்து அவளுக்கு மரணப் படுக்கை. எல்லாமும் இவன்தான் செய்ய வேண்டியிருக்கு. அவங்க வீட்ல அவ தங்கச்சிய கொண்டு வந்து கட்டி வைக்கிறேன்னு சொன்னாங்க. இவன் வேணாம்னு சொல்லிட்டான்.''

''ஏன்.''

''அதுக்கு முன்னாடிதான் இங்க லவ் ஆயிப்போச்சே.'' விசாலாட்சி சொல்ல,

''லவ்வா, இதுக்கு பேரு லவ்வா.'' திலகவதி எதிர்க் குரல் கொடுத்தாள்.

''இதுவும் ஒரு மாதிரி லவ்வுதான். மூணு வருஷத்து லவ்வாம்.''

''யார் சொன்னது உனக்கு?''

''அடி தாங்காம பக்கத்துல இருக்கற இன்னொரு ஐயரு சொல்லிட்டான். 'நானும் மூணு வருஷமா சொல்லிக் கிட்டிருக்கேன், வேண்டாம்... வேண்டாம்னு. கேட்காத கோயிலுக்குள்ளேயே கொஞ்சறதும், பேசறதும், அவன் ரூமுக்குப் போய் பூட்டிக்கறதும், நன்னாவே இல்லை. போங்கோ' அப்படின்னான். அடி, கூட பொத்து பொத்துன்னு போட்டாங்க. பாவமா இருந்தது.'' திலகவதி சொல்ல விசாலாட்சி வாய்விட்டுச் சிரித்தாள்.

''ஏண்டி உலகம் இவ்வளவு மோசமாய் போச்சு.'' அன்னபூரணி அயர்ந்து நாற்காலியில் உட்கார்ந்து கேட்டாள்.

''டி.வி, கதைப் புஸ்தகம், சினிமா எல்லாத்துலயும் கன்னாபின்னான்னு பாட்டு ஆம்பளையும், பொம்பளையும் மொச்சுமொச்சுனு கட்டிக்கறது. நெஞ்சோட நெஞ்சு இடிச்சிக்கிறது. புரண்டு புரண்டு மலைலேர்ந்து உருண்டு ஓடியாறது. மேல படுத்துக்கறது. கீழ படுத்துக்கறது. பார்க்கிறவன் கொஞ்சம் புத்திசாலியா இருந்தா பொழைச்சான். இல்ல, செத்துட்டான்.'' திலகவதி பதில் சொன்னாள்.

''என்ன... டி.வி.யை அணைச்சுடணுங்கறியா.''

''ஏன் அணைக்கணும். சேனல் மாத்திடணும்.''

''நீ அப்படித்தான் பண்றியா.''

''ஆமாம். குரங்கு பார்க்கறது, நாய் பார்க்கறது. மீன் பார்க்கறது. பாம்பு பார்க்கறதுன்னு. அதுக்குன்னுதான் நாலு சேனல் விட்டுருக்கானே. அதைப் பார்த்துட்டிருக்கறது. அதை விட்டுட்டு மிட்நைட் மசாலான்னு நெருப்பைத் தூக்கித் தலையில கொட்டினா பொசுங்கிப் போயிடுவ. ஏற்கனவே காய்ஞ்ச விறகா இருக்க – கப்புனு பத்திக்குவே. உன்னை நீதானே பார்த்துக்கணும்.'' திலகவதி யோசனை அவர் களுக்குச் சிரிப்பு கொடுத்தது.

''இப்ப என்ன ஆயிப்போச்சு.''

அன்னபூரணி தொடர்ந்து சிந்தித்தாள்.

''அவமானமில்லையா.''

''யாருக்கு அவமானம்.'' அன்னபூரணி கேட்டாள்.

''அந்த வீட்டுக்கு...''





''அவளுக்கு என்னாச்சு..''

''மாட்டலைன்னா'' அன்னபூரணி கேள்வியைக் கூர்மையாக்கினாள்.

# 8

''புளிச்சுடும் அன்னபூரணி. ரொம்ப சீக்கிரம் புளிச்சுடும். திருப்பியும் கோயிலுக்கு வரணும். வீட்டை வந்து பார்க்கணும். நோயா கிடக்கிற பொண்டாட்டிய வந்து பார்க்கணும்னு அந்தாளுக்கு தோணும். இவ வேணாம்னு சொல்வா. அங்க உடனே சண்டை முட்டிக்கு.'' திலகவதி மிகச் சாதாரணமாகச் சொன்னாள்.

''மூணு வருஷத்து லவ்வு ஒண்ணுமில்லாதயா போயிடுங்கற.''

''இதுக்கு பேரு லவ்வா. கள்ளக் காதல். மனுஷா உடம்பு சூடு தாங்காத பண்ற சேஷ்டை''

''அந்தாள் வீட்ல என்ன சொன்னாங்களாம்.''

''ஐயரு பொண்டாட்டியா? நிம்மதியா போச்சு. நான் வீட்டை காலி பண்ணிட்டு எங்கப்பாவோட போய் இருந்துடறேன். அப்பா என்னைக் காப்பாத்துவார். இந்தாள் தினம் திட்டிக்கிட்டே சோறு போடறான். இனி நான் நிம்மதியா சாப்பிடுவேன் எனக்கு அந்த சோறு சாப்பிட்டாக்க உடம்புல ஒட்டும். உடம்புல சோறு ஒட்டினா உடம்பு சரியாப் போயிடும். நான் இங்க இருக்கவே மாட்டேன், போயிடறேன்னு சொல்லிட்டு குழந்தைகளோட கிளம்பிட்டாளாம்.''

''அடப்பாவமே... அந்தப் பொம்பளைதான் கடைசியில பாவமில்லை. ஆம்பளைக்கு உடம்பு சரியில்லைன்னா பொம்பளை பார்த்து பார்த்து கவனிக்கணும். எல்லாத்தையும் விட்டுட்டு அவன் பின்னாடி நிக்கணும். பொம்பளைக்கு உடம்பு சரியில்லைன்னா ஆம்பளை பார்த்துக்க முடியாது.''

''ஏய்... பார்த்துக்கிட்டான்டி... ஏழு வருஷம் பார்த்துக்கிட்டான். அவனால முடியலை போலிருக்கு. இவ ஏதோ கண்ணு காட்ட அவன் ஏதோ கைய காட்ட ரெண்டு பேருக்கும் பத்திக்கிச்சு.''

''இவங்க ரெண்டு பேரும் சரியா வருவாங்களா''

''தெரியலையே.''

''எந்த ஐயரு சொல்லு.''

''எப்பவும் இடுப்புல சிவப்புத் துணி கட்டிக்கிட்டு இருப்பானே. கழுத்துல ருத்ராட்சம் போட்டுக் கிட்டிருப்பானே.''

''ஆமாம். அவன் கொஞ்சம் கெட்டிக்காரன். சுவாமிக்கு அலங்காரமெல்லாம் பண்ணுவான்.''

''ஆமா... ஆமா... நல்லா அலங்காரம் பண்ணுவான். பெரிய ஐயரை நீங்க ரெஸ்ட் எடுத்துக்கோங்கோ, ரெஸ்ட் எடுத்துக்கோங்கோன்னு சொல்லிட்டு, ஓரமா உட்கார வெச்சுட்டு எல்லா வேலையையும் இவனே செய்வான். செம தட்சணை கறப்பான்.''

''அதுவும் காரணமா இருக்குமோ.''

''எது?''

''காசு.''



''ஆமாம். காசும் காரணமாத்தான் இருக்கும்.''

''கோவில் நகையெல்லாம் செக் பண்ணாங்களா.''

''முதல் வேலை அதான் நடந்தது. திபுதிபுன்னு ஜனம் போய் லிஸ்ட் எடுத்துக் கொண்டு வந்து பாரு பாருன்னு சொன்னாங்க. ஒரு கல்லுகூட காணாம போகலை.''

''எங்க போயிருப்பாங்க ரெண்டு பேரும்.''

''ஆந்திரா பக்கம் போயிட்டதா கேள்வி.''

''எப்படித் தெரியும் அது.''

''பந்தம் பிடிக்கறவன்கிட்ட சொல்லியிருந்தானாம். அவனுக்கு இந்த விஷயம் தெரியுமாம். என்னா ஐயரே இப்படிப் பண்றியேன்னு கேட்டானாம். ஆமாம், இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துடுவேன். ஆந்திரா பக்கம் போயிடுவேன் அப்படின்னானாம்.''

''ஆந்திரா பக்கம் இவனை வெத்தலை, பாக்கு வச்சு யார் கூப்பிடறா.''

''தமிழ்நாட்டுல கோயில்ல வேலை செய்யறவனுக்கு ஆந்திராவில மதிப்பு ஜாஸ்தி. எங்கனா ஆந்திராவுக்கு உள்ள போய் நான் ஐயரு, மந்திரம் சொல்லுவேன்னாக்க, வா... வா... என் கோயிலைப் பார்த்துக்கோன்னுவான். இவளையும் ஐயரு பொண்டாட்டின்னு சொல்லிட்டாக்க ஒண்ணும் பண்ண முடியாது.''

''இவ மூஞ்சிய பார்த்தா ஐயரா தெரியுதா.''

''யார் மூஞ்சிய பார்த்தா இப்போ ஐயரா தெரியுது. எல்லார் மூஞ்சியும் ஒண்ணாதான் இருக்கு.''

''கொசுவம் வச்சு கட்டிக்கணுமே, அதை கட்டிக்க வேணாமா.''

''அதை அவன் கட்டி விடறான். அது என்ன பெரிய கஷ்டமா. மூக்குத்தி வாங்கிப் போட்டு, காதுல ஜிமிக்கி போட்டு, ஒத்தப் பின்னல் போட்டு, தலையில பூ வச்சி நெத்தியில குங்குமம் வச்சா, யாரைப் பார்த்தாலும் ஐயரு பொண்ணாத்தான் இருக்கும்.''

''என்னடி எல்லாத்தையும் அவ்ளோ சுலபமா சொல்ற.''

''இத்தனையும் நாம யோசனை பண்றமே, அவன் யோசனை பண்ணாதயா இருப்பான். அந்த ஐயரு நம்ப வீட்டாண்டசாமியை நிறுத்த மாட்டான். நாம கற்பூர ஆரத்தி காமிக்கறது இல்லைன்னு அவனுக்கு கோபம். அடுத்த வீட்ல நிறுத்துவான். தேங்காய் பழம் உடைச்சு, நேரா உள்ள கொண்டு போய் கொஸகொஸன்னு மந்திரம் சொல்லி பெரியவர்கிட்டக் கொடுத்துட்டு வந்துடுவான். அம்பது, நூறுன்னு தராங்க போல.'' திலகவதி வேறு ஒரு சம்பவத்தை விவரித்தாள்.

''எதிர் வீட்ல என்னதான் சொல்றாங்க.'' விசாலாட்சி கேள்வி கேட்டாள்.

மூவரும் எதிர்ப்பக்கம் நின்று அந்த வீட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இவர்கள் பார்ப்பதைப் பார்த்து எதிர் வீட்டிலிருந்து பெண்கள் ஓடிவந்து இவர்கள் வீட்டு வராண்டாவிற்கு ஏறினார்கள்.

''இங்க பேச வேணாம், வாங்க.'' அன்னபூரணி அவர்களைக் கூடத்திற்கு அழைத்துப் போனாள்.

வராண்டாக் கதவுகளும், வாசற் கதவுகளும் தாழிடப் பட்டன. உள்ளே நுழைந்ததும் அந்தப் பெண்கள் ஓ...வென்று நெஞ்சில் அடித்துக் கொண்டு கதறினார்கள்.



அன்னபூரணியும், விசாலாட்சியும் அவர்களை அணைத்துக் கொண்டு சமாதானப்படுத்தினார்கள்.

அங்கு ஒரு வீடு தடுமாறி சேற்றில் விழுந்த கதை சொல்லப்பட்டது.

''ரொம்ப நல்ல பொண்ணுங்க அவ. நல்லா படிக்கிற பொண்ணு வேற. மேல படிக்கறேன், மேல படிக்கறேன். அப்படின்னு வீட்ல இருக்கற எல்லா ஆம்பளைங்கிட்டயும் கெஞ்சினா. தொண்ணூறு பர்செண்ட் எடுத்தா படிக்க வைக்கிறேன்னாரு அவங்கப்பா. தொண்ணூத்தி ரெண்டு பர்செண்ட் எடுத்தா. இவங்க ரெண்டு அண்ணனுங்க படிக்கலை, தம்பி படிக்கலை. மாமனுங்க படிக்கலை. இவ மட்டும் படிக்கறேன், படிக்கறேன்னு துடிச்சபோது அவனுங்களுக்கு பொறுக்கலை. நேர போய் எம்புள்ளைக்கு கட்டிக்கறேன்னு சொன்ன அவங்க அத்தை கிட்ட போய் 'மேல படிக்க வைக்க வேணாம்னு சொல்லு. புள்ள ஒண்ணும் ஜாஸ்தி படிக்கலையே. அதுக்கு மேல அவ படிச்சாக்க உம் புள்ளைக்கு மரியாதை கம்மி. மதிப்பு கம்மி. அவனை இவ மதிக்க மாட்டா' அப்படி இப்படின்னு பேசியிருக்காங்க. கூடப் பொறந்தவனே எங்க பொண்ணுக்கு துரோகம் பண்ணது எங்க வீட்லதான் நடக்கும். இவங்கப்பா படிக்க வைக்கறேன்னபோது, எனக்குத் தெரியாது உங்க இஷ்டம்னு சொல்லிட்டாங்க. அவ காலேஜுக்குப் போய் அப்ளிகேஷன் வாங்கிகிட்டு வந்த நாள்ல, அவங்க அத்தை வந்து 'நீ படிக்கவும் வேணாம், ஒண்ணும் வேணாம். நிறுத்திக்கோ' அப்படின்னு அவளையும் சத்தம் போட்டு, அவ அண்ணனையும் சத்தம் போட்டா.

அவளுக்கு இடி விழுந்தாப்போல ஆயிடுச்சு. 'எனக்கு ஒண்ணும் உன் புள்ளைய கல்யாணம் பண்ணிக்கணும்னு அவசியமில்லை. நான் வேற ஏதாவதொரு அப்பா சொல்ற

பையனை கல்யாணம் பண்ணிக்கறேன். நான் படிக்கத்தான் படிப்பேன்'னு பிடிவாதம் பிடிச்சா.

உடனே, அத்தை அவங்க காதைக் கடிச்சாங்க 'எங்க போய் யாருக்கு கொடுக்கப் போற, என்னடி செலவு பண்ணப் போற, செலவுக்கு கையில என்னா காசு வச்சுருக்க, அப்படின்னு கேட்டு பயமுறுத்தினாங்க. 'தேவையில்லாத செலவுதானே. முன்னூறு பேருக்கு சோறு போட்டு, கையில இருக்கற நகையை கழுத்துல போட்டு எங்கிட்ட அனுப்பறத விட்டுட்டு என்னாத்துக்கு வேற வீட்டுக்கு அனுப்பற பொண்ண' அப்படி இப்படின்னுபேசினாங்க. அவங்கப்பா பொண்ணுகிட்ட 'வேணாம்மா, படிக்க வேணாம்' அப்படின்னு சொல்லிட்டார்.

ஒரு மாசம் அழுதா. யார் கூடயும் பேசாத, எங்கயும் வெளிய போகாத அழுதா. நாங்க எல்லாரும் கன்னாபின்னான்னு திட்டினோம். நான் அடிக்கக்கூட அடிச்சேன், 'என்னாடி அவ்ளோ ராங்கி' அப்படின்னு. எங்களுக்கெல்லாம் புத்தி இல்லாத போச்சு

மாவாட்டற பொம்பளை படிக்க வேண்டியது அவசியமில்லாத விஷயம். திமிர் பிடிச்ச குடும்பத்துல இருக்கறவங்கதான் பொம்பளைங்கள் படிக்க வைப்பாங்க. அவங்களுக்கு எது பத்தியும் கவலை இல்லை. அப்படி இப்படின்னு வாய்க்கு வந்தபடி பேசினோம். ஊர் உலகத்துல இருக்கற கெட்டுப்போன பொம்பளைங்க அத்தனையும் படிச்ச பொம்பளைங்கதான் அப்படிங்கற மாதிரி லிஸ்ட் போட்டுக் கொடுத்தோம். அவ நம்பலை. அவங்கப்பா நம்பினாரு.

பொம்பளைக்கு பொம்பளையே பண்ற துரோகங்கறது இதுதான். நாங்க படிக்கலை, எங்க வீட்டுப் பொண்ணும் படிக்கக் கூடாதுன்னு எங்களுக்குள்ளயே நாங்க பிடிவாதமா



இருந்தோம். உள்ள யோசனை பண்ணிப் பார்க்கறபோது அவ எங்கேயாவது படிச்சு இங்கிலீஷ்ல பேசி எங்களை அவமானப்படுத்திடுவாளோன்னு ஒரு நடுக்கம். அவளுக்கு முன்னாடி நாங்களெல்லாம் மட்டமாயிடுவோம்னு ஒரு பயம். அதனால அவ மேல வரவளையும், ஏற விடாம அவ காலைப் பிடிச்சு இழுத்தோம்.

பதினைஞ்சு பவுன் நகை, ஒருவேளை சாப்பாடு அப்படின்னு ஆரம்பத்துல சொன்னவங்க அப்புறம் கச்சேரி வை, வாண வேடிக்கை நடத்து, கூட பத்துப் பவுன் போடு அப்படின்னு ஏகப்பட்டது கேட்டு பெருசா இழுத்து விட்டாங்க. இன்ஜினியரிங் படிச்ச மாப்பிள்ளை கூட இதைவிட கம்மியாத்தான் கேட்பான். இதை எடுத்து அந்தப் பொண்ணு சொல்லிச்சு.''

''அவ பேரு என்னா'' விசாலாட்சி அக்கறையோடு கேட்டாள்.

''பங்கஜம். அவங்க பாட்டி பேரைத்தான் அவளுக்கு வச்சோம்.''

''நீங்க அவளுக்கு என்னா வேணும்.''

''அவங்கம்மா.''

''இது.''

''அவங்க சித்தி.''

''இவங்க வீட்டுக்காரரு எங்க.''

''எங்க வீட்டுக்காரருதான் இவங்க வீட்டுக்காரரும்.'' பெரியவள் கலவரமில்லாமல் பேசினாள். அடுத்தவள் லேசாகக் கலவரப்பட்டாள்.

''அதாவது அக்கா, தங்கை ரெண்டு பேரும் ஒருத்தருக்கே வாக்கப்பட்டுட்டீங்களோ.''

''ஆமாம்.''

''பங்கஜம் யார் குழந்தை.''

''பெரியவங்க குழந்தை'' சிறியவள் பதில் சொன்னாள்.

''உங்களுக்கு குழந்தை இல்ல.''

''இருக்கு. ஒரு பொண்ணு.''

''இன்னும் ரெண்டு, மூணு பேர் இருக்காங்கன்னு சொன்னீங்களே.''

''ஆமாம். அதுவும் பெரியவங்களுக்குத்தான். ரெண்டு புள்ளைங்க, பங்கஜம், இன்னொரு புள்ள.''

''அவருக்கு ஏன் இன்னொரு கல்யாணம்.''

''ஆசைப்பட்டு கட்டிக்கிட்டாரு.''

''இதெல்லாம் குழந்தை மனசைக் கெடுத்திருக்குமில்லை.''

''இல்லீங்க. அது வேற விதமா ஆயிப்போச்சி. என் தங்கைக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணாங்க. கல்யாணத்து அன்னிக்கு முதல் நாள் ராத்திரி மாப்பிள்ளை வேற ஒரு பெண்ணோட ஓடிட்டான். எங்கம்மா எல்லாரையும் போய் கெஞ்சு, கெஞ்சுனு கெஞ்சினாங்க. எல்லாரும் நான் முடியாது, நீ முடியாதுன்னு சொல்லிட்டாங்க. முறைப்புள்ளையா ஆறு பேர் இருந்தாங்க. ஆறு பேரும் முடியாதுன்னு சொன்னவுடனே, நான் தான் என் புருஷனைக் கூட்டிட்டு வந்து மனையில உட்கார வச்சு, 'என் தங்கச்சிக்கு நீங்க தாலி கட்டுங்க' அப்படின்னு கால்ல விழுந்து வேண்டிக்



கிட்டேன்.'' அந்த மூத்த பெண்மணி சொல்லி விட்டு வாய்விட்டு மறுபடியும் கதறத் துவங்கினாள். என்றோ நடந்த கல்யாணத்திற்கு மறுபடியும் துக்கப்பட்டாள். தங்கையின் முகம் கல்லாக இருந்தது.

அன்னபூரணியின் வீடு இந்தச் செய்தியைக் கேட்டு துடித்துப் போயிற்று.

''இதெல்லாம் ஓடிப்போன அந்த பங்கஜத்துக்குத் தெரியுமா?''

''நல்லா தெரியும்... நான் எவ்வளவு கஷ்டப் பட்டேன்னு அவளுக்கு நல்லா தெரியும். இவங்கப்பா இருக்காரே, அதான் என் புருஷன் நல்லவரு. ரொம்ப நல்லவரு. ஆனா, எடுப்பார் கைப்பிள்ளை. யார் எது சொன்னாலும் அப்படியான்னு கேட்டுப்பாரு. நான் கட்டுங்க தாலியை தங்கச்சி கழுத்துலன்னு சொன்னவுடனே, என்ன ஆகும், எப்படி ஆகும்னு எதுவுமே தெரியாத, பொண்டாட்டி சொல்றான்னு கட்டினவருதானே. அப்படித்தான் இன்னிக்கு வரைக்கும் குணம். அதே புத்திதான் இன்னிக்கு வரைக்கும். அடுத்தாள் வந்து எதுக்கு உன் பொண்ண படிக்கறதுக்கு அனுப்பறேன்னா, வேணாம்... வேணாம்... நான் அனுப்பப் போறதில்லை அப்படின்னுவாரு. பரவாயில்லை பள்ளிக் கூடத்துக்கு அனுப்பலாம் அப்படின்னா, சரிங்க, அனுப்பிடறேன்னுவாரு. நிலையில்லாத புத்தி, தெளிவில்லாத மனசு. காரத்துவையலும், கருவாட்டுக் குழம்பும் இருந்தா போதும். எப்பேர்ப்பட்ட கவலையையும் மறந்துட்டு அந்தாள் சாப்பிட உட்காந்துடுவாரு.''

''உங்களுக்கு என்னாதொழில்.''

''அரிசி மண்டி. அண்ணன், தம்பி, அக்கா புருஷன்னு மூணுபேரு உட்கார்ந்துட்டிருந்தாங்க. கடையில. ஏதோ மாதாந்திர செலவுக்கு கொடுத்தனுப்புவாங்க. அதான் சம்பளம்.

என்னா லாபம், என்னா நஷ்டம், எதுவும் கேட்க மாட்டாரு. ஆள் இல்லைன்னா மூட்டைய தூக்கி இவர் தோள்ல போட்டு பஸ்ல ஏறிக் கொண்டு போய்க் கொடுத்துட்டுவான்னு அனுப்புவாங்க. இவரும் தோளெல்லாம் கருப்பாகி, அரிசி போட்டுட்டு வருவாரு.''

''கெட்டிக்காரத்தனமேயில்லயா'' – திலகவதி சட்டென்று புகுந்து கேட்டாள்.

இப்படிக் கேட்கக் கூடாது என்பதுபோல் அன்னபூரணி அவளைப் பார்த்தாள்.

''இருந்தது. என்னென்னமோ கெட்டிக்காரத்தனம் இருந்தது. தாயபாஸ் ஆடுவாங்க. தாயம்னு சொல்லி போட்டா தாயம் விழும். எப்படின்னு கேட்டா அதுல ஒரு சூட்சுமம் இருக்குன்னுவாரு. ராத்திரி சினிமா பார்த்துட்டு கும்பலா ஆம்பளையும், பொம்பளையுமா வருவாங்க. நாய்ங்க மடக்கி குலைக்கும். நாயைக் கட்டறேன் பாரு அப்படின்னு முன்னால நின்னு என்னமோ மந்திரம் சொல்வாரு. எல்லா நாயும் ஒதுக்கமா போய் நிக்கும். கிட்டக்க ஒண்ணுமே வராது. எப்படின்னு கேட்டா அதுக்கும் மந்திரம் இருக்குன்னுவாரு. கிரகணத்து அன்னிக்கு மந்திரம் சொல்லி உலக்கைய நிக்க வைப்பாரு. உலக்கை நெட்டுக் குத்தா நிக்கும். விழவே விழாது. மத்த நாள்ல யார் யாரோ எப்படி எப்படியோ வைக்கணும்னு முயற்சி பண்ணாங்க. நிக்கவேயில்லை. புஸ்தகத்தை அண்ட கொடுத்தாக் கூட ஆறடி உயர உலக்கை பொக்குனு சாஞ்சிடும். அந்த மாதிரி சின்ன சின்னதா கெட்டிக்காரத்தனம் இருந்தது. பெருசா முழுசா எதுவுமில்லை.''

''சரி, பையன்தான் ஓடிட்டான்னு சொல்றீங்க இல்ல. வேற இடத்துல கட்டி வைக்கக்கூடாதா.''



''யாரும்மா கட்டிப்பாங்க. கண்ணு போனவன், அறுவது வயசுக் கிழவன் மூணாந் தாரமா கட்டிக்கறேன்னு வரான். எனக்கு குடிக்கற பழக்கம் உண்டு, மத்தபடி வேற எந்த கெட்ட பழக்கமும் இல்லை, நான் கல்யாணம் பண்ணிக்கறேன்னு ஒரு குடிகாரன் வரான். வந்த வரனைப் பார்த்துட்டு பயந்து போயிட்டோம். ரெண்டு வருஷத்துல முடிச்சிடலாம்... முடிச்சிடலாம்னு நாங்களும் இப்படி அப்படி பார்த்தோம். எதுவும் சரியா வரலை மூணாவது வருஷம் எங்களுக்கே தளர்ந்து போச்சி. இவளும் வந்த ரெண்டு மூணு நல்ல வரன்களையும் வேணாம்னு சொல்லிட்டா. அப்போதுதான் தெரிஞ்சுது கோயில்ல இருக்கற ஐயருக்கும் இவளுக்கும் ஏதோ ஆயிப்போச்சுன்னு.''

''அது எப்படிங்க. அவங்க வேற, நாம வேற. எப்படி இது ரெண்டும் ஒண்ணாவரும்.''

''கோயில் பிரசாதம் எடுத்துக்கிட்டு வீட்டுக்கு வந்தாங்க. எனக்கு அப்பவே சந்தேகமாப் போச்சு. என்னாப்பா திடீர்னு, யாரு அர்ச்சனை பண்ணச் சொன்னாங்கன்னு கேட்டேன். யாரும் சொல்லலைங்க, நானாதான் பண்ணேன்னு திடமா பேசினான். எனக்கு ஒண்ணும் புரியலை. நல்லதா எடுத்துக்கறதா, கெட்டதா எடுத்துக்கறதான்னு தெரியாத முழிச்சேன்.''

# 9

**எ**திர்வீட்டுப் பெண்மணிகளில் பெரியவள் தன் மகளின் கதையை அன்னபூரணியிடம் கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தாள். அன்னபூரணி அவள் பேச்சைக் கூர்மையாகக் கேட்டபடியே இருந்தாள்.

''என்னாச்சு உனக்குன்னு அந்த ஐயருகிட்ட கேட்டேன். 'சிவன் கோயிலுக்கு பதினாறு பேர் ட்ரஸ்டி. அதுல உங்க வீடும் ஒண்ணு. ஆனா, உங்க வீட்லேர்ந்து யாரும் பூஜை புனஸ்காரத்துக்கு வரது கிடையாது. உங்க வீட்லேர்ந்து இவங்கதான் வராங்க. உங்க வீட்ல இருக்கற பெரியவங்களுக்கு நாளோ, நட்சத்திரமோ எனக்குத் தெரியாது. ஆனா, இவங்கநட்சத்திரமும், இவங்க பேரும் தெரியும். அதனால உங்க குடும்பத்து சார்பா இவங்க பேருக்கு அர்ச்சனை பண்ணி பிரசாதம் கொண்டு வந்திருக்கேன். பதினாறு ட்ரஸ்டிங்க டப்பாவும் கொடுத்துட்டேன். இது உங்க பிரசாதம்'னு நீட்டினான்.

வேணாம்னு எப்படிச் சொல்றது. பிரசாதம் கொடுக்கும் போது 'ரொம்ப நல்லபடியா இருப்பாங்க. கவலையே படாதீங்க. சிவபெருமான் எல்லாம் பார்த்துப்பாரு'ன்னு சொன்னான். நம்ம குழந்தைக்கு நல்லது சொல்றானேன்னு சந்தோஷமாப் போச்சு. உட்காரவச்சு காபித் தண்ணி கொடுத்தோம். 'மாசாமாசம் பண்ணிடறேனே இவங்களுக்கு' அப்படின்னு சொன்னான். அதையும் வேணாம்னு எப்படிச் சொல்றது. 'சரி, பண்ணுங்கோ'ன்னு சொன்னேன்.

'நாளைக்கு காலபைரவராண்ட வாங்க. பால் அபிஷேகம் பண்றேன். எந்தக் குறையா இருந்தாலும் உச்சி வேளைக்கு பால் அபிஷேகம் பண்ணா தீர்ந்துடும்' அப்படின்னு சொன்னான். சரின்னு சொல்றதா, வேணாம்னு சொல்ற தான்னு முழிச்சோம். 'உச்சி வேளைக்கு அரை லிட்டர் பாலை அபிஷேகம் பண்றது, நூறு பேருக்கு சோறு போடற மாதிரி'ன்னான். நாம என்னிக்கு நூறு பேருக்கு சோறு போடப் போறோம். 'சரி, செய்யுங்க' அப்படின்னு துட்டைக் கொடுத்தேன். துட்டை எங்கிட்ட வாங்கிட்டு திரும்பி அவளைப் பார்த்து 'உச்சிவேளைக்கு வந்துருங்க' அப்படின்னு



சொன்னான். இவளும் சரிங்கறா. அப்பவே என்னவோ தப்பா தட்டிச்சு. ''சரி, ஒண்ணும் இருக்காது. இந்த ஐயரு ஏன் போய் நம்ம பொண்ண தொடப்போறான்' அப்படின்னு நினைச்சு சும்மாயிருந்துட்டேன்.

இதுதான் சாக்குன்னு பதினோரு மணிக்குக் கிளம்பி கோயிலுக்குப் போயிடுவா. ஒன்றரை மணி, ஒண்ணேமுக்கா மணிக்கு திரும்பி வருவா. கோயிலுக்குப் போன மாதிரியே இருக்காது. எங்கயோ வேர்க்க வேர்க்க ஓடிட்டு வந்தாப்போல இருக்கும். 'என்னாடி இப்படி தலையெல்லாம் கலைஞ்சு கிடக்குது'ன்னா, 'வெய்யிலு' அப்படின்னுடுவா. 'இந்த வெய்யில்ல இப்படிப் போயித்தான் ஆகணுமா?' அப்படின்னு கேட்டேன். 'பால் அபிஷேகம் பண்றாங்க நூறு பேருக்கு சோறு போட்டாப் போலன்னு சொல்றாங்க. அதனால தான் போறேன். நீங்க போ சொன்னதனாலதான் போறேன்'னு எங்களையே திருப்பினா. பதில் பேச முடியலை.

அப்படி ஆரம்பிச்சுது கதை. நேத்துக் காலையிலதான் சந்தேகமே தட்டுச்சு. கோயிலுக்குத்தான் போறா, சாமி கும்பிடத்தான் போறான்னு நினைச்சுகிட்டிருந்தோம். மூஞ்சியில சந்தோஷம். எப்பவும் ஒரு பாட்டு. கண்ணாடி முன்னாடி நின்னுக்கறது. இப்படியும், அப்படியுமா ஆடறது. 'சரி.... பொம்பளைக்கு மனசுக்குள்ள ஆயிரம் கனவு இருக்கும். ஆம்படையான் இருந்தா தீர்த்துக்குவா. ஒண்ணும் இல்லை. பாடி குறைச்சுக்கறா' அப்படின்னு எங்களுக்குள்ளயே பேசிக்கிட்டோம்.

காலையில பூஜை மாடத்துக்கு நமஸ்காரம் பண்ணா. அவங்கப்பாவுக்கு நமஸ்காரம் பண்ணா. எனக்கு நமஸ்காரம் பண்ணா. 'என்னா...' அப்படின்னேன். 'இன்னியோட முடியுது'ன்னா. எதுன்னு கேட்டேன். 'உச்சி வேளையில் பால் ஊத்தறது இன்னியோட மூணாவது வருஷம் முடியுது'ன்னா.

தூக்கி வாரிப்போட்டுது. 'மூனு வருஷமாவா பால் ஊத்தறோம். அப்படியுமா விடியலை' அப்படின்னு ஒரு ஏக்கம். அப்போ நெஞ்சுல ஒரு துக்கம். குடிகார ஆம்படையானோட இந்தக் குழந்தைய சேர்த்து வச்சு என்ன புண்ணியம். வேற ஆம்பளைக்கு கல்யாணம் பண்ணி வைக்கலான்றபோது சாயந்தரம் ஓடிப் போயிட்டா...''

சொல்லிவிட்டு பெற்றவள் முகம் பொத்திக் கொண்டாள். பெற்றவளின் தங்கை அவள் முதுகு தடவிவிட்டாள்.

''இப்போ என்ன பண்றதா இருக்கீங்க.'' திலகவதி கேள்வி கேட்டாள்.

''தெரியலையே. அதைக் கேட்கத்தான் உங்களாண்ட வந்தோம்.''

''எங்களாண்டயா... இதைக் கேட்கவா. இதுக்குப் போயி நாங்க என்னா பதில் சொல்ல முடியும்.''

விசாலாட்சி திகைத்து திலகவதியையும் அன்னபூரணியையும் பார்த்தாள். அன்னபூரணியின் முகம் இறுகிக் கிடந்தது.

''அப்படித்தான் வருவாங்க. யோசனை கேட்டு வருவாங்க. நாம நினைக்கிற விதமா எதிராளி யோசனை சொல்லணும்னு ஆசைப்படுவாங்க. நீங்க என்னா நினைக்கறீங்க. எனக்குத் தெரியலை. உங்களுக்கு ஏத்தா மாதிரி பதில் சொல்றதுல எந்தப் புண்ணியமும் இல்லை. பின்னாலயே தன்மையா ஒரு ஆள் அனுப்பி என்னா, ஏதுன்னு விசாரிங்க. அந்தக் கோயில் ஐயரோட பொண்டாட்டி என்னா சொல்லுதுன்னு பாருங்க. அவ இதை பெருசா எடுத்துக்கலைன்னா கண்டுக்காத விட்ருங்க. உங்கப் பொண்ணு எங்கனா சந்தோஷமா இருக்கட்டும். போய் அவனை மிரட்டிட்டு வாங்க. 'பொண்ணைக் கைவிட்டேன்னு தெரிஞ்சுது மொத்த விரலையும் எடுத்துருவோம். தொட்டது



தொட்டுட்ட இனிமே ஒட்டிக்கோ. விட்டேன்னு தெரிஞ்சுது, உயிரோட இருக்கமாட்டே'ன்னு சொல்லிட்டு வந்துருங்க.''

அன்னபூரணி சொல்ல மற்ற இரண்டு பேரும் திகைத்துப் பார்த்தார்கள்.

''வேறென்ன பண்றது. அவனுக்கும் பசி. அவளுக்கும் பசி. நாய் மாதிரி தின்னுட்டாங்க. அதைப் பிரிச்சுப் போட்டா வேறெங்கேயாவது போய் தின்னுவாங்க. அப்புறம் இதுக்கு என்னாதான் பேரு. இப்படிப்பட்ட அசிங்கங்கள் நடக்கறதுக்கு பதிலா இது நல்லது. எங்கனா கண்ணு காணாத சௌக்கியமா இருக்கட்டும்.''

''எம்பொண்ணு நகை நட்டெல்லாம் இருக்கே, என்ன செய்ய.''

''ரெண்டா பிரிச்சு ஒரு பகுதியை கோயில் ஐயரு பொண்டாட்டிக்கு கொடுங்க. மிச்சத்தை இவகிட்ட கொண்டுபோய் கொடுங்க. இப்படிக் கொடுத்துட்டோம்னு சொல்லுங்க. இப்படிக் கொடுத்ததுக்குக் காரணமே நீ அவளை நல்லா வச்சிக்கணும்னுதான்னு சொல்லுங்க. என்னமோ இந்த நேரம் அவங்க ரெண்டு பேரும் நல்லா இருப்பாங்கன்னு தோணுது. ஏன் தோணுதுன்னு தெரியலை.''

அன்னபூரணி சொல்ல அங்குள்ள அனைவரும் அவளை வியப்போடு, பார்த்தார்கள்.

அன்னபூரணி இப்படித்தான் சில சமயம் வெகுவேகமாக முடிவெடுப்பாள். அந்த முடிவு அனேகமாகச் சரியாக இருக்கும்.

''நிஜமாகத்தான் சொல்றீங்களா.'' எதிர்வீட்டுப் பெண்மணிகள் அன்னபூரணியைச் சந்தேகத்துடன் பார்த்தார்கள்.

''அப்புறம் நீங்க விழுந்து விழுந்து சிரிக்கறதுக்காக அந்த மாதிரி சொல்றீங்களா. அந்த மாதிரி ஏதாவது பண்றீங்களா.'' பட்டவர்த்தனமாய் முகத்தில் அடித்தாற்போல் மூத்த பெண்மணி கேட்டாள். இளைய பெண்மணி அதை ஆமோதிப்பது போல் பார்த்தாள்.

அன்னபூரணிக்கு மெல்லியதாய் ஒரு கோபம் வந்தது.

''வேணாம்மா... நீங்க உங்க இஷ்டம்போல பண்ணுங்க. அங்கேர்ந்து ஓடிவந்து ரெண்டு பொம்பளைங்க நெஞ்சுல அடிச்சு அழுதீங்கன்னு உடனே வயிறு கலங்கிப் போச்சு. நானும் குடித்தனம் பண்ணவதான். குழந்தை பெத்தவதான். எங்க வீட்லேயும் நல்லதும், கெட்டதும் நடந்திருக்கு. எங்க வீட்லேயும் வாழாதவங்க இருக்காங்க. பாதியா வாழ்ந்தவங்க, முழுசா வாழ்ந்தவங்கன்னு எங்க குடும்பத்துலேயும் உண்டு. வீட்டுக்கு வீடு வாசப்படி. எல்லார் வீட்லேயும் கொல்லைப் பக்கம். எம்பொண்ணா இருந்தா என்ன செய்திருப்பேனோ அதைத்தான் உங்களுக்கும் சொன்னேன். என் பேச்சைக் கேட்கறதும், கேட்காததும் உங்க இஷ்டம். ஆனா, ஒரு நாளும் உங்களை நான் சிரிப்பா சிரிக்க வச்சிட்டு நான் வாழ்ந்துட முடியாது. அப்படி வாழ்ந்தவங்கன்னு ஒருத்தரும் கிடையாது. எங்கமேல அப்படிப்பட்ட சந்தேகம். இருந்தா நீங்க ஏன் படியேறணும். எதுக்கு உள்ள வந்தீங்க. நல்லது செய்வேன்னு தானே நினைச்சீங்க. தடுக்குனு நீ கெட்டவளான்னு கேட்டா நான் என்ன பதில் சொல்றது.''

அன்னபூரணி கோபத்துடனும், அதே சமயம் நிதானத்துடனும் கேள்வி கேட்டாள். விசாலாட்சியும், திலகவதியும் அவளை வியப்போடு பார்த்தார்கள்.

சில முக்கியமான தருணங்களில் அன்னபூரணி விஸ்வரூபம் எடுக்கத் துவங்கிவிடுவாள். அசைக்க



முடியாதபடி விவாதங்களை முன் வைப்பாள். பதிலே சொல்ல முடியாத கேள்விகளைக் கடை பரப்புவாள். அன்னபூரணியின் புத்திசாலித்தனம் வினோதமானது, விவரமானது என்று அவர்கள் இருவருக்கும் தெரியும். இந்த முறை அது இன்னும் கூர்மையாய் எதிர்வீட்டுப் பெண்கள் மீது பாய்ந்தபோது அவர்கள் அதை நின்று நிதானமாய் ரசித்தார்கள். இந்த எதிர்வீட்டுப் பெண்கள் என்ன பதில் சொல்ல முடியும் என்று வியந்தார்கள்.

''கோச்சுக்காத அன்னபூரணி. எனக்கு யாரைப் பார்த்தாலும் சந்தேகமா இருக்கு. எதைத் தொட்டாலும் சந்தேகமா இருக்கு. நான் புத்தி பேதலிச்சுக் கிடக்கேன்ப்பா. பைத்தியம் புடிச்சாப்போல நிக்கறேன். யாராண்ட என்ன பேசறேன்னே எனக்குத் தெரியலை. எல்லாப் பேச்சும் தடுக்குனு மனசுலேர்ந்து வாயைவிட்டு வெளிய ஓடியாந்துடுது. நான் உன்னை நோகடிக்கணும்னு சொல்லலை. நான் நொந்துபோய் பேசறேன்.''

எதிர்வீட்டு அம்மாளின் பேச்சிலும் ஒரு சாமர்த்தியம் தெரிந்தது.

அடிசக்கை. இது நல்ல நாடகம் என்று திலகவதி நினைத்துக் கொண்டாள். மெல்லச் சிரித்தாள்.

அன்னபூரணி எழுந்து அவளை அணைத்துக் கொண்டாள்.

''நான் சொன்னதத் தவிர வேற எது செய்தாலும் அந்த விஷயம் தப்பாத்தான் முடியும். காலையிலயே புடவையை மடிச்சு பொட்டியில வச்சுகிட்டு எங்க என் பொண்ணுன்னு தேடிட்டுப் போக வேணாம். விட்ருங்க. இப்போ போய் நின்னா கலவரமாகும். நீங்க ஒண்ணு பேசி அவ ஒண்ணு பேசி பெரிய சண்டையாகும். ஒரு மாசம், ஒன்றரை மாசம்..... ஏன்...

மூணு மாசம் கூட ஆகட்டும். ஆறப்போடுங்க. அதுங்களும் அலுத்துப்போற அளவுக்கு அனுபவிக்கட்டும். இதுக்கப்புறம் என்னா அப்படின்னு யோசனை பண்ணட்டும். அப்போ பேசுவோம்.''

''அதுக்குள்ளேயும் எதுனா தப்பு நடந்து போச்சுன்னா.''

''என்னா தப்பு நடக்கும்.''

''ஏதோ அதுங்களுக்குள்ள சண்டை வந்து அடிதடி நடந்து பேச்சுன்னா.''

''அது தலையெழுத்து. விதி. அதை அவ அனுபவிச்சு தான் ஆகணும். ஆனா, நடக்காதுன்னு தோணுது.''

''ஏன்?''

''மூணு வருஷம் ஒருத்தரையொருத்தர் சுத்திச்சுத்தி வந்தவங்க. எப்படின்னா எங்கேயாவது சமாதானம் ஆயிடுவாங்க. அவளால அவனுக்கு உபயோகம். அவனால அவளுக்கு உபயோகம். அந்த உபயோகத்தை விட்டுட மாட்டாங்க. உபயோகம் முடிஞ்சுதுன்னா ஒருவேளை சண்டை வரலாம். அப்போ நாம போய் நின்னுடுவோம். இறுக்க கயிறால கட்டிடுவோம்.''

''யப்பா... எனக்கு என்னவோ துடைச்சு விட்டாப்போல இருக்கு.'' பெரியவள் அகமலர்ந்து தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

விசாலாட்சி உள்ளுக்குள் ஓடிப்போய் நீர்மோரில் சிறிதளவு சர்க்கரை போட்டு நன்றாக ஆற்றிக் கலந்து நுரை பொங்கக் கொண்டு வந்தாள். இரண்டு பேருக்கும் கொடுத்தாள்.

''எனக்கும் மோர் எடுத்தாடி தொண்டை காய்ஞ்சு கிடக்கு.'' அன்னபூரணி கேட்க மறுபடியும் உள்ளே ஓடினாள்.



மீண்டும் தயிரை மோராக்கி மோரில் சர்க்கரை விட்டு இன்னும் பதமாக அன்னபூரணிக்குக் கொண்டு வந்தாள்.

இன்றைக்கு அவ்விதம் நல்லதாய் ஏதோ செய்ய வேண்டும் என்று ஏனோ விசாலாட்சிக்குத் தோன்றியது.

என்ன அக்கறை, என்ன பொறுப்பு. இவளுக்கு மட்டும் புருஷன் சரியா இருந்தா, மகா கெட்டிக்காரனா ஒரு புருஷன் கிடைச்சா எப்படி கொடி பறக்க விட்டுருப்பா இல்ல. மொத்த சிந்தாதிரிப்பேட்டையும் வாங்கியிருப்பா. அன்னபூரணிக்கு அதிர்ஷ்டமில்லை என்று நொந்துகொண்டாள். அவளை விருப்பத்துடனும் பரிதாபத்துடனும் பார்த்தாள்.

வந்தவர்கள் விடைபெற்றுக் கொண்டு போனார்கள். அன்னபூரணி சுருண்டு கட்டில்மீது போட்டுள்ள மெத்தையில் படுத்துக் கொண்டாள். போத்திவிடச் சொன்னாள். அயர்ந்து தூங்கிப் போனாள்.

சரியாக அறுபத்தேழாம் நாள் ஓடிப்போன பெண்ணும், அந்த ஐயரும் சிந்தாதிரிப் பேட்டைக்குள் நுழைந்தார்கள். காலை ஐந்தேகால் மணிக்கு அவர்கள் வீட்டுக் கதவைத் தட்டினார்கள்.

அந்தப் பெண்மணிகள் விழித்துக் கொண்டு லேசாய் அலறி, இவர்கள் வீட்டுக் கதவைத் தட்டி அந்த ஐயரையும், பெண்ணையும் இவர்கள் வீட்டில் தங்க வைத்தார்கள்.

அன்னபூரணியின் வீடு விழித்துக் கொண்டது.

''வீட்ல பசங்க இருக்காங்க. ரொம்ப சத்தம்போட வேண்டாம்.'' அன்னபூரணி கண்டிப்புடன் கூறினாள்.

அவர்கள் அடிக்குரலில் அந்தக் கோவில் ஐயரைத் திட்டித்தீர்த்தார்கள். தலைகுனிந்து பேசாமல் அந்த ஐயர் உட்கார்ந்திருந்தான். அந்தப் பெண் தலைநிமிர்ந்து சீறலாய் அம்மாவை அடக்கினாள்.

''அவரு என் புருஷன். இத்தோட நிறுத்திக்கோ. போதும்'' என்று அதட்டினாள்.

பெரியவள் வாய் பொத்திக் கொண்டாள். பெரியவளின் தங்கை விவரம் கேட்க அவர்கள் சந்தோஷமாக இருப்பதாகச் சொன்னார்கள்.

அவன் மனைவியைப் போய் அழைத்தானாம். வரமாட்டேன் என்று சொல்லிவிட்டாளாம். அவன் மறுபடியும் ஆந்திரா நோக்கி போய்க் கொண்டிருக்கிறானாம். அங்கு நல்ல கோவிலில் நல்லவிதமாய் அமர்ந்து விட்டார்களாம். தனி வீடு கொடுக்கப்பட்டிருக்கிறதாம். விடியற்காலையிலேயே தினம் குளியலாம்.

அந்த அறுபத்தேழு நாட்களுக்குள் அவர்கள் பேச்சில் தெலுங்கு வாடை அடித்தது.

''நம்மூர் மாதிரி இல்ல. போய் பெரியவாகிட்ட சௌக்கியமான்னு கேட்டா நூறு ரூபா தரா. பிறந்த நாளைக்கு அர்ச்சனை பண்ணிட்டு போனா முன்னூறு நானூறு தரா. அவங்க குழந்தை நாம நட்சத்திரம் ஞாபகம் வச்சிண்டு டைரியில குறிச்சுண்டு 'நாளை மறுநாள் அர்ச்சனை, வந்துடுங்கோ'ன்னு சொன்னா சந்தோஷமா குடும்பத்தோட வந்துடறாங்க. பத்து கிலோ அரிசி ரெண்டு கிலோ பருப்புன்னு தராங்க. அதைத்தவிர தட்சிணையும் கிடைக்கறது. ஆந்திரா வள்ளல் தேசம். இனிமே அங்கதான் இருக்கப்போறோம். ஒருவேளை இவங்க அம்மா வரணும்னு ஆசைப்பட்டா அவங்களும் வந்துடலாம்.''

அந்தப் பெண் அன்னபூரணியிடம் போய் நகைகளைத் தனக்குக் கொடுக்கும்படி தாயாரிடம் சொல்லச் சொன்னது.

அன்னபூரணி அதை தாயாரிடம் தெரிவிக்க, தாயார் வீட்டிற்குப் போய் நிற்க, அங்குள்ள ஆண்கள் எகிறிக் குதித்தார்கள். சீறினார்கள். இங்கு வந்து பேசினார்கள்.



36838
5328632

காலை ஏழு மணிக்கு ஆரம்பித்த விவாகம் உச்சிவேளை பதினோரு மணிக்கு முடிந்தது.

இருபது சவரன் நகைகளுடன், சிறிது வெள்ளிப் பாத்திரங்களுடன், சில பித்தளைப் பாத்திரங்களுடன், பட்டுப்புடவைகளுடன் தலை நிறைய பூவுடன் அவள் கிளம்பிப் போனாள்.

தாயையும், தந்தையையும் வீட்டிலுள்ள எல்லோரையும் நமஸ்கரித்தாள்.

அன்னபூரணியின் காலைப் பிடித்துக் கொண்டு ''அக்கா-அக்கா..'' என்று அழுதாள்.

கிட்டத்தட்ட பதினாலு, பதினைந்து பேர் முகத்தைப் பொத்திக்கொண்டு அழுதார்கள். அது கல்யாணம் மாதிரியும் இருந்தது. வேறு மாதிரியும் தோன்றிற்று.

திலகவதிதான் அருகே வந்து அவள் தோளைத் தொட்டாள்.

''ரொம்ப அலம்பல் பண்ணாத. சட்டுனு வெளிய போய் ஆட்டோ பிடிச்சு ரயில் ஏறிடு. மெட்ராஸ்ல சுத்தாத. நாலு மாசம் கழிச்சு மிச்சத்தை பீராஞ்சிகிட்டு போகலாம். இப்போ ஓடிப்போயிடு. என்னை அழவச்சிட்டாளேன்னு யாராவது மனசு மாறிடப் போறாங்க.''

அவள் அவ்விதமே ஆட்டோ ஏறி ஓடிப்போனாள்.

எதிர்வீட்டுப் பெண்கள் அன்னபூரணியைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டார்கள்.

''முனீஸ்வரன் சொன்ன மாதிரி சொன்னடி. நிச்சயம் இது நடக்கும்னு சொன்ன. அதேபோல நடந்துச்சு. அவளோட அட்ரஸ் எழுதி வச்சுட்டிருக்கியா. நீ ஒண்ணு வச்சிக்கோ.

எனக்கு ஒண்ணு எழுதிக்கொடு. கோதாவரியில குளிச்சா ரொம்ப புண்ணியமாமே. போய் ஒருதடவை குளிச்சிட்டு வரலாம்.''

எதிர்வீட்டுப்பெண்மணி சொல்ல மற்ற பெண்கள் சிரித்தார்கள்.

மகளைப் பார்க்க ஆசை என்று சொல்லாமல் கோதாவரியில் குளிக்க ஆசை என்று சொன்னது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாய் இருந்தது. அவள் ஆசை புரிந்தது.

ஒரு தாயார் எப்போதும் அப்படித்தான். மகள் என்ன செய்தாலும் மன்னித்து விடக்கூடியவள்தான் என்று பரஸ்பரம் பேசிக்கொண்டார்கள். அன்னபூரணியைப் பாராட்டினார்கள்.

அன்னபூரணி எதிர்வீட்டுப் பெண்ணின் திருமணத்தை மட்டுமல்ல, அவளுடைய மகனின் திருமணத்தைக்கூட அங்கு ஏற்பட்ட பிரச்சினையைக்கூட மிகக் கவனமாக, மிகக் கெட்டிக் காரத்தனமாகத் தீர்த்து வைத்து பலரிடம் பாராட்டு பெற்றாள்.

மணமகளின் சொந்தத் தங்கை 'எனக்கும் திருமணம் செய்து வை. இல்லையென்றால் தூக்கு மாட்டிக் கொண்டு செத்துப்போய்விடுவேன்' என்று தகப்பனை மிரட்ட, அந்த மிரட்டலை அன்னபூரணிதான் சமாளித்தாள்.

# 10

அது புதுக்காசு குடும்பம். 'தான் கிள்ளிக் கொடுத்ததை அள்ளிக்கொடுத்தேன்' என்று சொல்லுகிற குணம். யாராவது அள்ளிக் கொடுத்தால் அவர்கள் கிள்ளியல்லவா கொடுத்தார்கள் என்று பேசுகின்ற எகத்தாளம். தேவையே



இல்லாமல் காலையில் நெய் ஊற்றிச் சாப்பிட்டோம், பிற்பகலில் நெய் ஊற்றிச் சாப்பிட்டோம், மாலையிலும் நெய் ஊற்றிச் சாப்பிட்டோம் என்று தங்களைத் தாங்களே புகழ்ந்து கூறுகின்ற வழக்கம்.

''நெய் வாங்க முடியாது. கையில் காசு இல்லை.'' ''அதனாலென்ன. சிறிது விளக்கெண்ணெயை எச்சில் இலையில் தடவி வெளியே எறி'' என்று சொல்லுகின்ற ஜம்பம்.

வீட்டிலிருப்பது இருபத்தேழு பவுன் நகை தான். ஆனால், இருநூத்தியெழுபது பவுன் நகை இருப்பதாகச் சொல்லி எல்லாருடைய நகையையும் ஒருவரே போட்டுக்கொண்டு ஊர்வலம் வருகின்ற வழக்கம்.

''காலையில கோயிலுக்கு அவ காசுமாலை போட்டுட்டுப் போனாளா. அதைக் கழட்டிக் கொடு. நான் போட்டுட்டுப் போறேன்'' என்று சண்டையிடுகிற வம்சம்.

''என்னா... அவ காசு மாலையை நீ போட்டுட்டு வந்துட்ட யாராவது கோயில்ல கேட்டா, என்னா சொல்வே.''

''எங்க வீட்ல இந்த மாதிரி ஆறு காசு மாலை இருக்கு. எவ காசு மாலையையும் நான் போட்டுக்கிட்டு வரவேண்டிய அவசியமில்லை'' என்று எதிர்த்துப் பேசுகின்ற எகத்தாளம்.

ஒன்றுமில்லாமலேயே பந்தா பண்ணுகின்ற அந்தக் குடும்பத்திற்கு கொஞ்சம் பணம் கிடைத்தது. ஒன்றுக்கும் உதவாதவன் என்று ஒதுக்கித் தள்ளப்பட்ட மாமன். ஒரேயொரு கட்சியில் ஏதோ ஒரு பிரமுகருக்கு அடியாளாகி, வீசிய காற்றில் அந்தப் பிரமுகர் ஒரு உச்சிக்குப் போக இந்தக் குப்பையும் தொடர்ந்து உச்சிக்குப் போயிற்று.

அந்தப் பிரமுகர் மது குடித்த டம்ளரை அலம்பி வைத்தும், நேற்று தின்ற காராசேவை பொட்டலத்தில் கட்டி எடுத்து குப்பையில் வீசியும், வீடு பெருக்கியும், படுக்கை தட்டிப் போட்டும், குளிப்பதற்கு வென்னீர் வைத்தும், சட்டை வேட்டி சலவை செய்துகொண்டு வந்தும், நகம் வெட்டியும், முதுகு தேய்த்தும், சென்ட் பீய்ச்சியும், இன்னும் பல உதவிகளைத் தொடர்ந்து செய்ததால் அந்த வீட்டுத் தாய்மாமனும் கோட்டைக்குப் போக வேண்டியிருந்தது.

''எங்க பேட்டையில ஒரு சின்னப் பையன் இருக்காரு. ஆளைப் பார்த்தவுடனே டக்கு டக்குனு ஜோசியம் சொல்றாரு. வந்து கேட்டீங்கன்னா பூஜை, பரிகாரமெல்லாம் செய்துடலாம்'' என்று பேச்சு வாக்கில் தாய் மாமன்சொல்ல, பொழுதுபோகாமல் பிரமுகரும் சரியென்று தலையசைக்க கார் திரும்பி ஜோசியர் வீட்டிற்குப் போய் ஒரு இருபத்தியிரண்டு வயது இளைஞன் வீட்டில் நின்று, அவனிடம் ஜாதகக் கட்டடத்தைக் கொடுத்து கை கட்டி நிற்க, அவன் அருள் வந்தவனைப் போல நாலைந்து வாக்கியங்கள் சொன்னான்.

''இன்னிலேர்ந்து பதினாறாம் நாள் நீ மந்திரியாயிடுவ. அப்படி மந்திரி ஆயிட்டா, இப்போ இருக்கறவங்க தவிர வேற யாரையும் நீ சேர்த்துக்க வேணாம். எதுக்கும் நம்ப வேணாம். இன்னும் பதினாலு வருஷம் உன்னை அசைச்சுக்கறதுக்கு ஆள் கிடையாது. பதினாலு வருஷமும் நல்லாயிருக்கணும், அயன சயன சுகம் கிடைக்கணும்னா மாசம் தவறாத வக்ர காளிக்குப்போ. செய்யக்கூடாதது மூணு. கட்டில்ல படுக்காத. தரையில படு. குடிச்சிட்டுப் பேசாத. தாழ் போட்டுக்கிட்டு குடி. ஊர்ப் பயணம் போகும்போது தாயே ஆனாலும் பொம்பளையோட போகாத. ஆம்பளைகூட பயணப்படு. அவங்களைத் தனியா வரச்சொல். தனியா திரும்பச் சொல்.



இந்த மூணும் கடைப்பிடிச்சா உன்னை எதிர்க்கறதுக்கே ஆள் இல்லை'' என்று சொல்ல, பதினாலாம் நாள் அந்தப் பிரமுகர் அமைச்சரானார்.

''நான் என்னாங்க செய்யணும்.'' அவரைச் சுற்றிக் கொண்டிருந்த அந்த வீட்டுத் தாய்மாமன் கேட்க, 'இந்த மனிதருக்கு அடிமை செய். இடைவிடாது அடிமை செய். செய்யச் செய்ய காசு. செய்ய மறந்தால் போச்சு'' என்று அந்தப் பையன் முடித்துக் கொண்டான்.

கதர் அமைச்சராக ஆரம்பித்து, கதரிலிருந்து கல்விக்கு மாறி, கல்வியிலிருந்து, போக்குவரத்துத் துறைக்குப் புகுந்து, அந்த மனிதர் பட்டொளி வீசிப் பறக்க, ஜோசியர் சொன்னபடி அந்த வீட்டுத் தாய் மாமன் அவருக்கு அடிமை செய்தான். தன் அந்தரங்கத்தை வேறு அன்னியரிடம் பகிர்ந்து கொள்ள முடியாத அந்தப் பிரமுகரும் அவனைத் தன்னோடே வைத்துக் கொண்டார்.

யானை வாயில் கவளம் கவளமாய்ச் சோறு போடப் போட அந்த சோறு கீழே உதிர்ந்து, உதிர்ந்த பருக்கையெல்லாம் எறும்புக்குப் பெரும் விருந்தானது போல, ஐந்து ரூபாய்க்கும் பத்து ரூபாய்க்கும் அலைந்து கொண்டிருந்த தாய் மாமன், நாள் தவறாது ஐந்தாயிரமும், பத்தாயிரமும் வீட்டிற்குக் கொண்டு வந்து கொடுத்தான். அவனுக்கென்று மனைவியோ, குழந்தைகளோ வைத்துக்கொள்ள ஆசைப்படவில்லை. தன்னுடைய அடிமைத் தொழிலுக்கு அது தோதாக வராது என்று புரிந்து போயிற்று. ஒரு வேளை அவசியமானால் பதினான்கு வருடம் கழித்து திருமணம் செய்து கொள்ளலாம். அதுவரை இப்படியே இருந்துவிடலாம் என்று தீர்மானித்தான். ஆவேசம் தாங்கவில்லையெனில் வாடகைக்குப் பெண்களை எடுத்துக் கொண்டான். அமைச்சரோடு தாழிட்டு எதிரே உட்கார்ந்து குடிக்கவும் செய்தான்.

வண்ணாரப்பேட்டையில் வீடு வாங்கினான். அக்காளுக்கும், தங்கைக்கும் அள்ளிக் கொடுத்தான். தீபாவளிக்கும், பொங்கலுக்கும் தடபுடல் செய்தான். தலைக்கு இருபது, முப்பது சவரன் நகைகள் செய்தான். கார் வாங்கி வீட்டிலுள்ளோருக்குக் கொடுத்துவிட்டு, தான் புல்லட் மோட்டார் சைக்கிளை உபயோகப்படுத்தினான்.

அவனை 'பெரியவரு' என்று குடும்பம் கொண்டாடிற்று.

எப்போதாவது வீட்டிற்கு அவன் வரும்போது அவன் எதிரே கை கட்டி, வாய் பொத்தி நின்றது. வெளியில் அடிமைபோல் நடந்தாலும், வீட்டில் அமைச்சர் போல் நடந்து கொண்டான்.

''பெரியவனுக்குக் கல்யாணம் பண்ணனும்.'' அக்கா சொன்னபோது ''ஆமாம்.... ஆமாம்'' என்றான்.

''ஒரு வரன் வந்திருக்குது. சிந்தாதிரிப்பேட்டையில அன்னபூரணியம்மான்னு ஒருத்தங்க. அவங்க புள்ள. ஒரே புள்ள. வேற பிக்கல் பிடுங்கல் இல்லை. சொந்த வீடு இருக்குது. எங்கயோ நிலம் நீச்சு இருக்குதுன்னு வேற சொன்னாங்க. இங்க வந்து நம்ம வீட்டைப் பார்த்துட்டு, நம்ம கலாவதியப் பார்த்துட்டு ஜாதகம் பொருந்தியிருக்கு, பொண்ணு பிடிச்சிருக்குன்னு சொன்னாங்க. மேற்கொண்டு பேச எப்போ வர்றீங்கன்னு கேட்டாங்க. நீங்க எதுனா சொன்னா பேசிடலாம்'' என்று அக்கா முணுமுணுப்பாய்ச் சொல்ல,

''வாங்க போய்ப் பார்த்துட்டு வருவோம்.''

அவன் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டான்.

அம்பாஸிடர் காரில் அவர்கள் பிள்ளை பார்க்கப் போனார்கள். சிந்தாதிரிப்பேட்டையில் இறங்கினார்கள்.



அமைச்சர் வந்தாலும் வரலாம் என்று அவன் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் அனுப்பினான். போலீஸ் ஸ்டேஷனி லிருந்து இரண்டு கான்ஸ்டபிள்கள் சைக்கிளில் வந்து வீட்டு வாசலில் இறங்கினார்கள். கார் கதவு திறந்து விட்டார்கள்.

போலீஸோடு வந்து இறங்குகின்ற குடும்பத்தைப் பார்த்துவிட்டு அன்னபூரணி சற்று மிரண்டுதான் போனாள்.

''பத்துப் பேருக்கு டிபன் பண்ணி வச்சிருந்தோம். பதினேழு பேர் வந்திருக்கீங்களே.'' பதட்டத்தில் உளறினாள்.

''அதனால பரவாயில்லை. நாங்க டிபன் சாப்பிடவா வந்தோம்.

புள்ளையப் பார்க்கத்தானே வந்தோம். எங்க இருக்குது புள்ள.''

அவள் மகனைக் கூப்பிட, அவனை நடுவில் நிற்க வைத்து எல்லோரும் பார்த்தார்கள்.

''நீங்க போய் உங்க வேலையை கவனியுங்க'' என்று ஐந்து நிமிடத்தில் அவளைத் துரத்தி விட, அவர்கள் எல்லோரும் அவன் முகத்தைப் பார்த்தார்கள்.

''வீடு நல்லாயிருக்கு. சுத்திப் பார்க்கலாமா.''

அவன் வீட்டைச் சுற்றிப் பார்த்தான். இப்படியொரு வீடு தனக்கு வேண்டுமென்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

''என்னா எதிர்பார்க்கறீங்க.''

கேள்வி கேட்டான்.

''உங்களுக்குத் தெரியாததா?'' அன்னபூரணி பதில் சொன்னாள்.

''முப்பது சவரன் போடறோம். மூனு கிலோ வெள்ளி தரோம். கல்யாணம் நீங்க நடத்தனும்.''

''இல்லீங்க. அது சரியா வராது.'' அன்னபூரணி உடனே மறுத்தாள்.

''ஏன், எதனால சரியா வராது.''

''நீங்க பெரிய ஆளு. உங்களைச் சுத்தி ஆயிரம் ஆயிரம் படைகள். அத்தினி பேருக்கும் நான் சோறு போட்டு மாளுமா. கல்யாணத்தை நீங்களே நடத்துங்க. எத்தினி முடியுமோ அத்தினி போடுங்க. குறைச்சலா இருந்துதுன்னு தெரிஞ்சு துன்னா எங்க வீட்டுக்கு வந்த பொண்ணுக்கு என் நகையைக் கழட்டி கழுத்துல மாட்டறேன்.''

அன்னபூரணி சூட்சுமமாகப் பேசினாள்.

''எங்க பொண்ணுக்கு உங்க-நகை எதுக்கு.''

''கடைசி வரைக்கும் மனுஷா நகை போட்டுக்க முடியுமா. வேணாம்னு எடுத்துக் கீழ வைக்க வேண்டியதில்லையா? அப்படி எடுத்து வைக்கறதுக்கு முன்னாடி வந்த பொண்ணு கழுத்துல போட்டுப் பார்த்தா சந்தோஷமில்லையா.''

அன்னபூரணி விட்டுக் கொடுக்காமல் பேசினாள்.

''ப்பா... அம்மா சாமர்த்தியமா பேசறாங்க. எங்க குழந்தை கழுத்துல உங்க நகையைக் கழட்டிப் போடும்படியா நாங்க விட்ருவோமா. விட்டா எங்களுக்கு மரியாதையா – முப்பது பவுன் போட்டு, மூனு கிலோ வெள்ளி கொடுத்து விமரிசையா கல்யாணமும் பண்ணி வைக்கிறோம். நீங்க என்னா பண்ணுவீங்க. வெறுமனே புள்ளைய கொடுப்பேங்கற மாதிரி சொல்லிட வேண்டாம்.''

அவன் உரக்கச் சிரித்தான். அவன் குடும்பமும் சிரித்தது.



''என்னா செய்யணும்னு எதிர்பார்க்கறீங்க.'' அன்னபூரணி கொஞ்சம்சிடுசிடுப்பாகக் கேட்டாள்.

''நான் கேள்வி கேட்டா நீங்க கேள்வி கேட்கக் கூடாதும்மா. பதில் சொல்லணும்.''

அவன் எகத்தாளமாக அன்னபூரணியை நோக்கிப் பேசினான்.

''சில சமயம் கேள்விக்குக் கேள்வி தாங்க பதிலா இருக்கும். உத்து கவனிச்சா அது கேள்வியில்லை, பதில்னு புரியும்.''

''ஏம்மா.. உங்க மருமகளுக்கு என்ன செய்வீங்கன்னு கேட்டா இன்னது செய்வேன்னு சொல்றது தானே மரியாதை. அதை விட்டுட்டு என்ன செய்யணும்னு கேட்டா.''

''நல்லபடியா வச்சுக்குவோம்னு நாங்க சொல்லுவோம். அது போறும்னுவீங்களா. கண்ணுகலங்காம பார்த்துக்கு வோம்னு சொல்லுவேன். அதெல்லாம் வேணாம், வேற ஏதாவது செய்யுங்க அப்படின்னு சொல்வீங்களா. அவளுக்குக் குடித்தனம் பண்ணச் சொல்லிக் கொடுத்து, குழந்தை பெத்துக்க சொல்லிக் கொடுத்து, அப்படிக் குழந்தை பெத்துப் போட்டா, அவளையும், அவ குழந்தையையும் பார்த்துப் பார்த்து வச்சுப்பேன்னு சொல்வேன். இது போதாது இன்னும் பண்ணுங்கன்னு சொல்வீங்களா.''

சற்று உரத்த குரலில் அன்னபூரணி பேச, ''இது போதும்மா அப்படின்னு எங்க வீட்டுப் பொம்பளைங்க சொல்வாங்க. ஆனா, எல்லாரும் பண்றதுதானே. நல்ல மாமியாருன்னு சொல்ற அத்தனை பேரும் இதைப் பண்ணத்தானே பண்ணுவாங்க. இதைத் தவிர நீங்களும் ஏதாவது சீர் செனத்தி பண்ணுவீங்களா. இல்லை, வாங்க மட்டும் தான் தெரியுமான்னு கேட்கறேன்.'' தாய்மாமன் விடாது பேசினான்.

அவன் கத்தி உருவியது போல் பேச ''அதுக்குத்தான் நான் கேட்டேன், என்னா எதிர் பார்க்கறீங்கன்னு.'' பதிலுக்கு அந்தக் கத்தியை அன்னபூரணி தட்டிவிட்டாள்.

பேச்சு வேகமாவதைப் பார்த்து திலகவதி உள்ளே புகுந்தாள்.

''நீங்க கேட்க வேண்டிய அவசியமே இல்லை. அன்னபூரணி அம்மாகிட்ட நூத்தி நாப்பது சவரன் நகை இருக்கு. அவங்களுக்கு ஒரே பிள்ளை. நூத்தி நாப்பது சவரன் நகையையும் பூமியில புதைச்சுட்டுப் போவாங்களா. நடுக்கடல்ல தூக்கிப் போட்டுட்டுப் போவாங்களா. இல்லியே... பெத்த புள்ளைகிட்ட கொடுத்துட்டுப் போவாங்க. பெத்த புள்ளை என்னா... பாக்கெட்ல போட்டுட்டுப் போய் மார்வா கடையில வைக்கப் போறானா. இல்லை, பொண்டாட் கழுத்துல போட்டு அழகு பார்க்கப்போறான். ஒரு பொம்பளை நூத்தி நாப்பது சவரனையும் மாட்டிக்கிட்டு என்ன பண்ணுவா. பீரோல பூட்டி வச்சுட்டு தனக்கு பொண்ணு பிறந்தா, புள்ள பிறந்தா ஆசை ஆசையா போட்டுப் பார்ப்பா. அவ்ளோதானே. என்னா பண்ணுவ, என்னா பண்ணு வேன்னு இவ்வளவு பெரிய வீட்ல ஏறி கேள்வி கேட்டா என்ன பதில் சொல்றது.

வீடு அன்னபூரணி பேர்ல இருக்கு. இந்த வீடு அதுக்கப்புறம் அவங்க புள்ளைக்குப் போகும். அவங்க புள்ளதான் புள்ளைக்கு எழுதி வைப்பாரு. புருஷனுக்கு வீடு சொந்தமாச்சுன்னா பொண்டாட்டிக்கும் உரிமை இருக்குங்க. வேற என்னா வேணும்னு நினைக்கறீங்க.''

சரியான கோணத்தில் சரியான படி பேசியவுடன் வந்த விருந்தினர்கள் மௌனமானார்கள்.

''அதானே... கரெக்ட்... கரெக்ட்'' என்று பதில் சொன்னார்கள்.



''சரி, ஒட்டுமொத்தமா சொந்த பொண்ணு மாதிரி பார்த்து வச்சிக்குவேன்னு சொல்றாங்க. எங்களுக்குப் புரியுது.''

அவன் முத்தாய்ப்பாய் பேசினான்.

அன்னபூரணியின் முகம் இறுகி கல்லாய்க் கிடந்தது.

ஏதாவது சொல்லி இந்த அலட்டல் சம்பந்தத்தைத் தட்டிக் கழித்துவிடலாமா. பின்னால் இன்னும், ஏதேனும் குத்திக் காட்டுவார்களா என்ற பயம் வந்தது.

ஆனால், அன்று இரவே அந்தக் கல்யாணப் பெண் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள்.

''அத்தை நல்லாயிருக்கீங்களா.'' என்று குயில் போலக் கேட்டாள்.

சட்டென்று அன்னபூரணிக்கு வயிறு குளிர்ந்தது.

''நல்லாயிருக்கேம்மா. நீ எப்படியிருக்க.''

''நல்லாயிருக்கேன் அத்தை. எங்க வீட்டு மனுஷாள பாத்தீங்களா. மாமாவோட பேசினீங்களா. என்ன நினைக்கறீங்க எங்க வீட்டைப் பத்தி.''

''ஏன், நல்ல வீடுதான்.''

''இல்லீங்க அத்தை. எல்லாம் ஒரு மாதிரி தலைக்குத் தலை பெரியத்தனம். ஏடாகூடமா நிறைய பேசிட்டதா கேள்விப்பட்டேன். என்னா பண்ணுவீங்க, என்னா பண்ணுவீங்கன்னு அவங்க சொன்னதாகவும், நல்லபடியா வச்சிக்குவேன், வேணாம்னு சொல்வீங்களா, அதைத் தவிர வேற எதுனா செய்யின்னு சொல்வீங்களா அப்படின்னு நீங்க கேட்டதாகவும் கேள்விப்பட்டேன். செம சூடு அத்தை. இந்த மாதிரி சூடு கொடுக்க இந்த வீட்டுக்கு வேற மனுஷாளே கிடையாது. நீங்க மாமாக்கு சூடு கொடுத்தது நிறைய பேருக்குப் பிடிச்சிருந்தது. எனக்கும் ரொம்ப சந்தோஷம்.

அத்தை, உங்களைப்பத்தி சிந்தாதிரிப்பேட்டையில நாங்க விசாரிச்சோம். உங்களை ஆஹா.. ஒஹோன்னு சொல்றாங்க.. அது சரஸ்வதி தேவி. அதுங்கிட்ட மரியாதையா பேசணும். இப்படி பேசியிருக்கக் கூடாதுன்னு எல்லாரும் சொன்னாங்க. அத்தை எங்க வீடு பார்த்துட்டு, என்னை வேணாம்னு சொல்லிடாதீங்க. உங்க வீட்டுக்கு நான் மருமகளா வரணும். உங்களுக்கு மருமகளா வரணும். நீங்க வளர்த்த புள்ள நல்லவராத்தான் இருப்பாரு. அப்படியொரு நல்லவருக்கு நான் மனைவியா இருக்கணும். இந்த வீடு எனக்குப் பிடிக்கலை அத்தை. ரொம்ப கூச்சல். ரொம்ப குழப்பம் தொட்டதுக் கெல்லாம் அலறல்.. ஆ... ஊ..ன்னு ஆர்ப்பாட்டம். உங்க வீடு ரொம்ப அமைதியா இருக்கறதா சொல்றாங்க. கிளி கொஞ்சுது அப்படின்னு சொல்றாங்க. அத்தை ஒரு நல்ல நாள் பார்த்து நான் முன்னாடியே வரட்டுமா. சும்மா உங்களோட பேசறதுக்கு. உங்க வீட்டு மனுஷாள புரிஞ்சுக்கறதுக்கு. அது தப்பா. நல்லா யிருக்காதா.''

''ஒரு தப்பும் இல்லைம்மா. ஆனா, உங்க வீட்ல என்ன சொல்வாங்க.''

''அம்மாவுக்கு மட்டும் சொல்லப் போறேன். மத்தவங்களுக்குச் சொல்லாத கடைக்குப் போறேன்னு சொல்லிட்டு உங்க வீட்டுக்கு வரப்போறேன்.''

''எதுக்குமா. எதுனா தப்பா ஆச்சின்னா என் தலை உருளும். அதான் பயப்படறேன்.''

''இல்லை. உங்களுக்குக் கஷ்டம் வரும்படியா நடந்துக்கமாட்டேன். ஆனா, உங்களைப் பார்க்கணும் போல இருக்கு எனக்கு.''

''சரி, வா. வரத்துக்கு முன்னாடி போன் பண்ணிட்டுவா.''



அந்தப் பெண் கலாவதி வந்தாள். வீடு சுற்றிப் பார்த்தாள். வீட்டிலுள்ள எல்லோருடனும் சந்தோஷமாய்ப் பேசிப் பழகினாள்.

# 11

''எங்க வீட்ல பெருசா தப்பு ஒண்ணுமில்லை. பரம்பரையா பெரிய பணக்காரங்க மாதிரி நடந்துக்கறாங்க அவ்ளோதான். நாங்க சின்ன சந்து வீட்லதான் இருந்தோம். கார்ப்பரேஷன் பள்ளிக்கூடத்துலதான் படிச்சோம். பத்தாவது பாஸ் பண்ணபிறகு லெவன்த்தும் ட்வெல்த்தும் நல்ல ஸ்கூல்ல சேர்த்தாங்க. பன்னெண்டாவது ஃபெயில் ஆயிடுவேன்னு நினைச்சேன். என்ன பண்ணாரோ தெரியலை எங்க மாமா. பார்த்துக்கறேன் கவலைப்படாதம்மான்னு சொன்னாரு. எண்பது பர்செண்ட் மார்க் வந்தது. காலேஜ் போய் படின்னாங்க. மெடிக்கல் காலேஜ்ல கூட இடம் கிடைக்கும்னாங்க. ஆளை விட்ருங்க, வேணவே வேண்டான்னேன். ஒரு வருஷம் கம்ப்யூட்டர் படிப்பும், அக்கௌண்டன்சியும் போயிட்டு வந்தேன். மெஹந்தி போட கத்துகிட்டேன். நியூட்ரிஷியன் கோர்ஸ் பள்ளிக் கூடத்தை முடிச்சு நாலு வருஷம் இப்படித் தான் சுத்திக்கிட்டிருந்தேன்.'' கலாவதி மனம் விட்டுப் பேசினாள்.

அவள் முக அழகு பற்றி அந்த வீட்டுப்பெண்கள் பல கேள்விகள் கேட்க அவள் திறமையாய் பதில் சொன்னாள்.

வெந்நீரில் ஆவிபிடிக்கச் சொல்லி அன்னபூரணியின் முகத்திற்கு தேங்காய் எண்ணை தடவி மசாஜ் செய்தாள். பிறகு சோப்பு போட்டு அலம்பிவிடச் சொன்னாள்.

முகம் சுத்தமாய் பளிச்சென்று இருந்தது. புதிய பொலிவு காட்டியது.

''தினமும் பத்து நிமிஷம் நீராவி பிடிச்சு முகத்துக்கு எண்ணை தடவிகிட்டீங்கன்னா போதும். பத்து நிமிஷம் ஊறின பிறகு திருப்பியும் சோப்பு போட்டு அலம்பிட்டீங்கன்னா போதும். தாமரைப்பூ மாதிரி முகம் இருக்கும். ஏன், இப்படி உடம்பு முழுக்ககூட பண்ணலாம்.''

அவள் விவரித்தாள். வீடு சந்தோஷமாக அவளைக் கேட்டுக் கொண்டது.

''முப்பது பவுன்னா உங்க வீட்ல என்னென்ன போடுவாங்க'' திலகவதி கேட்டாள்.

''அதுல ஒரு சின்ன தகராறு நடக்குது.''

''என்னா.''

''தங்கச்சி எனக்கும் முப்பது பவுன் இப்பவே பண்ணி வைன்னு சொல்றா.''

''ஏன்.''

''ஒரு பொறாமைதான்.''

''யார் மேல்.''

''என் மேலதான்.''

''சொந்த தங்கைக்கு அக்காமேல பொறாமையா.''

''எங்க வீடு அப்படித்தாங்க. எப்போ இவளுக்குக் கல்யாணமாகும். எப்போ இங்க வந்து நான் உட்காருவேன்னு காத்துகிட்டிருக்கு. முள்ளுமேல இருக்கறாமாதிரி இருக்கு எனக்கு.''

''ஏம்மா... ஏன் அப்படி.''



அந்தப் பெண் கண்களில் நீர்தளும்ப நிமிர்ந்து பார்த்தது.

''சொல்லலாமான்னு தெரியலை. சொல்லாம இருக்கவும் முடியலை. சின்ன வயசுலேர்ந்தே எனக்கும், என் தங்கைக்கும் ஆவாது. நான் ஒண்ணாம் நம்பர். அவ எட்டாம் நம்பர். எனக்கு நேர் எதிர். எனக்கு யாராவது அழுதா ஆவாது. அவளுக்கு யாராவது அழுதா பார்க்க பிடிக்கும். எனக்கு யாராவது திட்டினா தாங்காது. யார் திட்டினாலும் அவ எதிர்த்துப் பேசுவா. சரிதான் போடின்னுடுவா. ஊர்ல சண்டை நடந்தா நான் வீட்டுக்குள்ள போயிடுவேன். அவ ரெண்டு படி இறங்கி தெருவுல நின்னு என்னா சண்டை அப்படின்னு சண்டை போடறவன் கிட்டயே விசாரிப்பா. பக்கத்து வீட்ல அடர்த்தியா முல்லைக்கொடி இருந்தது. நாங்கபோய் பூ பறிச்சோம். அந்தம்மா திட்டினாங்க. நான் மன்னிப்பு கேட்டுகிட்டு வந்துட்டேன். இவ அன்னிக்கு ராத்திரியே கொதிக்க கொதிக்க வெந்நீர் எடுத்துட்டு போய் வேர்ல ஊத்திட்டு வந்துட்டா. நான் பள்ளிக் கூடத்துல செஞ்சிலுவை சங்கத்துல சேர்ந்தேன். அவ என்.சி.சி.ல சேர்ந்தா. நான் ஓவியப் போட்டியில சேர்ந்தா. அவ கபடி போட்டியில சேருவா.

எங்களுக்கு சைக்கிள் வாங்கிக் கொடுத்து ரெண்டு பேரும் ஒரே சைக்கிள்ள போங்கன்னு அப்பா சொன்னாரு அந்த சைக்கிளை இவதான் ஓட்டுவா. உனக்கு ஓட்ட வரலை, ஓட்டவரலைன்னு பயமுறுத்துவா. இல்லை, நான்தான் ஓட்டுவேன்னு பிடிவாதம் பிடிச்சா பின்னாடி உட்கார்ந்து வேணும்னே வேகமா ஆட்டுவா. நான் பதிலுக்கு ஒரு தடவை ஆட்டினேன். கொஞ்சம் இறங்கேன். அப்படின்னு என்னை நடுரோட்ல விட்டுட்டு வேகமா வந்துட்டா. வீட்டுக்குப்போய் நான் வண்டி ஓட்டினா பிடிச்சு உலுக்கி உலுக்கி ஆட்டறா, என்னைக் கவுக்கணும்னு பார்க்கறான்னு சொல்லிட்டா,

எங்கம்மா என்னை பளீர் பளீர்னு அடிச்சாங்க. என்னை பதில் பேசவே விடலை. அன்னிலேர்ந்து நான் சைக்கிள்ல போறதேயில்லை. நிம்மதியாச்சேன்னு அந்த சைக்கிள்ல ஊர் முழுக்க சுத்தினா. பொய்யின்னா பொய் அப்படியொரு பொய் பேசுவா.

நான் பெரியவளானபோது சடங்கு நடத்தினாங்க. வாசல்ல டியூப்லைட் போட்டு, கச்சேரி, வச்சி அன்னபட்சி மாதிரி அலங்கரிச்சு அதுல உட்காரவச்சு எல்லாமும் பண்ணாங்க. இவளுக்கு பார்க்கப் பார்க்க பொறாமை. திடீர்னு வயித்துவலின்னு புரண்டு புரண்டு அழுது ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் சேர்த்து வேணும்னே கலாட்டா பண்ணா ஆஸ்பத்திரியிலே போனவுடனே டாக்டர் சொல்லிட்டாரு, இந்தப் பொண்ணு பொய் சொல்லுது. வயித்துல ஒரு வலியுமில்லைன்னு கண்டுபிடிச்சிட்டாரு. கொஞ்சம் இரும்மா அப்படின்னு சொல்லிட்டு வெளியே வந்து கதவைச் சாத்திட்டாரு. அவ ரூம்ல சும்மா இல்லாம பாட்டு பாடிட்டிருந்தா. எல்லாரும் ஜன்னல் சந்து வழியா பாட்டு பாடறத பார்த்தாங்க. கதவைத் தட்டிட்டு உள்ள போனவுடனே மறுபடியும் வயித்தைப் பிடிச்சுட்டு... ஐயோ, அப்பான்னு அழுதா. எங்கப்பா நறுக் நறுக்குனு தலையில குட்டி காதைப்பிடிச்சு இழுத்துட்டு வந்து ரூம்ல தள்ளிட்டாரு. அதனால ராவோடராவா எங்கயோ விட்டவிட்டு ஓடிப் போயிட்டா.''

''என்னாது.''

''வீட்டுக் கொல்லைப்பக்கம் சுவர் ஏகிறிக் குதிச்சு ஐநூத்தி அம்பது ரூபா காசோட திண்டிவனம் போயிட்டா.''

''யார் இருக்கா அங்க திண்டிவனத்துல...''

''எங்க பெரியம்மா இருக்காங்க''



''அடிப்பாவி... அப்புறம்.''

''ஊரு முழுக்க தேடினாங்க. நான் சாப்பிடவேயில்லை. நல்லநாள் அதுவுமா அழுதுகிட்டேயிருந்தேன். மறுநாள் சாயந்தரம் பெரியம்மா போன் பண்ணாங்க. அவ இங்க வந்திருக்கா. என்ன தகராறு. இரும்புத் தடியால மண்டையில அடிச்சிங்களாமே. சூட்டைக் காய்ச்சி இழுப்பிங்கன்னு பயந்து போய் புள்ள ஓடியாந்து புடிச்சு. ஏன் அப்படி பண்றீங்கன்னு கேட்டாங்க. எங்கப்பா ஆடிப்போயிட்டாரு. அவளைக் கூட்டிட்டு வாங்கடி. அந்த நாயோட நான் பேசத் தயாரில்லைன்னுட்டாரு. ஏன் அப்படி பண்றான்னு எனக்குத் தெரியவேயில்லை.''

அந்தப் பெண் பேச்சை நிறுத்தியது.

அன்னபூரணி சற்றுக் கலவரத்தோடு அந்தப் பெண்ணைப் பார்த்தாள்.

இந்தப் பெண்ணிடம் ஒரு வெள்ளை குணம் இருக்கிறது. என் தங்கையிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள். என் வீட்டுச் சூழ்நிலையிலிருந்து அமைதியான, மிருதுவான, அடக்கம் நிறைந்த வீட்டுக்குள் நான் புக விரும்புகின்றேன். வெறும் ஆரவாரம் எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்கிற பெண்ணை அவள் கனிவோடு பார்த்தாள். ஆனாலும், அடிமனதில் சட்டென்று அவளை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்றும் தோன்றியது. பார்த்து பேசிய முதல்நாளே தன் வீட்டைப் பற்றிக் குற்றம் சொல்லுகிறாளே, குறை கூறிப் பேசுகிறாளே. இதேவிதமாச என் வீட்டைப் பற்றி இன்னொரு இடத்தில் குற்றம் சொல்ல மாட்டாள் என்று என்ன நியாயம்.

மனசு வேகமாய் கணக்குப் போட்டது.

அந்தக் கணக்கு அந்தப் பெண்ணுக்கு எப்படித் தோன்றியது என்று தெரியவில்லை.

''என்னடா.. எடுத்தவுடனேயே இப்படிப் பேசறாளேன்னு பார்க்கறீங்களா. எடுத்தவுடனே பேசலீங்க உங்களோட இருவது நாள் பேசிட்டு அப்புறம்தான் இருவத்தோராவது நாளா இதைச் சொல்றேன்.'' அந்தப் பெண் சொல்லிவிட்டு அன்ன பூரணியை உறுத்துப் பார்த்தது.

அன்னபூரணி லேசாய் திகைத்தாள்.

''இருவது நாள் விதம் விதமா மனசுக்குள்ள பேசிகிட்டேயிருந்தேன். எங்க வீடு மாதிரி அற்புதமான வீடு எதுவுமில்லை அப்படின்னு பொய் சொல்லிப் பார்த்தேன். நல்லாயில்லை. நானும், என் தங்கச்சியும் ரெட்டைப் பிறவிகள் மாதிரி அத்தினி ஒத்துமையா இருப்போம் அப்படின்னு சொல்லிப் பார்த்தேன். அதுவும் நல்லாயில்லை. எங்களோட கம்ப்பேர் பண்றபோது உங்க வீடு கொஞ்சம் மட்டம்தான் அப்படின்னு அலட்டிக்கப் பார்த்தேன். அதுவும் நல்லாயில்லை. உண்மைய சொல்றவரைக்கும் மனசு விதம் விதமா பொய்யெல்லாம் சொல்லிச்சு. ஒவ்வொரு பொய்யா.. ஒவ்வொரு பொய்யா நானே எனக்குள்ள சொல்லி வெளிய தள்ளிட்டு, உண்மை சொன்னாதான் போற இடத்துல மரியாதையா பிழைக்க முடியும். நாளைக்கு நான், என் வாழ்க்கை நால்லாயிருக்கணும்னா அந்தம்மா கால்ல விழுந்து கெட்டியா பிடிச்சுக்கோன்னு என் மனசு சொல்லிச்சு. அதனால வந்தேன். கீழ விழுந்தேன். கெட்டியா பிடிச்சுகிட்டு எல்லாத்தையும் கொட்டிட்டேன். இனிமே நீங்க ஏத்துக்கிட்டாலும் சரி, ஏத்துக்காட்டாலும் சரி.''

''ஏத்துக்காட்டி என்னடி பண்ணுவ'' லேசான அதட்டலோடு அன்னபூரணி பேசினாள்.



''மறுபடியும் எவ காலையாவது கெட்டியா பிடிச்சுகிட்டு அம்மான்னு அழுவேன். வேற என்னா வழி. படிக்கவச்சு டாக்டராக்கப் போறாங்களா. இல்லை, வக்கீலாகப் போறாங்களா. இல்ல, கலெக்டராக்கப் போறாங்களா. இல்லை பத்தாவது பள்ளிக் கூடத்தோட போதும்னு நிறத்திட்டாங்க. கல்யாணத்துக்கு பார்த்து கரை சேர்க்கணும். அப்படின்னு தீர்மானம் பண்ணிட்டாங்க. நமக்கு அடுத்தப்படி தொழில் கல்யாணம் தான், குடித்தனம் பண்றதுதான் அப்படின்னு தெள்ளத் தெளிவா ஆயிட்டபிறகு அதுக்குண்டான வழி முறையைத்தானே பார்க்கணும்''

''இந்த மாதிரி இனிக்க இனிக்கப் பேசி திட்டம் போட்டா ஜெயிச்சுடலாம்னு பார்க்கறீங்களா?''

''பார்க்கறதெல்லாம் ஒண்ணுமில்லை. முயற்சி செய் யறது. அவ்ளோதான். சரியா வந்ததுன்னா சரியா வந்தது.''

''அப்புறம் என்னாடி முன்னாடியே போய்ப் பேசணும் ஒரு பயம்.''

அன்னபூரணி அவளைப் பார்த்துக் கேள்வி கேட்டாள்.

''நல்ல புருஷன், நல்ல மாமியார், அற்புதமான நாத்தனார்னு கிடைச்சுடுச்சின்னா அதைவிட சொர்க்கம் எதுவுமில்லை.''

''இப்படிப் பேசினா கிடைச்சுடுமா.''

''நல்லவங்கன்னு தெரிஞ்சு போச்சு. முன்னாடி போய் எதுனா சொல்லி விட்டுடாதீங்க எங்க வீட்டைப் பத்தி கேள்விப்பட்டு தட்டி விட்டுடாதீங்க. நான் நல்ல பொண்ணு. எங்க வீட்டை வச்சு என்னை எடை போடாதீங்கன்னு சொல்றதுக்காக வந்தேன்.''

''எங்க வீடு நல்ல வீடுன்னு எப்படி தெரிஞ்சுகிட்ட. எதனால தெரிஞ்சுகிட்ட யார் சொன்னாங்க.''

அன்னபூரணி தொடர்ந்து அதட்டினாள்.

''எனக்கு நாலு இடத்துல சம்பந்தம் பேசினாங்க. ஒருத்தனை விழுந்து நமஸ்காரம் பண்றபோது பாக்கை அடைச்சுக்கிட்டே எனக்கு ஒரு மாதிரியா பார்த்தான்.''

''யாரு.''

''மாப்பிள்ளை. எழுந்து நின்னவுடனேயே, பாக்கு வாசனையும், குப்புன்னு குடி வாசனையும் வந்தது. இந்த நாயோட நமக்கு சம்பந்தமே இல்லைன்னு சொல்லி உள்ள போயிட்டேன். என்னா சொல்ற... என்னா சொல்றன்னு கேட்டாங்க. அவங்களே, என்னை வேணாம்னு சொல்வாங்க, விட்டுடு அப்படின்னேன். அதேமாதிரி என்னை வேணாம்னு போயிட்டாங்க.''

''எதனால வேணாம்னு சொன்னாங்க.''

''அவன் உசரத்துக்கு நான் சரியா இல்லையாம். நிம்மதிடா பாவி போன்னு அனுப்பிட்டேன்.''

''வேற யார் பார்த்தாங்க உன்னை.''

''சுத்தமா காசே கிடையாது. சந்து வீட்ல கடைசி வீடு. ஆறு மாசத்துக்கு முன்னாடி புள்ளைக்கு கல்யாணம் ஆகணுமேன்னு சொல்லிட்டு ஆயிரத்து இருநூறு ரூபா வீட்டுக்கு வாடகைக்குப் போனாங்க. நாம போய்தான் அங்க பாத்திரம், பண்டம், கட்டில், மேஜை எல்லாமும் வாங்கிப் போடணும் அப்படிக் கொண்டு போனா அந்தக் கட்டில்ல படுக்கறதுக்கும் மேஜையில உட்காரத்துக்கும் பாத்திரத்தை ஆள்றதுக்கும் அந்த வீட்ல ஏகப்பட்ட பேர். எப்படா..



பணக்காரப் பொண்ணு கிடைப்பா, நாம அவ சீரை வச்சுக்கிட்டு நாம ஆட்சி பண்ணலாம்கற மாதிரி ஒரு வரன் கிடைச்சுது.''

''அதை எப்படி வேணாம்னு சொன்ன.''

''எங்க வீடே வேணாம்னு சொல்லிடுச்சு. நிம்மதி.''

''மூணாவது ஆள் யாரு?''

''ஏன். ஒவ்வொண்ணா சொன்னாதான் உங்களுக்கு ஆறுமா.''

''சொல்லேண்டி. என்னாவோ அலட்டறே''

''மூணாவது இடம் கிட்ட முட்டி வந்தது. அவங்க முதல்ல இருவத்தஞ்சு சவரனுக்கு சரின்னாங்க. அப்புறம் முப்பதுன்னாங்க. அப்புறம் 'நீங்க இன்னும் வசதியா இருக்கற மாதிரி கேள்விப்படறோம். அம்பது போட்டா ஒண்ணும் தவறு இல்லையே. போட்டு அனுப்புங்க, உங்க பொண்ணுதானே' அப்படின்னாங்க. எங்க வீட்லயும் கொடுத்துடலாம் அப்படின்றமாதிரிதான் பேச்சு இருந்தது. நான் சொன்னேன். 'அப்புறம் மாசாமாசத்துக்கும் ஏதாவது கேட்பாங்க. நம்மளால அது முடியாது. இந்த மாதிரி காசு கூட கேட்கறவங்ககிட்ட எப்பவுமே என்னை அனுப்பாதீங்க'ன்னு அழுது பிடிச்சு வேணாம்னு உதறிட்டேன். எங்க தாய் மாமனைப் பார்த்து தனியா பேசினோம். ஆமா ஆமா வேணாம்னு ஒரு நல்ல நிலையில் அவரும் ஒதுங்கிக்கிட்டாரு. நான் தப்பிச்சேன்.''

''நாலாவது ஆள்யாரு. என்னன்னு சொல்லி ஒதுக்கினே.''

''எங்க வீட்டுக்கு நேர் எதிர் வீடு.''

''அட... அப்புறம். அதை, ஏன் வேணாம்னு சொல்லிட்ட.''

''எங்களைப் பத்தியும் அவங்களுக்கு நல்லா தெரியும். அவங்களப் பத்தியும் எங்களுக்கு நல்லா தெரியும்.''

''சரின்னு கட்டிக்க வேண்டியது தானே.''

''அவங்க சாராயம் காய்ச்சறவங்க.''

''ஐயோ...''

''அதனாலதான் தைரியமா வந்து தாய்மாமன் கிட்ட பொண்ணு கேட்டாங்க.''

''ஏன், உங்க தாய்மாமன் காய்ச்சறாரா?''

''இல்லை. அவரு அரசியல்ல இருக்காரு. அரசியல்ல இருந்தா என்ன, சாராயம் காய்ச்சினா என்ன, ரெண்டும் ஒண்ணுதானே.''

''சத்தம் போட்டுப் பேசாதடி. அடிக்கப் போறாங்க.''

''எங்க தாய் மாமன் பல தடவை அவங்களை ஆபத்து லேர்ந்து காப்பாத்தியிருக்காரு. தொடர்ந்து காப்பாத்தணும்னு ஆசைப்பட்டோ அல்லது வேறு என்ன விஷயமோ தெரியலை, அவங்க பொண்ணு கேட்க வந்தபோது, எங்க தாய்மாமன் ரொம்ப யோசிச்சாரு. கொடுத்துடலாமா... கொடுத்துட லாமான்னாரு.''

''அப்புறம், ஏன் கொடுக்கலை.''

''என்னமோ திடீர்னு அவங்களுக்குள்ளயே சண்டை வந்துடுச்சு. 'அந்தப் பையனை மறந்துடு. அவனை ஞாபகத்துல வச்சுக்காத'ன்னு தாய்மாமன் வந்து சத்தம் போட்டாரு. 'நான் என்னா மனசுலயா நினைச்சுண்டிருக்கேன் அவனை மறக்கறதுக்கு. எனக்கும் அவனுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது'ன்னு சொல்லிட்டேன். தாய்மாமா ரொம்ப சந்தோஷமாயிட்டாரு.



'கல்யாணப் பேச்சு எடுத்து ஒரு மாசம் ஆயிடுச்சே. ஒருவேளை எதுனா கிறக்கமா இருக்கியோன்னு நினைச்சேன்'னாரு. 'எனக்கு ஆரம்பத்துலேர்ந்தே பிடிக்கலை; நீங்க தான் சொன்னீங்க இது சரியா வரும்னு; அதனால கேட்டு கிட்டேன்' அப்படின்னேன்.

'இனிமே கலாவதியினுடைய அபிப்ராயம் என்னான்னு கேட்டுக்கிட்டுத்தான் பண்ணணும். கேட்காம பண்ண மாட்டேன்' அப்படின்னாரு. ஆறு மாசம் யாரும் பொண்ணு பார்க்க வரலை. நீங்க வந்தீங்க. உங்களைப் பத்தி தாய் மாமன் விசாரிச்சு ரொம்ப நல்ல குடும்பம் அப்படின்னாங்க. அம்மா விசாரிச்சு ரொம்ப நல்ல குடும்பம் அப்படின்னாங்க. அப்புறம் இதே தெருவுல இருக்கற என் ஸ்நேகிதி எங்கிட்ட ஓடியாந்து 'அவங்க வீட்டுக்கு வாக்கப்படப் போறியாமே, ரொம்ப நல்ல குடும்பம்' அப்படின்னா. இப்படியே பத்துப் பன்னெண்டு இடங்கள்ல நாங்க விசாரிச்சு, எல்லாருமே ஒட்டுமொத்தமா உங்களை நல்ல மாதிரி சொன்னாங்க.''

''சரி, நான் நல்லவனா இருக்கலாம். என் புள்ளை எப்படிப்பட்டவன்னு தெரிய வேணாமா?''

''ரொம்ப சோதிச்சுப் பார்க்க முடியாதுங்க. ஒரு அளவுல பார்க்கலாம். உள்ளுக்குள்ள சோதனை தாண்டி, இந்த இடம் சரி, இந்த இடம் சரியில்லைன்னு தோணும்.''

''எப்படித் தோணும். எனக்கு சொல்லிக் கொடு. எனக்கு அந்த மாதிரி தோன்றது இல்லையே. அதனால கேட்கறேன்.''

''நான் கோயிலுக்குப் போவேன். பிரகாரம் சுத்துவேன். எனக்கு நல்ல புருஷனைக் கொடு, நல்ல புருஷனைக் கொடுன்னு வேண்டுவேன். ஒரு நாப்பது நாளைக்கு அப்புறம் நான் தரேன் கவலைப்படாதேன்னு அம்மன் சொல்லிச்சு.''

''அடி சக்கை... இப்படியெல்லாம் வேற கதை விடுவியா நீ.''

இடுப்பில் கை வைத்துக் கொண்டு அன்னபூரணி சிரித்தபடி கேட்டாள்.

''இல்லீங்க. நெசமாவே அம்மா சொல்லும்.''

''விட்டா. கொத்து வேப்பிலையோட ஆடிடுவா போலிருக்கே.''

''இல்லீங்க. அதெல்லாம் பொய். உள்ளுக்குள்ள தோணும். இன்னிக்கு கோயிலுக்குப் போகும்போது நம்மளோட ஆத்தா பேசுவா அப்படின்னு தோணும்.''

''எந்தக் கோயில் அது.''

''எங்க வீட்டுக்கிட்ட இருக்கற ஒரு சின்ன அம்மன் கோவில். உள்ள நுழைஞ்சவுடனே சிலீர்னு ஒரு குளுமை பரவும். வா வான்னு கூப்பிடற மாதிரி தோணும்.''

அந்தப் பெண் பேசிக் கொண்டே போக அன்னபூரணி அவளை உறுத்துப் பார்த்தாள்.

''கொஞ்ச நேரம் உட்கார்ந்துட்டுப் போ அப்படின்னு உள்ளுக்குள்ள ஒரு குரல் கேட்கும். நான் சரின்னு உட்கார்ந்து அந்தக் கோயில்ல இருக்கற பாட்டுக்களையெல்லாம் படிச்சுட்டிருப்பேன். ஒரு இருவது நிமிஷம் கழிச்சுப் போவேன். கேட்காத போயிருந்தேன்னா வழியில எதுனா ஒரு தகராறு ஆயிருக்கும். இல்லைன்னா வீட்ல எதனா ஒரு சண்டை வந்திருக்கும். அது எதுவும் இல்லாத என்னை பத்திரமா கொண்டு போய்ச் சேர்க்கறதுக்குத்தான் அம்மா உட்காரச் சொல்லுச்சின்னு புரிஞ்சுக்குவேன்.''



''நீ ஜாஸ்தி பேசறடி'' அன்னபூரணி சின்ன சீறலுடன் கத்தினாள். ஆனாலும் அந்தப் பெண் கலாவதியை அவளுக்குப் பிடித்திருந்தது.

# 12

கலாவதி கணநேரம் தயங்கினாள். அன்னபூரணியின் கைகளைத் தன் கைகளுக்குள் பொத்திக் கொண்டாள்.

''இல்லை. இதை உங்களைத்தவிர வேற யார்கிட்டேயும் நான் சொன்னதேயில்லை. அங்க வீட்ல இருக்கறவங்கிட்டகூட நான் பேசினதேயில்லை. உங்களுக் குப் புரியும்னு பேசறேன். நீங்களும் புரியாத நிக்கறீங்க.''

''இந்த இடம்பத்தி உங்க மாரியாத்தா என்ன சொல்லிச்சு.''

''கெட்டியா பிடிச்சுக்கோடின்னு சொல்லிச்சு. அதான் ஓடியாந்துட்டேன்.''

''இந்த இடம் முடியும்னு மாரியாத்தா சொல்லுச்சா. முடியாதுன்னு சொல்லுச்சா.''

''நிச்சயமா முடியும்னு சொல்லிச்சு.''

''இந்த முடியும்னு சொல்ல வேண்டியது, முடியாதுன்னு சொல்ல வேண்டியது நான். உங்க மாரியத்தா இல்ல.''

அன்னபூரணி சீறலாய்ப் பேசினாள்.

''ஆத்தா சொல்லிட்டா அதுக்கப்புறம் எதிர்த்து யாரும் பேச முடியாது.''

அந்தப் பெண் திட்டவட்டமாய் அன்னபூரணியை எதிர்த்துப் பேசியது.

''சரி. இந்த வீட்டு மேல ஒரு கேஸ் இருக்கு. இந்த வீட்டுப் பின் சுவரை என்னுதுன்னு ஒருத்தன் சொல்றான். இல்லை அப்படின்னு நாங்க எதிர்த்துப் பேசறோம். வழக்கு அவன் தான் போட்டிருக்கான். நாங்க எதிர்த்து வழக்காடறோம். இந்த கேஸ் என்ன ஆகும். போ. உங்க மாரியாத்தாவைக் கேட்டுட்டு வந்து சொல்லு.''

அன்னபூரணி அவளை விரட்டினாள்.

''எதுக்கு போகணும். எங்கயும் போக வேணாம்.''

''பிறகு.''

''எது உங்க பூஜை ரூம்.''

அவள் மடமட வென்று கைகால் கழுவி, இடுப்புப் புடவையை இழுத்துச் சொருகிக் கொண்டு பூஜை ரூமுக்குள் நுழைந்தாள். திருநீறு இட்டுக்கொண்டாள். விழுந்து வணங்கினாள். சம்மணம் இட்டு அமர்ந்து கொண்டாள். கண்மூடி கைகூப்பி நின்றாள்.

சில நிமிடங்களுக்குப் பிறகு பளிச்சென்று கண் திறந்தாள்.

''இன்னிலிருந்து ஆறாம் நாள் அந்த ஆள் கேஸை வாபஸ் வாங்கிட்டு வேற இடம் போயிடுவான்.''

''எங்க போறது. அது அவன் சொந்த இடம்டி..''

''இல்லை. அது கைமாறிடும். வாங்கறவன் அவசரப்படுத்துவான். இவனுக்கும் காசு அவசரம் வந்துடும். அதனால இன்னிலேர்ந்து ஆறாம் நாள் உங்ககிட்டேயிருந்து இந்த வீட்டுத் தொந்தரவு சுத்தமா விலகிடும்.''



அன்னபூரணி அந்தப் பெண்ணை அணைத்துக் கொண்டாள்.

''இது நடக்குதோ, நடக்கலையோ, எனக்கு அது முக்கியமில்லை. ஆனா, தெளிவா, திடமா, பயமில்லாத நீ பேசினபார். எனக்கு பரம சந்தோஷம். இப்படித்தான் சாமி ஆடுவியா. இல்லை சமைக்கவும் தெரியுமா.'' அவளைத் தோளில் கை போட்டு சமையல் அறைக்கு அழைத்துப் போனாள்.

அந்தப் பெண் மிக எளிதாய், இயல்பாய் அன்னபூரணியின் இடுப்பைக் கட்டிக்கொண்டது.

திலகவதியும், விசாலாட்சியும் அதைப் பார்த்துச் சிரித்தார்கள்.

''இவளும் சேர்ந்துட்டான்னு வச்சுக்க, நம்ம செட் பெரிய செட் ஆயிடும்'' என்று விசாலாட்சி சொல்ல கலாவதி ஆமாம் என்று தலையசைத்தாள்.

அந்தப் பெண் புன்னகை செய்தது. அடுப்பில் கல் ஏற்றி கல் காய்ந்ததும் தோசை ஊற்றி புரட்டிக் காட்டியது. காலை குழம்பை சுண்ட வைத்து வேறு ஏதேதோ சேர்த்து எதிர்க் கடையில் பக்கோடா வாங்கி வரச் செய்து அந்த தோசைக்கு உறுதுணையாய் ஒரு பண்டம் செய்து இறக்கியது.

அன்னபூரணியும் மற்றவர்களும் இவளைத் தங்களுடன் தடையேதுமின்றி, சேர்த்துக் கொண்டார்கள்.

ஆனால், எல்லாரிடமும் எல்லாமும் பேசக்கூடாது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் அல்ல. இதனாலேயே மௌனத்தை சரியான நேரத்தில், சரியான விகிதத்தில் கடைப்பிடிக்க முடியும்.

எப்போது பேசவேண்டும், எவ்வளவு பேச வேண்டும், எவரிடம் பேச வேண்டும் என்பது உலகியலில் ஒரு முக்கியமான கணக்கு. இந்தப் பேச்சுத் திறன் இல்லாத காரணத்தினாலேயே வெற்றி வாய்ப்பை இழந்தவர்கள் அதிகம். இந்தப் பேச்சுத்திறன் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலேயே தோல்விகளைச் சந்தித்தவர்களும் உண்டு.

ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ளவும், தன்னை மற்றவருக்குப் புரிய வைக்கவும் ஒரு அமைதி தேவை. மன அமைதியின் வெளிப்பாடு மௌனம். மௌனம் மிக உன்னிப் பாகக் கவனிக்க வைக்கும். சரியானபடி தகவல்களை மனம் சேகரிக்கும். கூட்டிக் கழித்து கணக்குப் போடும். பிறகு எவ்வளவு பேச வேண்டுமோ அவ்வளவு பேசும். இது வாழ்க்கையில் அதிகம் அடிபட்டு அனுபவப்பட்டவர் களுக்கே கை வருகிறது. இளம் வயதில் வெகு சிலரே இதைப்புரிந்து கொள்கிறார்கள் அல்லது புரிந்து கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

இந்தப் பாடம் கற்காத இளம் வயதினர்கள் பிரச்சினைகளில் சிக்கி மிக மோசமாக அடிபடுகிறார்கள்.

கலாவதி மௌனமாக இருக்கக் கற்கவேயில்லை. அன்னபூரணி அணைத்து ஏற்றுக் கொண்டதும் அவளுக்கு சந்தோஷம் தலைகால் புரியவில்லை. அன்னபூரணியின் அணைப்பையும், திலகவதியின் ஸ்நேகிதத்தையும், விசாலாட்சியின் பரிவையும் பெற்ற பிறகு உடனே வீட்டிற்கு ஓடவேண்டும். ஓடி குதித்து நடனமாடி தன் வீட்டில் தான் ஜெயித்ததைச் சொல்ல வேண்டும் என்ற பேரவா ஏற்பட்டுவிட்டது.



''நான் வந்து ரொம்ப நேரம் ஆச்சுங்க. கிளம்பறேங்க. நாளைக்கு இல்ல நாளன்னிக்கு வரட்டுங்களா. வந்தா இதே மாதிரி பேசுவீங்களா?'' என்று ஆர்வமாகக் கேட்டாள்.

அன்னபூர்ணி சட்டென்று யோசித்தாள்.

இந்தப் பெண்ணை வா என்று சொன்னால், இவள் கேட்டதை வெளியில் சொல்லாது, 'அன்னபூரணி அத்தை வான்னு சொல்லியிருக்காங்க. நான் போய்த்தான் ஆகணும்' என்று வீட்டில் தன் பெயரைச் சொல்லிக் கிளம்பிவிடும். அவர்கள் நிர்ப்பந்தப்படுவார்கள். வேறு வழியின்றி சரி என்று அனுப்புவார்கள். எதுக்குமா கூப்பிட்டீங்க என்று அவர்களும் வந்து நிற்கலாம் அல்லது தொலைபேசியில் கேட்கலாம்.

இந்தப் பெண் என்ன என்று தெரிந்துவிட்டது. இப்பொழுதே கொண்டாடுவானேன். கொண்டாடி புளித்துப் போவானேன். திருமணம் வரை பெண் புதிதாக இருக்க வேண்டுமென்றால் பழகுவது சற்றுத் தள்ளியிருப்பதே நல்லது.

''நாளைக்கெல்லாம் எங்களுக்கு வேற வேலை இருக்கு.''

''அப்படியா... என்ன வேலை.'' அந்தப் பெண் கேட்டது.

''இன்னொரு இடத்துல பெண் பார்க்கப் போகணும், எங்க புள்ளைக்கு.'' அன்னபூரணி சொன்னாள்.

அந்தப் பெண் முகம் இருண்டது. மெல்லத் தயங்கி பின்னடைந்தது.

திலகவதி அவள் கலவரத்தைப் பார்த்துவிட்டு வாய்விட்டுச் சிரித்தாள்.

''நீங்க சும்மாயிருங்க. அது பயப்படுது'' என்று அன்னபூரணியை மெல்ல கண்டித்தாள்.

''விளையாட்டுக்குச் சொன்னீங்களா.'' அந்தப் பெண் மெல்லிய குரலில் கேட்டது.

''இதோ பார் தாலி ஏர்றவரைக்கும் நீயும் நானும் தெரிஞ்சவங்கதான். தாலி ஏறின பிறகுதான் உன் உறவு. புரியுதா. நீ இங்க வரதவிட உங்க ஆத்தாகிட்ட போ. அவளை விடாத சுத்து. நல்லபடியா கல்யாணம் நடக்கணும். கல்யாணம் நடக்கறதோட முடிஞ்சுடக் கூடாது. நல்லபடியா என் புருஷன்கூட வாழணும். நல்ல படியா என் புருஷன்கூட வாழ்ந்தா பத்தாது. நல்லபடி புள்ள பெறணும். நல்லபடியா புள்ளை பெத்தா போறாது. நல்லபடியா புள்ளை வளரணும். நான் இந்த வீட்டோட ஒத்துமையா இருக்கணும்னு வேண்டிக்க. கல்யாணம் ஒருநாள் கூத்து இல்லை தாயே. வாழ்நாள் முழுக்க நம்மள கட்டிப் போடற விஷயம். அவசரப்படாத. பதட்டப் படாத.'' சொல்லிக் கொடுத்தே அனுப்பினாள். ஆனால், அந்தப் பெண்ணுக்கு அது புரியவில்லை.

லேசாய் கண்ணில் நீர் துளிக்க நின்றது.

''தோ.... கலாவதி...'' திலகவதி உள்ளே புகுந்து அதட்டினாள்.

''அன்னபூரணி உன்னைத்தான் மருமகளா ஏத்துக் கிட்டாங்க. இனி வேற யாரையும் நாங்க பார்க்கறதா இல்ல. இருந்தாலும் அடிக்கடி வந்துட்டு போய்க்கிட்டு இருந்தா நாலுபேர் கண்ணுபடும். அன்னபூரணிக்கு மாவாட்டறதுக்கு ஆள் இல்லைன்னு சொல்லிட்டு மருமகளை முன்னாடியே கூட்டிட்டு வந்து பெருக்க வச்சிருச்சி அப்படின்னு எதுனா சொல்லுவாங்க. நீங்க இழையறதும், கொண்டாடறதும் உலகத்துக்குத் தெரியாது. தெரிஞ்சாலும் ரசிக்காது. அதனால எப்போதாவது ஒரு தடவை வா. அடிக்கடி வேணாம்னு சொல்றாங்க. அவங்க சொல்றது நியாயம்தானே'' என்று



திலகவதி விரிவாய்ப் பேச அவள் தலையாட்டிவிட்டுப் போனாள்.

தன் துக்கத்தை மறைக்க அவள் வீட்டில் போய் ஆடி குதித்தாள்.

''அவங்கதான் என் மாமியார். அவருதான் என் புருஷன். அவங்களெல்லாம் என் சொந்தக்காரங்க'' என்று எக்காளம் ஊதினாள்.

என்ன பேசினார்கள், என்னசெய்தார்கள், எப்படி கட்டிக் கொண்டார்கள், இவள் என்ன செய்தாள் என்றெல்லாம் விவரித்தாள். அவள் பேசப்பேச அந்த வீடு சந்தோஷப்பட்டது.

அவள் தங்கைக்கோ ஆத்திரம் பொங்கியது.

அதே தெருவில் நாலு வீடுதாண்டி பைண்டிங் செய்கிற ஒரு கடை இருந்தது. அவர்களிடம் கோந்து இருந்தது. அந்த கோந்தில் மயில்துத்தம் கலந்திருந்தது. அங்கு வேலை செய்யும் பெண் ஒருத்தி மயில்துத்தம் சாப்பிட்டுவிட்டு செத்துப் போனதாக இரண்டு வருடம் முன்பு ஒரு வழக்கு இருந்தது.

கலாவதியின் தங்கை ரமாதேவி அங்கு போய் மயில்துத்தம் வாங்கி வந்தாள். வீட்டுச் சமையல் அறையில் அந்த மயில் துத்தத்தை வைத்து அதன் மீது சர்க்கரையைக் கொட்டினாள். சின்ன கரண்டியால் கலந்தாள்.

என்ன செய்கிறாய் என்று அந்த வீட்டுக் கிழவி கேட்டபோது, ''மயில் துத்தம் சாப்பிடறதுக்காக வாங்கிட்டு வந்திருக்கேன்'' என்று சொன்னாள்.

கிழவிக்கு அது என்னவென்று தெரியவில்லை.

''நல்லாயிருக்குமா'' என்று பதிலுக்குக் கேட்டது.

''நல்லாயிருக்காது. அதனாலதான் சர்க்கரை கலக்கறேன்.''

''சர்க்கரை கலந்தா நல்லாயிருக்குமா.'' மறுபடியும் கிழவி கேட்டாள்.

''சாப்ட்டுதான் பார்க்கணும்.'' என்று ரமாதேவி அலட்சியமாகச் சொல்ல, ''எனக்கு கொஞ்சம் கொடு'' என்று கை நீட்டினாள்.

''அடிக்கிழவி. சாப்ட்டா உடனே செத்துடுவ'' என்று ரமாதேவி நிதானமாகக் கலந்து கொண்டிருந்தாள்.

''என்னாடி சொல்ற.''

''சாகறக்காக சாப்பிடறேன்டி.''

''நீ என்னாத்துக்கு சாகணும்.''

''நாள் தவறாத கவுச்சி சாப்பிட்டுகிட்டு வீட்டோட கிட'' என்று திடீரென்று கத்தினாள்.

கிழவிக்கு ஒன்றும் புரியவில்லை. மெல்ல சமையல் அறையை விட்டு நீங்கி, கூடத்திலிருந்த வேறு பெண்களிடம் ''மயில்துத்தம் சாப்பிடறாளே, உடம்புக்கு நல்லதா'' என்று கேட்க, அந்தப் பெண்கள் பதறினார்கள். உள்ளே வந்து பார்த்தார்கள்.

அதற்குள் ரமாதேவி இரண்டு ஸ்பூன் மயில் துத்தம் சாப்பிட்டுவிட்டிருந்தாள்.

பெண்கள் பாய்ந்து அவள் தட்டைப் பிடித்து வீசினார்கள். அவள் முதுகில் அறைந்தார்கள். முடியைப் பிடித்து உலுக்கினார்கள். வாய்க்குள் விரல்விட்டு வாந்தியெடுக்கச் சொன்னார்கள். குனிய வைத்து படேர்படேரென்று முதுகில் அடித்து எரிச்சல் ஏற்படுத்தினார்கள். பதினைந்து நிமிடத்தில் மிகப்பெரிய களேபரம் அங்கு நடந்தது.



ஆட்டோவில் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனார்கள். விஷமுறிவு இன்ஜெக்ஷன் உடனே போடப் பட்டது. இன்ஜெக்ஷன் போட்டபிறகு அவள் சுருண்டு விழுந்தாள். எடுத்துக் கொண்டுபோய் நரம்பில் ஊசி சொருகி மருந்து ஏற்றினார்கள். படுக்கப்போட்டார்கள்.

வீட்டிலுள்ள ஆண்களுக்குத் தகவல் தெரிய ஆண்களும் அலறியடித்துக் கொண்டு வந்தார்கள்.

தெரு முழுவதும், மயில்துத்தம் சாப்பிட்டுவிட்டாள் என்று சேதிபரவிற்று. போலீஸ் வந்தது. எங்கேயிருந்தது மயில்துத்தம் என்று விசாரித்து அந்தக் கடைக்குப் போனார்கள். அந்தக் கடையாள் பயந்து கொண்டுநின்றான்.

''மயிலும் கிடையாது துத்தமும் கிடையாது. வெறும் கோந்துங்க. ரெண்டு வருஷம் முன்னாடி இப்படி ஏடாகூடம் ஆனதுனால நாங்க மயில் துத்தம் கலக்கறதேயில்லை. இதோ பாருங்க வெறும் பசை. மைதா மாவு பசை.'' வழித்து அவன் வாயில் போட்டுக் கொண்டான். விழுங்கினான். சாதாரணமாக இருந்தான்.

''விஷம் இல்லையே.''

''நிச்சயமா இல்லை. மயில்துத்தம் சேர்க்கவே மாட்டோம். இந்த சனியன் பிடிச்ச பொண்ணு சாமி படம் ஒட்டணும்னு சொல்லிச்சு. அதுக்காகக் கொடுத்தேன். இப்படி கலாட்டா பண்ணும்னு தெரியாது.''

மிகுந்த வேதனையோடு அவன் சொல்ல போலீஸ் அவனைப் புறக்கணித்துவிட்டு வீட்டிற்கு வந்தது.

''என்னாமா விளையாடறீங்களா. போலீஸ்காரனுக்கு பொழுது போகலைன்னு நினைச்சுகிட்டிருக்கீங்களா'' என்று உரக்கக் கத்தியது.

ஆனாலும், இது தற்கொலை முயற்சிதானே என்று யோசித்தது.

தாய்மாமனுக்கு சேதிபோக அவர் ஓடிவந்து போலீஸ் காரரைச் சமாதானப்படுத்தினர். கைக்குக் கிடைத்த பெண்களைப் பாய்ந்து பளீர் பளீரென்று அடித்தார்.

''என்னாடி குடித்தனம் பண்றீங்க நாய்ங்களா'' என்று பலநூறு கெட்ட வார்த்தைகள் இறைத்தார்.

ஒரு மணிநேரத்தில் எதுவுமில்லை என்று தெரிந்து ஆஸ்பத்திரி அவளைத் திருப்பி அனுப்பியது. சாப்பிட்டதில் மயில்துத்தம் இல்லையென்று தெரிந்ததும் எல்லோரையும் விட ரமாதேவி நிம்மதியானாள். ஆனாலும், கண்மூடி சுருண்டு படுத்திருந்தாள்.

# 13

''என்னா... என்னா ஆச்சு உனக்கு. தினம் தவறாத எதுனா ஒரு கூத்து பண்ணிகிட்டே இருக்கியே. என்ன வேணும் உனக்கு.''

தாய்மாமன் ரமாதேவியை உலுக்கிக் கேட்டார்.

ரமா பதில் சொல்லாதிருந்தாள்.

''அடிச்சு கொன்னுடுவேன். என்னான்னு சொல்லுடி'' அவர் மிரட்ட, ''எனக்கும் கல்யாணம் பண்ணி வை'' என்று அவள் வாய் திறந்து சொல்ல, வீடு உறைந்து போயிற்று.

''என்னாடி அவசரம். உங்கக்காவைவிட ரெண்டுவயசு சின்னவத்தானே நீ. அவளுக்கு முடியட்டுமே.''



''முடியாது. எனக்கும் சேர்த்து கல்யாணம் பண்ணி வை. அவளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை பார்த்தீங்களே அதுமாதிரி எனக்கும் பாருங்க. நானும் அவங்க வீட்டுக்குப் போகணும். நானும் அவங்க வீட்டுக்குப் போய் தோசை வார்க்கணும். என்னையும் அவங்க வீடு கொண்டாடணும். அப்படிக் கொண்டாடாத வீடா இருந்தா நான் உங்களை சும்மா விட மாட்டேன். அவளுக்குப் பார்த்துப் பார்த்து எல்லா விஷயத்தையும் நல்லதா பண்ணிட்டு என்னைக் கொண்டுபோய் எங்கேயாவது சாக்கடையில தள்ளிடலாம்னு பார்க்கறீங்களா. இவ கல்யாணத்தைப் பெருசா கொண்டாடிட்டு எனக்கு கல்யாணத்தைப் பண்ணும்போது துட்டு இல்லைன்னு சொல்லுவீங்க. தெரியாதா உங்களை. எனக்கும் இப்பவே இவகூடவே கல்யாணத்தைப் பண்ணி வை. இல்லைன்னா எங்க மயில்துத்தம் கிடைக்குதுன்னு தேடிப்போய் வாங்கிச் சாப்ட்டு செத்துப் போயிடுவேன். இந்தக் கல்யாணத்துக்கு முன்னாடி நிச்சயமா செத்துடுவேன். மயில்துத்தம் கிடைக்கலைன்னா வாசல்ல போற பஸ்ஸு முன்னாடி விழுந்து செத்துடுவேன். இது சத்தியம்.''

அவள் தலையில் அடித்துக் கொண்டு உரக்கச் சொல்ல வீடு பயந்து அலறியது.

''நான் என்னா பாவம் பண்ணேனோ, எந்த ஜென்மத்துல எவகுடியை கெடுத்தேனோ, என் பொண்ணே என் குடியைக் கெடுக்கறாளே'' என்று அம்மா அலற, அன்னபூரணிக்கு அந்தத் தகவல் தெரிய வந்தது.

அன்னபூரணி டெலிபோனிலேயே அந்தப் பெண்ணைப் பற்றிப் பலபேரிடம் பேசி தீர விசாரித்துக் கொண்டாள். வீட்டிற்குள் நுழைந்தாள். எதற்காக இந்த முயற்சி என்று அந்தப் பெண்ணிடம் அப்பாவியாய்க் கேட்டாள்.

அந்தப் பெண் பதில் சொல்லவில்லை. மற்றவர்கள் சொன்னார்கள்.

''அடடே... நியாயந்தானே அவ கேட்கறது. எல்லார் வீட்லயும் மூத்த பொண்ண கொண்டாடிட்டு, இரண்டாவது பொண்ண அம்போன்னு தானே விட்டுடறீங்க. இது நடக்காத குடித்தனம் உண்டா. மத்த பொண்ணுங்க வாய்திறக்காத இருக்கும். இவ வாய்திறந்து கேட்டா. கேட்டதாலேயே கெட்டவளாயிடுவாளா'' என்று அவளுக்குப் பரிந்து பேச, அந்தப் பெண் குழந்தை விழிவிரிய அன்னபூரணியைப் பார்த்தது. அன்னபூரணி மெல்ல மெல்லப் பேசி வசப்படுத்தினாள்.

''என்னா... கல்யாணம் நிச்சயமா பண்ணிட்டோம். தேதியா குறிச்சுட்டோம். பிடிச்சுதுன்னுதானே சொன்னோம். இந்தக் குழந்தைக்கும் புள்ளை பாருங்க. இவ கல்யாணத்தையும் நடத்திடுவோம். நீ என்னா நட்சத்திரம். என்ன தேதி. அடடே... உன் ஜாதகம் இருக்கா'' என்று சொல்லி, அந்தக் காகிதத்தை வாங்கி உற்றுப் பார்த்து ''நீ இங்க இருக்க மாட்டே வேற ஊர்லதான் வாக்கப்படுவ.''

''வேற ஊர்ன்னா.''

''நம்ம ஊர்கூட இல்லை. இந்தியாகூட இல்லை. கடல் கடந்து வாக்கப்படுவ. ரொம்ப பெரிய பணத்தோட இருப்ப'' என்றெல்லாம் சொல்ல, அந்தப்பெண் உள்ளுக்குள் குதூகலித்தது.

அந்தக் குதூகலம் கண்களிலும், உதட்டிலும் தெரிந்தது. உர்... என்று உட்கார்ந்து கொண்டாலும் அவளுடைய அசைவுகள் சந்தோஷத்தை வெளிப்படுத்தின.

அன்னபூரணி எப்படி நகருகிறாள் என்பதை உன்னிப்பாகக் கலாவதி பார்த்துக் கொண்டிருந்தாள்.



''இன்னொண்ணு சொல்லட்டுமா இந்த ஜாதகம் பார்த்துட்டு. கலாவதிக்கு முன்னாடி ரமாதேவி கல்யாணம் நடந்துடும். எழுதித் தரேன். யார் என்னா பண்ணாலும் இவ கல்யாணம்தான் முதல்ல நடக்கும். நான் நாப்பது வருஷமா ஜோசியம் பார்க்கறேன். என் வார்த்தை தப்பானதேயில்லை'' என்று அடித்துச் சொல்லிவிட்டு, 'இவ கல்யாண ஏற்பாட்டைக் கவனிங்க' என்று உத்தரவிடுவதுபோல் பேசிவிட்டு வெளியே வந்தாள்.

''சில வீட்ல இப்படித்தான் பொண்ணுங்க எதிரும் புதிருமா இருக்கும். கலாவதி அமைதியான பொண்ணு. அது கொஞ்சம் படபடப்பு. நான் ஜாதகம் சொன்னது, சும்மா சொன்னேன். ஆனாலும், நான் சொல்றத புரிஞ்சுக்கோங்க. அவ கல்யாணத்தை முடிங்க. அப்புறம் கலாவதி கல்யாணத்தை வச்சுக்கலாம்.''

''அதெப்படிங்க மூத்தவ இருக்கச் சொல்ல...''

''அதான் கலாவதி கல்யாணத்தை ஒத்துக்கிட்டேனே நானு. நான் சரின்னு சொன்னபிறகு கல்யாண் எப்போ நடந்தா என்னா?''

''எங்க ஜாதிக்காரங்க கேட்பாங்களே.''

''அப்போ உங்க இஷ்டப்படி பண்ணுங்க'' என்று அன்னபூரணி சொல்ல, அந்த வீட்டுப்பெண்கள் அன்ன பூரணியை மடக்கிக் கொண்டார்கள்.

''இப்படி தடுக்குனு முன்னாடி கல்யாணம் முடிவு பண்ணா, புள்ளை கிடைக்க வேணாமா.''

''விளம்பரம் கொடுங்க. வரும்'' என்று சொன்னாள். நானும் பார்க்கிறேன் என்று வார்த்தை கொடுத்தாள்.

கலாவதியின் தோள்மேல் கைபோட்டாள்.

''கலாவதி... அடுத்த வீட்டுக்காரன் வீடு விக்கறதா முடிவு பண்ணிட்டு, இன்னிக்கு கடைசியா பேசறானாம். இன்னிக்கு பேரம் படிஞ்சா நாளைக்கு கையெழுத்து போட்டுடறானாம். வீடு வாங்கறவன் எங்கிட்ட வந்து 'ஏம்மா... அவங்கமேல ஏதாவது கேஸ் போட்டிருக்கிங்களா' அப்படின்னு வந்து கேட்டான். நான் நிலைமையைச் சொன்னேன். 'ஐய்யய்ய... அந்தாள் தப்பு இல்லை பண்றான். நீங்க செய்யறது கரெக்ட் ஆச்சே. இந்த வீட்டை நான் வாங்கினா உங்களுக்கு எதுனா கஷ்டமா' அப்படின்னான். 'ஒரு கஷ்டமுமில்லை'ன்னு சொன்னேன். அவனுக்கு எங்களைப் பிடிச்சுப் போச்சு. எனக்கும் அந்தாள் மேல மரியாதை வந்தது. நீ சொன்னபடி.... இல்லை, உன் ஆத்தா சொன்னபடி ஆறுநாள்ல இது செட்டிலாயிடும். உன்கிட்ட அந்த சக்தி இருக்கு. போ, போய் ஆத்தாகிட்ட கேளு. ரமாதேவிக்கு சீக்கிரம் கல்யாணம் ஆகணும்னு கெஞ்சி அழு – அலறு. ரமாதேவி கல்யாணமாகிப் போனாத்தான் உனக்கு நல்லது. இல்லை, பெரும் தொந்தரவு வரும். அந்தப் பொண்ணு உன்கூட இல்லாம இருக்கறதுதான் உனக்கு உத்தமம். கல்யாணம் நல்லபடியா நடக்கும். இல்லைன்னா. சின்ன சின்னதா எதுனா தொந்தரவு பண்ணிக்கிட்டே இருப்பா. போ. ஓடிப்போய் காத்தால, மத்தியானம், சாயந்தரம்னு அவ காலைப் பிடிச்சுகிட்டு கதறு. எப்படியாவது என் தங்கச்சி கல்யாணம் ஆகி அவளை எங்கிட்டேயிருந்து வேற இடத்துக்கு அனுப்புன்னு உங்க ஆத்தாகிட்ட கேளு. அப்படிக் கேட்டா அவ செய்வா. கேளு.''

கலாவதியின் தலையைத் தடவி விட்டுச் சொல்ல கலாவதிக்குக் கண்ணிலிருந்து நீர் பெருக்கெடுத்து ஓடியது.

''எனக்கு ஆத்தாவ பார்க்கறபோது உங்க ஞாபகம்தான் வருது. உள்ளுக்குள்ள உங்க முகத்தை வச்சிகிட்டு தான் நான் கேள்வி கேட்கறேன்'' என்று சொல்ல, ''போடி. எதுனா பண்ணுடி. நீ பிரார்த்தனை பண்ணாதான் சரியா நடக்கும்.''



அன்னபூரணி அவளை இறுக்கிக் கொண்டாள். கவலையோடு வீட்டை விட்டுக் கீழிறங்கினாள்.

''இந்தப் பொண்ணு இவ்வளவு நல்ல பொண்ணா இருக்கச் சொல்ல இது தங்கச்சி ஏன் ஆங்காரமா இருக்கு'' என்று திலகவதியிடம் விசாரித்தாள்.

திலகவதி அழகாக விளம்பரம் எழுதிக்கொடுக்க, அந்தத் தாய்மாமனோடு டெலிபோனில் பேசி, வார, மாத, தினசரி பத்திரிகைகளுக்கு மணமகன் கேட்டு விளம்பரம் கொடுத்தாள். விளம்பரம் வரும்வரை அவர்கள் வீட்டுப் பெண்களிடம் இதைப் பற்றிப் பேசவேண்டாம் என்று தாய்மாமனிடம் சொன்னாள்.

தான் அலைய முடியாததை அன்னபூரணி தோளில் தூக்கிக் கொண்டு அலைவதைப் பார்த்துத் தாய்மாமன் நெகிழ்ந்து போனான்.

''ரொம்ப சந்தோஷம்மா. நன்றியை எப்படிச் சொல்றதுன்னே தெரியலை. துட்டு இருந்தா போதுமா. மனுஷாள் வேணும். மனுஷாள் இருந்தா போதுமா. சாமர்த்தியம் வேணும். சாமர்த்தியமான மனுஷாளா நீங்க இருக்கீங்க. கொஞ்சம் பார்த்து செய்யுங்கம்மா. என்ன செலவோ அதை நான் பார்த்துக்கறேன்.''

கலாவதி கோவிலைத் திரும்பத் திரும்பச் சுற்ற, தினசரியில் விளம்பரம் வந்த பதினைந்தாம் நாள் ஒரு குடும்பம் பெண் பார்க்க வந்தது.

கலாவதியைவிட ரமாதேவி அழகு. கொஞ்சம் ஒடிசல் உடம்பு. ஒட்டிய வயிறு. சுருள் தலைமுடி. பெரிய கண்கள். சிவந்த உதடு. அழகான முகம்.

திலகவதி போய் காலையிலேயே விதம் விதமாக முகத்தைக் கழுவிவைக்க, பழச்சாறை முகத்தில் அப்பி படுக்க

வைத்து. பிறகு வழித்தெடுத்து முகம் கழுவச் சொல்ல, முகம் தாமரை மாதிரி விளங்கியது. அதிகம் பவுடர் போடாமல் உதடு மட்டும் எழுதி, மை எழுதி ஷாம்பூ போட்ட தலையை சின்னதாக முடிந்து நெற்றிக்குத் திலகம் வைத்து அதற்குக் கீழே ஒரு விபூதிக் கீற்று வைக்க, விபூதிக் கீற்று வேண்டாம் என்று ரமாதேவி அழிக்க முற்பட திலகவதி அழிக்க முற்பட திலகவதி கூசாமல் பளீரென்று அறைந்தாள்.

''பார்த்துப் பார்த்து நான் செய்திருக்கேன். எனக்கு எது நல்லது. எது கெட்டதுன்னு தெரியும். மூஞ்சியில் வாழைப்பழம் போட்டுத் தேய்ச்சனே அப்போ வேணாம்னு எழுந்து போக வேண்டியதுதானடி. மூஞ்சி சிவப்பு ஆகறவரைக்கும் காத்திருந்தது, இப்போ நான் இட்டதை அழிக்கறியா. விரலை ஒடிச்சுடுவேன்'' என்று சீறினாள்.

அந்தப் பெண் பயந்து போயிற்று.

''வரவங்க வெளியூர்ல வேலை செய்யறவங்க. அவங்களுக்கு விபூதியிட்டா பிடிக்காதுன்னு நினைச்சேன்.''

''அப்படி பிடிக்காதவங்களா இருந்தா போகட்டும். அப்படி பிடிச்சவங்களா இருந்து உனக்கு மாப்பிள்ளையா வரது நல்லது. பொண்டாட்டி திருநீறு வச்சது பிடிக்காதுன்னு சொல்றவனை நான் மனுஷனாவே நினைக்கலை. திருநீறு அழிக்கக்கூடாது. அழிச்சா உதைப்பேன்'' என்று மறுபடியும் கத்தினாள்.

ஆனால், அந்தத் திருநீறும், பொட்டும், சிவந்த உதடும், மையெழுதிய கண்களும் அவளைப் பேரழகாகக் காட்டியது. கலாவதி அசந்து போய் நின்றாள். அவளுக்குள் மெல்ல பொறாமை படர, அன்னபூரணி பக்கத்தில் இழுத்து வைத்து ''என்னா... வேகுதா. உள்ள வாயைப் பொத்திட்டு இரு. யார் யாருக்கு என்னென்ன கிடைக்கணுமோ கிடைக்கும். நீ என்ன



அந்தர் பல்டி அடிச்சாலும் எதையும் மாத்திட முடியாது. ஆத்தாவ கெட்டியா பிடிச்சுக்கறவ பொறாமைப்படறது கேவலம்.''

அவள் எடுத்துரைக்க அவளும் முகம் மாறினாள்; அமைதியானாள்.

வந்த விருந்தினர்களுக்குக் கொடுக்க காபி டம்ளருடன் ரமாதேவி நுழைய ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். பரவசப்பட்டார்கள்.

உன் பேரு என்னம்மா என்று ஆரம்பித்து அவளோடு பேசத் துவங்கினார்கள்.

ரமாதேவி மிகவும் கூச்சப்படுகிறவளாக, வெட்கம் பிடுங்கித் தின்கிறவளாக நடித்தாள்.

வீடு அவளை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தது. அவ்வப்போது மாப்பிள்ளையைப் பார்த்து மெல்ல சிரித்தாள். மாப்பிள்ளை மயங்கிப் போனான்.

திலகவதியும், அன்னபூரணியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''நல்லது பண்ண அன்னபூரணி. இது ரவுஸு பொம்பளை – எப்படி வெட்டுது பார்த்தியா.'' திலகவதி அடிக்குரலில் பேசினாள்.

''புள்ளை ரெண்டாங்கட்டானா தெரியறான். மடிச்சு பாவாடையில சொருகிப்பா. அக்கா, அப்பா, அம்மா எல்லாரையும் உதறிட்டு பொண்டாட்டியே கதின்னு கிடக்கப் போறான்.''

''இருந்துட்டுப் போகட்டும். இந்தப் பொண்ண கடிக்காம இருந்தா சரி.''

''ஆனா, உனக்குத் தேவைதானா இந்த வேலை.''

திலகவதி சொல்ல ''என்னாடி கல்யாணம்தானே பண்றோம். கைகாசா செலவு பண்றோம்'' என்று அன்னபூரணி சொன்னாள்.

''ஏங்க... ஒரு சந்தேகம்.''

பிள்ளையைப் பெற்றவர்கள் வந்து கேட்டார்கள்.

''என்னங்க...'' கலாவதியின் தாய் மாமன் அவர்கள் பக்கம் திரும்பிக் கேட்டான்.

''உங்க வீட்ல பெரிய பொண்ணு இருக்காமே கல்யாணத்துக்கு.''

''ஆமா, இருக்கு.''

''அதை விட்டுட்டு இந்தப் பொண்ணுக்கு பார்க்கறீங்களே அவசர அவசரமா. என்ன சமாச்சாரம்.''

''நாங்க பார்க்கறோம். ஆனா அவசர அவசரமா பார்க்கறோம்னு யார் சொன்னது. சொன்ன ஆள் யாருன்னு கொஞ்சம் சொல்லுங்க.'' தாய்மாமன் சூடானார்.

''இப்போ அது இல்லைங்க பிரச்சினை.''

பையன் வீட்டிலிருந்து வேறொரு பெண்மணி உரக்கக் குரல் கொடுத்தாள்.

''மூத்த பொண்ணு இருக்கச் சொல்ல, ரெண்டாவது பொண்ணுக்குக் கல்யாணம் பண்றீங்களே என்ன விஷயம் அப்படின்னு கேட்கறேன்.''

''மூத்த பொண்ணுக்கும் பையன் பார்த்து நிச்சயம் பண்ணிட்டோம். ரெண்டாவது இதுக்கும் நிச்சயம் பண்ணிடலாமேன்னு பண்றோம். அவ்வளவுதான்.''



''அப்போ ரெண்டு கல்யாணமும் ஒண்ணா பண்ணுவீங்களா.''

''அது உங்க இஷ்டம். நீங்க சரின்னு சொன்னா பண்ணிடலாம்.''

''இல்லீங்க. எங்க வீட்டுக் கல்யாணம் தனியா நடக்கணும்.''

''சரி. செய்துடறோம்.''

''சீக்கிரமே நடக்கணும்.''

''சரி. அப்படியே செய்துடறோம்.''

''அப்போ மூத்த பொண்ணு.''

''அதுக்கு கல்யாணம் நிச்சயமாயிருச்சும்மா. அதுக்கு உடனே செய்ய முடியாது. கொஞ்சம் மெல்ல... நிதானமாகத்தான் செய்யணும்.''

''மொதல்ல அந்தப் பொண்ணுக்கு முடிச்சுட்டு, அடுத்தது இந்தப் பொண்ணுக்கு முடிச்சுட முடியாதா. ரெண்டு கல்யாணத்தையும் இருவது நாள்ல செய்துட முடியாதா.''

''நான் மலைய பொராட்டி போடறவன் தான். இல்லேன்னு சொல்லலை. ஆனா பூமியை ரெண்டா வகுந்து ரெண்டு பக்கத்துக்குத் தனித் தனியா மிதக்கவிடுன்னா அது யாரால முடியும். இருவது நாள்ல ரெண்டு கல்யாணம் பண்ணச் சொல்றீங்களே. எப்படி முடியும்? பணச் செலவு ஒரு பக்கம் இருந்தாலும், மனுஷாள் தேவையில்லையா.''

''என்ன சொல்றீங்க?''

''ரெண்டாவது பொண்ணுக்கு முதல்ல முடிச்சுட்டு, முதல் பொண்ணுக்கு பின்னாடி வச்சுப்போம்.''

''ஏன் அப்படி?''

''நீங்க அவசரப்படறீங்களே. புள்ள துபாய்க்குப் போகணும்னு சொல்றானே. சாப்பிடறதுக்கு வசதியில்லைன்னு தானே கல்யாணம் கட்றாரு. கல்யாணம் கட்டி பொண்டாட்டிய கையோட கூட்டிட்டு போகட்டும். சமைச்சுப் போடுவா. சாப்டுட்டு சந்தோஷமா இருக்கட்டும்.''

எதிர்ப்பக்கம் மௌனமாக இருந்தார்கள்.

''ஏன் மௌனமாக இருக்கீங்க. என்னா சந்தேகம் உங்களுக்கு.''

'நெசமாவே மூத்த பொண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டீங்களா. இல்ல, எங்களுக்காக ஏதாவது சொல் றீங்களா?''

ஒரு ஆண்குரல் உரக்க ஒலித்தது.

அன்னபூரணி சட்டென்று முன் வந்தாள். சுற்றி யிருந்தோரை விலக்கி மாப்பிள்ளை வீட்டுப் பெண்களுக்கு முன்பு போய் நின்று பேசத் துவங்கினாள்.

# 14

''என் பேரு அன்னபூரணி. நாங்க சிந்தா திரிப்பேட்டையில் இருக்கோம். எங்க புள்ளைக்குத்தான் இவங்க வீட்டு மூத்த பொண்ணு கலாவதியைப் பார்த்திருக்கு. எங்க வீட்ல பெரியவங்க சாவு ஒண்ணு நடந்து போச்சு. அதனால இந்த வருஷம் கல்யாணம் வச்சுக்க முடியாது. இன்னும் மூணு மாசத்துக்கு அப்புறம்தான் ஒரு வருஷம்



முடியுது. அவங்க பொண்ணு பார்த்த பத்தாவது நாளே கல்யாணம் வச்சுக்கலாம்னு சொன்னாங்க. நாங்க தான் தள்ளி வச்சுக்க சொல்லிட்டோம். நிதானமா செய்யலாம்னு சொல்லிட்டோம். இந்த வரன் அமையுதே, நான் என்னம்மா பண்ணட்டும், கேள்வி கேட்பாங்களே அப்படின்னு ரொம்ப கலவரப்பட்டாரு. அதனால தான் இதை சமாதானம் பண்ண நானும் வந்திருக்கேன். நம்ம வீடுங்கள்ளல்லாம் பொண்ணு எடுக்கற இடத்துல கல்யாணத்துக்கு முன்னாடி கை நனைக்கிறதில்லை. அதெல்லாம் தாண்டி இங்க மத்தியானமே உட்கார்ந்து வண்ணமா சாப்டுட்டேன். நீங்க இப்படி எதுனா கேட்பீங்க, அதுக்கு தக்கபடி பதில் நான் சொன்னாதான் சரியா வரும்னு இங்க வந்துட்டேன். கல்யாணம் நிச்சயமாகிப் போச்சு. பாக்கு வெத்தலை நாங்க மாத்திக்கிட்டோம். கலாவதியும் எங்க வீட்டுக்கு வந்து போய்க்கிட்டுதான் இருக்கா. அதனால எந்த அச்சமும் இல்லாம ரெண்டாவது பொண்ண நீங்க கல்யாணம் கட்டிக்கோங்க. எப்படின்னு கேள்வி கேட்க வேண்டியவங்க நாங்கதான். நாங்களே இதுக்கு சரின்னு சொன்னபோது வேற யார் கேள்வி கேட்கறது.''

கடைசி வார்த்தையைத் தெளிவாய் உச்சரித்தபோது அந்த வீடு அவளை உறுத்துப் பார்த்தது. நியாயம்தானே என்பதுபோல் அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

கலாவதியின் தாய்மாமன் அவளை நன்றியோடு பார்த்தார். கையெடுத்துக் கும்பிட்டார்.

''இதை யார் செய்வாங்க சொல்லுங்க. அந்தம்மாகிட்ட நான்கூட கேட்கலை. எங்க வீட்டுப் பொண்ணுங்களை வச்சுத்தான் கேட்க வச்சேன். எனக்கு கேட்கறதுக்கு கூச்சமா இருந்தது. பயமா இருந்தது. எங்க வீட்டு ரெண்டாவது பொண்ணு கல்யாணத்துக்கு இவங்கள போய் எப்படி இழுக்க முடியும். என்னான்னு சொல்ல முடியும். ஆனா அழகா வந்து

சொல்லிட்டாங்க. ரொம்ப சந்தோஷமா இருக்கு. இப்போ நீங்க என்னா பதில் சொல்றீங்களோ, நீங்க என்ன தேதி சொல்றீங்களோ அந்தத் தேதியில நான் கல்யாணத்தை நடத்தறேன்.''

''பத்து நாள்ல நடத்திடுங்க.''

பிள்ளையைப் பெற்றவள் உரத்துச் சொன்னாள். மற்றவர்களும் அதையே சொன்னார்கள்.

தாய்மாமன் உடனே சரியென்று தலையசைத்தார். மற்றவர்களும் எழுந்திருந்தார்கள்.

கூடத்தில் நின்று பேசி, வாசலில் நின்று பேசி, வராண்டாவில் நின்று பேசி, வெளியில் நின்று பேசி அரைமணி கழித்து கலைந்து போனார்கள்.

அவர்கள் போனதும் கலாவதி அன்னபூரணியைப் பாய்ந்து கட்டிக் கொண்டு கன்னங்களில் முத்தமிட்டாள். காலில் விழுந்து நமஸ்கரித்தாள்.

அந்த வீட்டுப் பெண்கள் ஓடி வந்து கைகளைப் பிடித்துக் கொண்டார்கள். மேலே போர்த்திக் கொண்டிருந்த கட்சிக் கரைத்துண்டை இடுப்பில் இறுக்கக் கட்டி அன்னபூரணியின் எதிரே சாஷ்டாங்கமாய் தாய்மாமன் விழுந்து நமஸ்கரிக்க, அன்னபூரணி பதறிப் பின் வாங்கினாள். தாய்மாமன் எழுந்திருந்தார்.

''நான் அரசியல்வாதி தான். எல்லாத்துலயும் உபயோகம் பார்க்கறவன்தான். யாருக்காவது ஏதாவது செய்தா பதிலுக்கு என்னா கிடைக்கும்னு பார்க்கறவன்தான். ஆனா, எங்க வீட்டுப் பொண்ணுக்கு நல்லது பண்ணணும்னு, எந்த உதவியும் எதிர்பார்க்காம, பாக்கு வெத்தலை மாத்திக்கிட்டோம், கலாவதி வரப்போக இருக்கா, அந்தக் கல்யாணம்



நிச்சயமாயிடுச்சின்னு படபடன்னு போட்டீங்களே. கொஞ்சம் தயங்கியிருந்தாகூட அவங்க சந்தேகப்பட்டிருப்பாங்க.

எந்தத் தயக்கமுமில்லாம நீங்க பேசினது அவங்களுக்கு சந்தோஷமாயிடுச்சு. இந்தக் கல்யாணம் நடந்ததுன்னா அதுக்கு நீங்க காரணம். வேறயாரும் காரணம் இல்லை. நீங்கதான் காரணம்.'' உரக்கச் சொல்ல அந்த வீடு அதையே பல்வேறு விதமாய் எதிரொலித்தது.

முழங்கை நீளத்திற்கு தலைப்பு வைத்து டெஸ்டட் ஜரிகை புடவையையும், கரைகோர்த்து வாங்கிய காஞ்சிபுரம் புடவையையும் அன்னபூரணிக்கு அந்த வீடு பரிசளித்தது.

திருமணம் நடந்த பிற்பகலே சத்திரத்தைக் காலி செய்துவிட்டு மணப்பெண்ணோடு மாப்பிள்ளை வீட்டார் போய்விட கலாவதி வீடு நிம்மதியாயிற்று.

ரமாவின் கல்யாணம் முடிந்ததும் கலாவதியின் தாய்மாமன் வீட்டிற்கு வந்து அன்னபூரணியின் சாமர்த்தியத்தை, சொல்திறனை, இப்படித்தான் நடக்கும் என்று குறி சொன்னதை வெகுவாகப் பாராட்டி கை கூப்பினார். எப்பொழுதுமே எகத்தாளமாகப் பேசுகின்ற தாய்மாமன், எடுத்தெறிந்து பேசுகின்ற தாய்மாமன், மிக மரியாதையுடனும், அக்கறையோடும் அன்னபூரணியுடன் பேசுவது பார்த்து கலாவதி வியந்தாள்.

திலகவதியின் காதோரம் இதுபற்றிக் கிசுகிசுத்தாள்.

''அடுத்தபடியா கலாவதி கல்யாணம் நடக்கணுங்க. நீங்க எப்படிச் செய்யணும்னு நினைக்கறீங்களோ அப்படிச் செய்யறேன். இது டப்புடிப்புன்னு நடந்ததுனால பெருசா ஒண்ணும் செலவில்லை. பொட்டியில இருந்த நகையையும், கூட கொஞ்சம் வாங்கியும் கொடுத்ததுனால மாப்பிள்ளை

வீட்டுக்காரங்களுக்கு சந்தோஷம். நான் கலாவதி கல்யாணத்தை இத்தனை வேகமா நடத்தாம, கொஞ்சம் நிதானமா நடத்தணும். சாரட் குதிரையோட, வாண வேடிக்கையோட, நாதஸ்வரத் தோட, பேண்டு வாத்தியத்தோட பிரமாதம் பண்ணணும். மொத்தத் தலைவரையும் கூட்டிட்டு வரமுடியலை. எல்லாம் லோக்கல் பார்ட்டி ஆளுங்கதான் வந்தாங்க. கலாவதி கல்யாணத்துக்கு அத்தினி தலைவரும் வந்து இறங்குவாங்க. அதனால எனக்கு மூச்சுவாங்கற டைம் கொடுங்க.''

''மூச்சு வாங்கற டைம்னா.''

அன்னபூரணி கேட்டாள்.

''ஒரு மூணு மாசம்.''

''சரி, இப்போ அப்போன்னு ஆனது ஆயிப்போச்சு. மூணு மாசத்துல என்னா குடிமுழுகிப் போயிடும். எடுத்துக்கோங்க. உங்களுக்கு எப்படி இஷ்டமோ அப்படிப் பண்ணுங்க.''

''அதுவரைக்கும் கலாவதி இங்கவரப்போக இருக்கலாங்களா. அது நல்லதுங்களா. இல்ல வேணாம் வீட்டோட கிடன்னு அடக்கி வச்சுடட்டுமா.''

''அவ எங்க வீட்டு மருமக. நீங்க ஏன் அடக்கணும். நீங்க உங்க வேலையைப் பாருங்க. நாங்க எங்க வேலையைப் பார்க்கறோம்.''

''அப்போ வரலாம்னு சொல்றீங்களா.''

''வர ஆரம்பிச்சுட்டா. பழக ஆரம்பிச்சுட்டா. நானும் உங்க வீட்டுக்குள்ள வந்து விருந்து சோறெல்லாம் சாப்பிட் டிருக்கேன். எல்லா சம்பிரதாயமும் உடைஞ்சு போச்சே. அப்புறம் இந்தக் குழந்தையை இனிமே போகாதேன்னு மடக்கி வைப்பானேன். அதுல என்ன சந்தோஷம் உங்களுக்கு.''



''அப்போ வரப்போக இருக்கலாங்கறீங்க.''

''அட... இன்னாங்க திரும்பத் திரும்ப ஒரே மாதிரி பேசிகிட்டு...''

''இல்லைங்க. நான் கொஞ்சம் மக்கு. தெளிவா சொல்லுங்க.''

''உங்க கலாவதி வரப்போக இருக்கலாம். வரப்போக என்னா, இங்கயே ஒரு நாலுநாள் தங்கலாம். இங்கயே நாலுநாள் என்ன, இனிமே இங்கயேகூட இருந்துடலாம்.''

''ஐய்யய்ய... அதெல்லாம் வேணாங்க.'' தாய்மாமன் அலற வீடு சிரித்தது. கலாவதியும் கலந்து கொண்டாள்.

அன்னபூரணியே உயர்வு. திலகவதியே உறவு. விசாலாட்சியே எல்லாம் என்பதுபோல நடந்து கொண்டாள்.

பெண்களுக்கு சுகமும், சுதந்திரமும் கிடைக்கின்ற இடத்தை வெகு இறுக்கமாகப் பிடித்துக் கொள்கிறார்கள்.

ஆனால், தாய்மாமன் சந்தேகம் வேறாக இருந்தது.

''அந்த வீட்ல எல்லாம் பொம்பளை ராஜ்ஜியமா இருக்கு. மாப்பிள்ளைப் பையனும் அம்மா புள்ளையா இருக்கான். நீ பேண்ட் போடு, வேட்டி கட்டுன்னு அவதான் தீர்மானம் பண்றா. அவ என்னா சொல்றாளோ அதைத்தான் கேட்கறான். நம்ம பொண்ணு போய் சௌகரியமாக இருக்குமா.''

தன் உறவுக்காரர்களைக் கேட்டான்.

''ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு விதம். ஒவ்வொரு வீட்ல ஒருத்தர் ராஜா. ஒருத்தர் வீட்ல தாத்தா அதிகாரம். ஒருத்தர் வீட்ல பாட்டி அதிகாரம். ஒருத்தர் வீட்ல அம்மா அதிகாரம். ஒருத்தர் வீட்ல அப்பா அதிகாரம். இங்க தாய்மாமன். நீ அதிகாரம் பண்ணலையா. உனக்கு அஞ்சி எல்லாரும் நிக்கலையா. இது

ஏன்னு கேட்டா எங்க போய் சொல்றது. உன் புருஷனுக்கு ஒரு ரைட்டும் கிடையாதான்னு ஊர்ல எத்தனை பேர் கேட்டிருக்காங்க. நான் என்னா எதிர்த்தா பேசமுடியும். நீ சம்பாதிக்கிற. நீ அதிகாரம் பண்ற. நீ காசு கொண்டுவந்து கொட்டற, உன்பேச்சை நாங்க கேட்கறோம். அதே மாதிரிதான். சொத்து மொத்தமும் அன்னபூரணி பேர்ல இருக்கு. அன்னபூரணி என்ன சொல்றாங்களோ அதைக் கேட்டுக்கறாங்க. யார் அதிகாரம் பண்றாங்கங்கறது முக்கியமில்லை. அதிகாரம் பண்றவங்க நல்லவங்களா கெட்டவங்களா, அக்கறையோட பண்றாங்களா, அறிவில்லாத பண்றாங்களா, அதான் முக்கியம்.''

கலாவதியின் தாய்மாமனின் உறவுகளும், சகோதரிகளும் உரக்கப் பேசினார்கள்.

அவன் மௌனமானான்.

கலாவதி அன்னபூரணி வீட்டில் புகுந்து புறப்பட்டுக் கொண்டு வந்தாள்.

திருமணம் ஆகும் முன்பே புருஷனாகப் போகிற வனிடத்தில் பேசிப்பழகி வந்தாள். அவனுக்கு விதம்விதமான உணவு வகைகள் சமைத்துப் போட்டாள். மாலை ஐந்து மணி ஆனவுடன் முகம் அலம்பி நெற்றிக்குப் பொட்டு இட்டு மிக லேசாகப் பவுடர் பூசி அவள் வீட்டுக்குக் கிளம்பி விடுவாள். போய் உட்கார்ந்து போனில் மணிக் கணக்காகப் பேசுவாள்.

''அத்தை, திலகவதி அவங்ககிட்ட கொடுங்களேன், கொஞ்சம் பேசணும்'' என்று ஆரம்பித்து முக்கால் மணிநேரம் அரட்டையடிப்பாள்.

''கலாவதி, நீ சொன்னமாதிரி அடுத்த வீட்டுக்காரன் வீட்டை வித்துட்டுப் போயிட்டான். செவுரு பிரச்சினை

F328632



சுத்தமா தீர்ந்துபோச்சு. ஆனா, வாங்கினவன், செவுரு கட்டணும், லேத்துப் பட்டறை வைக்கப் போறேன், ஜாப் ஒர்க் பண்ணப்போறேங்கறான். டங்குடங்குன்னு எல்லா நேரமும் நாள் தவறாத சத்தம் கேட்டுட்டு இருக்கும். டே ஷிப்ட், நைட் ஷிப்ட்டுன்னு வேலை செய்வாங்க. நூறு வீடு ஒட்டு மொத்தமா இருக்கற இடத்துல ஒரு கொல்லைப் புறத்துல லேத் பட்டறை போட்டா அது நல்லாவா இருக்கும். எங்களுக்கு அது பிடிக்கலைன்னு சொன்னோம். உனக்கு என்னா பிடிச்சதும், பிடிக்காததும், நான் பட்டறை வைக்கப் போறது உறுதி அப்படின்னுட்டான். என்ன பண்ணலாம். உங்க தாய் மாமன்கிட்ட கேட்டுச் சொல்லு.''

அன்னபூரணி கலாவதியிடம் பேசினாள்.

''அதெப்படி லேத் பட்டறை வைக்கலாம். எப்படி வைக்க முடியும். இங்க லேத் பட்டறை வைச்சா, இந்தப் பக்கம் ஒரு லைட்டும் எரியாது. எல்லாம் டிம்மா போயிடும். அவன் மூணு ஃபேஸ் போட்டு கரண்ட் எடுத்துப்பான். உங்களது சிங்கிள் ஃபேஸ், சரியா வராது. இருக்கறதும் ஃபீஸ் போவும். லேத் பட்டறை இந்த இடத்துல வர்றது தப்புன்னு சொல்லி நான் எழுதிப் போட்டுடறேன்.''

அவன் சிறியெழ, வாங்கினவனுக்கு ரோசம் பொங்கியது.

''நான் வெச்சுக் காட்டறனா இல்லையான்னு பார்'' என்று அவன் முஷ்டி உயர்த்த அன்னபூரணி கவலையானாள்.

''நீ என்னைவிட பெரியாளா இருக்கலாம். மந்திரிங் களைப் பைக்குள்ள போட்டுட்டு இருக்கலாம். ஆபீஸில லஞ்சம் கொடுத்து கரண்ட் வாங்கலாம். அதெல்லாம் வாங்கி கடை திறப்ப பார், வெளிய கொண்டு வந்து திருஷ்டி பூசணிக்காய் போடுவ பார். அன்னிக்கு சிதறிடுவ. அப்போ தெரியும். எது வெடிச்சது, எங்க வெடிச்சது. எப்படி

வெடிச்சதுன்னு தெரியாத வெடிக்கும். ஒரு லெவல் வரைக்கும் நான் அரசியலா செய்வேன். அப்புறம் அடிதடி ரகளைதான்'' என்று மிரட்டி, எதிர்ப்பக்கம் சற்று சலசலப்பு கேட்டது.

ஒரு வாரம் எந்தவித முயற்சியுமில்லாமல் அடங்கியிருந்தது.

அந்த ஆள், அன்னபூரணியிடம் வந்தான்.

''என்னா. ரௌடியெல்லாம் விட்டுப் பயமுறுத்துறீங்க.''

''அவரு ரௌடி இல்லீங்க எங்க சம்பந்தி.''

''சரி, சம்பந்தி ரௌடியைவிட்டு பயமுறுத்தறீங்க. அவ்னோதானே.''

''இன்னொரு தடவை அவரை ரௌடின்னு சொன்னீங்கன்னா நான் உங்களைப் பொறுக்கின்னு கூப்பிட வேண்டியிருக்கும்.''

அன்னபூரணி எழுந்து நின்று அதட்டினாள். அவன் மௌனமானான்.

''என்னா வேணும் சொல்லுங்க.'' திலகவதி விசாரித்தாள்.

''இந்த இடம் வாங்கினதே, தோட்டத்துப் பக்கம் லேத் பட்டறை வச்சுக்கலாம், வாசப்பக்கம் வீடு வச்சுக்கலாம்னுதான். நீங்க சுத்தமா கெடுத்துட்டீங்க. என் பொழப்புல மண்ணைப் போட்டுட்டீங்க.''

''அதுக்கு நானா பொறுப்பு. எங்கிட்ட கேட்டுட்டா வாங்கினீங்க. எங்கிட்டயா வந்து லேத் பட்டறை வைக்கப் போறேன்னு சொன்ன. எங்கிட்ட பேசினியா இது லேத் பட்டறை வைக்கற இடம்னு. நீயா ஏதாவது முடிவு பண்ணிட்டு, இப்போ எங்ககிட்ட வந்து சொன்னீன்னா என்ன



அர்த்தம். லேத் பட்டறை நூறு குடித்தனத்துக்கு நடுவுல எப்படி வைக்கலாம். அந்தப் பக்கம் வீடு இருக்கு. இந்தப் பக்கம் வீடு இருக்கு. நடுவுல ஒரு பட்டறை, ராவும் பகலுமா சுத்தியல் அடிப்பேன்றியே. மூளை இருக்கா உனக்கு. ஊரு வயித்தெரிச்சல் பட்டா பிழைக்க முடியுமா உன்னால. மத்தவங்களைத் தூங்க முடியாத பண்ணிட்டா, நீ நிம்மதியா தூங்க முடியுமா. மத்த குழந்தைங்களைப் படிக்க விடாத பண்ணிட்டு, உங்க குழந்தைங்க எப்படி படிக்கும். இல்ல, படிக்கறதுக்குத்தான் புத்தி இருக்குமா. செய்யறத நாலு பேருக்குத் தொந்தரவு இல்லாத செய்யணும்னு புரிஞ்சுக்கோ. நான் அப்படித்தான் செய்வேன்னு அடாவடி காண்பிச்சா, அப்படி அடாவடி காண்பிச்சவன் வாழ்ந்ததா சரித்திரமேயில்லை.''

''சரி. நான் இந்த இடத்தை வித்துடறேன். வாங்கிக்கறீங்களா.''

''எங்க வீடு அகலத்துக்கு, எங்க வீடு நீளத்துக்கு இருக்கற அந்த வீட்டை நான் எப்படி வாங்க முடியும். அவ்வளவு காசு எங்கிட்ட எங்க இருக்கு. திடீர்னு வந்து வாங்கிக் கோன்னா, நான் எப்படி வாங்கிப்பேன்.''

''சரி, நான் விக்கத்தான் போறேன். இங்க லேத் பட்டறை இல்லைன்னாக்க என்னால இதை வச்சுட்டு சமாளிக்க முடியாது. லேத் பட்டறை வைக்கறதே இதை அடமானம் வச்சுத்தான். லேத் பட்டறை வைக்கலைன்னா, இதை என்னத்துக்கு அடமானம் வைக்கறது. யாராவது, நல்ல விலை கேட்டா சொல்லுங்கோ கொடுத்துடறேன்.'' அவன் முணு முணுப்போடு எழுந்தான். வீடு மறுபடியும் கூடிப் பேசிற்று.

''அன்னபூரணி இங்க ஒண்ணு பண்ணணுமே.''

''என்னா. வீடு மொத்தமும் வாங்க வேண்டாம். அடுத்த வீட்டுக் கொல்லைப் பக்கத்தையாவது வாங்கிடலாம்.''

''எதுக்கு?''

''இன்னொரு ஆள் வருவான். அங்க லேத் பட்டறை இல்லை, மிளகா மிஷின்னுவான். வேற ஆள் யாராவது வருவான். தச்சுப் பட்டறை வைக்கறேன்னுவான். கண்ணாடி அறுக்கறேன்னுவான். தேவையா. இந்த மாதிரி இடம் பார்த்தாக்க எதுனா செய்யணும்னுதான் தோணும். ஒண்ணுமில்லை. சமையல்காரன் வாங்கி, தினம் சோறு பண்ணிப் போட்டான்னாக்க, ஹோட்டலுக்கு அனுப்பி னான்னாக்க அதுகூட நமக்கு கஷ்டமாத்தான் இருக்கும். தேவையில்லாத வெக்கையும், புகையும், வாசனையும், மிளகாய் நெடியுமா இருக்கும். குடித்தனம் பண்றவங்க வந்தாதான். இவ்வளவு பெரிய வீடும், இவ்வளவு பெரிய கொல்லைப்புறத்தோடும் யாராவது வாங்குவாங்களா. குடித்தனம் பண்ணுவாங்களா. தொழில் பண்றவன்தான் இங்கவரேன்னு சொல்லுவான். அதனால இன்னொருத்தன் உள்ள நுழையாம, இருக்கற கொல்லைப்புறம் பார்த்துட்டு தொழில் பண்ண நினைக்காம இருக்க அந்தக் கொல்லைப் புறத்தை நாமளே வாங்கிட்டா.''

''அடியே... அது மட்டும் வாங்க முடியுமா. எவனாவது தருவானா.''

''கேட்டுப் பார்க்கறது.''

''எவ்வளவுக்குத் தருவான்.''

''தெரியலையே.''

இந்தமுறை அவர்கள் போய்க் கேட்டார்கள். அந்த ஆள் இதுதான் சாக்கு என்று பெரிய விலை சொன்னான்.

உடனடியாக வீடு திரும்பினார்கள். நகம் கடித்தார்கள். முன்னும் பின்னும் அலைந்தார்கள்.



''திலகவதி நீ சொல்றது கரெக்டா இருக்கு. அந்தக் கொல்லைப்புறத்தை எப்படியாவது வாங்கிடணும். இல்ல வேற யாரும் வாங்காதபடி தடுக்கணும். என்னா பண்றதுன்னே தெரியலையே. கலாவதிக்கு போன்போடு. அவங்க தாய் மாமனை வரச் சொல்லு.'' அன்னபூரணி படபடப்பானாள்.

# 15

அந்த ஆள்கிட்டயா பேசலாங்கிற.'' அன்னபூரணி விசாலாட்சியைப் பார்த்துக் கேட்டாள்.

''இன்னிய தேதிக்கு அவர்தான் உதவி.''

''எப்படி கல்யாணத்தைக் கவனிப்பாரா, இதுக்கு உதவி செய்வாரா.''

''நீ என்னா காசா கேட்கப் போற.'' விசாலாட்சி கேட்டாள்.

''ஆமாம். காசு கேட்டுத்தான் வாங்கணும். வேற ஒண்ணும் பண்ண முடியாது.'' என்று அன்னபூரணி பதட்டமானாள்.

கலாவதியைக் கூப்பிடாமல் தானே ஆட்டோ பிடித்து அந்த வீட்டில் இறங்கினாள்.

அந்த வீடு அவளை ராஜமரியாதையுடன் வரவேற்றது. அவள் தாய்மாமனை இங்கே அங்கே என்று போன் போட்டுப் பிடித்தார்கள். உடனே வீட்டிற்கு வரச் சொன்னார்கள்.

அவர் இரண்டு மணி நேரம் கழித்து வந்து கைகூப்ப, அன்ன பூரணி எழுந்து நின்று ''உங்களோட தனியா பேசணும்'' என்றாள்.

வீடு மிரண்டது.

''என்னாங்க.. எதுனா பிரச்சினை ஆயிடுச்சா.''

''அட...ஒரு பிரச்சினையும் இல்ல. இது கலாவதி கல்யாணத்தைப் பத்தின விஷயம் இல்லை. எங்க பக்கத்து வீடு – அதான் நீங்க வந்து பேசினீங்களே...''

''ஆமாம். மறுபடியும் கட்ட ஆரம்பிச்சுட்டானா. முட்டிக்கு முட்டி பேத்துடுவேன்.''

தன் சட்டையைத் தானே மடித்துக் கொண்டு தாய்மாமன் எகிற, ''இல்லை, அவரு வித்துட்டுப் போயிடப் போறேன்னார். வேற ஆள்வந்து மறுபடியும் இதே மாதிரி ஆரம்பிச்சா நமக்குத்தானே கஷ்டம்.''

''அதுக்காக.''

''அந்த கொல்லைப்புறத்தை மட்டும் நாமளே வாங்கிடலாமான்னு நினைக்கிறேன்.''

'கொல்லைப்புறம் மட்டும் தருவானா.''

''கேட்டுப் பார்த்தோம். ரொம்ப பெரிய விலை சொல்றான்.''

இந்த இடத்தை, இந்த விஷயத்தை அப்படி அணுகக் கூடாது.''

''அந்த வீடு வாங்கறதுக்கு ஒரு ஆளை ஏற்பாடு பண்ணிட்டு, நாம கொல்லைப்புறம் வாங்கறதுக்கு ஏற்பாடு பண்ணணும்.''

''இது கொக்குத் தலையில வெண்ணை வச்சுப் பிடிக்கிற மாதிரியில்லை.''



''ஆமாம். அப்படித்தான். ஆனா கொக்கு தூங்கற நேரம் பார்த்து வெண்ணை வச்சிடலாம் இல்லை, வேற வழி இருக்கு.''

''என்ன வழி?''

''அந்த வீட்டை யாருமே வாங்காதபடி பண்றது.'' அவரிடம் ஒரு சிரிப்பு ஓடியது.

''ஐயோ, அது எப்படிப் பண்ணமுடியும்.?''

''எதுனா வம்பு பண்ணிக்கிட்டே இருக்க வேண்டியதுதான். இந்த வீடு வாங்காத, பேய் இருக்குன்னு சொல்லிடலாம். இந்த வீடு வாங்காத, வாங்கினவன் ரெண்டாவது வாரம் ஆஸ்பத்திரியில போய் அட்மிட் ஆயிடுவான்னு சொல்லலாம். வாங்காத, அதுல வில்லங்கம் இருக்குன்னு கிளப்பி விடலாம். இவனைவிட மோசமானவன் வீட்டை வாங்கிட்டா ஒண்ணுமே பண்ண முடியாது. எங்க தெருவுல எதிர்ப் பக்கம் ஒரு வீட்டை சேட் வாங்கிட்டு குழம்பு மசாலாப் பொடி கம்பெனி ஆரம்பிச்சுட்டான். தெரு முழுக்க மஞ்சா நெடியா இருக்கு. அப்பப்போ கைமாத்தா நமக்கு காசு கொடுக்கறான்றது இல்லை. அந்த மாதிரி பார்ட்டி உங்க வீடு பக்கத்துல மாட்டிக்கிச்சுன்னா ரொம்ப ரொம்ப சிரமம். நகர்த்தவே முடியாத போயிடும்.''

தாய்மாமன் தனக்குத் தெரிந்த புரோக்கரை அனுப்பி, அந்த வீட்டைத் தான் விற்றுத் தரும்படியாக நம்பிக்கை ஏற்படும்படியாகப் பேசி, தானே விளம்பரம் கொடுத்து, ஆள் வரக் காத்திருந்து, ஒரு ஆந்திரா பார்ட்டி வர, விருந்து கொடுத்து விஸ்கி டம்ளருடன் உட்கார்ந்து விவரங்கள் பேசி, ஆந்திரா பார்ட்டி அரிசி வியாபாரம் என்று சொல்ல, நிலக்கடலை எண்ணெய் என்று பேச ''எவ்வளவு அந்தக் கொல்லைப்புறம்'' என்றும் கேட்டான்.

'''அதையும் கட்டட விலையா சொல்றான்.''

''வேணாம். விட்டுடு. எனக்கு கட்டிடம் போறும்னு சொல்லு'' என்று சொல்ல, ''கொல்லைப்புறத்தை எப்படி விற்பது'' என்று அவன் கேட்க, ''நான் அதற்கு வேற பார்ட்டி ஏற்பாடு பண்றேன்'' என்று இவன் சொல்ல, கொல்லைப்புறம் மட்டும் எட்டு லட்ச ரூபாய்க்கு அவர்களுக்குக் கிடைத்தது.

நாலு லட்ச ரூபாய் அன்னபூரணி கொடுக்க, இன்னொரு நாலு லட்சத்தில் இரண்டு லட்ச ரூபாய் கலாவதியின் தாய்மாமன் கடன் வாங்கிக் கொடுத்தார். இன்னும் இரண்டு லட்ச ரூபாயை கலாவதியின் சீதனம் என்று ரொக்கமாக நீட்டினார்.

''குழந்தைக்கு எதுனா பண்ணணும்னு நினைச்சேன். இப்போ அந்த நிலத்துல குழந்தைக்கும் ஒரு பங்கு இருக்கு. குழந்தை உங்க சொத்து. உங்க சொத்துல குழந்தைக்கும், உங்க பங்கு இருக்கு. இப்பவே உங்களோட எங்க வீட்டுப் பொண்ணு பின்னிப் பிணைஞ்சுட்டா. இப்போ இன்னும் இறுக்கமாயிடுவா. எனக்கு சந்தோஷமா இருக்கு. என்ன பிரச்சினையா இருந்தாலும் இந்த நாயைக் கூப்பிடுங்க.. ஓடி வந்து உங்க வீட்டைக் காவல் காக்கும்.''

அவன் கைகட்டிச் சொல்ல, அன்னபூரணி எழுந்து அவனைக் கும்பிட்டாள்.

''எனக்கு வார்த்தையா பேசவரலை. அத்தை... அத்தைன்னு கூப்பிடுது கலாவதி. உங்களை நான் உடம்பொறந்த சகோதரனா நினைக்கிறேன். எனக்கு அண்ணனா நினைக்கிறேன். அண்ணன்னா இப்போ எங்களுக்கு வேற யார் ஞாபகமும் வர்றதில்லை. உங்க ஞாபகம்தான்.''



அன்னபூரணி கலாவதியின் வீட்டுக்குப் போன் செய்தாள். கலாவதியின் அம்மாவுடனும், அப்பாவுடனும் பேசினாள்.

''கல்யாணத்துக்கு முன்னாடி கை நனைக்கிறது இல்லைன்னு ஒரு சம்பிரதாயம். நம்ம ஊர் ஜாதியில உண்டு. இங்க கைநனைக்கறது, கடன் வாங்கறதுன்னு நாம விதம்விதமா எல்லை தாண்டிட்டோம். இனிமேயும் கல்யாணத்தை இப்படி நடத்து, அப்படி நடத்துன்னு சொல்றதுக்கு எனக்கு யோக்கியதையே இல்லை. காதும் காதும் வச்சா மாதிரி கல்யாணத்தை முடிப்போம். பெருசா செலவு பண்ண வேணாம். ரெண்டாவது பொண்ணு கல்யாணத்தை முடிச்சுட்டு இந்தப் பொண்ணுக்கும் வாரி விட்டாங்கன்னாக்க எப்பேர்ப்பட்ட பணக்காரனும் போண்டியாயிடுவான். கல்யாணத்துக்காக நிறைய கடன் வாங்க வேண்டாம். கல்யாணத்தை நீங்க சிறப்பா செய்ததாகவே நான் நினைச்சுக்கறேன். நான் வாய் வார்த்தையா சொல்லலை. அடி மனசுலேர்ந்து பேசறேன். உங்க காசுல கல்யாணம்னு நான் வாண வேடிக்கை பார்க்க ஆசைப்படறதை விட எனக்கு நீங்க செய்த உதவியை ரொம்ப மரியாதையா நினைக்கிறேன். கலாவதி எங்க வீட்டு மருமகளா ஆயிட்டதாகவே நீங்க நினைச்சுக்கலாம்.'' அன்னபூரணி சொல்லி விடைபெற்றாள்.

அவர்கள் வீடு உட்கார்ந்து பேசியது.

''அப்போ, நம்ம வீட்டுக்கு என்ன மரியாதை. குழந்தைங்க மனசுல, நாம ஊர்வலமா போகணும். நாம நகையா உடுத்திக்கணும், நம்ம கல்யாணத்துல நாலாயிரம் பேர் சாப்பிடணும்னு ஆசை இருக்காதா. அவ கல்யாணத்தை அப்படிப் பண்ணோமே'' என்று தாய் மாமன் உரத்துப் பேச, கலாவதி எழுந்து நின்று ''இல்லை. எனக்கு அப்படி ஆசையில்லை. அன்னபூரணி அம்மாவோட ஒட்டிக்கணும்னு

தான் எனக்கு ஆசை. அந்த வீட்டோட இருக்கணும்தான் எனக்கு ஆசை.''

''எப்படித்தான் உன் கல்யாணம் இருக்கணுங்கற.''

''அன்னபூரணி அம்மாவும், திலகவதி அம்மாவும் சொன்னாங்க, திருவிடந்தைன்னு ஒரு ஊர். மகாபலிபுரம் போற வழியில ரொம்ப பழைய கோயிலாம். கல்யாண வெங்கடேஸ்வரர்னு சாமி பேராம். வராகராம். தொடையில தாயாரை உட்கார வச்சு ரொம்ப பிரியமா கட்டிக்கிட்டு இருப்பாராம். தாயாரும் தோள் மேல கை போட்டுக்கிட்டு வராகரையே பார்த்துக்கிட்டிருப்பாங்களாம். இன்னிக்கெல்லாம் பார்த்துக்கிட்டிருக்கலாமாம். அவ்வளவு அழகான மூர்த்தியாம். அந்த இடத்துல போயிதாலி கட்டி, மாலை மாத்திக்கிட்டு வந்துடலாம் அப்படின்னுட்டாங்க. கோவிலுக்குள்ளயே ஸ்வீட்டும், புளியோதரையும், தயிர்சாதமும் கொடுத்துடலாம்னு சொல்றாங்க.''

கலாவதி சொல்லி முடித்ததும் வீடு அமைதியாயிற்று. ''எனக்குப் பிடிக்கலை...'' என்று ஆளாளுக்குக் கத்தினார்கள்.

தாய்மாமன் மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

''எதுக்கு சீர். அதுவும் தேவையில்லை. எங்க வீட்ல கட்டில், மேஜை எல்லாம் இருக்கு. எடுத்துட்டு வந்து போட்டு இடத்தை அடைச்சு, எதுக்கு தொந்தரவு பண்றீங்க. பொண்ணுக்கு நிறைய புடவை வாங்கி அனுப்புங்க. விதவிதமா போட்டுக்கட்டும். முடிஞ்ச நகையை பண்ணி அனுப்புங்க.''

கலாவதியின் வீடு மௌனமாக இருந்தது.

அன்னபூரணி விரும்பிய வண்ணமே திருமணம் நடத்தியது.



எட்டு மணிக்கு திருவிடந்தையில் ஒன்று கூடினார்கள். முதல் முக்கால் மணியில் திருமணம் நடத்தினார்கள். அடுத்த முக்கால் மணியில் சாப்பாட்டுக் கடை முடித்தார்கள். அத்தனை பேரும் வரிந்து கட்டிக் கொண்டு சாப்பிட்ட இடத்தைச் சுத்தம் செய்தார்கள்.

கோயிலை வலமாக வந்து சென்னைக்கு வண்டியேறினார்கள்.

பன்னிரெண்டு மணிக்கு அன்னபூரணியின் வீட்டில் மிகப் பெரிய சைவ விருந்து நடந்தது. வாங்கின கொல்லைப் புறத்தில் விளக்கு ஏற்றி, பிறகு அடுப்பு ஏற்றி, பாயசமும், வடையும் முதலில் செய்து, பிறகு சோறு பொங்கி குழம்பு ரசம் வைத்து விதம் விதமான பதார்த்தங்கள் தயாரித்து மிகச் சந்தோஷமாக பதில் விருந்து அளித்தார்கள்.

''நல்லாயிருக்கு கதை. எங்களை பொட்டலம் சோறு போடுன்னு சொல்லிட்டு, நீங்க என்னா தலை வாழை இலை போட்டு சோறு போடறீங்க. எங்களை மட்டமா பார்க்கணும்னே தீர்மானம் பண்ணிட்டீங்களா.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. நான் ஒரு நன்றிக் கடனா செய்யறேன்.''

''என்னா நன்றி. இந்தக் கொல்லைப்புறத்தை வாங்கிக் கொடுத்ததுக்காக உங்க மாமாவுக்கு ஒரு நன்றி. அவ்ளோதான்.''

கலாவதியின் வீடு நெகிழ்ந்து போயிற்று.

''பொண்ணைப் பெத்தவங்களுக்கு பொண்ணு பெரிசான நாள்லேர்ந்து அடிவயித்துல பக் பக்குன்னு ஒரு பயம் இருக்கும். நல்லபடியா கல்யாணம் பண்ணிக் கொடுக்கணுமேன்னு ஒரு பயம் இருக்கும். கல்யாணம் பண்ணிக் கொடுத்த இடத்துல

நல்லபடியா வாழணும்மேன்னு பயம் இருக்கும். ஆம்பளையில்லாத வீடாச்சே, எல்லாரும் பொம்பளையா இருக்காங்களே, என்ன பண்றதுன்னு பயந்தேன். அன்னபூரணி அம்மா ஒருத்தர் போதும், பத்து ஆம்பளைக்குச் சமம். கலாவதி அதிர்ஷ்டக்காரி. ரொம்ப ரொம்ப அதிர்ஷ்டக்காரி. இப்பவே எங்க சொந்தக்காரங்க எல்லாரும் எங்க பொண்ணுக்கு இப்படி அமையணும், எங்க பொண்ணுக்கு இப்படி அமையணும்னு பேச ஆரம்பிச்சுட்டாங்க.

நாப்பது சவரன் நகை கலாவதிக்குப் போட்டிருக்கோம். இன்னும் கொஞ்சம் நகை உள்ள இருக்கு. அடுத்தடுத்த விசேஷத்துக்கு அனுப்பினாக்க மொத்தத்தையும் அவளுக்கே கொடுத்துடறோம்'' என்று அவளுடைய தாயும், தந்தையும் சொல்ல, அன்னபூரணி முகம் மலர்ந்தாள்.

பிள்ளைக்கும், மருமகளுக்கும் மாடியில் தனியிடம் ஏற்பாடு செய்து கொடுத்தாள்.

கலாவதிக்கு காதோரம் இல்லற வாழ்க்கையின் ரகசியங்களைச் சொல்லிக் கொடுத்தாள். பிள்ளையை மிருதுவாக நடந்து கொள்ளும்படி அறிவுறுத்தினாள்.

என்ன நடந்தது என்று விசாரித்துத் தெரிந்து கொண்டாள்.

என்ன நடக்க வேண்டும் என்று மேலும் உபதேசம் செய்தாள்.

கலாவதிக்குப் பிறந்த வீடு மறந்துபோயிற்று. அந்த மூன்று பெண்களோடு கலாவதியும் சேர்ந்துகொண்டாள்.

தன் புருஷன் இன்னும் நல்ல வேலையில் இருந்திருக்கலாம்; இன்னும் கம்பீரமாக இருந்திருக்கலாம் என்று மூன்று மாதம் கழித்து அவளுக்குத் தோன்றியது. தாய்மாமனோ, தகப்பனோ காலையில் வெளியே போனால்



இரவு தூங்குவதற்குத்தான் வீட்டுக்கு வருவார்கள். அதுவரை வெளி உலகத்தில் புகுந்து புறப்பட்டு, விதம்விதமான அனுபவங்களோடும்; காசோடும் வருவார்கள். இரவு சோறு தின்கின்ற நேரம் நிறைய கதை பேசுவார்கள். வெளி உலகம் பற்றிப் பெண்களுக்குச் சொல்லுவார்கள்.

ஆனால், அன்னபூரணியின் மகன் கலாவதியின் புருஷன் அதிகம் பேசாதவனாக இருந்தான். அனுபவம் இல்லாத வனாகவும் இருந்தான்.

# 16

''உங்க பையனை ஒரு நல்ல டாக்டர்கிட்ட காண்பிச்சி, அவனை சரியான பிறகு பள்ளிக்கூடத்துக்கு அனுப்புங்க.''

டீச்சர் சொன்னபோது என்னவென்று தெரியாமல் அன்னபூரணி திகைத்தாள்.

அவளுடைய மகன் ப்ளஸ் டு படிக்கும்போது அவனைப் பற்றிப் புகார் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தது.

விஷமம் செய்பவன் என்றோ, வேடிக்கையாய்ப் பொழுது போக்குகிறான் என்றோ, அதிகம் விளையாட்டுப் புத்தி என்றோ சொல்லவில்லை. இவைகளில் எதுவுமே செய்யாமல் மௌனமாக இருக்கிறான் என்பதுதான் அவர்களின் குற்றச்சாட்டாக இருந்தது.

''படிக்கிறான், இல்லேன்னு சொல்லலை. அம்பது, அறுபது மார்க் வாங்கறான். இன்னும் நல்லா படிக்கணும் அப்படின்னு சொன்ன போது, போதும் அப்படின்னு சொல்றான். என்னடா சொன்ன அப்படின்னு கேட்டபோது,

ஒண்ணுமில்லை அப்படின்னு மழுப்பறான். பையன் படிக்கணுங்கறத பத்தியும் நாங்க முக்கியமா பார்க்கறதில்லை. ஓடி ஆடி ஆரோக்கியமா இருக்கணும்னுதான் நாங்க நினைக்கறோம். ஒரு கேம்கூட ஆடிறதில்லை. ஃபுட்பால் விளையாட அனுப்பினா கொஞ்ச நேரம் நின்னுட்டு புல்தரையில உட்கார்ந்துக்கறான். எதுனா உடம்பு சரியில்லையா அப்படின்னு நாங்களே எங்க பள்ளிக்கூடத்து டாக்டரை விட்டு செக் பண்ணிப்பார்த்தோம். நூறு சதவீதம் உடம்பு சரியா இருக்கு. ஆனா அவன் மனசுல தான் ஏதோ சில சங்கடங்கள் இருக்குன்னு எங்க டாக்டர் சொன்னாரு அதனாலதான் சொல்றோம். ஒரு நல்ல மனோதத்துவ டாக்டரா பார்த்து உங்க புள்ளைய செக்பண்ணி சரி பண்ணிட்டு அப்புறம் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புங்க.''

''விளையாடாட்டி போறான். விட்ருங்களேம்மா. இதுக்கு ஏன் டாக்டரு.''

''நல்லா இருக்கே கதை. இவனால மத்த பசங்க கெட்டுப் போறதுக்கா.''

''மத்த பசங்க கெட்டுப் போகும் படி என் புள்ளை என்னம்மா பண்ணான்.''

அன்னபூரணி பயத்தோடு விசாரித்தாள்.

''ஏண்டா விளையாடறதில்லைன்னு மத்த பசங்க கேட்டிருக்காங்க. விளையாடினாலும் செத்துப் போவேன். நீ விளையாடி என்ன சாதிச்ச. சாவு உனக்கு நிச்சயம். எதுக்கு விளையாடறது அப்படின்னு சொல்றானாம். ஏன் விளையாடக் கூடாதுன்னு விவரமா விளக்கறானாம். இவனைப் பார்த்துட்டு ஆறேழு பசங்க விளையாடாத புல்லு தரையில உட்கார்ந்துட்டானுங்க. தர்ணா பண்ற மாதிரி இருந்தது. அதிகமா விளையாடற பையனை, ஸ்போர்ட்ஸ்



மேனை நீ சீக்கிரம் செத்துடுவ அப்படின்னு பயமுறுத்தி வச்சுட்ட, அந்தப் பையன் ஒரே கதறல். இப்படியா புள்ளைய வளர்க்கறது. இப்படியா பேச வைக்கறது'' என்று டீச்சர் கடுகடுப்பாய் சொன்னாள்.

''எங்க வாத்தியாரோட மனைவி ஒருத்தர் பிரசவத்துல செத்துட்டாங்க. நாங்க எல்லாம் ஓடிப்போய் அழுது கிட்டிருக்கோம்: 'நிம்மதி, இனிமே அவங்களுக்கு ஒரு தொந்தரவும் இல்லை அப்படின்னு சொல்றான். தனம் டிச்சர் சுள்ளு சுள்ளுன்னு வச்சாங்க. 'நீ அடிச்சதுனால் நான் சொன்னது தப்புன்னு ஆயிடாது. நான் சொல்றதை சரின்னு புரிஞ்சுக்கறதுக்கு உனக்கு வயசு பத்தாது அப்படின்னுட்டானாம். அவனைப் பள்ளிக்கூடத்தைவிட்டு அனுப்பிடுங்கன்னு அந்த டீச்சர்தான் ஒரே பிடிவாதமா இருக்காங்க. இல்லைன்னா எழுதிப் போட்ருவேன் மேலிடத்துக்குன்னு சொல்றாங்க.''

ஒரு ஆசிரியர் குற்றப் பத்திரிகையை வாசித்துக் கொண்டிருக்கும்பொழுதே இன்னொரு ஆசிரியர் உள்ளே புகுந்தார்.

''பையன் - நல்ல பையன்தான். எந்த சப்ஜெக்ட் கொடுத்தாலும் நல்லா பேசுவான். நிறைய படிக்கறான்னு நினைக்கிறேன். அமைதியா இருப்பான். அவனால வம்புதும்பு இல்லை. க்ளாஸ்ல பாடத்தைச் சரியா கவனிப்பான். கேள்வி கேட்டா அழகா பதில் சொல்லுவான். ஆனா, என்னவோ பயந்து போன மாதிரி ஹோன்னு உட்கார்ந்துகிட்டிருக்கான். அதான் எனக்குப் புரியலை. எப்போ பிரச்சினை வந்தது தெரியுங்களா. அவன் தனியா உட்கார்ந்தபோது யாரும் அவனைக் கேட்கலை. ஆனா அவனைச் சுத்தி ஆறு பசங்களை வச்சுட்டு, அந்த ஆறு பசங்களும் ஆடாத, கொள்ளாத, படிக்காத திசை திரும்பற

போது தான் பிரச்சினை ஆயிப்போச்சு. இன்னும் நிறைய பசங்களை மாத்திடுவானோ அப்படின்னு பயம் வந்தது. கொஞ்சம் தன்மையா பேசிப் பாருங்க. நான் பேசிப் பார்த்ததுல அவன் சொல்ற எல்லா விஷயங்களும் சரி. என்னா.. அவன் வயசுக்கு சரியில்லை.''

அந்த ஆசிரியர் சொல்லி விட்டுச் சிரித்தார்.

அன்னபூரணி வயிற்றில் புளிகரைந்தது.

வீட்டிற்கு வந்து மகனோடு பேசுவதற்கு முன்பு அவனுக்கு என்ன நடந்திருக்கக்கூடும் என்று அன்னபூரணி அமைதியாகவே யோசித்தாள்.

தந்தையின் மரணம் பாதித்திருக்குமா அல்லது அவரைப் பற்றி ஊர் ஏதாவது சொல்லி இவன் இடிந்து போயிருப்பானா. அவனுக்கு யாரைத் தெரியும், எவரோடு பழக்கம் அதிகம் என்று விசாரிக்கத் துவங்கினாள்.

சிந்தாதிரிப்பேட்டையிலிருந்து தினம் கடற்கரைக்கு நடந்தே போவதாக ஒரு தகவல் கிடைத்தது. வழக்கமாகவே எங்கு போகிறேன் என்று சொல்வதில்லை. ஆனால், ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வெளியே தங்காமல் வீட்டுக்கு வந்து விடுவான். கைகால் கழுவி மௌனமாக அறையில் உட்கார்ந்திருப்பான். அல்லது படுத்துக் கொண்டிருப்பான்.

பிள்ளை துஷ்டத்தனம் இல்லாமல் அமைதியாக இருப்பதாலேயே அவளுக்கு அவனை விசாரிக்க வேண்டுமென்று தோன்றவில்லை. இப்பொழுது நாலுமணிக்கு அவன் கிளம்பியபொழுது ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் அவனைப் பின்தொடர்ந்தாள். உழைப்பாளி சிலையிலிருந்து சற்றுத் தள்ளி செம்மண் பாதையில் போடப்பட்டிருந்த சிமெண்ட் பெஞ்சில் நாலைந்து மத்திய வயது வாலிபர்கள் உட்கார்ந்



திருந்தார்கள். அனேகம் பேர் தாடி வைத்திருந்தார்கள். சுகுமாரன் வயது ஒத்த பள்ளிக்கூடச் சிறுவர்கள் போலிருந்த இளைஞர்கள் அந்த வாலிபர்களைச் சுற்றி உட்கார்ந் திருந்தார்கள். ஏதோ கூட்டம் போலவும் ஒரு பேச்சு தொடர்ந்தது. அவர்களுக்குள் விவாதங்கள் நடந்தன. கேள்விகளுக்குப் பதில்கள் சொல்லப்பட்டன.

எல்லாம் முடித்துவிட்டு அவர்கள் மௌனமாகக் கண்மூடி தியானம் போலும் ஏதோ செய்ய ஆரம்பித்தார்கள். சைக்கிள் ரிக்ஷாவில் அமர்ந்தபடியே சகலமும் அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தியானம் கலைந்து அவர்கள் எழுந்து நின்று ஒருவருக் கொருவர் விடைபெறும் பொருட்டு முகமன் கூறியபோது அவள் உள்ளே புகுந்தாள்.

''என்னப்பா, இவங்ளெல்லாம் யாரு. என்னா செய்யறீங்க. நீ எது செய்தாலும் எங்கிட்ட சொல்லிட்டு செய்வியே. இதைப்பத்தி ஒண்ணுமே சொல்லலையே, ஏம்ப்பா–''

''அம்மா, நான் ஒண்ணும் தப்பா செய்யலைம்மா.''

பிள்ளை சற்றுக் கோபமாகப் பேச ஆரம்பித்தான்.

''நீ தப்பு பண்றேன்னா நான் சொன்னேன். எனக்குத் தெரியாத ஏன் பண்றேன்னுதானே கேட்டேன். என்னா பண்றேன்னுதானே கேட்டேன். ஏன் உனக்கு அவ்ளோ கோபம் வருது.''

''எதுக்கும்மா பின்னாலயே வந்து சைக்கிள் ரிக்ஷாவில உட்கார்ந்து என்னை வேடிக்கை பார்த்துட்டிருக்கே.''

பிள்ளை மறுபடியும் வேகமாய்ப் பேச, அந்த இளைஞர்கள் அவனைச் சமாதானப்படுத்தினார்கள்.

''இதுதான் நீ கற்றுக்கொண்ட லட்சணமா? உன் தாய் கேட்கிற கேள்விக்கு உன்னால் மிருதுவாக பதில் சொல்ல முடியாதா? ஏதோ தவறு செய்தவன்போல நீயும் கூச்சல் போட்டு, எங்களையும் அவமானப்படுத்துகின்ற எண்ணமா. சொல். நீ இங்கு எதற்கு வருகிறாய் என்று சொல். என்ன கற்றுக்கொள்கிறாய் என்று சொல்.''

பிள்ளை அம்மாவை நோக்கித் திரும்பினான். கைகூப்பினான்.

''எங்கும் பரவிய பிரபஞ்ச சக்தியை அறிவதற்காக நான் முயற்சி செய்கிறேன். இந்த இரண்டு பேரும் என்னுடைய குருமார்கள். தங்களுக்குள் இருக்கின்ற ஒளியால் என்னைச் சுத்தப்படுத்தி பிரபஞ்ச விஷயத்தை உணர்த்த முயற்சிக் கிறார்கள்.''

''எதற்கு.''

அன்னபூரணி கூர்மையாக அந்த இளைஞர்களைப் பார்த்துக் கேட்டாள்.

''நம் கண்கள் மாயையால் மறைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாயத்திரையை விலக்கி, உண்மை என்ன என்று பார்ப்பதே நம்முடைய வேலை.''

''இல்லைன்னு நான் சொல்றேன்.''

அன்னபூரணி இடுப்பில் கைவைத்துக் கொண்டு அவர்களை முறைத்துப் பார்த்தாள்.

அந்த இளைஞர்கள் சற்று மிரண்டார்கள்.

''மாயை மறைச்சுக்கிட்டிருக்குன்னா அதுக்குக் காரணம் யாரு. இறைவன். அவரே மறைச்சு வச்சிருக்காருன்னா அதை விலக்கி நீங்க ஏண்டா பார்க்கறீங்க. ஊர்ல இருக்கறவனை



ஏண்டா பார்க்க வைக்கறீங்க. பார்த்துடத்தான் முடியுமா? பீச்சுல உட்கார்ந்து மூச்சுப் பயிற்சி பண்ணிட்டா எல்லாம் தெரிஞ்சுடுமா– இதோ பார், ஆட வேண்டிய வயசுல ஆடணும், பாட வேண்டிய வயசுல பாடணும், ஓட வேண்டிய வயசுல ஓடணும், ஓய வேண்டிய வயசுல ஓயணும். எல்லாத்தையும் விட்டுட்டு பதினெட்டு வயசுப் பையன்கிட்ட எங்கும் நிறைந்திருக்கிற பிரபஞ்ச சக்தியை அறிவதற்கான வழின்னு பேசறியே, அறிவிருக்கா உனக்கு. அப்படி அறியற பையனா இருந்தா எங்க வீட்டுல வந்து பொறந்திருக்க மாட்டாண்டா. எனக்குப் புள்ளையா பொறந்திருக்க மாட்டான்.''

''ஏனம்மா கூச்சல் போடுகிறீர்கள். சாவதற்கு முன்பு என்ன வாழ்க்கை என்று தெரிந்து கொள்வது உத்தமமில்லையா.''

''எதுக்குப்பா உன்னை பூமிக்கு அனுப்பியிருக்காங்க. சாகத் தெரிஞ்சுக்கறதுக்கா. இல்லை வாழத் தெரிஞ்சுக் கறதுக்கு. வாழ்க்கைன்னா என்னன்னு தெரிஞ்சுக்கறதுக்கு. அதைத் தெரிஞ்சுக்காத சாகத்தெரிஞ்சுகிட்டு என்னய்யா புண்ணியம்.''

''வாழ்வது என்றால் என்ன?''

ஒரு இளைஞன் கெட்டிக்காரனாய்ப் பேசுவதுபோல் அன்னபூரணியை நோக்கிக் கேள்வி கேட்டான்.

''உங்க அம்மாவைப் போய்க் கேளு. அவ சொல்லுவா வாழறது என்னான்னு. உனக்கு பாட்டி இருக்காளா, அவளைப் போய்க் கேளு. அவ சொல்லுவா வாழறதுன்னா என்னான்னு. முளைச்சு மூணு இலை விடலை. கேள்வி கேட்கத் தெரிஞ்சா முடிஞ்சி போச்சாடா. முதல்ல பெரியவங்க என்ன பண்றாங்கன்னு பார்க்கக் கத்துக்கடா. ஒரு ஓரமா நின்னு மத்தவங்க வாழ்க்கைய பார்க்கக் கத்துக்கோ.''

''நான் பார்த்தேனே.'' பிள்ளை விறைப்போடு பேசினான்.

''என்ன பார்த்தே.''

அன்னபூரணி அதட்டலாய், கூர்மையாய் அவனைப் பார்த்தாள்.

''எங்கப்பா துடிச்சுத் துடிச்சு செத்துப்போனதைப் பார்த்தேன்.''

''என்னா புரிஞ்சுது.''

''சாவுதான் நிஜம். சாவுதான் கடைசி. சாவுதான் எல்லாம். நீங்க என்ன பண்ணாலும், எப்படியிருந்தாலும் கடைசியில சாவத்தான் போறீங்க.''

''அதுக்காக.'' அன்னபூரணி விடாத பெண் சிங்கம்போல சீறினாள். ''அதுக்காக என்னாடா சொல்ற. பீச் சாங்கரைக்கு வந்து கருவாடா வெய்யில்ல வெந்துட்டா உங்களுக்கு எல்லாம் புரிஞ்சு போயிடுமா. கஷ்டம் இருந்தாதாண்டா வாழ்க்கை. ஒவ்வொரு கஷ்டமா தாண்டித் தாண்டி வரணும். கஷ்டங்கள் வராத இருக்கணும்னா, ஒழுக்கமா இருக்கணும்டா. ஒழுக்கமா இருக்கணும்னா அமைதியா இருக்கணும்னா அடுத்தவங்க மேல நம்பிக்கை இருக்கணும்டா. நல்லவங்க யாருன்னு தெரிஞ்சுகிட்டு, அவங்களை கெட்டியா பிடிச்சுக் கணும்டா. ஐயா, எனக்குத் தெரியலை, சொல்லிக் கொடுன்னு கேட்கணும்டா. எல்லாம் தெரிஞ்சிட்டா மாதிரி இங்கவந்து இடுப்புல கைவச்சு உட்கார்ந்துட்டீங்கன்னா முடியாதுடா. பத்து நாள் எங்கயோ எவன் பிரசங்கமோ கேட்டு பெரிய வாத்தியார் மாதிரி வந்துட்டான். அஞ்சுநாள் நீ இவங்கிட்ட பிரசங்கம் கேட்டு அவனைவிட பெரிய வாத்தியாரா சிந்தாதிரிப் பேட்டையில சுத்திக் கிட்டிருக்கேன்னு தெரியும்டா. இது இல்லை. ஏறு வண்டியில.''



''அம்மா-''

''ஏறுடா வண்டியில...''

''நீங்க போங்கம்மா பின்னால வரேன்.''

''இன்னும் ஒரு நிமிஷம் இங்க நின்னே நான் அசிங்கமா அடிப்பேன். என் முரட்டுத்தனம் உனக்குத் தெரியும். வண்டியில ஏறு.''

அந்த இளைஞர்கள் அவனைச் சமாதானப்படுத்தி வண்டியில் ஏற்றினார்கள்.

அன்னபூரணி மெளனமாய் வண்டியில் உட்கார்ந்து ஒடுங்கிக் கொண்டு வந்தாள். அவளோடு வருவது பிடிக்காமல் நெளிந்தான்.

ஆனால், அன்னபூரணி அவனைப் பற்றி லட்சியம் செய்யவில்லை.

வண்டி திரும்பி மெளண்ட் ரோடு தாண்டி சிந்தாதிரிப் பேட்டைக்குள் நுழைந்தபோது அவள் கண்ணீர் விட்டு மெளனமாய் அழுதாள்.

பிள்ளை லேசாய் கலவரமானான்.

''ஏம்மா அழுவற.'' அவள் தோளில் கைவைத்துக் கேட்டான்.

''அம்மாக்குத் தெரியும், அம்மா சொல்லித் தருவான்னு உனக்குத் தெரியலை இல்ல. உலகத்துல இருக்கற எல்லாப் பிள்ளைகளும் அம்மாமக்கு, அவளுக்கு ஒரு எழவும் தெரியாதுன்னுதானே நினைச்சுக்கிட்டிருக்கீங்க. அம்மாக்குத் தெரியும்டா. சொல்லிக் கொடுப்பவன் தந்தைன்னு எவனோ சொல்லிட்டுப் போயிட்டாண்டா. உங்க அப்பனுக்கே நான் தாண்டா சொல்லிக் கொடுத்தேன். உனக்கு மட்டுமில்லைடா.

உன் பின்னாடி இருக்கே கூட்டம் அது மொத்தத்துக்கும் என்னால சொல்லித் தர முடியும்.''

''சொல்லிக் கிழிச்ச.''

''கிழிக்கலைடா. கிழிக்கவிடலைடா. கிழிக்க விட்டிருந்தா நான் யார்யாரையோ கிழிச்சிருப்பேன். எத்தனையோ விஷயங்களைக் கிழிச்சிருப்பேன். என்னை ஒருமாதிரி மொடமா அடிச்சிப்போட்டாங்க. ஒரு முட்டாள் புருஷனைக் கொடுத்துட்டாங்க. ஆனா, அந்த முட்டாள் புருஷனைப் பார்க்கறபோதே உலகம் என்னான்னு நான் கத்துக்கிட்டேண்டா. இங்க தனியா இருக்கறதுக்காக நாம வரலை. நாலுபேரோட சேர்ந்து இருக்கறதுக்காக வந்திருக்கோம். நாலு பேருக்கு உதவி செய்யறதுக்காக வந்திருக்கோம். யாரெல்லாம் இங்க வருத்தப்படறானோ அவனுடைய வருத்தத்தை நீக்கறதுதான் நம்ம வழி. நம்ம வருத்தத்தை வேற யாராவது நீக்குவாங்க. இதுதாண்டா வேலை.

இந்த இடம் கஷ்டப்படற இடம். வென்னீர் குளம். அதலபாதாள சாக்கடை இங்க ஒரு புழுவுக்கு இன்னொரு புழு உதவி செய்தாதான் ஒரு அளவு சந்தோஷமா இருக்க முடியும். ஒருத்தர் சுமையை இன்னொருத்தர் சுமந்தாதான் ஒரளவு இடம்விட்டு இடம் நகர முடியும். சாவு நிச்சயந்தாண்டா. அதுக்காக எப்பவும் அதைப்பத்தியே நினைச்சுகிட்டிருக்கறதா. சாப்பாடு முக்கியம்தாண்டா. எப்பவும் அதைப்பத்தியே பேசறதா. பொம்பளை அவசியம் தான். ஆனா, பொம்பளை பத்தியே நினைச்சுக்கிட்டிருக்கக்கூடாதுடா. அங்கங்க மாறி கிட்டே போகணும். மனுஷாள் வாழ்க்கையும், தேனீயினுடைய அலைச்சலும் ஒண்ணு. தேனீக்கு ரீங்காரம் வாய்லேர்ந்தா வருது.



இல்லை. அதனோட அலைச்சல்லேர்ந்து வருது. மனுஷன் கிட்டேர்ந்து ரீங்காரம் வரணும்னா அவன் முன்னயும், பின்னயும் அலையணும். மலருக்கு மலர் தாவிப் போகணும். இந்த மலருக்கு மலர் தாவிப்போறதுங்கறதை பொம்பளைக்குப் பொம்பளை மாத்திக்கிறதுன்னு நினைக்கிறது முட்டாள்தனம். இந்த வேலையிலேர்ந்து அந்த வேலை, அந்த வேலை யிலேர்ந்து அந்த வேலை, இப்படி மாத்தி மாத்தி போறது தாண்டா தேனீயினுடைய வேலை.

எந்த தாமரைக் குளத்தைச் சுத்திச் சுத்தி வண்டு வந்துதோ அங்கேயே விழுந்து செத்துப் போகும். அந்தத் தாமரைக்கே உரமாகும். மனுஷாள் வாழ்க்கையும் அப்படித்தான். இடம் மாறிகிட்டே இருக்கணும். மாறுவது இயல்பு. மாறுவதே இந்த வாழ்க்கை. மாறுவதே உலகம். மாறாதது இங்கு எதுவும் இல்லை. மாறாத விஷயம் பற்றி மாறாத நிலையில் தெரிந்துகொள்ளலாம். மாறுவது பற்றி, மாறுகின்ற வாழ்க்கை பற்றி மாறிக்கொண்டே தெரிந்து கொள்ளலாம். நான் சொல்றது புரியலை.''

பிள்ளை சுகுமாரன் மெல்ல அம்மாவின் தோளில் தலை சாய்த்துக் கொண்டான்.

''நான் இனிமே எங்கயும் போகலம்மா. உங்கிட்ட சொல்லாத எங்கயும் போகவே மாட்டேன்.''

வாக்குறுதி கொடுத்தான். அதன் படியே திருமணமாகும் நாள் வரை அம்மாவின் பிள்ளையாய், அவள் அரவணைப்பில் வாழும் குழந்தையாய் இருந்தான்.

அதுவும் ஒரு பிரச்சினைதான்.

உரமாக இல்லாத ஆண்பிள்ளை ஒரு சுமைதான்.

# 17

**உ**னக்கு என்னடா தெரியணும். வாழறது எதுக்காக, வாழ்க்கைன்னா என்ன. அது தானே. அதை வாழ்ந்தவங்களைக் கேளுடா. விவரம் தெரியாத வாலிபப் பசங்ககிட்ட கேட்டா என்னடா தெரியும். வாய்க்கு வந்ததைச் சொல்வான். மூச்சைப்பிடிச்சு உட்கார்றதுனாலயோ, மந்திரஜபம் பண்றதுனாலயோ ஜெயிச்சுட முடியும்னு நீ நினைக்கிறியா. அதுமட்டுமில்லை. அது செய்தா மட்டும் ஜெயிச்சுட முடியாது. ஒரு புத்தி தேவை. ஒரு அமைதியான புத்தி தேவை. எப்பவும் முழிச்சுகிட்டிருக்கற புத்தி தேவை. முடிச்சுக்கறதுக்கு மூச்சு இழுத்து விடறதும், மந்திரம் சொல்றதும் உதவி செய்யும்னு சில பெரியவங்க சொல்லியிருக்காங்க. நிச்சயமா உதவி செய்யும்னு எந்த கேரண்டியும் கிடையாது.''

அன்னபூரணி பிள்ளையை எதிரே உட்காரவைத்துச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தாள்.

பிள்ளை கையைக் கட்டிக் கொண்டு அவள் பேசுவதையே கவனித்துக் கொண்டிருந்தான்.

''இந்த வீடு கட்டினாரே எங்க தாத்தா, அவரு மூச்சும் பிடிச்சதில்லை, மந்திரமும் சொன்னதில்லை. அவருக்குத் தெரிஞ்சது உழைப்பு. அவர்கிட்ட இருந்தது உண்மை. சிந்தாதிரிப்பேட்டை செங்கல் சூளையிலேர்ந்து அறுநூத்தி அம்பது செங்கல் எண்ணி கையெழுத்துப் போட்டு வெள்ளைக்காரன் கொடுப்பான். அதைக் கொண்டுபோய் பரங்கி மலையில கொட்டணும். எண்ணிக் கொடுக்கணும். ஒரு மாட்டு வண்டிக்கு அறுநூத்தி அம்பது. ஒரு நாளைக்கு அறுவது மாட்டு வண்டி போகும். ஒரு செங்கல்கூட திருட்டுப்



போகாதக் கொண்டு வந்து முதலியார் கொட்றாருன்னு தெரிஞ்ச பிறகு அவன் அவர்கிட்ட மரக்கட்டை கொடுக்க ஆரம்பிச்சான். மரக்கட்டையும் திருடுபோகலை. சரியானபடி சர்ச் கட்டறதுக்கு கொண்டு போய் கொடுத்துடறாங்கன்னு தெரிஞ்சபிறகு கன்பவுடர் கொடுத்தான். ஜாடியில போட்டு இறுக்க மூடி மேலமுழுக்க ஊத்தி கொண்டுபோய் பரங்கி மலையில கொடுத்துட்டுவான்னு சொல்லுவான். லாரியில போட்டு பாண்டிச்சேரிக்கு கொடுத்துட்டு வான்னுவான். வேலூருக்கும் திருச்சிக்கும் கொடுத்துட்டு வான்னுவான். அதுக்கு பேரு ஏஜென்ட். என்னா ஏஜென்ட், சாமான்களைக் கொண்டு போய் கொடுக்கற ஏஜென்ட். அதுக்குப் பிறகு, தங்கமும், ரூபா நோட்டும் கொடுக்க ஆரம்பிச்சான். ஒரு தடவைகூட ஒரு தப்பும் பண்ணதில்லை. பத்துநாள் வண்டியில இருப்பாரு. பத்துநாள் வீட்ல இருப்பாரு. ஒரு பத்துநாள் கோட்டையில இருப்பாரு. அந்த உண்மையில, அந்த உழைப்புல சம்பாதிச்சது.

முதல்ல உண்மையாயிரு. கொஞ்சம் கொஞ்சமா உழைக்க கத்துக்கோ. உழைக்கறதுன்னா என்னா. ஊர் முழிச்சுக்கற போது நீயும் முழிச்சுக்கோ. பத்துமணி வரைக்கும் தூங்காத. ராத்திரி ரெண்டு மணி வரைக்கும் ஃபேக்டரியில வேலை செய்துட்டு வந்தவன் காலையில தூங்கலாம். அவங்கூட கார்த்தால எழுந்து பல் தேய்ச்சு காபியைக் குடிச்சு, பேப்பர் படிச்சுட்டு டிபன் சாப்டுட்டு தூங்கினா நல்லது. காலையில ஊர் முழிச்சுக்கிற போது நீயும் முழிச்சுக்கோ. விடிகார்த்தால தூங்கறவன் ஜெயிச்சதா எனக்குத் தெரியலை. எதுனா ஜாதக பலத்துல ஜெயிச்சிருக்கலாம். தொடர்ந்து ஜெயிக்க முடியாதுங்கறது என் அபிப்பிராயம்.

எங்கயும் போய் கூலி வேலை செய்யாத. சொந்த வேலை செய். சுண்டல் விக்கறதா இருந்தாலும் பரவாயில்லை. உன்

கண்டல், உன் பாத்திரம், உன் இஷ்டம் அப்படின்னு இருக்கணும். நீயா போய் யார்கிட்டேயும் பேசாத. அதே சமயத்துல விலகியும் நிக்காத, மத்தவங்களெல்லாம் என்ன பேசறாங்கன்னு உத்து உத்துப்பாரு. அதுக்கொரு அபிப்பிராயம் உனக்குத் தோணுது இல்லை. அதைச் சொல்லாத. ஞாபகம் வச்சுக்கோ. மத்தவங்க என்ன அபிப்பிராயம் சொல்றாங்கன்னு பாரு. அவங்க சொன்ன அபிப்பிராயமும், உனக்குத் தோணின அபிப்பிராயமும் சரியா இருக்கான்னு தனியா உட்கார்ந்து சிந்தி. தனியா உட்கார்ற போது மனசு கற்பனைக்குப் போகும், கனவுக்குப் போகும். அப்படிப் போகாத, இன்னிக்குக் காலையில் என்னா நடந்தது, யார் என்னா பேசினாங்க, அதுக்கென்ன பதில் கிடைச்சுது அப்படின்னு நடந்ததை யோசிக்கறது ஒரு கெட்டிக்காரத்தனம்.

கண்ணு–தனியா என்னடா–எப்பவுமே உன்னைத் தனியா இருக்கச் சொல்லலை. கொஞ்ச நேரமாவது தனியா இருன்னு சொல்றேன். அப்படித் தனியா இருந்தா என்ன ஆவும். யார் யார் என்னனென்ன பேசினாங்க, எப்படிப்பட்ட மனுஷங்க, அவங்க அப்படி பேசறதுக்கு என்ன காரணம்னு புத்தி ஒரு அலசல் அலசும். அதுமட்டுமில்லை. தனியா இருந்தா கோபம் குறையும். அடுத்தது என்னா பண்ணணும் அப்படின்னு யோசனை பண்ணும். அப்போ, நாளைக்கு யார்கிட்ட என்ன பேசணும், எப்படிப் பேசணும்னு முன்னாடியே பாடம் படிச்சுட்டு வந்தாப்போல ஆகும். அதுல லாபம் அதிகம்.

நாளைலேர்ந்து தனியா இரு. காலையில அஞ்சரை மணிக்கு எழுந்திரு. பல் தேய்ச்சுட்டு காபி குடிச்சுட்டு வெளிய நடந்துபோ. திரும்பி வந்து பேப்பர் படி இங்கிலீஷ் பேசறது நம்மூர்ல முக்கியமான விஷயம்டா. ஹிண்டு பேப்பர் வாங்கித்தரேன். தினம் மாடியில் எடுத்துட்டுப் போய் சத்தம்போட்டுப் படி. தப்போ ரைட்டோ, படிக்கப் படிக்க



எப்படி படிக்கறோம்கறது உனக்குப் புரியும். படிக்கும்போது தான் பாஷையோட நெருக்கமாக முடியும். இங்கிலீஷ் மட்டுமில்லைடா. எந்த பாஷையும் கஷ்டமில்லை. நீ நினைச்சன்னா சமஸ்கிருதம்கூட கத்துக்கலாம்.''

அன்னபூரணி வலைவீசத் தெரிந்தவள். யாரையும் வார்த்தையால் மடக்கிப்போட்டு வசப்படுத்தத் தெரிந்தவள்.

பிள்ளையை எளிதாக மடக்கினாள். பிள்ளை அம்மாவை வியப்போடு பார்த்தது. அம்மாவையே ஆசானாக ஏற்றது.

ஆனால், ஆண்கள் உலகம் வேறு. பெண்கள் உலகம் வேறு.

இந்தியா ஐரோப்பா அல்ல. ஐரோப்பாவில் இருக்கின்ற பெண் விடுதலை இந்தியாவில் இல்லை. மெல்ல மெல்ல பெண் விடுதலை வந்து கொண்டிருப்பினும் ஆணாதிக்க சமூகத்தின் கை ஓங்கியிருக்கின்ற இடம்தான் இந்த தேசம். ஆணுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகள் பெண்ணுக்குத் தரப்படவில்லை. கெட்டிக்காரத்தனத்தோடு பெண்ணுக்கு வெளிஉலக அனுபவமும் சேர்ந்தால் அந்தப் பெண் மின்னுகிறாள். பிரகாசமாக வாழ்கிறாள். மற்றவரை வழி நடத்துகிறாள். சில சமயங்கள் ஆண்களை விடவும் மிகத் திறமையாக சகலமும் செய்து முடிக்கிறாள்.

தீபாவளிக்குத் துணி எடுக்க வேண்டும்; பொங்கலுக்கு பேண்ட் சட்டைகளோடு, ஷூ வாங்க வேண்டும் என்று தீர்மானித்தாள்.

சுகுமாரன் அதை அன்னபூரணியோடுதான் போய் வாங்கினான். அம்மா எதைத் தேர்ந்தெடுத்தாளோ அதைத்தான் வாங்கினான். அவனுக்குச் சொல்லிக் கொடுக்க நண்பர்கள் இருந்த போதும், நண்பர்கள்மீது அவனுக்குச் சந்தேகம் இருந்தது. அம்மாவின் மீது நம்பிக்கை இருந்தது.

''ஒரு நல்ல புக் விக்குதுப்பா. பச்சை பச்சையா போட்டிருக்கான். தமிழ் புக்குதான்'' என்று நண்பர்கள் சொன்னபோது அந்த நண்பர்களின் உற்சாகத்திலேயே சுகுமாரன் கிளர்ந்தான்.

''கொடுடா'' என்று ஆத்திரத்தோடு கேட்டான்.

''சும்மா கொடுப்பாங்களா. ஒரு புக்கு இருபது ரூபா'' என்று நண்பன் சொல்ல பளிச்சென்று பாக்கெட்டில் கைவிட்டு இருபது ரூபாய் நோட்டை எடுத்துக் காட்டினான்.

நண்பர்கள் எல்லோரும் படித்த பிறகுதான் அவனிடம் வந்தது. அவன் வீட்டிற்கு எடுத்துவந்தான். பாடப் புத்தகத்திற்கு நடுவில் வைத்துக்கொண்டு படித்தான்.

அவன் நான்கு புத்தகங்களை நண்பர்கள் உதவியோடும், கடைசி இரண்டு புத்தகங்களைத் தானே நேரே போயும் வாங்கினான். புத்தகம் மட்டும் ஒரு காலகட்டத்தில் போதவில்லை.

அந்தப் புத்தகம் படிப்பதில் சண்டை வந்தபோது அவன் வகுப்பிலிருந்து ஒரு கோள்மூட்டி மாணவன் அவன் வீட்டிற்குப் போன்செய்து, அவன் அம்மாவிடம் அவன் கெட்ட புத்தகங்கள் படிக்கிறான்; அவன் வாங்கி எல்லா மாணவர்களுக்கும் கொடுக்கிறான்; அவனிடம் காசு கொடுக்காதீர்கள்; அவன் அறை முழுவதும் நாற்பது கெட்ட புத்தகங்கள் இருக்கின்றன' என்று சொல்லி விட்டான்.

அன்னபூரணி அவன் அறைக்குப் போய்ப் பார்த்தாள். நான்கு புத்தகம் சிக்கியது. ஒரு பக்கம் படித்தவுடனேயே புரிந்துவிட்டது. அன்னபூரணி அதிர்ந்து போனாள்.

விசாலாட்சியிடம் உட்கார்ந்து பேசினாள். விசாலாட்சி அவளைப் பதட்டப்பட வேண்டாம். என்று அமைதிப் படுத்தினாள்.



''நான் பாதி புக்கு படிச்சேண்டி. ஒரு மாதிரியா இருக்கு. எல்லாம் எழுதிட்டான்.''

திலகவதி கவலையோடு சொன்னாள்.

''சன்னியாசியா போயிடுவானோன்னு மடக்கிக் கொண்டுவந்தா சண்டாளனா போறான். சண்டாளனா போறதுக்கு சன்னியாசியா போறது எவ்வளவோ தேவலாம். ஆனா, இவனைக் கொண்டுபோய் சரியான சன்னியாசிகிட்ட கொடுக்கணும். என்ன செய்யறது.''

யோசித்தாள்.

சிந்தாதிரிப்பேட்டையிலிருந்த பள்ளிக்கூடத்தை மாற்றினாள். மயிலாப்பூரிலுள்ள பள்ளிக்கூடத்தில் கொண்டு போய் அவனைச் சேர்த்தாள்.

பள்ளிக்கூடம் புதியது என்பதால் ஒரு வகுப்பில் இருபது மாணாக்கர்களே இருந்தார்கள். சிந்தாதிரிப்பேட்டை இங்கிலீஷ் மீடியத்திற்கும், மயிலாப்பூர் இங்கிலீஷ் மீடியத்திற்கும் மிகப்பெரிய வித்தியாசங்கள் இருந்தன. அவன் ஆரம்பத்தில் மிரண்டான். மெல்ல மெல்ல பழகிக்கொண்டான்.

அவனுக்கு நல்ல சைக்கிள் வாங்கிக் கொடுத்தாள். ப்ளஸ் ஒன் படிக்கிறபொழுது ஸ்கூட்டர் வாங்கிக் கொடுத்தாள். கூடப்படிக்கிற பையன்கள் யார், அவர்கள் பெற்றோர்கள் என்ன என்பதையெல்லாம் விசாரித்துத் தெரிந்துகொண்டாள். அந்தப் பெற்றோர்களோடு டெலிபோனில் பேசினாள்.

''நம்ம வீடு பெருசா இருக்குங்க. பையன்களை அனுப்புங்க. நீங்களும் வந்து பாருங்க'' என்று சொல்ல அந்தப் பெற்றோர்கள் ஒருமுறை வந்து பார்த்துவிட்டு பையன்களை அங்கு படிக்க அனுப்பினார்கள். ஆறு பையன்கள் ஒன்றாகச் சேர்ந்தார்கள். அவனோடு படித்தார்கள்.

வெளியூரில் ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்ற ஒருவர் பையன்களுக்குப் பாடம் சொல்லித்தருகிறேன் என்று வேறு ஒரு பெற்றோர் மூலம் வர அவரையும் உள்ளே வரவழைத்தார்கள். ஆளுக்கு இருநூறு ரூபாய் என்று பேசி மூன்றுமாதம் அவரிடம் டியுஷன் கற்றுக்கொள்வதாய் முடிவாயிற்று. மறுபடியும் தனக்கொரு உத்தியோகம் கிடைத்த சந்தோஷத்தில், இது பெரிதாக வளரும் என்ற நம்பிக்கையில் அவர் மிகக்கவனமாக மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தார்.

பரீட்சையை மிகக் கவனமாகப் பையன்கள் எழுதினார்கள். பரீட்சை முடித்துவிட்டு அதே பையன்களோடு அவன் கிழவரின் துணையோடு கன்னியாகுமரி வரை பயணம் செய்துவிட்டு திரும்பி வந்தான். விதம்விதமான கதை சொன்னான். நிறைய பிரசாதங்கள் கொடுத்தான். ரிசல்ட் வருவதற்கு முன்பு தினத்தந்தியில் அவனுடைய பெயர் வந்தது. கணிதத்திலும், தமிழிலும் அவன் நல்ல மதிப்பெண்கள் வாங்கியிருந்தான். தொடர்ந்து பி.காம். படிக்க ஆசைப்பட்டான். பி.காம். படிப்பும் மயிலாப்பூர் பக்கம் இருக்கின்ற காலேஜிலேயே நடந்தது.

ஸ்கூட்டரை விற்றுவிட்டு மோட்டார் சைக்கிள் வாங்கினான்.

கல்லூரியில் பாடினான். ஆடினான். ஓவியம் வரைந்தான்.

சினிமா எடுக்க முயற்சி செய்தான். அது சரிவராது என்று பின் வாங்கினான். பிறகு கம்ப்யூட்டர் படித்தான். எம்.காம். தபாலில் படித்தான்.

அதிகம் படித்ததாலோ என்னவோ அதிகம் மௌனமாக இருந்தான்.

''எதுனா வேலைக்குப் போலாமா.''



''போகணும்னு சொன்னா போறேன். வேணாம்னு சொன்னா வீட்டோட இருக்கேன்.''

''அது எப்படி வேணாம்னு நான் சொல்லமுடியும். புள்ளை என்ன பண்றான்னா இன்னது பண்றான்னு சொல்ல வேணாமா.''

''ஆமாம். சொல்லணும். அதுக்குத் தான் வேலைக்குப் போகணுமில்லை. போறேன்'' என்று விட்டேத்தியாய் பதில் சொன்னான். அவன் யார் என்பது தொலைக்காட்சி நிலையம் ஒன்றிற்கு எய்ட்ஸ் பற்றி அளித்த பேட்டியில் அவளுக்குப் புரிந்து போயிற்று.

''எய்ட்ஸ் பத்தி எனக்கு நல்லா தெரியுங்க.'' சாதாரணமாகப் பேச ஆரம்பித்தான்.

படித்திருப்பானோ என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்க. ''எங்கப்பா எய்ட்ஸ்லதாங்க செத்துப் போனாரு.'' அதையும் சாதாரணமாகச் சொன்னான்.

அன்னபூரணி அதிர்ந்துபோனாள்.

# 18

நாலுபேருக்கு நடுவே சாதாரணமாக உட்கார்ந்திருந்தவனை கேமரா முக்கியமாகக் காட்ட ஆரம்பித்தது.

சுகுமாரன் எந்தப் பதட்டமுமில்லாமல் சாதாரணமாகக் கேள்வி கேட்டவரைப் பார்த்து நின்றான். கேள்வி கேட்டவருக்கு அதீதமான தர்ம சங்கடம் ஏற்பட்டதை அவன் முகம் காட்டியது.

''அப்பாவுக்கா எய்ட்ஸ்?''

அவர் அழுத்தம் திருத்தமாகக் கேட்டார்.

''ஆமாங்க.'' அதேவிதமாக சுகுமாரன் பதில் சொன்னான்.

''எதனால?''

அவர் தொடர்ந்து கேட்டார்.

''கெட்ட சகவாசங்க.''

அவன், பளிச்சென்று கேள்வி முடிந்தவுடனேயே பதில் சொன்னான்.

கூட இருந்த நாலுபேரும் புறக்கணிக்கப்பட்டார்கள்.

கேமரா அவனை அருகே வந்து கவ்விக்கொண்டது.

''இதைச் சொல்றதுக்கு உங்களுக்கு சங்கடமா...ஸாரி, வெட்கமா இல்லையா.''

''வெட்கப்பட்டு, வெட்கப்பட்டு தாங்க ஊர் முழுக்க எய்ட்ஸ் பரவிடுச்சு. இந்த நோயை நாம ஒழிக்கணும்னா இது வந்தது குறித்து உடனடியா தெரிஞ்சுக்கணும். இதுக்கு மூலகாரணம் யாரோ, அவங்ககிட்ட போய் 'உன்னால வந்தது. நீயும் ஆஸ்பத்திரிக்குப் போய் வைத்தியம் பார்த்துக்கோ' அப்படின்னு சொல்லணும். இந்த சமூகத்துலேர்ந்து அவங்களைத் தனியா பிரிச்சுவைக்கணும் அப்படி தனியா பிரிச்சுவைச்சு சரியா பாதுகாக்கணும். மனசை ஆரோக்கியமா வச்சுக்கணும்.''

''உங்கப்பாக்கு எய்ட்ஸ் வந்த போது நீங்க அந்த மாதிரி தனியா பிரிச்சு வச்சீங்களா.''

''ஆமாம்.''

''அவருக்கு ஆதரவா இருந்தீங்களா.''



''எங்க தாயார் ரொம்ப ஆதரவா இருந்தாங்க.''

''உங்க தாயாருக்கு... எந்த நோயும் இல்லையே...''

சங்கடப்பட்டு கேள்வி கேட்பவர் பேச, ''இல்லீங்க. அவங்க ரத்தப் பரிசோதனை பண்ணிட்டாங்க. ஏன், எங்க வீட்ல எல்லாருமே வேற எதன் மூலமாவது வந்திருக்குமோன்னு சந்தேகப்பட்டு ரத்தப்பரிசோதனை பண்ணிக்கிட்டோம். யாருக்கும் எந்தத் தொந்தரவும் இல்லை. அப்பா மட்டும் தான் அவஸ்தைப்பட்டார்.''

''என்ன மாதிரியான அவஸ்தை.''

பேட்டி திசை திரும்பியது.

அவன் அப்பாவின் அவஸ்தைகளைப் பட்டியலிட ஆரம்பித்தான். மெல்ல மெல்ல அவர் உருக்குலைந்ததை விவரித்தான்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த மற்ற எல்லோருமே மௌனமாக இருக்க, அதிகம் பேசாது இருக்க, இவன் மட்டும் பேசினான்.

''உங்களுக்கு வருத்தமா இல்லையா உங்க அப்பாவுக்கு இப்படிப்பட்ட ஒரு தண்டனை கிடைச்சுதே. இதுபத்தி உங்களுக்கு வேதனையா இல்லையா.''

''இருக்குங்க. தண்டனைன்னு நீங்களே சொல்லிட்டீங்க. தப்பு பண்ணவங்களுக்கு தண்டனை கிடைச்சுத்தான் ஆகணும். அவர் பண்ண தப்புக்குக் கிடைச்ச தண்டனை இது. இந்தத் தப்பு பண்ணாத இருக்கணும்னு எச்சரிக்கையாதான், மத்தவங்களுக்கு ஒரு பயமுறுத்தலாதான் இந்தத் தண்டனை நம்ப உலகுக்குக் கிடைச்சிருக்கு. அதனாலதான் நான் இதை மறைச்சு வைக்காம வெளிப்படையா ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில நின்னு லட்சோப லட்சம் பேருக்கு சொல்றேன்.

ஜாக்கிரதையா இருங்க. தப்பு பண்ணாதீங்க.'' அவன் சொல்லி முடித்ததும் பேட்டிக்கு வந்திருந்த மற்ற பேரும் கைதட்டினார்கள்.

''எங்க அப்பனுக்கு எய்ட்ஸுன்னு எழுதி நெத்தியில ஒட்டிக் கோயேன்.''

விசாலாட்சி ஆங்காரமாகக் கத்தினாள்.

''நீ பெரிய யோக்கியன், உத்தமன் மாதிரி சொல்லிட்ட. நீ எங்க சொந்தக்காரன்னு தெருவுல போறவனுக்குத் தெரியாதா. உங்கம்மா கீழ இறங்கினா, 'என்னா உன் புருஷனுக்கு எய்ட்ஸாமே'ன்னு சிந்தாதிரிப்பேட்டையில கேட்க மாட்டாங்களா. அவளென்ன பண்ணுவா. அவளுக்கு அவமானம் இல்லை. அவளுக்கு அசிங்கமில்லை.''

திலகவதியும், விசாலாட்சியும் கத்த சுகுமாரன் மௌனமாக இருந்தான்.

அன்னபூரணி தலையிட்டாள். ''அவரு எப்படி செத்துப் போனாருன்னு சிந்தாதிரிப்பேட்டை முழுக்க தெரியும். நீங்க ஒண்ணும் சிந்தாதிரிப் பேட்டை தாண்டிப் போறதில்லை. அவன் சொல்றதுல எனக்கு ஒண்ணும் வெட்கமில்லை. அவன் சொன்னா மாதிரி இந்த மூடி மூடி வச்சு, மறைச்சு வச்சு பலபேர் இதுகிட்ட அவஸ்தைப் படறதை விட இது சம்பந்தம் உள்ளவங்க வெளிப்படையா வந்து சொல்றதும், அதனோட காரணத்தைக் கண்டு பிடிக்கறதும் ரொம்ப முக்கியம். பலபேருக்கு வழிகாட்டியா சுகுமாரன் இருந்திருக்கான்றது எனக்கு சந்தோஷமா இருந்தது.''

அன்னபூரணி நிதானமாகப் பேச சுகுமாரனுக்கு அந்த வீட்டின் பெண்களுடைய மனோநிலைமை புரிந்தது. அவன் எழுந்து நின்று மன்னிப்பு கேட்டான். அன்னபூரணி அவன் தலையைத் தடவிவிட்டு அணைத்துக் கொண்டாள்.



''எங்கயோ ஒரு நல்லத்தனம் உங்கிட்ட இருக்கு. அந்த நல்லத்தனம் மட்டும் இருந்தா போதாது. கொஞ்சம் வேகம் வேணும். வேகம் இருக்கற நிறைய பேர்கிட்ட கெட்ட குணமும், திமிரும் இருக்கும். உங்கிட்ட திமிரும் இல்லை. வேகமும் இல்லை. திமிர் வந்தாலும் பரவாயில்லைடா, வேகமா இருக்கணும். நீ ரொம்ப மிருதுவா இருக்க. போ போய் எங்கனா வேலை செய். வேலையில ஈடுபடறபோது நல்லவங்க, கெட்டவங்க எல்லாரையும் உத்துப்பார். வீட்டோட இருந்தா உலகம் தெரியாதுடி கண்ணு. போ. ஏதாவது வேலைக்குப்போ.''

அவனுக்கு லாரி பார்சல் ஆபீஸில் முதல் வேலை கிடைத்தது.

மாலை ஆறிலிருந்து ஒன்பது வரைதான் வேலை இருக்கும். மூன்று லாரி லோடுக்கு சீட்டு எழுத வேண்டும். மற்ற நேரங்களில் சும்மா இருக்கவேண்டும். இரண்டாயிரம் ரூபாய் சம்பளம். ஆனால், இரண்டாயிரம் ரூபாய் சம்பளத்திற்காக மோட்டார் சைக்கிளில் வருகின்ற ஒரு குமாஸ்தாவை அந்த லாரிக் கம்பெனி அப்பொழுதுதான் முதன் முதலாகப் பார்த்தது.

மத்தியானம் முட்டை பிரியாணியும், பிற்பகலில் சமோசா ஆம்லெட்டும் சாப்பிடுகிற சௌகரியத்தைக் கண்டு வியந்தது. அவனை முதலாளி என்று கூப்பிடத் துவங்கியது. வெளி வேலைகளுக்குப் போக அவன் மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்திக்கொண்டது.

அவன் டீ குடிக்கப் போகும் போது ஆறேழு பேர் ஒட்டிக் கொண்டார்கள். எல்லோருக்கும் டீ வாங்கிக் கொடுத்தான். பசிச்சா இன்னொரு டீ சாப்பிடுங்க என்று அதிகம் பசிக்கிறவருக்கு கூடவே இன்னொரு டீயும் வாங்கிக்

கொடுத்தான். பிஸ்கெட் பாட்டிலைத் திறந்து பிஸ்கெட்டை எல்லோருக்கும் வினியோகம் செய்தான்.

ஒருமுறை டீக்கடைக்குப் போய் திரும்பி வந்தால் இருபத்தைந்து ரூபாய், முப்பது ரூபாய் செலவாயிற்று.

அம்மா விசாரித்தபோது, ''எனக்கு லாரிக் கம்பெனியில் ஒரு வேலையும் இல்லைம்மா. அங்க கத்துக்கறதுக்கு ஒண்ணும் இல்லை. ஆனா, கத்தி இருக்கிற மனுஷாள்கிட்ட கத்துக்கறேன். ரெண்டு தடவை மதுரைக்குப் போயிட்டு வந்துட்டேன் லாரியில. வழி முழுக்க தப்பான பொண்ணுங்கதான்.''

''ஐய்யய்யோ...'' அம்மா கத்தினாள்.

''எனக்கு அப்பா முகம் ஞாபகம் வந்ததும்மா. டிரைவர்கிட்டேயும், க்ளீனர்கிட்டேயும் ஜாக்கிரதையா இருங்கன்னு சொன்னேன். மதுரையில ரெண்டு நாள் தங்கியிருந்தேம்மா. மதுரை ரொம்ப நல்லா இருக்கு. மதுரைக்கு அந்தப் பக்கம் நிறைய கிராமம் இருக்கு. எல்லா கிராமத்துலேயும் பணக்கார ஆளுங்க இருக்காங்க. காசு புரளுது. அவங்க எல்லாருமே மதுரைக்கு வந்து செலவு பண்றாங்க. எதுவோ ஒரு பழைய படம் பார்த்தோம். பக்கத்து சீட்ல அந்தப் படத்தைக் கொண்டாந்து போடற டிஸ்டிரிபியூட்டர் இருந்தாரு. மதுரையபத்தி விலாவாரியா சொன்னாரு. சேலத்துலயும், மதுரையிலயும் எல்லாப்படமும் நல்லா ஓடுமாம். அதுதான் பெரிய பொழுதுபோக்காம். அதனால, பஸ் நல்லா ஓடுது. ஹோட்டல் இன்னும் நல்லா ஓடுது. துணிமணிகளும் நல்லா போகுது. பத்து தடவை மதுரைக்கு படம் பார்க்கறதுக்கு வந்ததுனால எந்தக் கடையில என்ன கிடைக்கும் அப்படிங்கறது ஒரு அளவுக்குத் தெரியுது. படம் பார்த்துட்டு சாமான் வாங்கிகிட்டு போறாங்க. அதனால மதுரையில என்னா வேணாலும் விக்கலாம். சாமர்த்தியமா விக்கணும்.''



''சரி. உனக்கு அந்த சாமர்த்தியம் வரலையே.''

''நீதானே வேடிக்கை பாருன்னு சொன்ன. அதனால வேடிக்கை பார்த்துட்டிருப்பேன்.''

''எத்தனை நாள்டா பார்ப்ப.''

''தெரியலைம்மா. இன்னும் கொஞ்ச நாள் நான் வெறுமனே வேடிக்கை பார்க்கலாம்னு நினைக்கறேன். நான் இப்பவே சம்பாதிச்சு என்ன ஆகணும்.''

''ஒண்ணும் ஆகவேண்டாம்.''

அன்னபூரணி பதில் சொல்ல, அவன் ஆந்திரா பக்கம் போனான்.

நல்ல அரிசியும், துவரம் பருப்பும் வாங்கிவந்தான். அரைமூட்டை வெங்காயம் எடுத்து வந்தான்.

அந்த லாரிக் கம்பெனி ஓனருக்கு ஒரு பிரச்சினை வந்தது. கள்ளக்கடத்தல் ஆட்களுக்கு வண்டி ஓட்ட, அந்தப் பொருட்களைத் தேடி போலீஸ் வந்தது. போலீஸ் வரப் போகிறது என்று தெரிந்தவுடனே அவர் வேறொரு வேனில் ஆறெழு பெட்டிகளை எடுத்துக் கொண்டு போய், ஊர்விட்டு வெளியே நிற்கச் சொல்ல, அந்த வேனை போலீஸ் தேட, சுகுமாரன் தலையிட்டு அந்தப் பெட்டிகளைத் தன் வீட்டில் இறக்கி வைத்து வேனை வெளியூருக்கு அனுப்பிவிட்டான். வேன் வெளியூரில் பிடிபட்டது. சரக்குகளும் பிடிபட்டு விட்டது என்று முதலாளி நினைத்துக் கொண்டிருக்க... ''இல்லை, நான் இறக்கி வைத்து விட்டேன். என் வீட்டில் பத்திரமாக வைத்திருக்கிறேன்'' என்று சுகுமாரன் சொன்னான்.

''ஏன் என்னிடம் சொல்லவில்லை'' என்று முதலாளி சீற, ''உங்களுக்கு அருகே யாரோ போட்டுக் கொடுக்கிறார்கள். யாரோ போலீசுக்குத் தகவல் தெரிவிக்கிறார்கள். அதனால்

தான் உங்களுக்குத் தெரியாமலேயே இதைச் செய்தேன்'' என்று சொல்ல, அவர் தனக்கு நெருக்கமாக இருந்த ஒரு பெண்மீது சந்தேகப்பட்டு அவளை அடித்து உதைத்து விவரம் கேட்க அவள் காட்டிக்கொடுத்தது தெரிந்தது.

சுகுமாரன் உதவியால் பெட்டிகள் பிழைத்தன. கள்ளக் கடத்தல்காரர்கள் மிக மரியாதையாக முதலாளியை நடத்தினார்கள். கொண்டாடினார்கள். சொன்னதுக்கு மேலும் காசு கொடுத்தார்கள்.

முதலாளி ஒரே வாரத்தில் பலமானார். சுகுமாரனைக் கட்டித் தழுவிக்கொண்டார்.

சுகுமாரனுக்கு மிகப்பெரிய திறமை ஏதுமில்லை. ஆனால், அதிர்ஷ்டம் இருந்தது. அப்பாவை இழந்தபிறகும், அம்மா அப்பாவாக இருந்ததால், அவள் ஆதரவால் வளர முடிந்தது. போக வர ஒரு வாகனம், கையில் கொஞ்சம் காசு, நல்ல உடைகள், நிறைய படிப்பு, உற்றுப் பார்க்கிற குணம் என்றெல்லாம் இருந்ததால் அவனால் எதையும் அனுபவிக்க முடிந்தது.

ஒரு சோதனைச் சாலையில் ஒரு லாரியை மடக்கி விட்டார்கள் என்று சொல்லி மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு முதலாளியும், இவனும் அந்த சோதனைச் சாலைக்குப் போக இவர்களையும் தூக்கி போலீசுக்குக் கொண்டுபோய் அந்த சோதனைச்சாலை ஆட்கள் புகார் கொடுத்தார்கள். அன்று இரவே இவர்கள் லாக்கப்பில் அடைக்கப் பட்டார்கள்.

முதலாளி மிகவும் பதறிப் போனார். ஆனால் சுகுமாரன் லாக்கப்பிலும் உட்கார்ந்து கொண்டு உள்ளுக்குள்ளே



ஏற்கனவே கைதாகி இருந்தவர்களோடு பேசிக் கொண்டிருந்தான். போலீஸ்காரரிடம் நூறு ரூபாய் கொடுத்து ''நல்ல சாப்பாடு வாங்கிட்டு வாங்க. மிச்சத்தை நீங்களே எடுத்துக் கோங்க'' என்று சொன்னான்.

சாப்பாடு போக மீதி காசை போலீஸ் எடுத்துக்கொண்டு சாப்பாட்டை அவர்களுக்கு வராண்டாவில் உட்கார வைத்துப் பரிமாறியது.

''தப்பிச்சு போயிட்டீங்கன்னா ரொம்ப கஷ்டமாயிடும்'' என்று போலீஸ்காரர் பயப்பட ''நாங்க ஏங்க போறோம், எதுக்கு போறோம். தப்பிச்சு போனான கேஸ் பெருசாகும்னு தெரியாதா?'' என்று அவர்கள் சமாதானப்படுத்தினார்கள்.

மின்விசிறிக்குக் கீழே அயர்ந்து படுத்துத் தூங்கினார்கள்.

மறுநாள் காலை கொடுக்க வேண்டியதைக் கொடுத்துபேச வேண்டிய விதமாகப் பேசி, கட்ட வேண்டிய அபராதத்தைக் கட்டி அவர்கள் லாரியை விடுவித்துக் கொண்டு வெளியே வந்தார்கள். வீடு சகலமும் கேட்டு வியந்தது.

அவன் முதலாளி மேலும் நெருக்கமானார்.

ஆனால், சுகுமாரனுக்கு அந்த வேலை புளித்துப் போயிற்று.

ஹார்பருக்கு அடிக்கடி வண்டி கேட்கின்ற ஒரு பார்ட்டியோடு உட்கார்ந்து பேச, 'எங்களோட வேலைக்கு வந்துடேன்' என்று அவர்கள் கேட்க, அவன் கப்பலிலிருந்து சரக்கு ஏற்றும், சரக்கு இறக்கும் கம்பெனிக்குப் போய்ச் சேர்ந்தான்.

ஒருவாரம் கழித்தே அன்னபூரணியிடம் வேலை மாறியதைச் சொன்னான்.

''என்னடா அது, தடுக்தடுக்குனு மாத்திகிட்டே இருக்க. சம்பளம் வராதேடா.''

''சம்பளம் முக்கியமா. வேலை கத்துக்கறது முக்கியமா'' என்று அம்மாவைக் கேட்டான்.

''சம்பளம் முக்கியமில்லை தான். இருந்தாலும் நான் சம்பாதிக்கறேன்னு ஒரு ஆம்பளை நெஞ்சு நிமிர்த்த வேணாமா.''

''நான் நிறைய சம்பாதிக்கறேன்மா. நான் என்ன சம்பாதிக்கறேன்னு உனக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். நிறைய அனுபவம் சம்பாதிக்கறேன். அது ரொம்ப முக்கியம்.''

ஒரு கம்பெனிக்கு பெரிய சரக்கு இருக்கிறது என்று கேள்விப்பட்டு, அந்தக் கப்பல் ஏஜென்ட் அவனோடு அந்தக் கம்பெனிக்குப் போக, உள்ளுக்குள் உட்கார்ந்து பேச, கம்பெனியின் உள்ளுக்குள் இருந்தவன் வெளியே வந்து, அங்கிருக்கிற குமாஸ்தாக்களோடு ''வெளி ஆளுக்குக் கொடுக்கலாமா, வேண்டாமா. என்னென்ன கேட்கலாம், என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்'' என்று விசாரிக்க, அதை மொத்தமும் ஏதும் அறியாதவன்போல் சுகுமாரன் கேட்டுக்கொண்டிருந்தான்.

வெளியே போய் நாலு கடை தள்ளி உள்ளுக்குள் இருந்த முதலாளியிடம் செல்போனில் பேசினான். என்ன வெளியே பேசிக் கொண்டார்கள் என்பதை அவருக்குத் தெரிவித்தான்.

அந்தக் கப்பல் ஏஜென்ட் பரவசமானார். அவன் சொல்லிக் கொடுத்தபடியே பேசினார்.

ஆர்டர் கைமேல் லட்டு போல் விழுந்தது.

# 19

சுகுமாரன் கப்பலுக்குள் ஏறி இறங்கியும், கஸ்டம்ஸ் அதிகாரிகளோடு பேசிப் பழகியும், சில அடிப்படையான விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் முயற்சி செய்தான்.

அங்கேயும் காலை பதினொரு மணிக்கே போனான். இரவு ஏழு, எட்டு மணிக்குத் திரும்பினான்.

காலையில் அவனால் எழுந்திருக்க முடியவேயில்லை. எட்டு, எட்டேகால் வரை தூங்கிய பிறகு தான் அது தூக்கமாகவே இருந்தது. ஆறு மணிக்கு எழும்பினால் உடம்பு மறுபடியும் பத்து மணிக்கு தூக்கம் வந்தது. ஒன்பது மணிவரை காலை தூங்கிவிட்டால் பிறகு இரவு முழுவதும் அவனால் விழித்திருக்க முடியும். அவனுடைய மூளை வாகு, உடம்பின் கட்டமைப்பு அப்படியிருந்தது. அந்தப் பழக்கத்திலிருந்து அவனால் மீளவே முடியவில்லை.

ஆனால், அதிர்ஷ்டவசமாக கப்பல் ஏஜன்ட்டும் இந்தத் தாமதமான வருகைக்குச் சரி என்று சொல்ல, வாழ்க்கை சௌகரியமாக நகர்ந்தது.

''இந்தியாவுக்குள்ள அன்னியப் பொருட்கள் வரக்கூடாதுன்னு இனிமேல் இருக்க முடியாது. ஊரோட, உலகத்தோட நாம வளரணும்னா எல்லாப் பொருளும், எல்லா இடத்துலயும் கிடைச்சாகணும். இல்லைன்னா குப்பை கொட்ட முடியாது.''

கப்பல் ஏஜன்ட் விவரமாய் உலகப் பொருளாதாரம் பற்றி விவரிக்க, அவன் அசையாது கேட்டுக் கொண்டான்.

''ஏன் நம்ம பொருளாதாரம் தப்பா இருக்கு.''

பணப்புழக்கம் இல்லை.

ஏன் பணப்புழக்கம் இல்லை.

துட்டு இருக்கறவன் அதை வெளியவிட பயப்படறான்.

ஏன் பயப்படறான்.

ஏகப்பட்ட இன்கம்டாக்ஸ், கமர்ஷியல் டாக்ஸ் பிராப்ளம். இவ்வளவு டாக்ஸ் போட்டு இத்தனை இடுக்கிப்பிடி போட்டா யாராலயும் வியாபாரம் பண்ண முடியாது. நிறைய பணம் வெச்சுருக்கறவன் தொழில்ல துட்டு போடணும். தொழில்ல துட்டு போடணும்னா அதிகமா போட்டுக் குடையாத, கேள்வி கேட்காத இருக்கணும். இத்தனை டாக்ஸ் டபாய்க்கிறான்னு அவனைப் போட்டு அழுத்தினா அவன் துட்டு விடமாட்டான். அவன் துட்டு விடலைன்னா யாருக்கும் சம்பளம் கிடைக்காது. எல்லாருக்கும் நிறைய சம்பளம் கிடைச்சு, எல்லாரும் டாக்ஸ் கட்டும்படியானா அது நல்லாயிருக்கும். அதனால ஒருத்தனைத் தளர விடறதுதான் நல்லது.'' என்று அவன் சொல்ல சுகுமாரன் அதை மனதில் குறித்துக் கொண்டான்.

''பணம் கொடுக்கறதுக்கு ஆள்ரெடியா இருக்குப்பா. நிறைய பேர் கிட்ட காசு இருக்கு. ஆனா, நீ திருப்பிக் கொடுப்பியாங்கற நம்பிக்கை அவனுக்கு வரணும்.

ஒரு தேசத்து பொருளாதாரம் வளரணும்னா சிறுதொழில் வளரணும். சிறுதொழில் வளரணும்னா அவனுக்கு காசு ஈஸியா கிடைக்கணும். சிறுதொழில்னா என்னா, தேங்கா, மாங்கா, பட்டாணி சுண்டல் லேர்ந்து, ரப்பர் இண்டஸ்ட்ரீஸ் வரைக்கும் சிறுதொழில்தான். பிளாஸ்டிக் பைப் பண்றவன், ஹோஸ் பைப் பண்றவன், வாட்டர் பாட்டில் பண்றவன், நிலைக் கண்ணாடி பண்றவன் எல்லாருமே சிறுதொழில் பண்றவங்கதான். போல்ட், நட்டுன்னு இன்னும் ஏகப்பட்ட விஷயங்கள் இருக்கு. மருந்துகூட சிறுதொழில்தான்.



கடன் எப்போ கொடுக்க முடியும். சிறுதொழில் பண்ணி அது வியாபாரமாச்சுன்னா. எப்போ வியாபாரம் ஆகும். ஜனங்களுக்கு வாங்கற சக்தி இருந்துதுன்னா. ஜனங்களுக்கு வாங்கற சக்தி எப்போ வரும். மாசம் தவறாத சம்பளம் கிடைச்சுதுன்னா. மாசம் தவறாத சம்பளம் எப்போ கிடைக்கும். இந்த மாதிரி சிறுதொழில் அதிகமா வளர்ந்தால் கிடைக்கும்.

கடன் வாங்கி ஜனம் வளரணும். கடன் வாங்காம யாருமே வளர முடியாது. இவன் காசு அவன் கிட்ட போய், அவன் காசு இவன்கிட்ட போறதுக்குப் பேர் பொருளாதாரம். இது ஒரு சுத்து வரும்'' என்று அந்தக் கப்பல் ஏஜன்ட் விளக்கிச் சொல்ல, சுகுமாரன் வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

அவனுக்கு உலகத்தின் சூட்சுமங்கள் பலதும் பிடிபட்டன. ஆனால், சம்பாத்தியம் மிகமிகச் சாதாரணமாகவே இருந்தது.

திருமணம் ஆனபிறகும் அவனுக்குச் சம்பாதிப்பதில் ஈடுபாடு இல்லாததால் அன்னபூரணிக்குக் கவலை வந்தது.

இதை கலாவதியின் தாய்மாமன் சுட்டிக் காட்டியபோது இன்னும் கவலை அதிகரித்தது.

''எதுனா ஒரு வேலை செய்தாதாம்மா நல்லாயிருக்கும். இல்லைன்னா, நான் ஒரு வேலை வாங்கித் தரட்டுங்களா. அது ஒண்ணும் எனக்குக் கஷ்டமில்லை'' என்று சொல்ல, சுகுமாரன், வேண்டாமென்று சொல்லி விட்டான்.

''நானா வேலை தேடிக்கிட்டா, நானா வேலையை உதறிட்டு வர முடியும். அவர் வேலை வாங்கிக் கொடுத்தார்னா, நான் உதறிட்டு வரும்பொழுது அவரைப் பத்தியோசனை பண்ணணும். அந்த மாதிரி நான் மாட்டிக்க விரும்பலை'' என்று சொன்னான்.

தன் பிள்ளை கெட்டிக்காரனா, அசடா என்பதில் அன்னபூரணிக்குக் கவலையாக இருந்தது.

கலாவதிக்கு அந்த வீட்டின் இருட்டு கொஞ்சம் பிடிக்கவில்லை. இருட்டாக இருந்தாலும் குளுமையாக இருக்கிறது என்று திலகவதி சொன்னபோது, இல்லை, வெப்பமாக இருந்தலும் வெளிச்சமாக இருப்பது தான் நன்றாக இருக்கும் என்று எதிர்த்து வாயாடினாள்.

''வீட்டைவிட்டு வெளிய வந்தா ரோடு, அதுக்கு மேல வாசனை. லாரியும் பஸ்ஸுமா திண்ணையில் உட்கார்ந்தா ஒரே புகை மூஞ்சியில அடிக்குது. அந்த பெசன்ட் நகர்ல பாருங்க. என்னமா இருக்கு ஒவ்வொரு வீடும். கார் வாங்கினோம்னா நிறுத்தறதுக்கு இடம் இல்லை. நாலு படி உயரத்துக்கு வீடு கட்டிட்டாங்க. இடிக்கணும்னாக்க அஸ்திவாரம் வரைக்கும் இடிக்கணும். அது நல்லாவா இருக்கும். வீடு இருக்கறதுனால காரே வாங்க முடியாது. பணக்காரங்களா இருந்து என்ன புண்ணியம். கார் வாங்க முடியலைன்னா அது வேஸ்ட்''

பொறுமலோடு கலாவதி பேசினாள்.

''எதுக்குடி கார்''

விசாலட்சி கேட்க, கலாவதியின் குரல் இன்னும் அதிகமாக உயர்ந்தது.

''கார் எவ்வளவு பெரிய சௌகரியம்னு உங்களுக்குத் தெரியலை. காலையில அஞ்சு மணிக்கு எழுந்து பளிச்சுனு ஆறு, ஆறேகாலுக்குக் கிளம்பினோம்னா ஒரு மணி நேரத்துல காஞ்சிபுரம் போயிடலாம். ஒரு மூணு கோயில் பார்த்துட்டு பதினொண்ணரை மணிக்குக் கிளம்பினோம்னா அப்படியே தூங்கி கிட்டே ரெண்டு மணி, ரெண்டரை மணிக்கு வீட்டுக்கு



வந்துடலாம். நல்லா சாப்டுட்டு ஆறுமணி வரைக்கும் தூங் கலாம். கோயில் சுத்திப் பார்த்த சந்தோஷம் உடம்பு முழுக்க நிறைஞ்சிருக்கும். அதுவும் புது கார், ஏ.சி.கார் வாங்கிட் டோம்னு வச்சுக்கோங்க. அதனோட சொகுஸே தனி.

என் தாய்மாமா முதன் முதல்ல பெருங்காசு வந்தவுடனே டக்குனு வாங்கினது ஏ.சி.கார்தான். ஒரு அம்பாஸிடர் கார்ல அடைச்சுகிட்டு எட்டுபேர் ஒன்பது பேர் போனோம். உள்ள ஏ.சி. இருக்கறதுனால ஒரு புழுக்கமும் தெரியலை. அவங்க அவங்களுக்கு தனி பை. டிக்கியிலயும், மேலயும் போட்டுக் கட்டிடுவோம். காஞ்சிபுரத்துலேர்ந்து கன்னியாகுமரி வரைக்கும் நிறைய ஊர்களைக் கார்லயே பார்த்திருக்கோம். கார் வேணும் அத்தை. ரொம்ப நல்லது.''

ஆனால், காருக்கு ஆசைப்படுவதை யார் வேண்டு மானாலும் செய்யலாம். அதற்கேற்ற வருமானமும் வேண்டுமென்பதை பேசுகிற கலாவதியும், ஆமாம் போடுகின்ற பையனும் மறந்து விடுகிறார்கள். எதிலிருந்து காசு கொடுப்பது என்று தெரியாமல் விழிக்க வேண்டியிருக்கிறது. வட்டிப் பணத்தில் சாப்பிட்டுக் கொண்டிருப்பது மறந்து போய் விடுகிறது.

நான்கு வருடம் முன்பு தேவைக்கு அதிகமாகவே இருந்த இந்த வட்டிப் பணம், இப்பொழுது தேவைகளைச் சமாளிக்கவே முடியாமல் சிரமப்படுத்துகிறது. கூட காசு வேண்டுமெனில் என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்க வேண்டியிருக்கிறது.

ஆனால், அந்த இளம் பெண் ஆசைப்படுவதில் தவறு இருப்பாகத் தோன்றவில்லை. எல்லாப் பெண்களும் காரில் இறங்குகின்ற அலட்டலை உற்றுக் கவனித்துப் பார்க்கின்ற போது தானும் அவ்விதம் இறங்க வேண்டும் என்ற ஆவலைக்

கொண்டவளாய் கலாவதி இருக்கிறாள் என்பதில் தவறேதும் இருப்பதாகத் தெரியவில்லை.

கலாவதியின் மெத்தனம் அன்னபூரணிக்குக் கவலையையும் கோபத்தையும் கொடுத்தது.

''என்னா வேணும் உங்களுக்கு. காசுதானே. நான் போய் எங்க தாய் மாமன் கிட்ட கேட்டு ஒரு அம்பதாயிரம் ரூபா வாங்கிட்டு வரேன். இந்த வருஷம் முழுக்க நிம்மதியா இருக்கும்'' என்று ஒருமுறை அவள் பதிலுக்குப் பேச அன்னபூரணி மிகக் கடுமையாக அவளை எச்சரித்தாள்.

''இந்த வீடுன்னு வந்துட்ட இந்த வாழ்க்கைன்னு வந்துட்ட அப்புறம் போய் அங்க கை ஏந்துறது எனக்கு அவமானம். அப்படி உனக்குக் கையேந்தி அங்கிருந்து சோறு வாங்கித் தின்னணும்னா வேற எங்கனா தனிக்குடித்தனம் போயிரு. இங்க வராத உனக்கு வந்த சோறை நானும் தின்னேன்ற நிலைமை எனக்கு ஏற்பட வேண்டாம்.''

''ஏன், எங்க மாமா மேல அவ்வளவு என்ன கடுப்பு''

''ஒரு கடுப்புமில்லை நேரத்துக்கு உதவி செய்தவரு. நான் அதை மறக்கவேயில்லை. நானும் அவருக்கு உதவி செய்திருக்கேன். ஆனா, அவங்க சம்பாத்தியம் அவங்களோட வீட்ல இருக்கற மத்த பொண்ணுங்களுக்கு.''

''உங்களுக்குன்னா தராங்க. எனக்குன்னு தானே தராங்க.''

''என்னது விளையாட்டு. உனக்குன்னு தரது, எனக்குன்னு தரது. நீ ஏன் போய் அங்க கை ஏந்தணும். என்புள்ள சம்பாதிப்பான். அவனைச் சம்பாதிக்க வைக்க வேண்டியது உன் பொறுப்பு அதுக்காக உன் மாமன் கிட்ட போய் நிக்கக்கூடாது'' என்று எச்சரித்தாள்.

வீடு மௌனமாகியது.



திலகவதியும், விசாலாட்சியும் இரண்டு பேரையுமே சமாதானப் படுத்தினார்கள். அன்னபூரணியின் பக்கம் நியாயம் இருப்பதையும் சொன்னார்கள்.

இரவு பத்தரை மணிக்கு எல்லோரும் சோறு தின்று முடித்ததும் கலாவதி அருகே வந்து ''எங்க மாமா மேலே ஒண்ணும் கோபமில்லையே'' என்று அன்னபூரணியை மிருதுவாகக் கேட்டாள்.

''ச்சே..ச்சே.. என்னாடி பைத்தியம் மாதிரி உளர்ற அவரு காசு வேணாம்னுதான் சொன்னேனே தவிர, அவரு மேல எனக்கு என்னா கோபம்...''

அவர்கள் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் டெலிபோன் ஒலித்தது.

''இது என்னா ராத்திரி இந்நேரத்துக்கு.''

போனை கலாவதி எடுக்கப்போக, தடுத்து அன்னபூரணி எடுத்தாள்.

''ஹலோ, யார் பேசறது'' என்று மிருதுவாகக் கேட்டாள்.

''நான்தாங்க, கலாவதியோட தாய் மாமன் பேசறேன்.''

''நூறு ஆயுசு. உங்களைப் பத்திதான் பேசிட்டே இருந்தோம். நீங்களே போன் பண்றீங்க. வீட்ல எல்லாரும் நல்லாயிருக்காங்களா.''

''தெரியலையம்மா.''

''என்னா... என்னாச்சு.''

அன்னபூரணி பதறினாள்.

உங்களுக்குத் தெரியுமில்லை, நான் என்னா கட்சின்னு. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவனோட ஒரு ரெண்டு மூணு நாளா

தகராறு. நேத்து நான் கை வச்சேன். இன்னிக்கு அவன் கைவச்சான். வீட்டுக்குள்ள புகுந்து சாமான்களை உடைச்சு பொண்ணுங்கள அடிச்சிட்டான்னு கேள்விப்பட்டேன். என்னை வெட்டறதுக்காக ஆறேழு பேர் பட்டாக் கத்தியோட அலையறானுங்களாம். நான் வீடு சுத்தி எகிறி வந்துட்டேன். வீடு என்னாச்சுன்னு தெரியலை. நான் வேற ஒரு இடத்துல ஒளிஞ்சுட்டிருக்கேன். இந்த இடத்துலயும் வந்துருவாங்க போல இருக்கு. இங்கேயிருந்து உங்க வீட்டுக்கு வந்துடட்டுமா. அதைக் கேட்கத்தான் போன் பண்ணேன்.''

''வந்துருங்க. தாராளமா வந்துருங்க. எப்படி வருவீங்க.''

''பின் தெருவுக்கு வந்து பக்கத்து வீட்டு சுவர் எகிறிக் குதிச்சு அந்த சுவர் வழியா நம்ம வீட்டு கொல்லைப்புறத்துல வந்து குதிச்சுருவேன். வேற யார்க்கும் தெரிய வேணாம். நீங்க பின் கட்டு பக்கம் மட்டும் டார்ச் லைட்டோட காத்துக்கிட்டிருங்க.''

''எப்போ வருவீங்க.''

''தெரியலையம்மா. ஒரு மணி நேரம் ரெண்டு மணி நேரம். ஏன், விடியக் கார்த்தால கூட வந்துடுவேன். இப்போ தலையெடுத்துப் பார்க்க முடியாத இடத்துலதான் இருக்கேன். இந்த இடத்தைவிட்டு உடனே போகணும். இந்த வீட்ல இருக்கறவங்க பயப்படறாங்க'' என்று சொன்னார்.

''எனக்குப் புரியுது. நம்ம வீட்டுக் வந்துடுங்க. ஒரு கவலையும் படாதீங்க'' என்று அன்னபூரணி வாக்குக் கொடுத்தாள்.

மற்றவர்களை எழுப்பினாள். வாசல் பக்கம் திலகவதியைக் காவல் வைத்தாள். விசாலாட்சியை மாடியில் நின்று பார்க்கச் சொன்னாள்.



கலாவதியோடு கொல்லைப்புறம் போனாள். பையனை எழுப்பினாள். பையன் எழுந்திருந்து அங்கங்கே உருட்டுக் கட்டைகள் எடுத்து ஒளித்து வைத்தான்.

இறங்கி படியில் துணி போர்த்திக் கொண்டு உட்கார்ந்தான். கலாவதியிடம் சொல்லி வெற்றிலைப் பாக்கு வரவழைத்துப் போடத் துவங்கினான்.

அவர்கள் எல்லோரும் தாய்மாமனுக்காகக் காத்திருந்தார்கள்.

இரவு இரண்டு மணிக்குக் கொல்லைப் புறத்தில் விசில் சத்தம் கேட்ட நேரம் வாசல் பக்கத்தில் ஒரு சுமோ வந்து நின்றது. அதிலுள்ளவர்கள் எட்டி வீட்டைப் பார்த்தார்கள்.

''என்னா பார்க்கறீங்க'' என்று சுகுமாரன் எழுந்திருக்க, ''ஒன்றுமில்லை' என்று சொன்னார்கள்.

''யாரோ தெரிஞ்ச மூஞ்சியா இருக்கே. உங்களைப் பார்த்திருக்கேனே'' என்று ஒருவர் சொல்ல, அவர் டிரைவரைத் தட்டி வண்டியை வேகமாக விடச் சொன்னார்

வண்டி சீறிப் பாய்ந்து நகர்ந்தது.

# 20

கலாவதி கொல்லைப்புறம் மதிலில் டார்ச்லைட் அடித்துக் காண்பித்தாள். அடுத்த வீட்டுச் சுவரோரம் மதில் மீது அமர்ந்து பதுங்கிக் கொண்டிருந்த கலாவதியின் தாய்மாமன் இறங்குவதற்கு அன்னபூரணி ஓடிவந்து ஏணி போட்டாள். ஏணியில் இறங்கியதும் ஏணியை எடுத்து பின்பக்கம் மறைத்து வைத்தாள்.

கொல்லைப்புறக் கதவு திறந்து உள்ளுக்குள்ளே அழைத்துப் போனார்கள். சமையலறை தாண்டி மாடிப்படி வழியாக அழைத்துப் போனார்கள்.

''அம்மா லைட் போடாதீங்கம்மா. டார்ச் லைட்லயே பேசலாம். வேணும்னா மெழுகுவர்த்தி ஏத்தி வைங்க'' என்று சொல்ல இரண்டு, மூன்று மெழுகுவர்த்திகள் ஏற்றி வைக்கப்பட்டன.

தாய்மாமன் சட்டையைக் கழற்றினார். உடம்பெல்லாம் வரி வரியாக மூங்கில் தடியாலும், உருளைத்தடியாலும் அடித்திருப்பது தெரிந்தது.

இடது புஜத்தில் நீளமாக பன்னிரெண்டு அங்குலத்திற்கு மேல் ஒரு கத்திக் கீறல் இருந்தது. அடியைக் கையால் தாங்கியதால் உள்ளங் கைகள் வீங்கியிருந்தன. எதையும் பற்ற முடியாமல் தவித்தன.

டெட்டால் கலந்த சுடுநீர் கொண்டு வந்து அன்னபூரணி அவர் காயங்களைக் கழுவி விட்டாள். திலகவதி மருந்து போட்டாள்.

''எதுனா சாப்ட்டீங்களா'' என்று கேட்க, ''இல்லீங்க, இன்னிக்குக் காலையிலிருந்தே ஒண்ணும் சாப்பிடலை. கொலைப் பசி. ஆனா, இப்போ பயத்துல சாப்பிட முடியாது. அதுக்காக இதைக் கொண்டு வந்திருக்கேன்.''

இடுப்பிலிருந்து ஒரு அரை பாட்டிலை உருவிக் காட்ட அந்தப் பெண்கள் கூட்டம் மெல்லப் பின் வாங்கியது.

''தயவு செய்து மன்னிச்சுக்கணும். என்னால குடிக்காம இருக்க முடியாது. குடிச்சாத்தான் நிமிர முடியும். படுத்துத் தூங்க முடியும். இன்னைக்குத் தூங்கினாத்தான் நாளைக்குக் கார்த்தால நான் மனுசனா எழுந்திருப்பேன். இல்லைன்னா ரொம்ப மோசமாயிடும். சாப்பிடறதுக்கு என்னா இருக்கு.''



''என்னா வேணும்னு சொல்லுங்க.''

''உப்பு போடாத சோறு பிசைஞ்சு போட்டுங்க போதும்'' என்று சொல்ல அவனுக்குக் குழம்பு சோறு பிசைந்து கொண்டு வரப்பட்டது. தொட்டுக் கொள்ள ஊறுகாய்களும், வடகமும் தரப்பட்டன. ஆனால், அவரால் சாப்பிட முடியவில்லை.

''என்னால பிசைய முடியலைம்மா. கலாவதி நீ கொஞ்சம் பிசைஞ்சு கையில போட்ரு'' என்று கை நீட்டினார்.

கலாவதியைத் தவிர்த்துவிட்டு அன்னபூரணியே சோற்றை நன்றாக அழுந்தப் பிசைந்து உள்ளங் கையில் உருட்டி உருட்டி வைத்தாள். இடது கையில் கடித்துக் கொள்ள வடகம் கொடுத்தாள். வடகத்தைக் கடித்துக் கொண்டு அவர் வேகமாகச் சாப்பிட்டார்.

''போதும். இது ராஜ உபசாரம். பயமே இல்லாம தூங்கறதுக்கு ஒரு இடம் வேணும். எங்க தூங்கலாம்.'' அவர் கேட்க சுகுமாரன் தன்னுடைய அறையைக் காட்டினான். ஏ.சி.யைப் போட்டு கட்டிலுக்கடியில் தூங்கும்படி சொன்னான்.

கீழே பாய் விரித்து அதற்கு மேலே வெள்ளைத் துணி விரித்து தலையணை கொடுத்து அவர் படுத்ததும் மேலே துணி போர்த்தி, அவர் படுத்திருப்பது தெரியாமல் இருக்க கட்டிலில் இருந்த துணியைத் தழைய விட்டார்கள்.

''என்னா பிரச்சினைன்னு சொல்லவே இல்லையே.''

''எனக்கு ஒருமாதிரி புரியுது. எதிர்க்கட்சியா இருந்தவங்க ஆளுங் கட்சியா போயிட்டாங்க. ஆளுங்கட்சியா இருந்த எங்க தாய்மாமா இப்போ எதிர்க்கட்சியா போயிட்டாரு. இவர் ஆளுங்கட்சியா இருந்தபோது என்னென்ன ரௌடித்தனம்

பண்ணாரோ அதை இப்போ யார் யாரோ பண்றாங்க. இவர் அனுபவிக்கறாரு.''

''இப்படி அடிச்சிருக்காங்களேடி. பாவமா இருக்கு.''

திலகவதி சொல்ல ''இதைவிட இவர் மோசமா அடிச்சே நான் பார்த்திருக்கேன். எவங்கிட்டயோ உண்மை வரவழைக்க ணுங்கறதுக்காக இவர் விரல் விரலா கட்டிங் ப்ளேயர் வச்சு ஒடிச்சாரு.''

''கடவுளே என்னா வாழ்க்கை இது தேவைதானா.''

''இப்படித்தான் காசு சம்பாதிச்சாரு. இப்படித்தான் பெரிய மனுஷன் ஆனாரு. இவர் என்ன பெரிய அரசியல்வாதியா. ரெளடிதானே. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். அன்னிக்கு இவர் அடிச்சாரு. இப்போ வயசாகிப் போச்சு. சின்னப்பசங்க சேர்ந்து இவரை அடிக்கறாங்க''

''இவரை அடிச்சவங்க சின்னப்பசங்கன்னு உனக்கு எப்படித்தெரியும்.''

''ரொம்பநாளா அடுத்த தெருவுல இருக்கற சின்னப் பையனோட தான் தகராறு. அவனும், இவரும் ஒரே கட்சியிலதான் இருந்தாங்க. தோள்ல துண்டு போட்டுட்டு அலையறானேன்னு ஒரு தடவை அறை. கால்ல செருப்பு போட்டுட்டு நடந்தான்னு ஒரு அடி. மீசை வளர்த்துக்கிட்டு முறுக்கிக்கிட்டு போறான்னு தலையை மொட்டை அடிச்சு மீசையை சிரைச்சு கரும்புள்ளி செம்புள்ளி குத்தி ஊர்வலம். என்னென்னமோ படாதபாடு படுத்தினாரு.''

''எப்போதான் இது ஓயும்.''

''ஓயவே ஓயாது.''

உடம்பெல்லாம் வலிக்கிறது. மறுபடியும் பிராந்தி வேண்டும் என்று கேட்டார்.



அன்னபூரணி மயிலாப்பூரிலிருந்து தனக்குத் தெரிந்த லேடி டாக்டரை அழைத்து வந்தார். கையில் கிழித்த இடத்தில் இரண்டு, மூன்று தையல்கள் போட்டு கட்டுக்கட்டி ''ரொம்ப வலி ஜாஸ்தியா இருந்தா ஃபிராக்சர் ஆயிருக்குன்னு அர்த்தம். ஃபிராக்சரா இருந்தா எக்ஸ்ரே எடுக்கறதுக்கு இவரு வெளிய வந்தே ஆகணும். ஊசி போடறேன். தூங்குவாரு. லிக்கர் சாப்பிடாதீங்க. உங்களுக்கு சுகர் இருக்கு. லிக்கர் சாப்பிட்டீங்கன்னா சர்க்கரை ஜாஸ்தியாயிடும்.''

குடிக்காமல் மருந்துகள் துணையோடே முனகிக் கொண்டு கலாவதியின் தாய்மாமன் படுத்துக் கொண்டிருந்தார். இரவு நல்ல ஜுரம் வந்தது. அனத்தினார்.

மறுநாளும் ஜுரம் தொடர்ந்தது. லேசாய் வயிற்றுப் போக்கு இருந்தது. உணவு முறைகளை மாற்றி மருந்து வேறும் கொடுத்து அவரை அன்றும் தூங்கப்படுத்தினார்கள்.

நாலாம் நாள் கண்கள் பக்கம் உப்பிக்கொள்ள நடக்க முடியாமல் கலாவதியின் தாய்மாமன் தள்ளாடினார்.

''கொன்னுடுவாங்க போலிருக்கே. என்னென்ன மாதிரியோ கனா வருதே'' அரற்றினார்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லைங்க. உங்களுக்கு இப்போதைக்கு சாவு இல்லை.''

திலகவதி அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.

''இல்லீங்க. மாட்டினோம்னா கத்தியை இறக்கிடுவான். எனக்கு பயம்தான். நான் வீட்டை விட்டுக் கிளம்பிடறேன். உங்களுக்குத் தொந்தரவு வேணாம்.''

அவர் வெளியே போக முயற்சித்தார்.

''அப்படிப் போறதுன்னா ஒண்ணு பண்ணுங்க நேர போய் யார் உங்களை அடிக்கறானோ, யார் உங்களைக் கொல்றதுக்

காகத் தேடறானோ, அவன் வீட்டு வாசல்ல போய் கதவைத் தட்டுங்க. கொல்றதா இருந்தா கொன்னுக்கோங்கடான்னு சொல்லுங்க.''

அன்று இரவு அவர் இருப்பதை மோப்பம் பிடித்து விட்டது போல நான்கைந்து கார்களில் அந்தத் தெருவைச் சுற்றினார்கள். கையில் உருவிய வாளும், உருட்டுக் கட்டையுமாய் முன்னும், பின்னும் அலைந்தார்கள். வெளிய வாடா கொன்னுடறேன் என்று ஆர்ப்பரித்தார்கள்.

இங்குதான் எங்கேயோ பதுங்கியிருப்பதாகச் செய்தி வந்ததாய் மக்களிடம் சொன்னார்கள்.

பொது மக்கள் திகைக்க, கத்திவிட்டுப் போய் விட்டார்கள்.

திலகவதியைப் பற்றி கலாவதியும், விசாலாட்சியும் அவருக்கு எடுத்துச் சொன்னார்கள்.

சுகுமாரன் மோட்டார் சைக்கிளின் பின்னால் உட்கார்ந்து நட்ட நடுநிசியில் அவருடன் கிளம்பினான்.

யாருடன் அவருக்கு சண்டை உண்டோ, யார் அவரைக் குறி வைத்துத் தாக்குகிறாரோ அவர் வீட்டு வாசலில் நின்றார்.

சுகுமாரனைப் போகச் சொன்னார்.

சுகுமாரன் விலகிப் போய் தெரு முனையில் நின்று கொண்டான்.

அந்த வீட்டுக் கதவைத் தட்டினார். கதவு திறக்கப்பட்டது. இவரைப் பார்த்தவுடன் வீட்டுக்குள் இருந்த பெண்கள் அலறினார்கள். உள்ளே படுத்துக் கொண்டிருந்த ஆண்கள் கத்தியோடு வெளியே ஓடி வந்தார்கள். கைகட்டி தலைகுனிந்து நிற்கின்ற அவரைப் பார்த்துக் கேவலமான வார்த்தைகளால்



ஏசினார்கள். கத்தியை ஓங்கி வெட்ட வருவது போல் நின்றார்கள். அவர் வீட்டுப் பெண்கள் தடுத்துவிட அவர் மெல்லப் படியேறி உள்ளே நுழைந்தார். சோபாவில் உட்கார்ந்து கொண்டார். குடிக்கத் தண்ணீர் கேட்டார்.

கையில் ரிவால்வரோடு நிற்கும் எதிரியைப் பார்த்து ''சுடறதா இருந்தா சுட்டுக்க. இல்லை, வெட்டறதா இருந்தாலும் வெட்டிடு. எதுனா ஒரு முடிவுக்கு வா. என்னால முன்னயும், பின்னயும் அலைய முடியலை. நான் தோத்துட்டேன்'' என்று கை கூப்பினார்.

அவன் ரிவால்வரை இடுப்பில் சொருகி சோபாவில் பொத்தென்று உட்கார்ந்தான்.

மறுபடியும் கெட்ட வார்த்தைகளில் ஏசினான். அவர் பேசாமல் நின்று கொண்டிருந்தார். அவன் வீட்டில் அவர் குடிக்க தண்ணீர் கொடுத்தார்கள். பால் ஆற்றிக் கொடுத்தார்கள்.

''என்னாத்துக்கு இந்த நாய்க்கு பாலும் சோறும்'' என்று அவன் கத்தினான்.

''சரி, எதுனா சமரசம் பண்ணிக்க. அவருதான் மன்னிப்புன்னு கேட்கறாரு இல்ல'' என்று சொல்ல அவர்களுக்குள் சமாதானப் பேச்சு துவங்கியது.

''ஒன்றரை லட்ச ரூபாய் அபராதம்.'' அந்த இளம் சின்னப் பையன் உரக்கக் கத்தினான். அவருக்குக் கோபம் வந்தது. அவனை முறைத்துப் பார்த்தார்.

''முறைக்கிறியா. ரெண்டு லட்ச ரூபா அபராதம். இது கொடுக்காத இங்கேர்ந்து நீ போகமாட்ட'' என்று எகிறி அவர் கன்னத்தில் அடித்தான்.

''வேணாம்ப்பா. வயசானவரைப் போட்டு அடிக்காத'' என்று பலரும் அவனை வேண்டிக் கேட்டுக் கொண்டார்கள்.

அவன் மௌனமாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சொல்லு. ரெண்டு லட்ச ரூபா அபராதம்.''

''பத்தாயிரம் ரூபா தருவேன்.''

மறுபடியும் எட்டி நெஞ்சில் உதைக்க வந்தான். அவன் கால்களை மற்றவர்கள் பிடித்துக் கொண்டார்கள். இழுத்து உட்கார வைத்தார்கள். ''பேசுடா. பேசறபோதே கை ஓங்காதே'' என்று சொன்னார்கள்.

ஐம்பதாயிரம் ரூபாய்க்கு பேரம் படிந்தது. அவர் வீட்டிற்குப் போன் செய்து தமக்கை புருஷனை காசு எடுத்துவரச் சொன்னார். காலையில் அவரை எழுப்பி பல் தேய்க்க பல்பொடி கொடுத்து காபி கொடுத்து உபசரித்தார்கள்.

''இனிமே என்னாத்துக்கு உனக்கு அரசியல், சண்டை, அடிதடி. எல்லாத்தையும் விட்டுடு'' என்று கூற, அவர் 'விட்டேன்' என்று மூன்று முறை சொன்னார்.

தன்னை அடி உதையிலிருந்து பாதுகாத்ததற்காக அந்த வீட்டுப் பெண்களின் கால்களைத் தொட்டு கண்களில் ஒத்திக் கொண்டார். அந்த வீடு வெட்கத்திலும், சந்தோஷத்திலும் அலைந்தது.

ஐம்பதாயிரம் ரூபாய் காசு வாங்கிக் கொண்டு சின்னப் பையன் அவரை வெளியே அனுப்பினான். வெளியே காத்திருந்த சுகுமாரன் அவரை வண்டியில் ஏற்றிக் கொண்டான்.

''எதுனா சாப்பிட்டியாப்பா.''

சுகுமாரனை அவர் ஆதரவோடு வினவினார்.

''இல்லீங்க. எந்த நேரம் என்னா நடக்குமோன்ற பயத்துல தெருமுனையிலேயே நின்னுகிட்டிருந்தேன்.''



''அடப்பாவமே, ராத்திரி முழுக்க தூங்காத ஒட்ட ஒட்ட பட்டினியாவா கிடக்க. வா, சாப்பிடலாம்.''

''வேணாங்க. வீட்டுக்குப் போயிடலாம். இங்க எங்கயும் நிக்கறதுக்கு எனக்கு இஷ்டமில்லை.''

வண்டியை விரைவாகச் செலுத்திக் கொண்டு வீட்டிற்கு வந்தான். முகம் கழுவி ஆவலோடு காபி குடித்தான்.

கலாவதியின் தாய்மாமன் சர்க்கரை என்று இளம் வயதில் பெயரிடப்பட்ட அறிவானந்தம் எழுந்து நின்று அந்த வீட்டுப் பெண்கள் முன்பு கை கூப்பினார்.

''திலகவதி அம்மா. நீ சொன்னது உண்மை. ஒரேயொரு அடிதான் அடிச்சான். அதுவும் காத்து மேல பட்டு லேசா போயிடுச்சு. மத்த அடி எதுவும் விழாத அந்த வீட்டுப் பொண்ணுங்க காப்பாத்தினாங்க. நான் நினைவு தெரிஞ்ச நாள்லேர்ந்து நாத்திகன். அப்புறம் ஆத்திகமா, நாத்திகமான்னு தெரியாத அல்லாடினவன். இப்போ இந்த வயசுல, அம்பத்தேழு வயசுல சாமி இருக்குன்னு நான் ஒத்துக்கறேன். அவன் ரெண்டு நாள் மடக்கி வச்சிருந்தா ரெண்டு லட்ச ரூபாயை நானா கொடுத்திருப்பேன். முட்டாள். அவனுக்கு வலு இருக்கே தவிர மூளை இல்லை'' என்று முணுமுணுப்பாகப் பேச, வீடு வாய் விட்டுச் சிரித்தது.

# 21

''சரி, மேற்கொண்டு என்னா பண்ணப் போறீங்க. திருப்பியும் இதேமாதிரி ரௌடித்தனம்தானா. இல்லை, கிருஷ்ணா, ராமா, கோவிந்தான்னு கோயில் கோயிலா சுத்தறதா.''

திலகவதி தாய்மாமனைப் பார்த்துக் கேட்டாள்.

''தெரியலை. ஆனா, என்னால கோயில் கோயிலா சுத்த முடியுமான்னு புரியலை. கடவுள் இருக்கறதுங்கறது ஒரு அளவு உண்மைதான். ஆனாலும், என்னால கோயில்ல போய் கடவுளைத் தேட முடியாது. பாட்டுப் பாடு, மந்திரம் சொல்லுன்னு என்னால எதுவும் செய்ய முடியாது. தாம்பரத்துக்குப் பக்கத்துல அனாதைப் பள்ளிக்கூடம் இருக்காம். அங்க போய்ச் சேர்ந்துட்டு, அவங்களுக்கு உதவியா இருக்கலாமேன்னு தோணுது.''

''என்னா உதவி.'' அன்னபூரணி ஆவலோடு கேட்டாள்.

''வேற என்னா செய்ய முடியும் என்னால. எங்க போய் காசு கேட்கறது, எப்படிக் கேட்கறது, யாரைக் கேட்கறது, எப்போ கேட்கறது அப்படின்னு ஆலோசனை சொல்றது. அந்தப் பசங்களுக்கு நல்லது கெட்டது சொல்லித் தரது. அங்கயே ராத்திரி வாட்ச்மேன், பகல் வாட்ச்மேன்னு ஏதாவது ஒரு உத்தியோகம் பார்க்கறதுன்னு இருந்துடறதா முடிவு பண்ணியிருக்கேன்.''

''வேற எதுனா ஒரு அனாதை ஆசிரமம் சொன்னா அங்க போறீங்களா. தாம்பரத்துக்குப் பக்கத்துல இதெல்லாம் சொல்லித் தரத்துக்கு ஆள் இருக்கு போலிருக்கே.''

''அப்படியா, அப்படியா சொல்றீங்க. சொல்லுங்களேன். ஆள் இல்லாத இடமா பார்த்துச் சொல்லுங்களேன். அங்க நான் போயிடறேன். எந்த இடம்.''

அன்னபூரணி தன் வீட்டு விலாசம் சொன்னாள்.

அவர் முதலில் யோசித்து பிறகு சுதாரித்துக் கொண்டார்.

''என்னம்மா, உங்க வீட்டு விலாசம் ஏன் சொல்றீங்க.'' குரல் நடுங்க கலாவதியின் தாய் மாமன் கேட்டார்.



''தொடர்ந்து இப்படியே எங்களால காலம் தள்ள முடியும்னு தெரியலை. புள்ளை சம்பாதிப்பான்னு நினைச்சேன். அவனுக்கு அந்த அளவுக்கு அனுபவம் போறலை. அதனால, நாங்க மூணு பேரும் சேர்ந்து எதுனா தொழில் பண்ணலாம் அப்படின்னு நினைச்சுண்டிருக்கோம். இவங்களாண்ட கூட எதுவும் வாயைத் திறந்து சொல்லலை. நாங்க மூணுபேரும் சேர்ந்து என் பையனை முன்னாடி நிக்கவச்சு, என்ன தொழில் பண்ணலாம். அந்த நாலு அனாதைங்களுக்கும் நீங்க என்ன உதவியா இருக்கலாம். அதைச் சொல்லுங்க போதும்.''

''நல்லாயிருக்கு. இது ரொம்ப நல்லாயிருக்கு. உங்களுக்கு நான் எதுனா செய்யணும்னு நினைச்சேன்.''

''நாங்க ஏதாவது வியாபாரம் பண்ணனும்னு மனசுக்குள்ள நினைச்சுகிட்டிருக்கோம்.''

''என்ன வியாபாரம்மா?''

''உலகத்துல எல்லாரும் விரும்பி வாங்கற பண்டமா, சீக்கிரம் விலை போற பண்டமா, எல்லா ஊர்லயும், எல்லாருக்கும் தேவை இருக்கிற பண்டமா, எதுனா தயார் பண்ண முடியாதா, விக்க முடியாதா.''

''வெறுமனே பூடகமா பேசிக்கிட்டிருந்தா எப்படி. என்னான்னு சரியா சொல்லுங்க. மேற்கொண்டு அதைப் பத்தி விசாரிப்போம்.''

''தலைக்கு எண்ணெய், முகத்துக்கு மண் பவுடர் வாசனைப் பவுடர், மருதாணிப் பொடி, பல்பொடி, மஞ்சள்தூள், சாந்துப்பொட்டு அப்படின்னு தயார் பண்றது. கடைசியில தென்னிந்தியா வரைக்கும் வித்துட்டு வரது.''

''இதைத் தயார் பண்றத பத்தி எதுனா தெரியுமா?''

''தெரியாது. கத்துக்கணும். ஊர்ல பொம்பளைங்க ஜனத்தொகையில அதிகமாயிட்டாங்கன்னு நினைக்கிறேன். அப்படித்தான் ஊரைப் பார்க்கும்போது படுது.

வீட்ல சிவி சிங்காரிச்சுட்டு இருக்கற அந்த லேடீஸ் வெளிய இன்னும் பளிச்சுனு இருக்கணும்னு ஆசைப்படறாங்க. வடக்க இருக்கற பொம்பளைக்கும் தெற்க இருக்கற பொம்பளைக்கும் உடம்பு நிறத்துல நிறைய வித்தியாசம். அந்தச் சிகப்பு தனக்கு வேணும்னு தெற்க இருக்கற பொம்பளை நினைக்கறா. சிகப்பு இல்லைன்னாலும் ஒரு மாநிறமாவது இருக்கணும்னு பார்க்கறா.''

''அது சரிம்மா. ஆனா, இந்த வியாபாரத்துல இறங்கினா காம்படீஷன் ஜாஸ்தி இருக்கே. ஏகப்பட்ட போட்டி இருக்கே.''

''அதை நான் பார்த்துப்பேன். பெரிய தடி புக்குல அழகான பொம்பளை முகத்தைப் போட்டுட்டு அஞ்சு ரூபா விஷயத்தை அம்பது ரூபான்னு கூசாத விக்கறாங்க. விக்கற பொருள் அஞ்சுரூபா, விளம்பரம் இருவது ரூபா, லாபம் இருவத்தஞ்சு ரூபான்னு வாங்கறாங்க. டியூப்ல இருக்கற க்ரீமை புழிஞ்சு உள்ளங்கையில எடுத்தா பத்து நாளைக்குக் கூட வராது. டியூப்ல இருக்கும்போது நிறைய இருக்கற மாதிரி தோன்ற அந்த விஷயம் புழிஞ்சுவச்சு பார்க்கறபோது, இதுக்குப்போய் அம்பது ரூபாயான்னு வயிறு எரியுது. நாம இந்தப் பொருளையே பேர்பாதி விலைக்கு வித்தா, நல்ல பொருளா வித்தா, ஜெயிக்க முடியாதா?

''ஜெயிக்கலாம். இதுல என்ன கஷ்டம் இருக்குன்னு நான் சொல்லட்டுமா.''

''சொல்லுங்க.''



''கொண்டுபோய் சரக்கு கொடுக்கறீங்களே அந்தக் கடைக்காரன்கிட்டேயிருந்து காசு வாங்க முடியாது. கெஞ்சி, கால்ல விழுந்துதான் வாங்கணும். ஏன், உங்க சரக்கை நீங்கதான் கூவி விக்கணும். பல வியாபாரிங்க அழிஞ்சு போனதுக்குக் காரணமே கடைக்காரன் சரியா காசு கொடுக்காததுதான்.''

''விக்கற பொருள்னா தரமாட்டானா.''

''தரமாட்டான். உன் பொருள் விக்கலைன்னே சொல்லுவான். அவன் மனசு வச்சாதான் உன் பொருள் விக்கும்.''

திலகவதியை நோக்கி அறிவானந்தம் சொல்ல, அந்த வீடு மௌனமாக இருந்தது.

''சரி, நீங்க என்னென்னமோ தயார் பண்ணப்போறீங்க. போய் கடை கடையா விக்கப் போறீங்க. நிறைய காசு சம்பாதிக்கப் போறீங்க. எல்லாம் நல்லா இருக்கு. ஆனா, டக்குனு பண்ண முடியாது. முதல்ல ஒரு கம்பெனியை ரிஜிஸ்டர் பண்ணணும். ஒரு அக்கௌண்ட்ஸ் வைக்கணும். இந்த விஷயங்கள் எல்லாம் மருந்து வகையில வரும். அதனால அரசங்கத்துல இருக்கற மருந்துக் கட்டுப்பாட்டுக்கு நாம இப்படி கம்பெனி துவக்கப்போறதா தகவல் தெரிவிக்கணும். அவன் என்னா இடம்னு கேட்பான். ப்ராடக்ட் ஸேம்பிள் கொடுன்னு சொல்லுவான். ப்ராடக்ட் ஸேம்பிள் பின்னாடி தரேன், இடம் இன்னதுன்னு சொல்லணும். நீங்க சொல்ற இடத்துல ஃபாக்டரி வெக்கலாமான்னு பார்ப்பான். மாசுக் கட்டுப்பாடு வாரியத்துலேர்ந்து தொழிற்சாலை சட்ட திட்டம் வரைக்கும் நிறைய கேள்விக்கு பதில் சொல்லணும். இன்ஷியூரன்ஸ் பண்ணச் சொல்லுவான். இதுக்கே, ஆரம்ப கட்டத்துக்கே

நிறைய செலவாயிடும். கேட்கறனேன்னு தப்பா நினைச்சுக் காதிங்க. எவ்வளவு வச்சிருக்கீங்க.

''காசா அதிகமில்லை. வீடா இருக்கு. கடன் எதுவுமில்லை.''

''ரொம்ப நல்லதாப்போச்சு. அப்போ கடன் வாங்கலாம். முதல்ல பேரு செலக்ட் பண்ணுங்க. அந்தப் பேர்ல வேற கம்பெனி இல்லாம இருக்கான்னு பார்க்கணும். அவங்க சரின்னு சொல்லணும். இது டெல்லிலேர்ந்து வரணும். இதுக்கு ஏஜண்ட் இருக்காங்க. அவங்க வாங்கிக் கொடுத்துடுவாங்க. மனசுல பதியற பேர் சொல்லுங்க.''

வீடு கூடிக்கூடி யோசித்தது. நிறைய பேசியது.

திலகவதி சம்மணம் கட்டிக் கொண்டு பூஜையறையில் உட்கார்ந்தாள். ஒரு மணி நேரத்திற்கு மேலாகவும் அமைதியாக இருந்தாள். பிறகு வெளியே வந்தாள். எல்லோரும் அவளைத் திரும்பிப் பார்த்தார்கள்.

''ஐவர்ங்கற பேர் நல்லாயிருக்கு.'' அன்னபூரணி மிருதுவாகப் பேசினாள்.

''ஐவர்'னா என்ன அர்த்தம்.''

''ஐந்து பேர்னு அர்த்தம்.''

''யாரு அஞ்சு பேர்.''

''தருமன், பீமன், அர்ஜுனன், நகுலன் சகாதேவன்.''

''அவங்களுக்கும் நம்ம புரோடக்ட்டுக்கும் என்ன சம்பந்தம்.''

''என்னமோ சம்பந்தம் இருக்கற மாதிரி படுது. ஆனா, அதுக்கு முன்னாடி சொல்லிப்பாரு. ஐவர் தைலம், ஐவர் பல்பொடி, ஐவர் முகப்பரு க்ரீம், சொல்லிப்பாரு.



''ஐவர் தைலம்.''

எல்லோரும் சொன்னார்கள்.

''ஐவர் தைலம்.'' உரக்கச் சொன்னார்கள்.

எல்லோருக்குமே அது பிடித்ததுபோல் இருந்தது.

''ஐவர் கூந்தல் தைலம், ஐவர் களிமண் பவுடர்.''

''களிமண் பவுடரா. அதென்ன.''

விசாலாட்சியிடம் அறிவானந்தம் கேட்டான்.

''சரியான களிமண்ணா பார்த்து எடுத்துட்டு வந்து உலர்த்தி, உடைச்சு நைஸா... துணியில மறுபடி மறுபடி சலிச்சு, சலிச்சதை மறுபடியும் அரைச்சு கொஞ்சம் வாசனை சேர்த்து டப்பால போட்டு வைக்கணும்.''

''என்னாத்துக்கு அது.''

''குழைச்சு முகத்துல தடவிகிட்டா முகத்துல இருக்கற அத்தனை எண்ணைப் பசையும் போயி பளபளன்னு ஆகும்.''

''எல்லா ஆத்துலேயும் களிமண் இருக்கற இடமா பார்த்து சின்னப் பசங்க கொண்டாந்து லேடீஸ்கிட்ட கொடுப்பாங்க. லேடீஸ் அதை உடம்பு முழுக்க தொடைச்சுக்குவாங்க. காய்ஞ்ச பிறகு மறுபடியும் குளிச்சு கழுவிட்டு மஞ்சள் தடவிப்பாங்க.''

''நாம மஞ்சள்பொடி தயாரிக்கிறோமா.''

''ஆமாம். சுத்தமான மஞ்சள் பொடின்னு தயாரிக்கணும்.

''பேரு முடிவு பண்ணுங்க. நான் மத்த வேலைகளைப் பார்த்துக்கறேன்.''

'அன்னபூரணி காஸ்மெடிக்ஸ்' என்று பெயரிடப்பட்ட கம்பெனி 'ஐவர்' என்கிற பெயரில் பலவிதமான அலங்காரப் பொருட்களைப் தயாரிக்க ஏற்பாடாயிற்று.

கலாவதி ஒரு பலகைக்கு வெள்ளை வண்ணம் அடித்து அதன் மீது ஐந்து வர்ணத்தில் ஐவர் என்று எழுதினாள். அதற்கு சந்தனம் குங்குமமிட்டு பூஜையில் வைத்தாள். வெகு நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். எழுந்து அன்ன பூரணியின் அருகே வந்து அவள் தோளைப் பற்றிக் கொண்டாள்.

''நான் ரொம்ப நேரம் யோசனை பண்ணி முடிவு பண்ற ஒரு விஷயத்தை சர்வசாதாரணமா நீங்க செய்துடறீங்க அத்தை. அதுதான் ஆச்சரியமா இருக்கு. உங்களுக்குள்ள ஏதோ ஒரு சக்தி இருக்குங்க அத்தை. என்ன அழகான பேர். ஐவர். யார் ஐவர். இந்தியாவில இருக்கிறவங்களுக்கு ஐவர்னா யாரைத் தெரியும். பஞ்சபாண்டவர்களைத்தானே. இந்த விஷயத்தை நாம பெருசு பண்ணுவோமா.''

அவள் அன்னபூரணியிடம் கேட்டாள்.

''அப்படின்னா... வராண்டால பஞ்சபாண்டவர்கள் அஞ்சுபேரை பொம்மையா நிக்கவச்சு ஊர்ல எல்லாரையும் வந்து கும்பிட சொல்வோமா.''

''தருமபுத்திரர், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன். தள்ளி கொஞ்ச தூரமா திரௌபதி. இநத ஆறு பேரையும் சிலையா வடிச்சு இவங்களைக் கும்பிட்டா எல்லாவிதமான உயர்வும் கிடைக்கும்னு சொன்னா என்ன தப்பாகுமா.''

திலகவதி மௌனமாக இருந்தாள்.

''நான் பஞ்சபாண்டவர்களை நினைச்சுதான் பேர் சொன்னேன். 'ஐ'ன்னு சொல்லச் சொன்னதுனால ஐவர்னு சொன்னேன்.''



''ஆனா, பஞ்சபாண்டவர்களை யாராவது கும்பிடு வாங்களா.''

''நாம சொல்றது திரௌபதின்ற பொண்ணுக்கு அஞ்சு விதமான வீரங்கள் உள்ள புருஷங்க கிடைச்சாங்க. இதுவந்து அஞ்சு ஆண்கள் அல்ல. அஞ்சு குணங்கள். தருமர் தருமமானவர், மிருதுவானவர். பீமன் வீரமானவன். பொண்டாட்டி மேல ஒரு துரும்பு கூட விழாம பாதுகாக்கறவன். அர்ஜுனன் அழகன். அளவில்லாத சமார்த்தியசாலி. நகுலன் மற்ற விஷயங்கள்ல உதவி செய்யற ஆள். ஒரு பொண்ணுக்கு விருப்பமானபடி நடந்துக்கற ஆள். சகாதேவன் தத்துவவாதி. நல்லது கெட்டது ஆராய்ந்து சொல்கிற அறிவாளி. இப்படி எல்லாம் சேர்ந்து ஒரு புருஷன் கிடைச்சா திரௌபதியைவிட பிரமாதமாக இருக்கலாம் அப்படின்னு சொன்னா தப்பா.''

''நம்ம சரக்கு நல்ல சரக்குன்னு சொல்லி விப்போமே. அதை விட்டுட்டு வேற ஏதோ கதை சொல்வானேன்.''

கலாவதி ஆழ்ந்து யோசித்தபடி கேட்டாள்.

''இல்லை. நீங்க தப்பா யோசிக்கறீங்க. சரக்கு நல்ல சரக்கா, கெட்ட சரக்கா அப்படின்றது ஒரு தடவைக்கு மூணு தடவை வாங்கிப் பார்த்தாதான் தெரியும். வாங்கிப் பார்த்து உபயோகிப்பவங்க சொன்னாதான் முடியும். அது கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகும். ஆனால், முதல் முறையா வாங்கறதுக்கு ஏதோ ஒண்ணுபிடிச்சு இழுக்கணுமில்லை.''

''அதான் 'ஐவர்'னு பேரு இருக்கு.''

''ஐவர்னு பேர் மட்டும் போறாது. ஒரு கதை வேணும்.''

''கொஞ்சம் ஏமாத்தற மாதிரி இல்லை.''

''எல்லா கதையும் அப்போ ஏமாத்தற மாதிரிதான்.''

அன்னபூரணி வேகமாகச் சொல்ல திலகவதி அதை மறுப்பது போல் பேச ஆரம்பித்தாள்.

எல்லோரும் அவள் பக்கம் திரும்பினார்கள்.

# 22

கதைன்றது ஜனங்களுக்குப் புரியறதுக்காகச் சொல்லப்பட்ட விஷயம். ஆனா, உள்ளூர வேற ஒரு விஷயம் இருக்கும். புருஷன் ஒரு விஷயத்தைச் சொல்ற போது, உமாதேவி மயிலைப் பார்த்துக்கிட்டிருந்தா. போ. மயிலாப்போன்னு அனுப்பிட்டதா சொல்வாங்க. என்னா அது. புருஷனைவிட தனக்கு அதிகம் தெரியும்னு கர்வமா ஒரு அம்மா இருக்கறபோது, தெரிஞ்சிக்கலாம், ஆனா கர்வப் படாத அப்படின்னு சொல்றதுதான் மயிலாப்பூர் கதை. அந்த கர்வத்தைப் பத்தி யோசனை பண்ணு; எதைப் பாத்தியோ அதுவாகவே மாறியிரு; அப்போதான் அதனோட அல்பத்தனம் தெரியும்னு சொல்றதுதான் கற்பகாம்பாள் கதை. கர்வத்தைக் கவனிங்கறதுதான் விஷயம். கர்வத்தைக் கவனிக்கற போது நல்லபடியா கர்வம்பத்தி புரிஞ்சுக்க முடியும். கர்வப்படாத இருக்க முடியும்.'' திலகவதி சொன்னாள்.

எல்லோரும் அவளையே ஒரு நிமிடம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''அப்படியா. ஜனங்க புரிஞ்சுக்குமா.''

''அதைப்பத்தி உனக்கென்ன கவலை. எப்பப்போ யார் யாருக்குப் புரியணுமோ, அப்பப்போ புரியும்''



''சரி, திலகவதி, நீ என்ன சொல்ல வர சொல்லு.'' விசாலாட்சி கேட்டாள்.

''வராண்டா பெருசா இருக்கு. அதை இடிச்சு ரெண்டு வாசலா பண்ணி உள்ளுக்குள்ள சுவர் ஓரமா கிழக்குப் பார்த்து ஐவர் சிலையும், வடக்குப் பார்த்து திரௌபதி சிலையும். பேரு ஐவர் கோயில். அந்த ஐவர் கோயில்லேர்ந்து வர்றதுதான் கூந்தல் தைலம், பற்பொடி, முகப்பவுடர், ப்ளீச்சிங், கண் மை எல்லாமும்.''

''ஒரு சின்ன பயம் இருக்கு.''

''என்ன?''

''இதைப் பூசிக்கிட்டா அஞ்சு புருஷனோட படுத்துக்கும்படி ஆவும் அப்படின்னு எவனாவது கிளப்பி விட்டான்னா தப்பா இருக்குமில்லை.''

''அப்படியானா மகாபாரதக் கதையே எடுபடாத போயிருக்குமில்லை. இன்னிய தேதி வரைக்கும் மகாபாரதக் கதையையும் கொண்டாடிக்கிட்டிருக்கோம். யாரும் திரௌபதியை அசிங்கமா பேசிடலை. எத்தனை திரௌபதி அம்மன் கோவில் இருக்கு. அஞ்சு புருஷனுக்கு பொண் டாட்டின்னா சொல்லிண்டிருக்கோம். ஜனங்க கும்பிடாதயா போயிக்கிட்டிருக்காங்க. யாராவது எளக்காரமா பேசிக் கிட்டிருக்காங்களா. அவ சக்தி. பெரிய கூந்தல் உள்ளவள். அழகான முகம் உடையவள். நல்ல குணவதி. அட்சய பாத்திரத்தில் சோறு போட்டவள். அவளையே கேலி செய்யாத போது ஐவரை கேலி செய்யறது எப்படி. பஞ்சபாண்டவர் களுக்கு தமிழ் நாட்டில் கோவில் இல்லை. எங்கேயாவது இருக்கலாம். ஆனால், சென்னையில் இல்லை.''

''மகாபலிபுரத்துல இருக்கே.''

''இல்லீங்க. பஞ்ச பாண்டவருக்கும் அதுக்கும் சம்பந்தமேயில்லை. நடுவுல வந்தவங்க அஞ்சு தேரைப் பார்த்துட்டு பஞ்சபாண்டவர் சொல்லிட்டாங்க. பஞ்ச பாண்டவர்களுக்காக அந்தக் கோயில் கட்டப்படலை. அங்க கோயிலும் இல்லை. வெறும் தேர்தான் இருக்கு.''

''இது சரியா படலையே.'' அறிவானந்தம் சொன்னார்.

''யோசிப்போம். உடனடியா பேசாத நிறைய யோசிப்போம். உள்ளுக்குள்ள ஊறப்போட்டு நிதானமா யோசிப்போம். பிறகு பேசுவோம்.''

அன்னபூரணி சபையைக் கலைத்தாள். அவர்கள் பிரிந்து போனார்கள்.

''ஐவர்னா யாரு.''

காய்கறி விற்க வந்த பெண்ணிடம் விசாலாட்சி கேட்டாள்.

''தெரியுமே. கோயில்ல பூஜை செய்யறவரு.''

''ஐயரு இல்லடி ஐவர்.''

''ஐவர்னுதான் நாங்க சொல்வோம் ஐயரை. ஐவரும் ஐயரும் ஒண்ணு இல்லையா''ன்னு அவள் கேட்க, வீட்டில் எல்லோருக்கும் சிரிப்பு வந்தது.

''ஐவருங்கற வார்த்தையே செந்தமிழ் வார்த்தையா இருக்கு. அஞ்சு பேர் அப்படின்னுதான் தெரியுமே தவிர ஐவருங்கறது யாருக்குத் தெரியும்.''

சுகுமாரன் கவலையோடு பேசினான்.

''அஞ்சு பேரோட வாழ்ந்த திரௌபதி நல்லவளா, கெட்டவளா.''



''அவளுக்கு கொடுப்பனை. நல்லபடியா வாழ்ந்தா. அஞ்சு புருஷனையும் உள்ளங்கையில வச்சுத் தாங்கினா. அவமேல சின்ன துரும்பு பட்டாலும் துரும்பு போட்டவனைத் துவம்சம் பண்ணா. அப்படி உனக்குக் கிடைக்குமா, எனக்குக் கிடைக்குமா. இருக்கிற ஒண்ண காப்பாத்திக்க நம்மால முடியாது. கிடைச்சதும் நல்லபடியா நமக்குக் கிடையாது.''

''அஞ்சு புருஷனோட இருக்கிறது தப்பில்லைங்கறேளா.''

''யோசனை பண்ணிப்பாரேன். அஞ்சு பேரும் அஞ்சு மாணிக்கங்கள். அவங்க அஞ்சுபேருக்கும் அவ ஈடு கொடுத்து அவாளோட அவ வாழ்ந்திருக்கா, அவா அவளைப் பிரியமா வச்சுருக்கான்னா அது சாதாரண விஷயமா.''

''உங்களுக்கு திரௌபதி மாதிரி இல்லியேன்னு ஏக்கமா இருக்கா.''

''திரௌபதி மாதிரி இருக்க முடியாதுன்னு நன்னா தெரியும். ஒரு தருமன், ஒரு பீமன், ஒரு அர்ஜுனன் கிடைச்சா நன்னாதான் இருக்கும். நமக்கு வாய்க்கறதெல்லாம் சகுனியாகவே இருக்கு. என்ன பண்ணித் தொலையறது சொல்லு.''

மாமி சொல்ல, அவர்கள் எல்லோருமே வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''சொல்லுங்க மாமி. நாங்க எதுக்கு கேட்கறோம்னா ஐவர் கூந்தல் தைலம் அப்படின்னு ஒரு தைலம் விற்பனைக்கு வருது. நாங்க ஏஜன்ஸி எடுக்கலாம்னு இருக்கோம்.''

''நன்னாயிருக்கே பேர். ஐவர் கூந்தல் தைலம். பாட்டிலை ஒரு டப்பால போட்டு, நாலு பக்கமும், நாலு வீரர்கள் படம் போட்டு, மேல தருமரைப் போட்டு, கீழ திரௌபதி படம் போட்டு வச்சுருங்கோ. ஆறு பக்கமும் ஆறு பேர் இருக்கட்டும். எல்லாருக்கும் பிடிக்கும். நிச்சயமாக பிடிக்கும்.''

''ஐவர் தைலம். நீ என்ன நினைக்கற.'' வேறொரு இளம் பெண்ணைக் கேட்ட போது, ''பேர் எப்படியிருந்தா என்ன. தலைமுடி கருகருன்னு வளர்ந்தா நான் பேரைப் பத்தி அக்கறையே படமாட்டேன்.''

''நெடியா இருந்தா வாங்குவியா. நெடியா இருக்கக் கூடாதுங்கறாங்களே.''

''உங்களுக்குப் புரியலை. யாரும் எண்ணெயை பகல்ல தேய்ச்சுகிட்டு பஸ்ல ஏறிப் போறதில்லை. ஷாம்பூ போட்டு சுத்தமா தலை முடியை புஸுபுஸுன்னு பறக்க விட்டுட்டு தான் போறாங்க.''

''தைலம் கலக்கறதுக்கு உண்டான மெஷின் விசாரிக் கலாம் வாங்க.''

அவர்கள் தயிர் கடையும் மத்து போன்ற ஒரு மிஷினைப் பார்க்க ஜார்ஜ் டவுன் பக்கம் போனார்கள்.

அவர்கள் பேசிய இருபதாம் நாள் டெல்லிக்கு பெயர் பதிவு தரும் ஏஜண்ட் அன்னபூரணி காஸ் மெடிக்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் என்கிற கம்பெனியை ரிஜிஸ்டர் பண்ணிக் கொடுத்தான்.

ஐவர் என்கிற பெயரே அவர்களுக்குக் கிடைத்தது.

பின்பக்கக் கொல்லையில் தரைபோட்டு சுவர் எழுப்பி மேலே ஆஸ்பெஸ்டாஸ் போட்டு அதற்குக் கீழே உள்ளே வெப்பம் வராதிருக்க மரத்தடுப்பு போட்டு முப்பதடிக்கு அறுபது அடியில் தொழிற்சாலை கட்டினார்கள். கட்டுமானப் பணி முழுவதும் சுகுமாரன் கவனித்துக் கொண்டான். தினமும் மாலையில் கணக்குச் சொன்னான். ஐவர் கோவிலுக்கு சிலைகள் செய்ய அவர்கள் மகாபலிபுரம் போனார்கள். ஆர்டர் கொடுத்தார்கள். பத்து நாளில் பெருந்தொகை கொடுத்து



நாலடி உயர சிலைகளை வாங்கி வந்தார்கள். பீடத்தோடு நாலே முக்கால் அடி இருந்தது.

வாசற்பக்கம் இடித்தார்கள். கருங்கல் சுவர் எழுப்பி னார்கள். மரக்கதவு போட்டு இரண்டு வாசல்கள் வைத்தார்கள். முகப்பில் சித்திரங்கள் எழுதினார்கள். ஐவர் கோவில் என்று மிகப் பெரிய எழுத்தில் பிரகாசமாய் விளம்பரப் பலகை எழுதினார்கள். இன்னொரு பக்கம் சிறிதாய் அன்னபூரணி காஸ்மெடிக்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் என்ற பலகையும் வைத்தார்கள்.

''பஞ்ச பாண்டவர்களுக்குக் கோவிலா. அதிசயமா இருக்கே.''

எல்லோரும் வந்து வந்து பார்த்து விட்டுப் போனார்கள்.

சுகுமாரன் அந்த பஞ்சபாண்டவர்கள் கோவிலைப்பற்றி விளக்கமாக எழுத ஆரம்பித்தான். எழுதியதை அச்சடித்து துண்டுப் பிரசுரமாகக் கொண்டு வந்து வீட்டில் இறக்கினான்.

வீடு கவலையோடும், சந்தோஷத்தோடு அந்தத் துண்டுப் பிரசுரத்தை வாங்கிப் படித்தது.

''மயிலாப்பூர்ல எனக்குத் தெரிந்த ஒரு பட்சணக்கடை மாமி இப்படித் தான் வீட்ல ஹால் முழுக்க கோயிலா வச்சிருக்காங்க. பாத்துட்டு ஆடிப் போயிட்டேன்.''

அறிவானந்தம் துண்டுப் பிரசுரத்தைப் புரட்டிப்புரட்டிப் பார்த்தபடி சொன்னார்.

''அவருக்குத் தெரியலை. வெறுமனே கோயில் மட்டும் வியாபாரம்னு சொன்னா, ச்சே... ச்சே... அப்படின்னு சொல்றவங்களுக்கும் இருக்காங்க. இதை விரும்பாதவங் களும் நிறைப் பேர் உண்டு. ஆனால், தலைக்கு எண்ணெய், முகத்துக்குக் களிமண் பூச்சு, கண்ணுக்கு மை அப்படின்றவங்க

நிறையபேர் உண்டு. வெறுமனே ரொம்ப நல்ல சரக்குன்னு விக்கறத விட வேற ஏதாவது சொல்லி விக்கலாம்.''

''ஒரு ரொட்டியாரு முறுக்கு, சீடை, அதிரசம்னு வித்தாரு. அவர் விக்கற போது பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தாரு. விளம்பரம் வந்து அவருடைய சீடை பத்தியோ, முறுக்கு பத்தியோ, அதிரசத்தைப் பத்தியோ இருக்காது. 'என் சீடை பேசும். என் அதிரசம் பேசும். அது ஆளுங்களைக் கொண்டு வரும். ஆனால், விளம்பரத்துல நான் இதைப் பத்தி எதுவும் பேசாம வேற நல்ல விஷயத்தைப் பேசுவேன்'னு சொன்னாரு. அந்த மாதிரி கதை சொல்லிட்டுப் போங்க. ஏன் வீட்டு வாசலை இடிச்சு கோவிலா பண்றீங்க.'' மறுபடியும் அறிவானந்தம் மெல்லிய கடுப்போடு பேசினார்.

''இல்லை. தியாகராயநகர் முழுக்க புடவைக்கடை. விதவிதமான புடவைக்கடை. விதவிதமான விளம்பரம். அத்தினி பத்திரிகைளிலும் விளம்பரம். யார் பத்திரிகை ஆரம்பிச்சாலும் அந்தப் புடவைக் கடைங்க விளம்பரம் தரும். முன் அட்டையிலோ, பின் அட்டையிலோ அவங்க விளம்பரம் வந்தே ஆகணும்னு பிடிவாதமா நிக்கும். சம்பாதிக்கிறதுல பெரும் பகுதிய விளம்பரத்துக்கு போட்டி போட்டுட்டு செலவு பண்ணுவாங்க. அந்தப் போட்டிக்கு நடுவுல அந்தக் கும்பல்ல கலக்காம கொஞ்சம் தள்ளிப்போய் கடை போட்டு, ஆனால், அந்தக் கடையை ஒரு கோயில் மாதிரி ஒரு வாலிபமான பையன் செய்தான். பழங்கால வீடு மாதிரி கடை இருக்கும். பெரிய பெரிய தூண், பெரிய மரவாசப்படி, மேல கெஜலட்சுமி, உள்ளுக்குள்ள போனவுடன் முற்றம், முற்றத்துல வெய்யில் வெளிச்சம். அந்த நிழல்ல ஒரு சிம்மாசனம் போட்டு ஒரு காமாட்சி பொம்மை. சுத்திலும் பழைய ராஜாக்கள் படம், ராணிகள் படம். அங்கங்க தூண்ல புடவைய தொங்க விட்டு ஒரு பெரிய ஹாலுக்குள்ள ஒரு பெரிய மாளிகைக்குள்ள புடவைக் கடைய கொண்டு வந்த



மாதிரி அந்தப் புள்ள செய்தது. டியூப் லைட்ல கலர் பார்த்துட்டு ஏமாறாம முற்றத்துக்கு கொண்டு போய் வெய்யில் வெளிச்சத்துல பிரிச்சு கலர் பார்த்து வாங்கலாம். காத்தோட்டமா இருக்கும். எத்தினி கூட்டம் வந்தாலும் தாங்கற ஹால். அதாவது அந்த இடத்தை அந்தப் புள்ள தெய்வீகமா பண்ணிட்டான். அந்த மாதிரிதான்.

இது என்னா அப்படின்னு நம்ம தயாரிப்பு பத்திகேட்டா, அது இன்ன மாதிரியான விஷயம். யார் பண்றாங்க. இவங்க பண்றாங்க. அவங்கள பத்தி வேறென்ன நியூஸ். அவங்களா, பஞ்ச பாண்டவர்களுக்குக் கோயில் வச்சிருக்காங்க. அந்தப் பஞ்ச பாண்டவர்களுக்கு முன்னாடி இந்த பாட்டில் எல்லாத்தையும் வச்சிட்டு நிறை தலைமுடி முளைக்கணும், திரௌபதி மாதிரி அப்படின்ற மாதிரியும் சொல்லலாம். சொல்லாத சொல்லலாம்.''

அன்னபூரணி சொல்லி முடித்தவுடன் அறிவானந்தம் அன்னபூரணியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அவருக்குப் பளிச் சென்று மனதில் ஒரு கேள்வி தோன்றியது. அதை அவள் முன்பு வைத்தார்.

# 23

**26.**4.2002

''திரௌபதி – துக்கப்பட்ட பொண்ணு இல்லையா.'' பளிச்சென்று அறிவானந்தம் கேட்டார்.

''யார் சொன்னா. எல்லாருக்கும் வர துக்கம்தான் அவளுக்கும் வந்தது. ஆனா, எப்போ துக்கம் வந்தாலும்

அவளைக் காப்பாத்தறதுக்கு அஞ்சு பேர் இருந்தாங்க. துக்கம் வரதபத்தியாரும் கவலைப்படறதே இல்லை. துக்கம் வந்தா யார் காப்பாத்துவாங்கன்னுதான் கவலைப்படறாங்க.

திரௌபதி ஒரு நல்ல விஷயம். எப்பவுமே, எந்த நேரத்திலேயுமே கொஞ்சம்கூட விட்டுப் பிரியாத அஞ்சு கணவர்கள் இருக்கின்ற அற்புதமான விஷயம்.''

''கஷ்டப்பட்டு செய்றோம். தப்பா ஒர்க் அவுட் ஆயிடாதே.''

ஆகாது.''

அவர்கள் ஒரு துளி எண்ணெய் கூட தயாரிக்கவில்லை. ஒரு டப்பா களிமண் பூச்சுகூட உற்பத்தி செய்யவில்லை. கண் மையோ, சாந்துப் பொட்டோ, முகப்பரு க்ரீமோ ஏற்பாடு செய்யவில்லை. மாறாய், தாங்களே நேரடியாகப் பத்திரிகைகளுக்குப் போனார்கள். துண்டுப் பிரசுரங்கள் தயாரித்தார்கள். பெரிய போர்டு எழுதினார்கள்.

அந்த விளம்பரங்களெல்லாம் பஞ்ச பாண்டவர்களைப் பற்றியே பேசின. திரௌபதியின் அழகை வர்ணித்தன.

விளம்பரம் பார்த்துவிட்டும், துண்டுப் பிரசுரங்களைப் படித்துவிட்டு ஒரே நாளில் நூற்று எழுபத்தொன்பது விசாரணைகள் வந்தன.

அன்னபூரணி ஜெயிக்கமுடியும் என்று தெளிவாய், திடமாய் நம்பினாள்.

''என்ன தயாரிக்கப்போறோம். என்னென்ன தயாரிக்கறதுக்கு வேணும். அது சொல்ல வேணாமா.''

''கிட்டத்தட்ட உங்க உயரத்துக்கு ட்ரம் வேணும்.''

''எதுக்கு.''



''அப்படித்தான் ஆயிரம் பாட்டில் கலக்க முடியும்.''

''என்னென்ன போட்டுக் கலப்பீங்க.''

''அதை அப்புறம் சொல்றேன். நல்லெண்ணெய் வேணும். அகத்திக் கீரை வேணும். கரிசலாங்கண்ணி வேணும். இதெல்லாம் எங்கேர்ந்து வாங்கிட்டு வரணும்னு எனக்குக் கொஞ்சம் தெரியும். சுண்டக் காய்ச்சறதுக்கு பெரிய பாத்திரம், ஸ்டவ் எல்லாம் வேணும். பாத்திரம்னா, அகலமா மூணு அடி விட்டத்துல நல்லெண்ணெய் விட்டு, கடஞ்சு பம்புல ஏத்தி பாட்டில்ல ஊத்தி சீல் வைக்கிற மிஷின் வாங்கி அதுல மூடணும்.''

''ஒவ்வொண்ணா போவோமா.''

அவர்கள் திட்டம் போட்டார்கள். எழுதிக் கொண்டார்கள். எது எது எங்கெங்கே இருக்க வேண்டுமென்று மறுபடியும் பின்பக்கம் போய் நின்று எல்லாவற்றையும் பார்த்தார்கள். வெப்பம் வெளியே போவதற்காகக் காற்றை இழுத்து வெளியே விடும் மின் விசிறியைப் பொருத்தினார்கள். நீண்ட கம்பிகளில் ஃபேன் பொருத்தினார்கள். எவர்சில்வர் குடம் செய்கிற இடத்திற்குப்போய் ஐந்தடி உயரத்திற்கு, மூன்றடி அகலத்திற்கு மூன்று எவர்சில்வர் ட்ரம் செய்யச் சொன்னார்கள். வாயகன்ற எவர்சில்வர் பாத்திரம் அந்தக் கடையிலேயே இருந்தது. அதை வாங்கினார்கள். சிறிய தாமிரப்பாத்திரமும் வாங்கிக் கொண்டார்கள். மருந்துக் கம்பெனிக்கு சப்ளை செய்கின்ற இன்ஜெக்ஷன் பம்ப் என்கிற மிஷினை வாங்கினார்கள். அதை பாட்டிலில் வைத்து பெடலை அழுத்த சரக்கென்று நூறு மில்லி லிட்டர் உறிஞ்சி பாட்டிலில் கக்கியது. அளவு மாற்றுகின்ற விஷயமும் அதில் இருந்தது. சீல் வைக்கிற மிஷின் எப்படி வேலை செய்கிறது என்று பார்த்தார்கள். பட்டையான மூடியை உள்ளே வைத்து சரக்கென்று அதுவே திருகி சீல் செய்தது. பிறகு

பாட்டில் கம்பெனிக்குப் போனார்கள். பிளாஸ்டிக் பாட்டில் விதம் விதமாகப் பார்த்தார்கள். புதிய மாடல்களை நாலைந்து கொண்டு வரச் சொன்னார்கள். கிட்டத்தட்ட ஒருவாரம் ராப்பகலாய் அலைந்தார்கள்.

''நீங்க சொல்றது நீலிபிருங்காலி தைலம் மாதிரி இருக்கே.''

அன்னபூரணியை விசாலாட்சி கேட்டாள்.

''ஆமாம். நீலிபிருங்காலிதான். அதுதான் ஐவர் தைலம். நீலிபிருங்காலின்னு வித்தா என்ன. ஊர்ல ஏகப்பட்டபேர் நீலிபிருங்காலி விக்கறான். ஆனால், எதுவுமே நல்லாயில்லை. சரக்கு சுத்தம் கம்மி. நாம சரியானபடி வித்தா ரொம்ப நல்லாயிருக்கும். எடுத்து தலையில வச்சவுடனேயே சில்லுனு சொல்லணும். பச்சைக் கற்பூரத்தை வேற ஒரு படிமானத்துக்குக் கொண்டு வந்து சொட்டு சொட்டா விட்டுடணும்.''

அன்னபூரணி சொல்ல மற்றவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

பெரிய அடுக்குப்பாத்திரங்கள் முதன் முதலில் வந்து இறங்கின. மோட்டார் வைத்து நீண்ட மத்து ஒன்று ஸ்டாண்டோடு அவர்களுக்காகவே செய்யப்பட்டு மறுநாள் வந்தது. பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி அந்த மோட்டாரை உள்ளே வைத்து இயக்க தண்ணீர் நுரைத்துக்கொண்டு வெளியே வந்தது. முழு வேகத்தில் கடைவது புரிந்தது.

அகத்திக்கீரையை, கரிசலாங்கண்ணியை, செம்பருத்தியை உலரவைத்து,ஊறவைத்து தண்ணீரை, நெல்லிமுள்ளியை, கசகசாவை உலர்த்தித் தூளாக்கி அதையும் ஒன்றாகச் சேர்த்து மத்தில் வைத்துக் கலந்துகொண்டார்கள். கலந்து கொண்டதை தனியே காய்ச்சினார்கள். காய்ச்சியதை முறுகின நல்லெண்



ணெயில் கலந்தார்கள். மறுபடியும் மத்தால் கடைந்தார்கள். பச்சைக்கற்பூரத்தை வஸ்த்ரகாயம் செய்து அதை ஐநூறு மில்லிலிட்டர் விட அதுவும் மத்தால் சரியாகக் கரைக்கப் பட்டது. எண்ணெய் முழுவதிலும் அந்தப் பச்சைக் கற்பூரத்தைலம் பரவியது. நல்ல நெடியான வாசனை எழுந்தது. கசடுகள் அடியில் தங்கட்டும் என்று அவர்கள் அந்தப் பாத்திரத்தை அசையாமல் வைத்திருந்தார்கள். மேலோட்டமாக அசையாமல் வைத்திருந்தார்கள். மேலோட்டமாக மெல்ல எடுத்து தினமும் தலைக்குத் தேய்த்துக் கொண்டார்கள். சில்லென்று கண்ணில் குளுமை தாக்குவதை உணர்ந்தார்கள்.

''நல்லாயிருக்கு. வாசனையா இருக்கு, ஆனா, கொஞ்சம் நெடியா இருக்கே. இல்லை. இதை காலையில் தேய்ச்சுகிட்டு பஸ்ல போனீங்கன்னா பக்கத்துல இருக்கறவன் கொஞ்சம் திரும்பி முறைச்சுதான் பார்ப்பான். இது ராத்திரி துடைச்சுக்கற தைலம். தூங்கப் போறத்துக்கு முன்னாடி தலையில பரபரன்னு அழுத்தித் தேய்ச்சுகிட்டோம்னா அந்த எண்ணெய் மண்டை ஓட்டுல இறங்கி குளுமையைக் கொடுக்கும். பிறகு கார்த்தால எழுந்தவுடனே தலைக்கு சீக்காயோ, ஷாம்ப்போ போட்டு அலசிட்டு அந்த ஷாம்பூ தலையோட லேசா தேங்காய் எண்ணெய் வச்சு வாரிட்டு ஆபீஸ் போயிடணும். இல்லை, தேங்காய் எண்ணெய் இல்லாதகூட ஆபீஸ் போயிடணும். எண்ணெய் போட்டா தூசு ஒட்டும். காலையில ஷாம்பூ போட்டு உலரவிட்டுட்டு ராத்திரி எண்ணெய் தடவிக்கறதுதான் நல்லது.''

''ஏங்க நாம தேங்கா எண்ணெயே வித்தா என்னா, ஐவர் தேங்காய் எண்ணெய்னு.'' அறிவானந்தம் சொல்ல மற்றவர்கள் அவரை வியப்போடு பார்த்தார்கள்.

''இந்த ஐவர் தைலத்தை இரவு தூங்கப்போகும் முன்பு நன்றாகத் தலையில் தடவி விரல்களால் தலையை நன்றாக

மசாஜ் செய்து விடவும். பகல் முழுவதும் உழைத்த களைப்பை, கண்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை இந்தத் தைலம் விரைவில் நீக்கும். கண்ணிலிருந்து சிலசமயம் தண்ணீரையும் வரவழைக்கும். சிலருக்கு லேசாக ஜலதோஷத்தையும் கொடுக்கலாம். உள்ளிருக்கும் கெட்ட நீரை இந்தத் தைலம் வெளியேற்றும் முயற்சிதான் இது. மறுநாள் காலை எழுந்து சிகைக்காயோ, ஷாம்பூவோ போட்டு நன்றாகத் தலையை அலசி விட்டு பிறகு ஈரம் உலர்ந்தபின் ஐவர் தேங்காய் எண்ணெயை உள்ளங்கையில் விட்டு தலையில் தடவிக் கொண்டு படிய வாரிவிடவும். இரவு ஐவர் தைலம் செய்த வேலையின் பாதியை காலையில் ஐவர் தேங்காய் எண்ணெய் செய்துவிடும்.''

''நல்லாயிருக்கு. நல்லாயிருக்கு. இன்னும் வேற எதுனா சேர்க்க முடியுமா.''

அறிவானந்தம் பாராட்டினார்.

சுகுமாரன் யோசித்தான்.

''வழுக்கையைப் போக்க மருந்தே இல்லை என்பதுதான் சத்தியமான விஷயம். விஞ்ஞானத்தில் இதுவரை எந்த முயற்சியும் இதற்குப் பலனளிக்கவில்லை. வழுக்கை பரம்பரை விஷயம். இந்த வழுக்கையைத் தள்ளிப் போட, வராது தடுக்க ஐவர் தைலம், ஐவர் தேங்காய் எண்ணெயை உபயோகியுங்கள்.''

''அடி சக்கை... இது ரொம்ப நல்லாயிருக்கு சுகுமாரா. நம்ம பாட்டில் மேல ஒரு படம் ஒட்டணுமே, அதுக்கு என்ன பண்ணப் போறோம்.''

சுகுமாரனும், அவன் மனைவியும் இரவெல்லாம் யோசித்து ஒரு பெரிய படம் போட்டார்கள். அந்தப் படத்தை ஸ்கேன் செய்து சிறிதாக்கினார்கள்.



நீண்ட கூந்தலுடைய ஒரு பெண் முன்னணியிலும், பின்னால் கிரீடத்தோடு அரச குமாரர்கள் ஐவர் இருப்பதும் படமாகப் போடப்பட்டிருந்தது.

''இப்போ ரேட் சொல்லுங்க.''

அன்னபூரணி கணக்குப் போடத்துவங்கினாள். அறிவானந்தம் உதவி செய்தார்.

''பாட்டில்ல எவ்வளவு விலை போடுவீங்க. எத்தனை விலைக்குக் கொடுப்பீங்க.''

''இரு நூறு மில்லிலிட்டர். பன்னெண்டு ரூபா.''

''கடைக்காரருக்கு எவ்வளவு கிடைக்கும்.''

''ரெண்டு ரூபா கிடைக்கும்.''

''போதாது. ஒம்போது ரூபா விலைக்கு கொடுப்போம். அதுல ஒரு ரூபா, காசா இல்லாத பொருளா கொடுப்போம். அதாவது பத்துபாட்டில் வாங்கினா பதினோராவது பாட்டில் இனாம்.''

''நாம் லோக்கல் பேப்பர்ல விளம்பரம் கொடுத்துத் தான் இதை வாங்கணும்.''

''பியூட்டி பார்லருக்கு இந்த எண்ணெயைக் கொடுத்துப் பார்ப்போம்.''

''தொடமாட்டாங்க. அவங்க எண்ணெய் போடற ஜாதி இல்லை.''

எண்ணெய் போடாம மண்டை காயஞ்சுதுன்னா முப்பது வயசுல எல்லா பொம்பளையும் மொட்டை ஆயிடுவா. பியூட்டி பார்லருக்கு வந்தவுடனே தலை முழுக்க எண்ணெயை அப்பி நல்லா சொதசொதன்னு போட்டு மசாஜ் பண்ணிவிடறது தான் அவங்க வழக்கம்.''

''நான் இன்னொண்ணு சொல்றேன். எல்லா சலூனுக்கும் கொடுத்தா.''

''கொடுக்கலாம். வெறுமனே கொடுக்காத, ஒரு அட்டைப்பெட்டி போட்டு அந்த அட்டைப் பெட்டியோட வைக்கச் சொல்லலாம்.''

''வைப்பாங்களா. தூக்கிப் போட்டுருவாங்க.''

''கேட்டுக்கறது தான். கெஞ்சறது தான்.''

அன்னபூரணி சொல்ல அவர்கள் சரியென்று சொன்னார்கள்.

அன்று மாலை பாட்டிலில் எண்ணெய் ஊற்றும் இன்ஜெக்ஷன் மிஷின் வந்தது. அலுமினிய ட்ரே தேவைப்பட்டது. முப்பத்தெட்டு பாட்டில்கள் அடுக்கும் வகையில் ஒரு ட்ரேயை வடிவமைத்து மறுநாளே அறிவானந்தம் கொண்டு வந்தார். அடியில் கசண்டு நின்றது. இருக்கட்டும் என்று அன்னபூரணி அதைத் தனியாக எடுத்து வைத்தாள். மூன்று லிட்டர் நல்லெண்ணையை ஊற்றி அந்தக் கசண்டை மறுபடியும் கைவிடாது கிண்டினாள். மறுபடியும் வடிகட்டினாள். வடிகட்டியதைக் காயவைத்தாள்.

அதைத் தனியே பாட்டிலில் அடைத்து சீல் வைத்துக் கொண்டார்கள். இதற்கு வண்ணமயமான பெட்டியைப் போட்டார்கள். அந்தப் பெட்டியிலும் நீண்ட தலைமுடியை நீவியபடி ஒரு பெண்ணும் பின்னால் ஐவரும் நின்றிருந்தார்கள்.

கசண்டிலிருந்து எடுத்த எண்ணெயை அக்கம்பக்கம் வினியோகித்தார்கள். நண்பர்களுக்குக் கொடுத்தார்கள்.

அறிவானந்தம் தனக்கு எதிர் வீட்டிலும், பக்கத்து வீட்டிலுமிருக்கும் நண்பர்களுக்கு அதைக் கொடுத்து



தலையில் பூசிக்கொள்ளச் சொல்லி இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து அவர்களிடம் விசாரணை செய்தார்.

''தூக்கமே வராத இருந்தது. நல்லா தூங்கறேன் போங்களேன். தொண்டை எரிச்சல் இருந்தது. சரியாப் போச்சு. எப்படீங்க. இந்த எண்ணெயா காரணம். ஏங்க கண்ணுலேர்ந்து ரொம்ப நீர் வடிஞ்சது. மூக்குலேர்ந்து தண்ணியா ஊத்திச்சு. இதுல போட்டிருந்தாப்போல கெட்ட நீரெல்லாம் வெளியேறிருச்சின்னு நினைக்கறேன்.''

மக்கள் சந்தோஷமாக தங்கள் தயாரிப்பை வரவேற்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

ஆனால், வியாபாரிகள் மக்களைப் போன்று எளிதானவர்கள் அல்ல. தயாரிப்பு எப்படியாக இருந்தாலும் தயாரிப்பவன் சாதாரணமாக இருக்க அவர்களிடம் ஆட்டம் காண்பிப்பது தான் வியாபாரிகளின் வேலை.

# 24

**3**.5.2002

''ஏம்மா இந்த பாட்டிலை நாமளே வியாபாரம் பண்ணணுமா அல்லது இந்த எண்ணெயை வச்சி வியாபாரம் பண்ணிக்கோன்னு யார்கிட்டயாவது கொடுக்கலாமா.''

''நல்லாயிருக்கே. எதுக்காக இன்னொருத்தர்கிட்ட கொடுக்கறது.''

''இல்லையம்மா ஒரு பாட்டிலோட விலை என்ன அடக்கமாகுது அப்படின்னு பார்த்து அதுக்குமேல ரெண்டோ

மூணோவச்சு வித்துட்டா அவன் காசு கொடுத்து வாங்கிட்டுப் போறான்.''

''காசு கொடுத்து வாங்கமாட்டான் தம்பி.''

அறிவானந்தம் சுகுமாரன் பேசியதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

''கொண்ணாந்து சரக்கை வச்சிட்டுப்போ. நான் வெளிய வித்துப் பார்க்கறேன். வித்து நல்லபடியா போனாக்க உனக்கு காசு தரேன்னு சொல்வான். நீ அவங்கிட்ட தொங்கிட்டு இருக்கணும். அவங்கிட்ட தொங்கறதுக்கு பதிலா நாமளே போய் நேரா கடை கடையா நின்னோம்னா இன்னும் நல்லாயிருக்கும். கடை கடையா நின்னு இந்த எண்ணெய் நல்லபடியா போச்சுன்னா அவனே வந்து நிப்பான். அப்போ நாம பேசலாம்.''

''யாருங்க அந்த மாதிரி ஆளுங்க உண்டோ?''

விசாலாட்சி குறுக்கே புகுந்து கேட்டாள்.

''உண்டு. மார்க்கெட்டிங் கம்பெனின்னு பேரு. எந்த ப்ராடக்ட் நல்லா போகுதோ அதை வித்துத் தரேன்னு சிலபேர் வருவாங்க.

ஆயிரம் பாட்டில்களை எடுத்துக் கொண்டு கூண்டு ஆட்டோவில் ஏறிக்கொண்டு சுகுமாரனும், அறிவானந்தமும் கிளம்பினார்கள். பெரிய பெரிய கடைகளில் கொண்டு போய் பாட்டில்களைக் காண்பித்தார்கள்.

''வச்சிட்டுப்போங்க. வித்துதுன்னா நல்லாயிருக்கும். என்னா விளம்பரம் பண்றீங்க.''

விளம்பரத்தைக் காட்டினார்கள்.



பெண்கள் பத்திரிகையிலும், ஆன்மீகப் பத்திரிகையிலும் விளம்பரம் மலிவாக இருந்தது.

ஆறு பாட்டில்களை எடுத்து ஒவ்வொரு சிலைக்கு முன்னாலும் வைத்து ஏழாவது பாட்டிலை எடுத்து எல்லாச் சிலைகளின் முகத்திலும் துடைத்து வாயகன்ற பாத்திரத்தில் அந்தக் கசண்டைக் கொட்டி மெல்லிய துணியால் மூடி அன்னபூரணி வைத்தாள். அந்தப் பச்சைக்கற்பூர வாசனை அந்த இடம் முழுவதும் நெடியாகவே அடித்தது. தாண்டிப் போகும்போதும் என்ன என்று திரும்பிப் பார்த்தார்கள்.

பஞ்சபாண்டவர்களை வழிபட்டால் எல்லாவிதமான நல்ல பேர்களும் கிடைக்குமென்று அந்தக் கோவிலைப் பற்றிய குறிப்பு வெளியாயிற்று. வரத்துவங்கிய ஜனங்கள் என்ன வாசனை இது என்று கேட்டார்கள். என்ன ஊதுவத்தி என்று விசாரித்தார்கள். திருநீறா என்று கேட்டார்கள். சென்ட் செய்றீங்களா என்றார்கள். பச்சைக் கற்பூரம் என்று சொல்லாமல் ஐவர் தைலம் என்று சொல்லப்பட்டது.

''ஆமா, ஆமா. நாங்கூட பேப்பர்ல பார்த்தேன்'' என்று விளம்பரத்தைக் குறிப்பிட்டார்கள்.

எதிர்க்கடையில் ஒரே நாளில் பன்னிரெண்டு பாட்டில்கள் விற்பனையாயின.

அவன் இன்னொரு பன்னிரெண்டு பாட்டில் வாங்கிக் கொண்டு போனான். ஆறு பாட்டிலுக்குக் காசு கொடுத்தான்.

அந்த வீட்டில் எல்லார் மேலும் ஐவர் தைலம் வாசனை – அதாவது பச்சைக்கற்பூரம் வஸ்த்ரகாயம் செய்த வாசனை அடித்தது.

இரவு படுத்துக் கொண்டிருந்த போது அன்னபூரணியைக் கலாவதி கேட்டாள்.

''இது இத்தோட முடியற விஷயமா. தொடர்ந்து செய்துகிட்டிருக்கணுமில்ல. நம்மால செய்ய முடியுமா.''

''முடியாது கலாவதி. நாம ஆரம்பிச்சு வைக்கணும். இதுக்கு பெண்களைத் தயார் பண்ணி அவங்கள வச்சி வேலை வாங்கணும்.''

அன்னபூரணி பணிப்பெண்ணுக்கு எண்ணெய் டிரம்முக்குள் எப்படி மின்சார மத்தை இறக்குவது என்று சொல்லிக் கொடுத்தாள்.

''மேலோட்டமா வைக்காத. மூஞ்சியெல்லாம் தெறிக்கும். டப்புன்னு அரை லிட்டர், முக்கால் லிட்டர் வெளிய தெறிச்சுரும். உள்ள நல்லா கொண்டுபோ. நிதானமான ஸ்பீட்ல ஆரம்பி. மொள்ள மொள்ள வேகத்தை அதிகப்படுத்து. நுரைச்சு நுரைச்சு வரபோது வேகத்தை லேசா குறைச்சு மத்தை நிறுத்திட்டு வெளிய எடு. நுரையைத் தூக்கி ஓரம்போடு. அப்படியே ஆடாத அசையாத வை.''

அந்தப் பெண் இடுப்புப் புடவையைத் தூக்கிக் கொண்டு ஸ்டூலில் ஏறி மெல்ல மத்தை எண்ணெய்க்குள் இறக்கியது. மத்தை உறுதியாகப் பிடித்துக்கொண்டு விசையைப் போட்டது. விசை போட்டதும் மத்து உள்ளுக்குள் சுழல ஆரம்பிப்பது தெரிந்தது. அதனுடைய அதிர்ச்சி என்ன என்று தெரியாத பெண் மெல்ல தடுமாறினாள்.

''ஆஃப் பண்ணிடேன்.''

''இல்லீங்க. வேணாம்'' என்று அசையாது நின்றாள்.

நுரைத்துக் கிளம்பியபிறகு மெல்ல மத்தின் வேகத்தைக் குறைத்து நிறுத்திவிட்டு மத்தை வெளியே எடுத்து ஸ்டூலில் இருந்து கீழே இறங்கினாள்.

எல்லோரும் அவளைப் பார்த்துச் சிரித்தார்கள்.



பார்க்க சுமாராக இருந்தாள். ஆனால், புஜங்களில், கைகளில், விரல்களில் ஒரு வலிவு இருந்தது.

அவள் முகம் கழுவிக்கொள்ளப் போனாள்.

வேலை செய்கிற பெண்களுக்கு சோப்பு வாங்கித் தர வேண்டும், சீப்பு வாங்கித் தரவேண்டும். அதுமட்டுமல்லாது, புடவை நாசமாகாமல் இருக்க ஏப்ரன் வாங்கித் தர வேண்டும். முடியில் எண்ணெய் கொட்டாமல் இருக்க தலைக்கு குல்லாய் வாங்கித் தரவேண்டும்.

அன்னபூரணி யோசித்துக் கொண்டே சோப்பு பிரித்து முகம் கழுவும் பெண்ணிடம் கொண்டு போய் நீட்ட அவள் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''ஏன்க்கா மேல எல்லாம் எண்ணெயை விட்டுக் கிட்டீங்க.'' ஒரு சின்னப்பெண் கேட்டாள்.

''என்னாடி பண்றது. அம்மா படிச்சு படிச்சு சொன்னாங்க. இத்தினி வேகமா சுத்தம்னு தெரியாத கைய நடுவுல விட்டேன்.''

''புடவை பாழாயிடுச்சுக்கா''

''ஆமாம் போ... இருக்கறது நாலு புடவை. வேலைக்கு வந்த தினமே ஒண்ணு போச்சு.''

அன்னபூரணி திடுக்கிட்டு நின்றாள்.

குண்டுமணி தங்கம்கூட இல்லாமல், கழுத்தில் பிளாஸ்டிக் செயினுடன், காதுகளில் பித்தல் ஜிமிக்கியுடன் அந்தப் பெண் இருக்கும் நிலைமை அவள் ஏழ்மையைக் காட்டியது.

அதே தெருவிலுள்ள துணிக் கடைக்குப் போய் முன்னூறு ரூபாய்க்குப் புடவை வாங்கி வந்தாள்.

''சமைக்கறதுக்குன்னு ஏப்ரன் விக்கறாங்களேப்பா. அதை நாலு வாங்கி வேலை செய்யற பொண்ணுங்களுக்குக் கொடுத்துடலாமா மகனை வேறொரு இடத்திற்கு அனுப்பினாள்.

மற்றொரு ஆயிரம் பாட்டில்கள் தயாராயின.

விற்பனைக் கூடத்திற்கு எடுத்துப் போகும் அறிவானந்தம் முயற்சியில் போனமுறை அனுப்பிய பாட்டில்கள் மிகக் குறைவாகவே போயிருந்தன.

வீடு லேசாகக் கலவரப்பட்டது. தேவையில்லாது இந்தத் தொழிலில் இறங்கிவிட்டோமோ என்று அன்னபூரணி யோசிக்கத் துவங்கினாள்.

''வேற எப்படி விளம்பரம் பண்றது. வாங்கறதுக்கு என்னா செய்யறது. யார்கிட்டயும் கொடுத்து கொடுக்கச் சொல்லாத நாமளா ஒரு நாளைக்கு முன்னூறு நானூறு பாட்டில் எடுத்துட்டுப்போயி வீடு வீடா இலவசமா கொடுத்துட்டு வருவோம். சிந்தாதிரிப்போட்டையை விட்ருவோம். இங்க இருக்கற வெஸ்ட்மாம்பலம் போவோம்'' என்று ஆரம்பித்தார்கள்.

ஆட்டோ ரிக்ஷாக்களில் ட்ரே ட்ரோயாக எண்ணெய் பாட்டில் எடுத்துக்கொண்டு போய் காலையில் எட்டரை மணிக்கு வேலைக்குப் போகும் பெண்களிடம் உபயோகப் படுத்தும்படி இருநூறு மில்லி லிட்டர் பாட்டில்களைக் கொடுத்தார்கள்.

''இவ்ளோ பெருசா கொடுக்கறீங்களே.''

''யூஸ் பண்ணிட்டு சொல்லுங்க. ரெண்டுநாள் யூஸ் பண்ணா தெரியாது. பத்துநாள் எண்ணெய் வச்சிருக்கோம். உபயோகப்படுத்திட்டு தயவுசெய்து எங்களுக்கு எழுதுங்க''



என்று, என்ன கலந்திருக்கிறது என்பதற்கான விளம்பரக் காகிதமும் கொடுத்தார்கள்.

பெரிய டிபார்ட்மென்ட் ஸ்டோர் ஒன்று ''பத்து பாட்டில்தானே கொடுத்திருக்கீங்க. ஒரு நூறு பாட்டில் கொடுத்தனுப்புங்க'' என்று ஒரு பிற்பகல் போன் செய்தது.

'இவ்ளோ பாட்டில் போகுங்களா.''

''போகலைன்னா திருப்பி அனுப்பிடறோம்.'' என்று அலட்சியமாகப் பேசியது.

அவர்களுக்கு பாட்டில் அனுப்பலாமா, வேண்டாமா என்று அன்னபூரணி யோசித்தாள். அன்று மாலை வயதான ஒரு ஆள் சட்டையும், பேண்ட்டும், டையும் கட்டிக்கொண்டு வந்தார். தன்னை மார்க்கெட்டிங் மேனேஜர் என்று சொன்னார்.

''ஒரு சமாச்சாரம் நல்லாப் போகணும்னா என்னைமாதிரி ஆளுங்க உங்களுக்குத் தேவை. எப்படி மார்க்கெட் பண்றது, என்னா செய்யறதுன்னு எங்களுக்குத் தெரியும்.''

''வரலைன்னா...''

''நீங்க ஒண்ணும் எங்களுக்குக் கொடுக்க வேண்டாம்.''

''வந்தா.''

''மூணு வருஷத்துக்கு பத்து பர்சென்ட் கொடுக்கணும். இல்லை, ஒரு குறிப்பிட்ட தொகை கொடுக்கணும்'' என்று பேசத் துவங்கினான்.

அவரோடு வந்த ஒரு இளைஞனை மெல்ல சுகுமாரன் கை குலுக்கிப் பேசினான். தனியே அழைத்துப் போனான்.

''எங்க இருக்கீங்க ஸார்'' என்று கேட்டான். விலாசம் குறித்துக் கொண்டான்.

வந்தவர் போனதும் அவனும், அன்னபூரணியும், அறிவானந்தமும் அவனுடைய வீடு தேடி சைதாப்பேட்டைக்குப் போனார்கள்.

சைதாப்பேட்டையின் ஒரு சிறிய சந்தில் அவன் லுங்கியும் வெறும் மார்புமாய் உட்கார்ந்து தினத்தந்தி பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். காலையில் டையும், சென்ட்டுமாய் வந்தவனா இவன் என்று ஆச்சரியப் படவைத்தான்.

இவர்களைப் பார்த்ததும் அவன் திகைத்துப் போனான்.

''என்ன வேண்டும்'' என்று பதறினான்.

''இல்லை. எங்களுக்கு மார்க்கெட்டிங்ல ஏதாவது உதவி செய்ய முடியுமா'' என்று சுகுமாரன் கேட்க, ''அதான் பெரியவர் வந்தாரே.''

''பெரியவர்மேல எங்களுக்கு நம்பிக்கை இல்லை. உங்க மாதிரி இளைஞர்கள்தான் எங்களுக்கு வேணும்'' என்று அன்னபூரணி சொன்னாள்.

அறிவானந்தம் தலையாட்டினார்.

''உங்களுக்கு என்னா வேணும்னு சொல்லுங்க.''

''ஏன் பெரியவர் எங்களைத் தேடிட்டு வந்தாரு.''

''உங்க ப்ராடக்ட் நல்லா போகுதுங்க. அதனாலதான் தேடிக்கிட்டு வந்தாரு. நல்லா போகறதுக்கு வாய்ப்பிருக்குன்னு தெரிஞ்சுபோச்சு. அதனாலதான் வந்தாரு.''

''எதைவச்சு அப்படிச் சொல்றீங்க.''

''ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு அயிட்டம் எடுத்துப்போம். ஹேர் ஆயில் பக்கம் நாலு மணி நேரம் நிப்போம். அந்த நாலு மணி நேரத்துல ஐவர் தைலத்தை கிட்டத் தட்ட அறுவத்தேழு பேர் தொட்டுப் பார்த்திருக்காங்க.



இருவது பர்சென்ட். நூறு சதவீதம் வந்தாங்கன்னா அதுல இருவது சதவீதம் உங்க ஆயிலை வாங்கியிருக்காங்க. இது வாங்கு, சில்லுனு இருக்கு அப்படின்னு ரெண்டுபேர் ரெக்கமண்ட் பண்ணியிருக்காங்க. நீங்க முயற்சி செய்தீங்கன்னா நல்லா வந்துரும்.''

''அந்தப் பெரியவர் மூலமாவே முயற்சி செய்யலாமா.''

''வேணாம். அந்த ஆள் ஏமாத்துக்காரன். ஏமாத்திடுவான். வேற ஏதாவது கம்பெனி மூலமா செய்யுங்க.''

''கம்பெனி இல்லாம நாமளா செய்ய முடியாதா.''

''அவங்களுக்கு நிறைய தந்திரம் தெரியும். அந்த தந்திரம் உங்களுக்குத் தெரியாது.''

''யோசிச்சு பண்ணலாமேப்பா.

பெரியவர் எவ்வளவு சம்பளம் தரார்.''

''என்னத்த கொடுத்துடறான். ரெண்டாயிரத்து நானூறு ரூபா. டை கட்லேன்னா நாய்மாதிரி கத்துவான். ஷூக்கு ஏன் பாலீஷ் போடலேன்னுவான். குனிஞ்சு போடச் சொல்லுவான். ஷூக்கும் போடச் சொல்லுவான். ஒரு மாதிரி வெறுப்பு ஏத்துவான் ஸார்.''

''உன்னால் முடியும் தம்பி. எங்களோட சேர்ந்துடறியா. எப்படி மார்க்கெட் பண்றதுன்னு மத்தவங்ககிட்ட கேட்டாவது சொல்லு.''

''என்ன சம்பளம் தருவீங்க.''

''மூவாயிரம் ரூபா.''

அவன் முகம் சட்டென்று பிரகாசித்து அடங்கியது.

அந்தப் பிரகாசத்தை சுகுமாரன் குறித்துக்கொண்டான்.

# 25

## 10.5.2002

லுங்கியும், பனியனுமாய் உட்கார்ந்திருந்த அந்த மார்க்கெட்டிங் மேனேஜரின் உதவியாள் தயக்கத்தோடு பேச ஆரம்பித்தான்.

''நான் உங்ககிட்ட வேலை செய்யறத பத்தி ஒருநாள் பொறுத்து சொல்றேன்.''

''ஏன், எதுக்காக ஒரு நாள்...'' சுகுமாரன் கேட்டான்.

''என்னால செய்ய முடியுமான்னு தெரியலை. அந்த நம்பிக்கை இன்னும் எனக்கு வரலை. சும்மா அந்தக் கிழவன்கிட்ட சுற்றிக் கிட்டிருக்கேனே தவிர எனக்கு எந்த சூட்சுமமும் சரியா தெரியாது.''

''சும்மா எங்களோட பேசு. அதுலயே நாம் சூட்சுமம் கண்டுபிடிச்சுடலாம். அந்தக் கிழவர் பெரிய கம்பெனியா.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. வீட்டு மாடியில் சின்னதா ஒரு ரூம் போட்டு பெருசா போர்டு போட்டு நடத்திக்கட்டிருக்கார். இதைவிட பெரிய கம்பெனியெல்லாம் இருக்கு.''

''பெரிய கம்பெனின்னா...''

''பாம்பேல இதுக்குன்னு நிறைய கம்பெனிங்க உண்டு. முதல்ல உங்க ப்ராடக்ட்டை பாம்பேக்கு அனுப்பணும். பூனாக்கு அனுப்பணும். விசாகப்பட்டினம் அனுப்பணும்.''

''ஏம்ப்பா...''



''அங்கெல்லாம்தான் கலப்படமான ஜனங்கள் இருக்காங்க. எல்லா ஊர் ஜனங்களும் அந்த இடத்துல இருக்காங்க. அவங்க கிட்ட ஒரு ப்ராடக்ட் நல்லா போச்சுன்னா இந்தியா முழுக்க நல்லா விக்கும் அப்படின்னு சொல்லுவாங்க.''

''அவ்ளோ பெருசா பண்ணவேண்டாம். சிறுசா தமிழ் நாட்டுக்குள்ளயே பண்றதுக்கு மார்க்கெட்டிங் இருக்கா.''

''இருக்குங்க. ஆனாலும், உங்க தயாரிப்பு பத்தி எனக்கொரு சந்தேகம் உண்டு.''

''என்ன தம்பி?''

''கூந்தல் தைலம் இப்போ யாரும் உபயோகப்படுத்தறது இல்லை. தலைக்கு எண்ணெய் போடறது இல்லை. ஷாம்ப்பூ போட்டு பறக்க விட்டுடறாங்க. முடி கொட்டிப் போயிடும். இது ராத்திரி உபயோகப்படுத்தற தைலம். படுக்கப் போறதுக்கு முன்னாடி ஒரு உள்ளங்கை அளவு எடுத்து தேய்ச்சு கிட்டோம்னா புத்தியும் குளுமையா இருக்கும். கண்ணும் குளுமையா இருக்கும். தலை முடியும் நல்லா வளரும். காலையில் எழுந்து ஷாம்ப்போ, சீக்காயோ போட்டுக்கிட்டா எல்லாம் சரியாப்போயிடும். அதை திரும்பத் திரும்ப சொன்னீங்கன்னாதான் நல்லாயிருக்கும். இதுக்குத் தனி மருத்துவ குணம் இருக்குன்னு ஓரமா ஒதுக்கி வச்சிங்கன்னா தான் நல்லாயிருக்கும். தேங்காய் எண்ணெயோட வச்சிட்டா ஐயோ... தலைக்கு யார் எண்ணெய் போடறது அப்படின்னு நகர்ந்து போயிடறாங்க சிலபேர். அந்த ஆளுங்களை நாம புடிச்சு இழுக்க வேண்டாமா.''

''தம்பி பிரமாதமா பேசறீங்க. நீங்க போறும் தம்பி எங்களுக்கு. வாங்களேன் நாளைக்கு காலையில.'' சொல்லி விட்டு வந்தார்கள்.

அவன் காலை எட்டு மணிக்கே டை கட்டிக்கொண்டு வீட்டு வாசலுக்கு வந்து விட்டான். ''அவர் வேலையை ரிசைன் பண்ணலையா.''

''இல்லை, வயிறு வலிக்குதுன்னு லீவு போட் டுட்டேன்.''

''ஏன், விட்டுடலாமே.''

''நீங்க யாரு, எவ்ளோ தூரம் உங்களுக்கு வசதி இருக்கு. தொடர்ந்து எத்தனை மாசம் கொடுப்பீங்க, வேலையில சேர்த்துக்கிட்டு உபயோகப்படுத்திக்கிட்டு தூக்கிப் போட்டுடு வீங்களா அப்படின்னு பார்க்க வேணாமா. அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டா சரியா வருமா.''

அவன் முகத்திற்கு நேரே பேசினான். அவர்கள் மெல்ல வாயடைத்துப் போனார்கள்.

''சரி, நீ கேட்கறதும் நியாயமாத்தான் இருக்கு. நீ எங்களை ஏமாத்த மாட்டேன்னு என்ன நிச்சயம்? எங்க தயாரிப்பினுடைய ரகசியத்தைத் தெரிஞ்சிக்கிட்டு வெளியில சொல்லி இதைவிட நல்லா பண்ணலாம்னு வேற பணக்காரனைத் துண்டிவிட்டு இதே மாதிரி இன்னொரு தைலம் கொண்டாரத்துக்கு உனக்கு எவ்ளோ நேரமாகும்.''

''சரி, என் மேலயே உங்களுக்கு சந்தேகம் இருக்கு. நாம ஒருத்தருக்கொருத்தர் ஏமாத்திக்காம இருக்கறதுக்கு இன்னும் பேசலாம். நான் உங்களுக்கு ஆறு மாசமா வேலை செய்யறதா பாண்டு எழுதித்தரேன். இப்போ ரெண்டாயிரம் பாட்டில் தான் பண்ணியிருக்கீங்க. ஆறாவது மாசம் இருவத்தஞ்சாயிரம் பாட்டில்கள் பண்ணும்படியா உங்களுடைய விற்பனையை நான் அதிகரிச்சுக் காட்டினா எனக்கு என்ன தருவீங்க.''

''மூணு மடங்கு சம்பளத்தை ஜாஸ்தி பண்ணிடுவேன்.''



''எப்போ.''

''ஆறாவது மாசம்.''

''போக்குவரத்து செலவெல்லாம் தரணுமே.''

''கொடுக்கப்படும்.''

டெலிபோன் வசதி, உட்கார்ந்து பேசறதுக்கு ஒரு இடம் அந்த மாதிரி வேணுமே.''

''செய்துடலாம். ஐவர் கோயில் நிலம் இருக்கு.''

''நல்ல ஐடியா. ஆனால் உங்க ஊருக்குத்தான் தெரியும். பக்கத்துல சில இடங்களுக்குத் தெரியுது. சென்னை முழுக்க தெரியலை. எப்படித் தெரியப்படுத்தறது.''

''பேப்பர் வசதி, வாரப் பத்திரிகைகள் வசதி.''

''அதைவிட ஐவர் கோவிலுக்கு வாருங்கள் அப்படின்னு ஒரு போஸ்டர் ஒட்டுங்க. சகல நலங்களும் பெற உங்களுக்கு உதவ தருமர், பீமர், அர்ஜுனன், சகாதேவன், நகுலன் தயாராக இருக்கிறார்கள் அப்படின்னு அதை பெருசா கொட்டை எழுத்துல போடுங்க.''

அவன் டிசைன் செய்து கொடுத்தான். போஸ்டர்கள் மூன்றாம் நாளே ஒட்டப்பட்டன.

வேலை செய்கிற பெண்களுக்கும், அவனுக்கும், இன்னும் ஒரு உதவியாளனுக்கும் வீட்டிலேயே சாப்பாடு தர ஏற்பாடாகியது.

அவனும், சுகுமாரனும் மோட்டர் சைக்கிளில் பல இடங்களுக்குப் போய் தலைக்கு தைலம் பற்றி என்ன பேசுகிறார்கள் என்று விசாரித்தார்கள்.

''இது மேல் மட்டத்துல இல்ல. கீழ் மட்டத்துலையும் இல்ல. நடு மட்டத்துல போகுது. நடு மட்டம்தான் வாங்கறவங்க அதிகமுள்ள இடம். இந்த ஹேர் ஆயிலை அவங்க வாங்க ஆரம்பிச்சுட்டாங்கன்னா உங்களைப் பிடிக்கறதுக்கு ஆளே இல்லை. உங்க முகத்தைப் போட்டு பத்திரிகைகளில் விளம்பரம் பண்ணலாமா.''

''எதுக்கு என் மூஞ்சி.''

அன்னபூரணி திகைத்தாள்.

''உங்க முகம் ரொம்ப அழகா இருக்கு.''

''இதோ பாருங்க யாராவது சினிமாக்காரிய பிடிச்சு விளம்பரத்துல வைங்க. என் மூஞ்சி வேணாம்.''

''இல்லை. அது வழக்கமான பாணி. உங்க முகம் போட்டு நான் உத்தரவாதம் தரேன். என் தலையில அடர்த்தியா முடி இருக்கறதுக்குக் காரணம் ஐவர் தைலம்; இப்படி உசத்தியா ஒரு தைலம் வேற எங்கயும் கிடையாது அப்படின்னு எழுதுங்க.''

சுகுமாரன் மாற்றி மாற்றி எழுதிய வாசகத்தைப் பலரும் பார்த்துப் பாராட்டினார்கள்.

அடுத்த வாரம் எல்லாப் பத்திரிகையிலும் பளிச்சென்று அன்னபூரணியின் படத்தோடு 'நான் உத்தரவாதம் தருகிறேன். முடி வளர ஐவர் தைலத்தை உடனே உபயோகியுங்கள். இரவு நேரத் தைலம் உடல் சூட்டை, கண் எரிச்சலைக் குறைத்து தலைமுடியைக் கருப்பாக்குகிறது. முடியை நீண்டதாய் வளரச் செய்கிறது.'

அந்த ஐந்தே வாக்கியங்களில் அற்புதமான பலன் கிடைத்தது.



எல்லா அங்காடிகளிலிருந்தும் ஆர்டர்கள் வந்தன. திருச்சி, மதுரை, கோவை என்று பல பக்கங்களிலிருந்தும் விசாரணைகள் வந்தன.

இன்னும் மூன்று பெண்களைச் சேர்த்து முழு மூச்சில் தைலம் தயாரிக்க அன்னபூரணி ஆரம்பித்தாள்.

பழைய பெண்கள் மிக சுதாரிப்பாக வேலை செய்ய ஆரம்பித்தார்கள்.

சரக்கு அற்புதமாக நகர ஆரம்பித்து. ஆனால், காசு வருவதுதான் மிகப் பெரிய விஷயமாக இருந்தது. கெஞ்சிக் கூத்தாடி வாங்க வேண்டியிருந்தது.

அன்னபூரணி திகைத்தாள்.

''என்னா... பெரிய பொக்கிஷம் கொண்ணாந்து கொடுத்துட்ட உடனே வந்து காசு கேட்கறியாக்கும். மொள்ளத்தான் தருவோம். நேத்திக்கு கம்பெனி ஆரம்பிச்சு இன்னிக்கு கோடீஸ்வரன் ஆயிடணுமா. போயா...போ'' என்று அடிக்காத குறையாக வெளியே காசு கேட்ட சுகுமாரனைத் துரத்தினார்கள்.

சுகுமாரன் இது தாங்காமல் வீட்டில் வந்து உதடு கடித்து உணர்ச்சி பொங்கப் பேசினான். அவனைச் சமாதானப் படுத்துவது பெரும்பாடாக இருந்தது. கெட்ட வார்த்தைகளை இறைத்தான். அவனை அப்படிப் பேசக்கூடாது என்று அறிவானந்தம் எச்சரித்தார்.

''நான் அங்கயா பேசினேன். இங்கதானே உங்ககிட்ட பேசினேன். ஏன் பேசக்கூடாதுன்னு சொல்றீங்க.''

''இங்க பேசினா அங்கயும் வந்துடும். ஒரு கடைக்காரங்கிட்ட கெட்ட வார்த்தையில பேசிட்டேன்னு வச்சுக்க அப்புறம் உனக்கும் அவனுக்கும் எந்தவிதமான உறவும்

இல்லாது போயிடும். உன்னுடைய சரக்கை வேற யார் விப்பாங்க. உன்னால விக்க முடியுமா? அவன் இதுக்குன்னு இடம் போட்டு, டியூப் லைட் போட்டு, வேலைக்காரங்க போட்டு உட்கார வைச்சுருக்கான். அங்க போய் முப்பது பாட்டிலை ஒரு இடத்துல குவிச்சு வைக்கணும்னா அது சாதாரண விஷயமா.''

''எல்லாத்தையும் வித்துட்டானே.''

''ஆமாம்.. என்னான்ற அதுக்கு. நல்ல விஷயம் தானே.''

''அதுக்குண்டான காசைக் கொடுத்துட வேண்டியது தானே.''

''நம்ம கிட்ட சம்பாதிச்ச காசை எடுத்து அரிசியில போட்டிருப்பான். மிளகாய்ல போட்டிருப்பான். அந்த அரிசியும், மிளகாயும் வித்து இன்னும் லாபம் வரும். அப்போதான் நம்ம காசைப் பிரிச்சு எடுத்துக் கொடுப்பான்.''

''இது அயோக்கியத்தனமா இருக்கு.''

சுகுமாரன் சிறினான்.

''இல்லை. இது ஒரு வழமை. வழக்கம். முப்பது நாள் கிரெடிட்டுன்னு பேரு. அறுபது நாள்ல தருவான். அதை மனசுல வச்சிக்கிட்டுத் தான் நாம விலை வைக்கணும்.''

''அப்போ ஒரு பாட்டில் இருவது ரூபா பண்ணணுமே.''

''வேணாம். இப்போதைக்கு வேண்டாம்.''

அன்னபூரணி குறுக்கே புகுந்து தடுத்தாள்.

''பன்னெண்டு ரூபாய்க்கு நல்ல பொருள் கிடைக்கறதுங்கற நினைப்புலதான் ஜனம் வாங்கிக்கிட்டிருக்கு. முப்பது பாட்டிலும் அவங்கிட்டேர்ந்து போயிடுச்சி. யாரோ அஞ்சு



பாட்டில் வாங்கிட்டு போனதாக் கூட அங்க வேலை செய்யற பொண்ணு சொன்னா. நல்ல வாசனை; தலையில தேய்ச்சதும் சில்லுனு ஆவுது; கடையில இருக்கற நாங்களே ஆளுக்கொரு பாட்டில் எடுத்துனுட்டோம்னு; காசு கொடுத்து வாங்கிட்டோம்னு சொன்னா. எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது. அந்த சந்தோஷம் தான் முக்கியம்.''

''அப்போ லாபம் வரவேண்டாமா.''

அன்னபூரணியின் பேச்சுக்கு சுகுமாரன் பதிலுக்கு கேள்விகேட்டான்.

# 26

**17.**5.2002

கலாவதி, திலகவதி, விசாலாட்சி, அறிவானந்தம் எல்லோரும் கவலை தோய்ந்த முகத்துடன் இருந்தார்கள்.

இதை வெற்றி என்று கொண்டாடுவதா, இல்லை என்று சொல்வதா என்று திகைத்துக் கொண்டிருந்தார்கள்.

''இது வெற்றியில்லை. பாதி கிணறுதான் தாண்டி யிருக்கோம். இதையும் தாண்டி லாபம் வரும். நல்ல பேர் வந்துடிச்சு. நல்ல பேருக்குப் பின்னாடி லாபம் நிச்சயம் வரும்.''

அன்னபூரணி அடுத்து சொன்னாள்.

''ஆனா, அதுக்கு முன்னாடி காசு போடணும்மா. நீங்க வாங்கறதெல்லாம் காசு கொடுத்து வாங்கறீங்க. அவனுக்கு

கடன்ல கொடுக்கறீங்க. அந்த இடம்தான் எனக்கு உதைக்குது. அப்படித்தான் வியாபாரம். காசு கொடுத்து வாங்கினா சீப். நாமும் கடன்ல வாங்கினா அவன்கூட விலை சொல்வான். தரமில்லாத போகும். நாமளும் காசு கொடுத்துதான் வாங்கணும். கடனுக்குத்தான் விக்கணும். என்னுடைய முதல் குறிக்கோள் எப்படியாவது மார்க்கெட்ல நம்ம பேரை நிக்க வைக்கணும்.''

அவர்கள் பேசி கொண்டிருந்த போது ஒரு பெண் வாசலில் ஸ்கூட்டர் நிறுத்துவது தெரிந்தது. அந்தப் பெண் தோளில் பையை மாட்டிக் கொண்டு உள்ளே வந்தாள்.

''ஐவர் தைலம் இதுதானா.''

படியில் செருப்பு கழற்றி விட்டு ஐவர் சிலையை நோக்கிக் கும்பிட்டாள்.

அங்கிருந்த விசாலாட்சியிடம் விசாரித்தாள். விசாலாட்சி யார் என்று கேட்க ''நான் ரெண்டு பாட்டில் வாங்கி யூஸ் பண்ணேன். ரொம்ப நல்லாயிருக்கு. கடையில கேட்டேன். வரலை. இப்போதைக்கு ஸ்டாக் வராதுன்னு சொல்லிட்டாங்க. ஏன்னு கேட்டேன். கம்பெனி மூடிட்டதா சொன்னாங்க. எங்க இருக்கு கம்பெனின்னு கேட்டேன் அவங்க விலாசம் கொடுத்தாங்க. அதனால் இங்க வந்திருக்கேன்.''

''கம்பெனி மூடிட்டதா சொன்னாங்களா. எவன் சொன்னான்.''

எல்லோருமே கோபத்தோடு பேசினார்கள். அந்தப் பெண் சற்று மிரண்டாள். அன்னபூரணி மற்றவர்களைச் சமாதானப் படுத்தி அவளை உள்ளே அழைத்து வந்தாள்.

கடையின் பெயரை அவர்கள் குறித்துக்கொண்டார்கள்.



''இந்தாளும் ஒரு நொய்யாம் பார்ட்டி. காசு கேட்டா பதிலே சொல்ல மாட்டான். என்னங்க கேட்கறேன், ஒண்ணும் சொல்ல மாட்டேன்றீங்களே. அப்படின்னா, அப்புறம் வாங்க அப்படின்றான். காசு இல்லேன்னு கூட சொல்லாத ஒரு ஆளும்மா அவன். இவனைப் பார்க்கும்போதே எரிச்சலா, கோபமா இருக்கு. வெட்டிப் போட்டுடலாம்ன்னு வருது.''

''தம்பி, நீ வியாபாரத்துக்கு லாயக்கே இல்லை. இப்படி வெட்டிப் போடறதுன்னு ஆரம்பிச்சா பல நூறு பேரை வெட்டிப் போடும்படி வரும். இப்போ நம்ம இடத்தைத் தேடிட்டு வந்த இந்தக் குழந்தைக்கு பதில் சொல்லு. இது தைலம் வேணும்னு கேட்குது. என்ன சொல்லு.''

நாலு பாட்டில் தைலம் எடுத்து பொட்டலமாக மடித்து வந்த பெண்மணியிடம் அன்னபூரணி நீட்டினாள். அந்தப் பெண் பர்ஸ் திறந்த போது வேண்டாம் என்று மறுத்தாள்.

''சும்மா நாங்க கேட்கற கேள்விக்கு பதில் சொன்னா போதும். ஒரு பத்து நிமிஷம் இங்க எங்களோட இருந்தா போதும்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

''கேளுங்க சொல்றேன்.''

''இந்த தைலம் புடிச்சிருக்கா.''

''உங்களுக்கு நல்ல உபயோகம்னு தோணுதா.''

''தலையில வச்சவுடனே சில்லுன்னு கண்ணெல்லாம் குளுமையாகி உள்ளேர்ந்து நீங்க சொல்ற மாதிரி நீர் வழியுது.''

''வேற என்னா தைலம் யூஸ் பண்ணிக்கிட்டிருந்தீங்க.''

''நான் தலைமுடி கொட்டாம இருக்கறதுக்கு விதம் விதமா என்ன தைலம் இருக்குன்னு விளம்பரத்துல பார்ப்பேன். கடையில போய் பார்ப்பேன். உபயோகப்

படுத்திக்கிட்டுத் தான் வரேன். கடைசி கடைசியா வெறும் தேங்காய் எண்ணெய்க்கு வந்தேன்.''

''ஏன் இவ்வளவு சோதனை.''

''எப்படியிருந்த தலைமுடி தெரியுமா. அடர்த்தியா பின்பக்கம் வரைக்கும் தொட்டுக்கிட்டிருந்த தலைமுடி மொள்ள மொள்ள குறைஞ்சே போயிடுச்சே.''

''இப்போதான் எல்லாரும் பாப்பண்ணிக்கறாங்களே. அந்தமாதிரி பண்ணிக்கறதுக்கு உங்களுக்கு எண்ணமில்லையா.'' அன்னபூரணி தொடர்ந்து கேட்டாள்.

''ச்...சே...ச்சே... என்னால பாப்பெல்லாம் செய்துக்க முடியாது. தலைமுடியை நீளமா பின்னித் தொங்க விட்டு கடைசியில ஒரு ரப்பர் போட்டாதான் மனசுக்கு நிம்மதியா இருக்கு. அதுதான் அலங்காரம்னு தோணுது.''

''தலைமுடியைப் பிரிச்சு விட்டுக்கறது.''

''ரொம்ப தப்பு. அசிங்கம். முடியைத் தொட்டுக்கிட்டே இருக்கறது ஆபாசம். தலைமுடியைத் தொட்டா கை கழுவணும்னு சொல்வாங்க. தலைமுடியைப் பிரிச்சு விட்டு கிட்டு அதை தள்ளித் தள்ளி விடறது என்னமோ மட்டமான முக பாவத்தைத்தான் தருது.''

''நீங்க சம்பிரதாயமான பொண்ணா இருக்கீங்க.''

''ஆமாம்.''

உங்க வீட்ல எத்தனை பேர் ஹேர் ஆயில் யூஸ் பண்ணுவாங்க.''

''எங்க வீட்ல அத்தனை பேரும் யூஸ் பண்றோம். ரெண்டு பாட்டில் வாங்கிட்டுப் போனேன். நாலே நாள்ல காலியாயிடுச்சு. அப்புறம் ஒரு அஞ்சு பாட்டில் வாங்கிட்டுப்



35838
5328632

போனேன். அதுவும் காலியாயிடுச்சு. மறுபடியும் வந்து கேட்டேன் கம்பெனி மூடியிருக்குன்னு சொன்னான்.''

''பையனுக்கும், அவனுக்கும் தகராறு. அதனாலதான். வேற எதுனா அந்த எண்ணெயில குறை இருக்கா.''

''இது தேங்காய் எண்ணெயில பண்ணா நல்லாயிருக்கும். ஒரு நல்லெண்ணெய் வாசனை வருது. அதனால காலையில தேய்ச்சுக் கிட்டு வெளிய போறதுங்கறது கஷ்டமா இருக்கு. நான் ஒரு தடவை தெரியாத்தனமா தலையில எண்ணெய் தடவிக்கிட்டு பஸ்ல ஏறிட்டேன். சுத்தி ரெண்டு மூணுபேர் என்னமோ வாசனை என்னமோ வாசனைன்னு சொல்றாங்க. ஒருத்தர் தைல வாசனைன்னு சொல்றாங்க. நானும் அங்க இங்க பார்த்தேன். அப்புறம் என் தலைலேர்ந்து அந்த வாசனை அடிக்குதுன்னு தெரிஞ்சுது. அது நல்லெண்ணெய்னால வருது. தேங்காய் எண்ணெயில போட்டா நல்லா இருக்காது.''

''விலைகூட ஆகுமேம்மா.''

''ஆகட்டுமே.''

''பன்னெண்டு ரூபாய்க்கு தர முடியாதும்மா.''

''கூட என்னா பதினைஞ்சு ரூபா ஆகுமா. இருவது ரூபா இருந்தாலும் நான் வாங்கத் தயார்.''

''ரொம்ப நல்லது தாயி.''

அவளைக் கை கூப்பி விடை பெற்றார்கள். அவள் மறுபடியும் காசு கொடுக்க முயற்சித்தாள். வேண்டாமென்று சொன்னார்கள்.

அவள் மீண்டும் கைகூப்பி வெளியேறினாள்.

''தேங்காய் எண்ணெய்க்கு மாத்திடலாமா.'' வந்திருந்த பெண் வாசலைத் தாண்டியவுடன் சுகுமாரன் நிதானமாகக் கேட்டான்.

''நல்லெண்ணெய்தான் திக்கா இருக்கும். தேங்கா எண்ணெய்ல கலந்துக்கறா மாதிரி நல்லா சுண்டக் காய்ச்சி கெட்டித்தைலமா பண்ணிடுவோம். ஒரு கை தேங்காய் எண்ணெய்ல கொஞ்சம் கலந்து தலையில ஊத்திக் கட்டும்.'' அன்னபூரணி ஆலோசனையாய்ச் சொன்னாள்.

''இந்த மாதிரியெல்லாம் சொன்னீங்கன்னாக்க யாரும் வாங்க மாட்டாங்க. கலந்துக்கறதெல்லாம் ஜனத்துக்குத் தெரியாது. ரெடிமேடா வேணும்பாங்க.''

''இல்லை. தலைமுடி வளரணும்னு அந்தப் பொண்ணு ஸ்கூட்டர் எடுத்துகிட்டு இங்க வருது. எல்லார்க்கும் தலைமுடி வளரணும்னு ஆசை இருக்கு. தலைமுடி வேணாம் உதிர்ந்து போகட்டும்னு யாரும் விடமாட்டாங்க. ரொம்ப ரொம்ப சோம்பேறிகூட விடமாட்டான். இன்னும் வேற சில விஷயங்கள் கலந்து இந்தக் கலவையை இன்னும் கெட்டிப் படுத்திடலாம்.

நீங்கள் விரும்பிய வண்ணம் இன்னும் அதிக மூலிகை தரத்தோடு... அன்னபூரணியின் பேச்சுக்கு சுகுமாரன் வசனமாக, வாசகமாக எதிரொலித்தான்.

எல்லோரும் அவனைப் பார்த்து பாராட்டாய்ச் சிரித்தார்கள்.

''கூட காசு போடணும். அதை மறந்துட்டே பேசறீங்க.''

அறிவானந்தம் எழுந்து நின்று பேசினார்.

''தன் கழுத்தில் போட்டிருந்த நான்கு செயின்களையும் கழற்றி அன்னபூரணி அறிவானந்தத்திடம் கொடுத்தாள்.



கையிலிருந்த கங்கணம் போன்ற நான்கு வளையல்களையும் கழட்டி நீட்டினாள்.

''கடைசி வரைக்கும் போராடுவோம். கடைசி சொட்டு வரைக்கும் நாம விக்க முடியும்னு நம்புவோம். நல்ல தரம் – இதுதான் என்னுடைய பலம். இதை நான் விட்டே கொடுக்க மாட்டேன். இந்த மாதிரி ஒரு தைலம் கிடைக்காதுடா; நீ என்ன பண்ணாலும் கிடைக்காது அப்படின்னு சொல்றதுதான் எனக்கு ஆசை. காசைக் கொடுக்கமாட்டேன்னு சொன்னவன், காசு கேட்டபோது பதில் சொல்லாத இருந்தவன் அத்தனை பேரையும் கதறடிக்கறோம். கவலைப்படாதீங்க.''

''இது இப்போதைக்கு போறும் அன்னபூரணியம்மா. மேற்கொண்டு செலவுக்கு.''

''இவ்ளோ பெரிய வீடு இருக்கே. எதுக்கு இருக்கு. இதை வித்து நான் தைலம் தயாரிப்பேன்.''

''இதைத்தான் நான் முன்னாடியே சொன்னேன், இதை வித்துட்டு பெசன்ட்நகர் போலாம்னு.''

''பெசன்ட்நகர் போலாம்னு சொன்னது அங்க போய் சாப்டுட்டு தூங்கறதுக்கு.''

''சாப்டுட்டு தூங்கறது எத்தனை நாளைக்கு நீடிக்கும். உன் புள்ளைய பத்தி, உனக்கு இனிமே பொறக்கப்போற குழந்தைப்பத்தி உனக்கு ஏன் அக்கறை இல்லை. இந்த வீடு வித்த காசு எத்தனை நாள் வரும். அவளுக்கொரு துணை வேண்டாமா. அவ கையில காசு வேண்டாமா.''

''உழைச்சா ஜெயிக்கலாம். உழைக்கறதுக்கு நம்ம எல்லார் கிட்டேயும் தெம்பு இருக்கு. நாம ஜெயிப்போம். பயப்படாதீங்க.''

அன்னபூரணி ஆணித்தரமாகப் பேசினாள்.

அவளுக்கு ஒரு வெறி மூண்டது.

இந்த முறை அன்னபூரணி கலவையை மாற்றினாள். வட தேசத்திலிருந்து பச்சை நெல்லிக்காய் வருகிறது. மார்க்கெட்டுக்குப் போய் இரண்டு மூட்டை அதை வாங்கிவரச் சொன்னாள். பையனை வெட்டுக் கத்திகளும் கருங்கல்லும் வாங்கிவர அனுப்பினாள். நெல்லிக்காய் வந்ததும் அலம்பிவிட்டு நெல்லிக்காய்களைக் கருங்கல்லில் வைத்து வெட்டுக் கத்திகளால் வேலைக்கு வந்த பெண்களை வேகமாக வெட்டச் சொன்னாள். கொட்டையைப் பிரித்து காயை தனிப்பாத்திரத்தில் போட்டாள். கரிசலாங்கண்ணி தழையைப் பொடிசாக நறுக்கிக் கொள்ளச் சொன்னாள். அத்திமரத்து இலையும் தளிராகப் பறித்துவரப்பட்டு அப்படியே நறுக்கப்பட்டது. மூன்று நான்கு கிரைண்டிங்கில் இவைகளை அள்ளி அள்ளிப் போட்டு நீர்விட்டு அரைக்கத் துவங்கினார்கள். அரைத்து வருகின்ற நீரைச் சேமித்தார்கள். இரண்டு மூட்டை நெல்லிக்காயும் பத்து பெரிய கட்டு கரிசலாங்கண்ணியும் ஒரு மூட்டை அத்தி இலையும் சேர்ந்து இரண்டு தேக்சாக்கள்தான் நிறைந்தன. அவைகளைப் பெரிய கடாயில் இட்டு சற்று நல்லெண்ணெய்விட்டு காய்ச்சத் துவங்கி கஷாயமாக்கினார்கள். இறுகி இறுகி கஷாயமானதும் அதில் தேங்காய் எண்ணெய் கலந்தார்கள். பெரிய ட்ரேயில் வைத்து உலரவிட்டார்கள். மேலே மெல்லிய துணியைப் போட்டு வெய்யிலில் காயவைத்தார்கள். சில நாள் கழித்து மறுபடியும் அதை பெரிய கடாயில் விட்டு அத்தோடு பசும்பாலும் ஒரு கை சந்தனமும் செண்பக மொட்டும் போட்டு காய்ச்சத் துவங்கினார்கள். செண்பக மொட்டு படபடவென்று வெடித்தது. ஆனால் வாசனை சேர்ந்தது. தலையில் சில்லென்ற உணர்வு ஏற்படவில்லை. ஆனால், நறுமணம் ஆளைக் கிறங்கடித்தது.



அதை தேங்காய் எண்ணெயுடன் கலந்து ஊற்றிக் கொள்ளச் சொன்னார்கள். அக்கம் பக்கம் கொடுத்தார்கள்.

''போன தடவை கொடுத்ததே ரொம்ப நல்லாயிருந்தது. இப்போ அதைவிட வாசனை தூக்குது.'' அக்கம் பக்கத்திலிருந்து பாராட்டுகள் குவிந்தன.

மறுபடியும் மின்சார மத்தால் நன்கு கலக்கி நுரைவரும்படிச் செய்து பாத்திரங்களை நிரப்பி பாட்டில்களில் அடைத்து சீல் செய்து அட்டைப் பெட்டிக்குள் வைத்தார்கள்.

# 27

## 24.5.2002

''யார் முறைக்கிறானோ யார் பதில் பேசாத இருக்கானோ அவனுக்குக் கொடுக்காத. ஆனா அதுக்கு பக்கத்து கடையில கொடு. இங்கு ஐவர் தைலம் கிடைக்கும்னு ஒரு போர்டு ஒண்ணு எழுதி வச்சுடுங்க. எங்கனா வெளிய தெரியும்படியா மாட்டுங்க. தூக்கிப் போட்டான்னா மறுபடியும் இன்னொரு போர்டு போய் மாட்டுங்க. இங்க வேலை செய்யற பொண்ணுங்கள அங்க அனுப்பி ஐவர் தைலம் கிடைக் கலையா, ஐவர் தைலம் இல்லையான்னு யாரு முறைச் சாங்களோ அங்க போய் கேளுங்க. வேற யாராவது நமக்குத் தெரிஞ்சவங்க இருந்தா, நம்ம தெரு ஆட்கள் பிரியமா இருந்தா அவங்கள போய் கேட்கச் சொல்லுங்க. சும்மா வண்டியில கூட்டிக்கிட்டு போய் அங்க இறக்கிவிட்டு நேரா கடைக்குப் போய் ஐவர் தைலம் வேணுங்க. இங்க கிடைக்கும்னு சொன்னாங்க அப்படின்னு லொள்ளு பண்ணச் சொல்லுங்க.

அறிவானந்தம் உறவுப் படை மொத்தமும் கடை கடையாய் ஏறி இறங்கி ஐவர் தைலம் கிடைக்குமா... ஐவர் தைலம் கிடைக்குமா என்று ஜார்ஜ் டவுனிலிருந்து திருவான்மியூர் வரை ஏறி இறங்கினார்கள். கிடைத்தால் ஒரு பாட்டில் வாங்கிக் கொண்டார்கள். கிடைக்காது போனால் ''ஏன், நல்லாயிருக்கே அந்தத் தைலம். வாங்கி வைங்களேன்'' என்று சொன்னார்கள்.

சுகுமாரன் அவர்கள் பேசுவதற்குப் பல்வேறு விதமாக வடிவமைத்துக் கொடுத்தான். அறிவானந்தத்தின் வீட்டுப் பெண்கள் மிக சந்தோஷமாக அதில் கலந்து கொண்டார்கள்.

''எங்களுக்கு காசெல்லாம் வேண்டாம். இந்தத் தைலம் ஒரு பன்னெண்டு பாட்டில் கொடுங்க. நாங்க அதை உச்சியில தேய்ச்சு முடி கறுகறுன்னு வளரணும். எங்களுக்கு அதான் முக்கியம்'' என்று வீட்டுப் பெண்கள் சொல்ல பன்னெண்டு பாட்டில் தைலம் அந்த வீட்டிற்கு அனுப்பப்பட்டது.

திடீரென்று இரவு எழுந்திருந்து விசாலாட்சியை உலுக்கி எழுப்பி கரிசலாங்கண்ணிச்சாறும், பசும்பாலும், நல்லெண்ணெயும், நெல்லிக்காயும், கடுக்காய்தோலும், வெள்ளை மிளகும் ஒன்றாகச் சேர்த்து அரைக்க ஆரம்பித்தாள்.

பன்னிரெண்டு மணிக்கு மூன்று கிரைண்டர்கள் சுற்ற ஆரம்பித்தன. காலையில் அரைவு முடிந்து மெல்ல சாறுகளை அடுப்பில் ஏற்றி மீண்டும் கஷாயம் காய்ச்சி இறுக்க வைத்து இப்பொழுது முழுக்க முழுக்க தேங்காய் எண்ணெய் மட்டுமே சேர்த்தாள். ஆற வைத்தாள். இரண்டு நாள் கழித்து இன்னும் பன்னிரெண்டு பாட்டில்களுடன் அறிவானந்தம் வீட்டிற்குப் போய் அதைக் கொடுத்து இதைத் தடவிப் பார் என்று சொன்னாள். எண்ணெயை ஆற வைத்தாள். வெய்யிலில் காயவைத்தாள். குறிப்புகள் எழுதிக்கொண்டாள்.





''முடி பட்டு மாதிரி பளபளன்னு நாம கைவச்சு தொட்டா வழுக்கிக் கிட்டு போகுதுங்க. ஷாம்பூ போட்டுக் குளிச்சா மாதிரி இருக்குங்க, எண்ணெய் போடறது.''

அறிவானந்தம் வீட்டுப்பெண்கள் ஓடி ஓடி வந்து சொன்னார்கள்.

''அதைவிட நல்லாயிருக்கற மாதிரி இருக்கு. ஆனா, அதுல ஒரு குளிர்ச்சி இருந்துதுங்க.'' என்று தொடர்ந்து பேசினார்கள்.

ஐவர் தைலம் ஒண்ணாம் நம்பர், ஐவர் தைலம் ரெண்டாம் நம்பர் என்று கிரேடு பிரிக்கப்பட்டுள்ளது. மீண்டும் சரக்குகள் வந்து இறங்கின. பெரிய ஐஸ் பெட்டி வாங்கி மீதி சாறுகளை உள்ளே வைத்து மூடினார்கள். கெட்டுப்போகாமல் இருப்பதற்கு சில விஷயங்களைக் கலந்தார்கள். கேரளாவிலிருந்து டின் டின்னாக தேங்காய் எண்ணெய் வந்து இறங்கியது.

''இதுக்கு மேல பேங்க்ல கடன் கொடுக்க மாட்டேன்னுட்டான். வந்து பார்த்துட்டு இதுவரைக்கும் ஏழு லட்ச ரூபா கொடுத்திருக்கான். இந்த மாசம் இந்தப் பொண்ணுங்களுக்கு சம்பளம் கொடுக்கறது கஷ்டம். இந்தப் பொண்ணுங்க மாடா உழைக்குதுங்க. இன்னும் ரெண்டு மூணு பேர் இருந்தா நல்லது. டக்குனு யாராவது லீவு போட்டா திண்டாடிடுவோம்'' என்று அறிவானந்தம் சொல்ல இன்னும் மூன்று பெண்களைச் சேர்த்துக் கொண்டார்கள்.

மொத்தம் பதினோரு பெண்கள் வேலை செய்தார்கள். இரண்டு பையன்களும் ஒரு கிளார்க்கும் சேர்க்கப்பட்டார்கள். டெலிபோனுக்கு பதில் சொல்ல இன்னொரு இளம்பெண் ஆங்கிலம் தெரிந்தவள் நியமிக்கப்பட்டாள். எல்லாருக்கும் சேர்த்து செலவாக அறுபத்தைந்தாயிரம் ரூபாயைத் தாண்டியது. தொடர்ந்து நடத்த முடியுமா. எல்லார் முகத்திலேயும் பயரேகை படர்ந்தது.

அன்னபூரணி வீட்டை அடமானம் வைக்கலாம் என்று சொன்னாள். அறிவானந்தம் இந்தத் தகவலை இரண்டு மூன்று வங்கியில் சொன்னதும் வங்கிகள் போட்டி போட்டுக் கொண்டு கடன் கொடுக்க முன் வந்தன. வீட்டுப்பத்திரத்தை வந்து பார்வையிட்டன. மேலும் கீழும் நடந்து பார்த்தனர்.

''நாப்பது லட்சம் தரோம்மா'' என்று ஒரு வங்கி சொல்லியது.

''அறுவது லட்சம் தரேங்க'' இன்னொரு வங்கி பேசியது.

எது வட்டி விகிதம் எளிமையாக இருக்கிறதோ அதற்குப் போகலாம் என்று முடிவு செய்தார்கள்.

அடமானம் வைக்கப்பட்டது.

''அம்மா – நான் சொல்றத கேளு. ஒரேயொரு ப்ளாட் இருவது ரூபாய்க்கு வாங்கிப் போட்டுரு. இங்க கூட வேணாம். வேளச்சேரியில, மாடம்பாக்கத்துல, எங்கனா தொலைதூரம் மெட்ராஸைவிட்டு இருவத்தஞ்சு கிலோ மீட்டர் தாண்டி ப்ளாட் வாங்கிப்போடுவது. இருவது லட்சரூபாய்க்கு மூனு ரூம் ப்ளாட், நாலு ரூம் ப்ளாட்டெல்லாம் நாலு ரூம் ப்ளாட்டெல்லாம் நிச்சயமா அந்தப்பக்கம் கிடைக்கும். இல்லை, ரெண்டு ப்ளாட் பக்கத்துல பக்கத்துல வாங்கிப்போம்.''

''எதுக்குடா.''

''ஒரு வேளை இது தோத்துப் போச்சுன்னா நாம அங்க போய் உட்கார்ந்துக்கலாமில்லை.''

''அங்க போய் உட்கார்ந்துகிட்டு என்னடா பண்ணுவ. ப்ளாட் மட்டும் இருந்தா போதுமா. நாப்பது லட்ச ரூபாயையும் வியாபாரத்துல போடுவோம். அப்படித் தோத்துப் போனா எங்கனா போய் வாடகைக்குக் குடியிருப்போம். மெட்ராஸில



இருந்ததாதாண்டா பத்து தேய்க்கலாம். சமையல் பண்ணலாம். எதுனா செஞ்சு பொழைக்கலாம். எங்கயோ வேளச்சேரி தாண்டி மாம் பாக்கம், மாடம்பாக்கம்னு இருந்தோம்னா என்ன தொழில் பண்றது.''

''இதுவரைக்கும் இதுல ஒண்ணும் லாபம் வரலை. உனக்குத் தெரியுதா.''

''வரும்டா. நிதானமாத்தான் வரும்.''

''பிடுங்கிக்கிச்சுன்னு வச்சுக்க என்னா பண்ணுவ.''

பிள்ளை கேட்டான்.

அம்மா முறைத்துப் பார்த்தாள்.

''இந்த வீட்டு வாசல்லயே தூக்கு போட்டுட்டு சாவேன்.''

''என்னாங்க பேசறீங்க.'' அறிவானந்தம் அதட்டினார். ''ஜெயிக்கப் போறதுன்னு தீர்மானம் பண்ணிட்டு அவன் கேட்கறானேன்னு பதட்டமா பேசறீங்களே. நல்லாவா இருக்கு உங்களுக்கு. தம்பி இங்க வா. உனக்கு புரியும்படியா சொல்றேன்.

ஒரு வியாபாரத்துல லாபம்னு பார்க்கறதுக்கு ஒரு வருஷமாவது ஆகும். நீ ஒரு கட்சியில போய் அங்கத்தினரா சேர்ந்தா உனக்கொரு பதவி கிடைக்கறதுக்கு ரெண்டு வருஷமாவது ஆகும். எடுத்தவுடனே உனக்குப் பதவி கொடுத்தா உனக்கு கட்சி பத்தி ஒண்ணுமே தெரியாத போயிடும். நான் சொல்றதைக் கேளு.''

''இல்லீங்க. நீங்க சொல்றது சரியா இல்லை. உங்க கட்சி தோத்துப் போச்சு. உங்களுக்கு வேற வேலை தெரியலை. அதனால இங்க வந்து ஒட்டிக்கிட்டீங்க. உங்க கட்சி ஓஹோன்னு ஓடியிருந்தாக்க, ஆட்சியில் இருந்தாக்க நீங்க

வந்து நல்லெண்ணெய்ல உட்கார்ந்துகிட்டிருப்பீங்களா. நீங்க தோத்துப் போனவங்க. எங்கம்மா தோத்துப் போனவங்க. எல்லாரும் சேர்த்து மறுபடியும் தோத்துப் போறமேன்னு பயப்படறேன். வேற ஒண்ணும் இல்லை.''

அறிவானந்தம் தலை குனிந்து பல் கடித்துக் கொண்டார். மறுபடியும் நிமிர்ந்து அவனைப் பார்த்தார்.

''இந்த வார்த்தைய வேற எவனாவது சொல்லியிருந்தான்னா நடக்கறதே வேற. நீ அன்னபூரணி அம்மா புள்ளைன்றதுனால நான் அமைதியா இருக்கேன். ஒரு முயற்சி செய்யறபோது அதை இழிவா பேசறது ரொம்ப எளிது. வீட்டுக்கு ஆம்பளையா லட்சணமா இருக்கறவன் நீ எடுத்துச் செய்ய வேண்டிய காரியத்தை நாப்பத்தஞ்சு வயசு ஆகிற ஒரு பொம்பளை அது உட்கார்ந்துட்டு செய்துகிட்டிருக்கு. திடீர்னு எழுந்து கரிசலாங்கண்ணியைக் கொண்டா, நெல்லிமுள்ளிய கொண்டான்னு அலை பாய்ஞ்சு அரைச்சு இழுத்துப் போட்டு கிண்டிகிட்டு உட்கார்ந்துகிட்டிருக்கு. நீ படுத்து தூங்கிட்டிருக்க. நீயா பேசற ஜெயிக்கறத பத்தியும், தோக்கறத பத்தியும், அவங்க ஜெயிப்பாங்கப்பா. நீ கூட சும்மா நின்னுகிட்டிரு போதும். உனக்கும் ஜெயிக்கறதுக்கு இடம் கிடைக்கும்.''

''அப்போ என்னா என்னை ஒப்புக்கு சப்பாணின்னு சொல்றீங்களா.''

''நான் சொல்லலை. இங்க இருக்கற அத்தினிபேர் உள்ளுக்குள்ளயும் தெள்ளத் தெளிவா நீ ஒப்புக்கு சப்பாணின்னு தெரியும்.''

''நான் வரலைம்மா. என்னை விட்ரு. இந்த வீடு வித்த இல்லை. என் பங்கு என்னவோ அதைக் கொடு. நான் கிளம்பி போயிக்கிட்டேயிருக்கேன்.''



அந்த வீட்டில் முதன் முறையாக பிரிவினை வாதம் பெரிதாய் எதிரொலித்தது.

''என்னா மடத்தனமா பேசற.''

விசாலாட்சி இடுப்பில் புடவையைச் சொருகிக்கொண்டு அவனைப் பார்த்துக் கத்தினாள்.

''நீ நிக்க வேண்டாம். நான் பாத்துக்கறேன்னு நிக்க வேணாம். ஏதோ அன்னிய மனுஷன் அவங்க வீட்டுக் கல்யாணத்துல போக வர உதவி செய்தோங்றதுக்காக, அவங்க விஷயத்தை முடிச்சுக்கொடுத்தோங்கறதுக்காக காலங் காலையில ஆறுமணிக்கு வந்து கதவைத் தட்டி ராத்திரி பன்னெண்டு மணிக்கு திரும்பிப் போறான். கறிசோறும், காரும், கட்சியுமா இருந்த ஆளு எல்லாத்தையும் விட்டுட்டு எண்ணெயில உட்கார்ந்துகிட்டிருக்கான். அந்தாள போய் கேலி பண்றியே உனக்கு எதுனா அறிவு இருக்கா. நீயா இதுவரைக்கும் என்னா பண்ணிக்கிழிச்ச இவங்கள போய் குத்தம் சொல்றதுக்கு. கல்யாணமாயி எத்தனை வருஷமாச்சு. பகல் ஆனா ஆம்படையானும், பொண்டாட்டியும், கதவைத் தாழ்ப்பா போட்டுக்கிட்டு உள்ள படுத்துக்கறீங்க. கீழே என்ன நடக்குதுனாவது தெரியுதா. என்னா – என்னா பிரிச்சுக் கொடுக்கணும். மாட்டேன்னுட்டா என்ன பண்ணுவ.

இது உங்கப்பா சொத்து இல்லை. உங்க தாத்தா சொத்து. இது உங்கம்மாவோட சொத்து. அவ இஷ்டப்பட்டா கொடுக்கலாம். முடியாது போடான்னாக்க ஒண்ணும் பண்ண முடியாது.''

''அடியே... ஏண்டி அவனைப் போய் ச்சீ..ச்சீன்னு சொல்றீங்க.''

''கலாவதி இங்க வா. நீ சொல்லு. பிரிஞ்சு போகணும்னு சொல்றியா. இருந்து வேலை செய்யலான்னு சொல்றியா.''

''நல்லதோ கெட்டதோ எல்லாம் ஒண்ணா இருக்கறதுதான் அழகு. இத்தனை நாள் ஒண்ணா இருந்துட்டோம். என்னா நடந்தது. வியாபாரம்னு ஒண்ணு ஆரம்பிச்சா மனஸ்தாபம் வரத்தான் செய்யும். இவரு அவசரப்பட்டு கத்தறாரு. நாமரெண்டுல ஒண்ணு பார்த்துடுவோம் அத்தை. பயப்படாம இருங்க.''

கலாவதி உறுதியாய்ப் பேசினாள்.

விசாலாட்சிக்கு அந்த உறுதி பிடித்திருந்தது. நெகிழ்ச்சியானாள்.

''பத்து லட்ச ரூபா வீடுவாங்கக் கூடாதா.'' சுகுமாரன் மீண்டும் விடாப்பிடியாய்ப் பேசினான்.

''எதுக்குடா வீடு.''

''குடியிருக்கறதுக்கு வீடு வேணும்.''

''டேய்... உனக்கு குடியிருக்கறதுக்கு வீடுதானே வேணும்... என் புருஷன் சொத்து குளித்தலையில இருக்கு. நிலம் இருக்கு. நஞ்செயும், புன்செயுமா இருக்கு. அது உன்பேருக்கு எழுதித்தரேன். வாயை மூடிட்டு இரு.''

விசாலாட்சி மறுபடியும் சொன்னாள்.

# 28

**வி**சாலாட்சி மறுபடியும் சொன்னாள்: ''சித்தி... உன் சொத்துக்கு நான் ஆசைப்பட்டு கேட்கலை. ஜாக்கிரதையா சொல்றேன். அதை வேகமா சொல்றேன். அவ்ளோதான். ஆளு ஆளுக்கு என்னமோ துரோகி மாதிரி பேசறீங்களே.''



மறுபடியும் அவன் எழுந்து நின்று கத்தினான்.

''அப்பன் புத்தி அப்படியே இருக்கு.''

அன்னபூரணி சிரித்தபடியே அவனுக்கருகே வந்து அவன் தலையைத் தடவினாள்.

''ஒரு வியாபாரி பேசறபோது இவ்வளவு படபடப்பா பேசவே கூடாது. ஆவட்டுங்க, பார்க்கலாங்க, இன்னொரு தடவை யோசனை பண்ணுங்க அப்படின்னு ரொம்ப மிருதுவா சொல்லணும். புடிக்கலேன்றத இத்தினி முரட்டுத்தனமா பேசக்கூடாது. ஏங்க, இது தப்பாயிடுச்சுன்னா என்னாங்க பண்ணுவோம், வேறவிதமாக யோசனை பண்ணிப் பார்க்கலாமா அப்படின்னு பேசேன். நீ சொல்ற விஷயம் சரி. சொல்ற விதம் தப்பு. இதுவரைக்கும் நீ வியாபாரம் பண்ணதில்லை. அதனாலதான் எகிறி எகிறிப் பேசற. வியாபாரம் கஷ்டமான விஷயம் கண்ணு. எகிறிப் பேசறவன் வியாபாரி ஆகமுடியாது. நீ கொடுத்த சரக்கை வாங்கிப் பார்க்கணும்னா வாங்கிறவன்கிட்ட பணிவா பேச வேணாமா. யார் கஸ்டமரோ அவங்கிட்ட விக்கறவன் கிட்ட இன்னும் பணிவா பேசவேணாமா. உன் சரக்கை விக்கணும்னா அவன் டியூட்லைட் போட்டு, கண்ணாடிக் கதவு போட்டு, டெலிபோன் போட்டு உட்கார்ந்துகிட்டிருக்கான்.

இல்லை, அந்த இடத்துல இப்படி கத்தனீன்னா அவங்கிட்ட மரியாதையா பேச்சு வராது. அவன் அவமரியாதையாதான் பேசுவான். அவமரியாதையா பேசுறவன்கிட்ட நகர்ந்துபோயிடலாமே தவிர அவன் சட்டைய பிடிச்சு உலுக்கவே முடியாது. இது தோத்துப் போயிட்டா என்ன பண்றதுன்னு கேட்கற இல்ல. அறுவது லட்சமும் போயிடுச்சு. மிச்சத்தை வீடு மொத்தமும் வித்துட்டு பத்தோ பன்னெண்டோ கொடுக்கறான். அதை வாங்கி இங்கயே ஏதாவது ஒரு இடத்துல

வாடகைக்கு இடம் பிடிப்போம். சாப்பாட்டுக் கடை ஆரம்பிப்போம். ஹோர் ஆயில் வரலைன்னா என்னா, கல்யாணச் சாப்பாடு பண்ணித்தரேன்னு சொல்லிட்டு, ஆபீஸ்ல கூட கொண்டுவந்து தரோம்னு சொல்லி டிபன்பாக்ஸ் ஏற்பாடு பண்ணி சைக்கிள் பசங்க ஏற்பாடு பண்ணி கொண்டுபோய் கொடுத்துட்டு வருவோம்.

''சாகறமட்டும் உழைப்போம்டா. ஏண்டா பயப்படற.''

''உனக்குப் புரியலைம்மா. இத்தினி நாள்... அப்பா செத்ததுலேர்ந்து இத்தினி நாள் நீ எந்த வேலைக்கும் போவாத மௌனமா சைலன்ட்டா இருந்த இல்ல. எவ்வளவு நல்லா இருந்தது. அதேமாதிரி இருந்துட்டுப் போறது.''

''நான் இருந்துடுவேன். உன்னால இருக்கமுடியாது. மிஞ்சிப் போனா இன்னும் பத்து வருஷம் இல்ல பதினைஞ்சு வருஷம் நான் மோர் சோறோட இருந்துடுவேன். உன்னால இருக்க முடியுமா, பேண்ட் போடாத, சட்டை போடாத, பெசன்ட் நகர்ல வீடு வேணும்னு கேட்டியே அதுக்காகத்தான் வியாபாரத்துல இறங்கினேன்.''

''என்னா பெசன்ட் நகர் வீட்டுக்கு இவ்வளவு கஷ்டப்படுவானேன். இந்த வீட்டை வித்துட்டு அந்த வீட்டுக்குப் போகலாம்னுதானே சொல்றேன்.''

''இல்லை. பெசன்ட் நகர் வீட்டுக்குப் போயி அங்க குடித்தனம் பண்ணி அதே பெசன்ட் நகர்ல இன்னொரு வீடு நீயா வாங்கணும்னா உனக்கொரு தொழில் வேணும். அந்தத் தொழிலை நீ தெரிஞ்சுக்கணும்தான் நான் இந்தத் தொழில்ல இறங்கினேன்.''

''எனக்கு இந்த ஐவர் தைலமே பிடிக்கலைம்மா. நீ சொல்ற ஹோட்டலையே ஆரம்பிச்சிருக்கலாம்.''



''கிழிஞ்சதுபோ.'' அறிவானந்தம் கை கொட்டிச் சிரித்தார்.

''இந்த ஒரு விஷயத்தை உன்னால தூக்கிநிறுத்த முடியலை. ஹோட்டல் நடத்திடுவியா. ஹோட்டல் நடத்தறது சாதாரணம்னு நினைக்கிறியா.

தூங்கமுடியாது மகனே. கால்நீட்டி அப்பாடான்னு தூங்க முடியாது. அடுப்பை அணைச்சு ராத்திரி படுக்கறதுக்கு பன்னெண்டு ஆகும். மறுநாள் கார்த்தால அடுப்பை மூட்டி ஆகணும். ராத்திரி பன்னெண்டுலேர்ந்து நாலு மணிக்குள்ள நீ கணக்கு வழக்கு பார்த்தாகணும். நல்லா தூங்கின ஹோட்டல் காரன் ஒருத்தன்கூடக் கிடையாது. அது இருவத்தி நாலு மணி நேர வேலை.''

''ஜெராக்ஸ் கடை, டெலிபோன் பூத்துன்னு ஆரம்பிச்சா...''

''அதுக்கு நீ ஏன். உன் பொண்டாட்டி போறதா. மாசம் நாலாயிரம் ரூபா கிடைக்கும். என்னாத்துக்கு ஆகறது உனக்கு. உனக்கு இன்னும் பக்குவம் போறலைடா. பேசாத கூட இரு. அன்னபூரணியம்மா பார்த்துப்பாங்க. நானே கத்துக்கறேண்டா கைகட்டி. நீ என்னடா அவங்களோட குறுக்க பேசறது.''

அறிவானந்தம் அதட்டலாய் பேசினார்.

அன்று மாலை லாரியில் முப்பதாயிரம் பாட்டில்கள் வீட்டில் வந்து இறங்கின. கூடத்தை அடைத்துக் கொண்டன.

இரவு அறிவானந்தம் வீட்டிற்குக் கிளம்பும்போது அன்னபூரணி வாசலில் நின்று கேட்டாள்.

''ஏண்ணா, பன்னெண்டு ரூபாய்க்கு வேளச்சேரி தாண்டி மாடம்பாக்கத்துல ஒரு ப்ளாட் வாங்கிடலாமா.''

''நல்லாயிருக்கு போங்க. அவனைப் பார்த்து சத்தம் போட்டுட்டு வரேன். இப்போ உங்களைப் பார்த்து

போடணுமா. சும்மாயிருங்கம்மா. நாம் நிச்சயம் ஜெயிக்கறோம்.''

அவர் சொல்லிவிட்டு வேட்டியை மடித்துக்கொண்டு தெருவில் இறங்கிப் போனார்.

ஐம்பத்தேழு வயது மனிதன். காரில் சுற்றிப் பழக்கப் பட்டவன். தோளில் துண்டுபுரள நடந்துவந்து கட்சிக் கூட்டத்தில் பேசியவன் சாதாரணமாக நடந்து போவதைப் பார்த்து அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தன்னைவிட இந்த விஷயத்தில் இந்த மனிதன் வெறியனாக இருக்கிறான் என்று புரிந்துவிட்டது.

அவளுக்கு மகாதேவி என்று பெயர். திருமணமாகி மூன்றாவது மாதமே புருஷனைப் பிரிந்து வீட்டிற்கு வந்துவிட்டாள்.

குடிகார புருஷனும், கொடுமைக்கார மாமியாரும் அவள் கனவுகளைச் சிதைத்து எறிந்தார்கள். வீட்டிற்கு வந்ததும் அவளுக்கு அங்கும் மரியாதை கிடைக்கவில்லை. மறுபடியும் பாரமா வந்துட்டியா என்று தாய் அலுத்துக் கொண்டாள். தந்தை எட்டி உதைத்தார்.

தூங்குது பார் சனியன் என்று ஆறுமணிக்கு தூங்குகிறவள் முகத்தில் பச்சைத் தண்ணீர் கொட்டினார்கள்.

அவள் வாழ்க்கையில் சந்தோஷமாக இருந்த நேரங்கள் மிகமிகக் குறைவு. அவள் சந்தோஷமாக இருந்தது சினிமா பார்க்கும்பொழுது மட்டுமே.

இருட்டில் காதலனும், காதலியும் அணைத்துக் கொள்ளும் போது, கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்கிறபோது குதித்துக் குதித்து, குலுங்கக் குலுங்க நடனமாடுகிறபோது அவளுக்கு பெரும் பரவசம் ஏற்படும்.



''எதுனா வேலைக்குப் போறதுதானே'' என்று அம்மா கேட்க அவள் பல இடங்களுக்கு வேலைக்குப் போனாள். பத்துப் பாத்திரம் தேய்த்தாள். பெரிய ஹோட்டலில் உலர்த்திய துணியைக் கொண்டு வந்து மடித்து வைக்கிற வேலையைச் செய்தாள்.

ஹோட்டலில் சோறு போட்டார்கள். ஆனால், ஆண்கள் தொந்தரவு மிக அதிகமாக இருந்தது.

பத்து நிமிடத்திற்க ஒருமுறை ஒவ்வொருவனாக எட்டிப்பார்த்து வந்து வருகிறாயா என்று கேட்க அவளுக்கு தன் நிழலைப் பார்த்தாலும் பயமாக இருந்தது.

வீட்டில் சொன்னபோது, இன்னும் அந்தக் கூத்து வேறயா. வேணாம். வேலைக்குப் போவாத. நின்னுடு என்று சொன்னார்கள்.

மறுபடியும் பத்துப்பாத்திரம் தேய்க்கிற வேலைதான் கிடைத்தது. கெட்டுப்போன சாம்பார்தான் சோற்றில் பிசைந்துகொள்ள கிடைத்தது.

''எங்கனா பேங்க்ல பெருக்கற வேலை இருந்தா சொல்லுங்க'' என்று சிலரிடம் சொல்லும்போது அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''பெருக்கற வேலை வேணும். அதுவும் பேங்க்ல வேணுமா. நல்லாயிருக்கு கதை. ஏன் பேங்க்ல வேலை கேட்கற'' என்று ஒருவர் கேட்டார்.

''நம்மகிட்டதான் துட்டு இல்லை. துட்டு இருக்கிற இடத்துலயாவது நாம இருக்கலாம் இல்லை'' என்று அவள் சொல்ல இன்னும் பெரிய சிரிப்பலை மோதியது.

அவள் வெட்கப்பட்டாள். லேசாக அவமானப்பட்டாள்.

உலகத்தில் எல்லோருக்கும் காசு இருக்கிறதே, நம்மிடம் மட்டும் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய்க்கெல்லாம் படாதபாடு படவேண்டியிருக்கிறதே என்று உள்ளுக்குள் குமைந்தாள். இரவு நேரம் அழுதாள்.

''நான் தைல கம்பெனியில வேலை செய்யறேன். அங்க வேலைக்கு ஆள் எடுக்கறாங்க. வறியா'' என்று கேட்டபோது வேண்டாம் என்று மனசுக்குத் தோன்றியது. அலுப்பாக இருந்தது.

''என்னா மாதிரி வேலை'' என்று கேட்க, ''ஒண்ணு மில்லை, சின்ன சின்ன பாட்டிலா அடுக்கி வச்சு தைலம் ரொப்பினவுடனே திருப்பி எடுத்து சுத்தம் பண்ணி டப்பால வைக்கணும்.''

வேலை எளிதாகத் தோன்றியது.

''பெருக்கணுமா.''

''இல்லை''.

''பத்துப்பாத்திரம் தேய்க்கணுமா.''

''இல்ல. பெரிய தேக்ஸா இருக்கு. அதுல எண்ணெய் போடுவாங்க. எண்ணெய் பிசுக்கு போக தேய்க்கணும். துடைக்கணும்.''

''ஒரேயொரு தேக்ஸாதானா?''

''ஒரு வாணலி, ஒரு தேக்ஸா இருக்கும். அவ்ளோதான்.''

''என்னா சம்பளம்.''

''ஆயிரத்து ஐநூறு ரூபா இருக்கும்.''

சட்டென்று அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. இதுவரை அவள் வேலை செய்ததெல்லாம் முன்னூறு,



நானூறு, ஐநூறு ரூபாய்க்குத்தான். ஆயிரத்து ஐநூறு என்பது பெரிய தொகை. ஆனாலும், அலட்டிக் கொள்ளாமல் ''''சரி, நான் வந்து பார்க்கறேன். புடிச்சா வேலை செய்யறேன்'' என்று சொன்னாள்.

அவளுக்கு சாமர்த்தியமாகப் பேசவும், சாதுர்யமாக நடந்து கொள்ளவும் வாழ்க்கை கற்றுக் கொடுத்திருந்தது.

அந்த வீட்டுக்குள் நுழைந்து அன்னபூரணி என்று அழைக்கப்படும் அந்த முதலாளி அம்மாவைப் பார்த்தவுடனேயே உள்ளுக்குள் ஒரு பயம் தோன்றியது.

இந்தப் பொம்பளைகிட்ட எந்தப் பொய்யும் சொல்லமுடியாது; எந்தப் தப்பும் பண்ண முடியாது என்பதாய்த் தோன்றியது.

மிக பவ்யமாக புடவையைத் தோளில் போர்த்திக் கொண்டு, ''என்னா வேலைங்கம்மா செய்யணும்'' என்று கேட்க அன்னபூரணி சிறிது நேரம் அவளையே உற்றுப் பார்த்தாள்.

## 29

''பின்னாலே போய் வேடிக்கை பார். உனக்கே தெரியும்'' என்று சொன்னாள் அன்னபூரணி.

என்னா வேலைன்னு கூட சொல்லமாட்டியா. அத்தனை பெரிய கித்தாப்பா நீ.

அன்னபூரணி அம்மாவைப் பற்றி ஒரு கருத்து அவள் மனதில் தோன்றியது.

புதிதாகச் சேர்ந்தாள் என்பதால் எண்ணெய்ப் பிசுக்கு நிறைந்த பெரிய கடாயையும் எவர்சில்வர் பாத்திரத்தையும் இவளையே தேய்க்கச் சொன்னார்கள். பலமுறை சபீனா போட்டுத் தேய்த்தும் எண்ணெய்ப் பிசுக்கு போகவில்லை. பாத்திரங்களையெல்லாம் ஊறவைத்துத் தேய்க்க வேண்டும் என்றார்கள். மூன்றாம் முறையாக ஊறவைத்துத் தேய்க்கும் போது முதுகு, கை, தோள்பட்டை, கழுத்து எல்லாமும் வலித்தது. சிறிய பாத்திரமாக இருந்தால் சரசரவென்று தேய்த்துப் போட்டு விடலாம். இது கையை வீசி வீசி கடாயின் உள்பக்கம் முழுவதும் தேய்க்க வேண்டியிருந்ததால் உடம்பின் ஆட்டம் அலையல் அதிகமாக இருந்தது. சம்பளம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் என்பதால் பொறுத்துக் கொண்டாள்.

கொண்டுபோய் அன்னபூரணி அம்மாவிடம் எப்படி தேய்ச்சிருக்கேன் போய்க்கேளு. அவகிட்ட காட்டு.''

ஆனால், அந்த மகேஸ்வரிக்கு இவளைப் பிடிக்க வில்லை.

''ஐயோ, இத்தெல்லாம் ஏன் சேர்க்கறீங்க. கம்பெனின்னா அதுல பாத்திரம் தேய்க்கற பொம்பளை.

இவளைக் கொண்ணாந்து விட்டீங்கன்னா வீண் வம்பெல்லாம் வரும்.''

அவள் காதுபட மற்றவர்களிடம் உரத்துச் சொன்னாள். ஆனால், அன்னபூரணி அம்மாள் அவளை வேலைக்குச் சேர்த்துக்கொண்டாள். முதல் மாசம் சம்பளம் எண்ணிக் கொடுத்தாள்.

காலை, மாலை டீ நடுவே நீர்மோர் என்று வந்தது.

அவர்களுக்கு வழக்கமாக வரும் வேலைக்காரி வரவில்லையென்று அவளை பத்துப்பாத்திரம் தேய்க்கச்



சொன்னார்கள். வேகமாகத் தேய்த்துக் கொடுத்தாள். ஆனாலும், உள்ளுக்குள் ஒரு வலி இருந்தது.

வீடு பெருக்கினாள். சமையல் அறை சாமான்களைத் துடைத்துவிட்டு எல்லா அலமாரிகளையும் துணி போட்டுத் துடைத்தாள். துருப்பிடித்துள்ள தூண்களுக்கு பாலீஷ் போட்டு மெருகேற்றினாள். மறுபடியும் போய் உட்கார்ந்து பாட்டில் அடுக்கத் துவங்கினாள்.

இவ பறக்காவட்டியா இருந்தாலும் நல்ல வேலைக்காரி. கடுமையா உழைக்கிறா என்ற எண்ணம் அன்னபூரணி அம்மாளுக்கு ஏற்பட்டது.

அவர்கள் வீட்டில் சமோசா சாப்பிட, தூணைத் துடைத்துக் கொண்டிருந்த அவளுக்கும் தட்டில் வைத்து சமோசா கொடுத்தார்கள். சாப்பிடு, சாப்பிடு என உற்சாகப் படுத்தினார்கள். ஓரமாக உட்கார்ந்து சமோசா சாப்பிட்டாள். நல்ல துட்டு போல இருக்கு என்று நினைத்தாள். அவர்கள் எழுத்தைந்து லட்சம் எண்பது லட்சம் என்றெல்லாம் பேசிக்கொண்டார்கள்.

எழுவத்தஞ்சு ரூபா கையில வச்சுக்கறதுக்கே எவனும் விடறதில்லை. புடுங்கிடறாங்க. இவங்க எண்பத்தஞ்சு லட்சம்னு சொல்றாங்க. எப்படி கிடைக்கும். இந்த வீட்டைவித்துட்டு இன்னொரு வீடு வாங்கப் போறாங்களாம். பன்னெண்டு லட்சமாம் இருவது லட்சமாம். யப்பா...இவங்க ஒரு ரூபா ரெண்டு ரூபான்னு பேசவே மாட்டாங்களா என்று உள்ளுக்குள் ஆதங்கப்பட்டாள். நம்மள மட்டும் கடவுள் ஏன் இப்படி படைச்சிருக்கான் என்று வேதனைப்பட்டாள். கிளம்பும் போது புடவையை உதறிக் கட்டிக் கொண்டாள்.

அங்கு பாட்டில்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒரு பாட்டில் எண்ணெய் எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டாள்.

மேலே போர்வையைப் போர்த்திக் கொண்டாள். நடந்து வெளியே போனாள்.

''ஐயோ... டிபன்பாக்ஸை மறந்துட்டேன்.''

மறுபடியும் உள்ளே போனாள். இரண்டு பாட்டில் தைலம் எடுத்து ஜாக்கெட்டில் சொருகிக்கொண்டாள். மேலே போர்த்திக்கொண்டாள். டிபன் பாக்ஸோடு வெளியே நடந்தாள். வீட்டிற்குக் கொண்டு போய் பெட்டியில் வைத்தாள். அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது.

ஒரு பாட்டில் பன்னெண்டு ரூபா, அஞ்சு பாட்டில் அறுவது ரூபா.

''அம்பது ரூபாய்க்குத் தரேன். எண்ணெய் வாங்கிக்கறீங்களா.''

பக்கத்து வீட்டில் கேட்டாள் யாரிடம் விற்பது என்று தெரியவில்லை. மளிகைக்கடையில் கேட்ட போது ஒரு பாட்டில் ஐந்துரூபாய் என்று இருபத்தைந்து ரூபாய் கொடுத்தான். இது போதும் என்று அவளுக்குத் தோன்றியது.

மறுமுறை கடைப்பக்கம் போகும்போது ''இன்னும் பாட்டில் இருந்தா கொண்ணாந்துகொடேன்'' என்று சொன்னான்.

ஐவர் தைலம் அவன் கடையில் நன்றாக விற்பனை ஆயிற்று.

அவள் மறுபடியும் ஐந்து பாட்டில்கள் இருபத்தைந்து ரூபாய் காசு வாங்கினாள்.

இம்முறை அதிகம் சந்தோஷப்பட்டாள்.

ஒரு தொழிற்சாலை நடத்துபவருக்கு முதல் பிரச்சினை தொழிலாளர்களால் ஏற்படும் திருட்டுதான். அந்த நம்பிக்கைத் துரோகம்தான் அவர்களை நிலைகுலையச் செய்யும்.



அன்னபூரணியிடம் மகேஸ்வரி என்பவள் மகாதேவி என்கிறவளுடைய திருட்டுப்பற்றிச் சொன்ன போது அவளுக்கு இதை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாமல் இருந்தது. யாரிடம் சொன்னாலும் விஷயம் மிகப் பெரிதாகும். கை கலப்பு ஏற்படும் என்று தோன்றியது. அதே சமயம் இந்தத் திருட்டைக் கையும் களவுமாகப் பிடிக்க வேண்டுமென்ற கோபமும் எழுந்தது.

சுகுமாரனின் மனைவி கலாவதி காய்கறி கடைப்பக்கம் போனாள். தொலைபேசி நிலையம் எங்கே இருக்கிறது என்று தேடினாள். உள்ளே போய் தந்தைக்குத் தொடர்பு கொண்டாள்.

''அங்கு சும்மா தண்டத்துக்குத்தானே உட்கார்ந்து கிட்டிருக்கே. இங்கவாயேன்ப்பா. வீடு பெருசா இருக்கு. நாங்க ஒரு தைல கம்பெனி ஆரம்பிச்சிருக்கோம். அதுல வேலை போட்டுத் தரச் சொல்றேன். எங்க வீட்லயே சாப்டுட்டு எங்க வீட்லயே தங்கிட்டு ரெண்டாயிரம், மூவாயிரம் சம்பளம் வாங்கிக்கலாமில்லை. போன வருஷம் வரைக்கும் வேலை செய்தா என்ன. நீ வந்தா எனக்கு பலவிதத்துல உதவியா இருக்கும்ப்பா. அதான் கூப்பிடறேன்.''

''தெரியும்மா. எதுக்கும் அன்னபூரணி அம்மாகிட்ட ஒரு வார்த்தை கேட்டியா.''

''அவங்கள என்னா கேட்கறது. நீ வந்து இறங்கேன். நல்ல லாபம் வரும்போல இருக்குப்பா. லாபம் வந்ததுன்னு வச்சுக்க, அவங்க மூணு பேரும்தான் பிரிச்சுப்பாங்க. இவருக்கு ஒண்ணும் நிக்காது. இவருக்கு ஒண்ணும் மிஞ்சாது போலிருக்கே. அதனாலதான், என்னா போவுது என்னா வருதுன்னு பார்க்கணும். நான் சமையக்கட்டுலயே இருக்கேனா, எனக்கு ஒண்ணும் தெரியலை. அதுக்கும்தான் கூப்பிடறேன்.''

''நான் வந்துடறேம்மா.''

ஒரு வாரம் கழித்து அவர் பெட்டி படுக்கை யோடு வந்து இறங்கிய போது அன்னபூரணிக்கு பகீர் என்றது.

''ஒண்ணும் எனக்கு வேலை இல்லீங்க. எதுனா வேலை தேடலாம் அப்படின்னு வந்தேன்'' என்றார்.

திலகவதி குழந்தை போல ''ஏன் நீங்க வெளிய வேலை தேடணும். நமக்கே ஆள் இல்லாத தவிக்கிறோம். இங்க வேலை செய்யுங்களேன்'' என்று வரவேற்க அன்னபூரணி அவளை முறைத்துப் பார்த்தாள்.

அன்னபூரணி எதற்கு முறைக்கிறாள் என்று திலகவதிக்குப் புரியவில்லை. ஆனால், கலாவதிக்குப் புரிந்தது.

அப்போ உன் மனசுல எதுவோ திட்டம் இருக்கு. அப்படித்தானே. நான் எங்கப்பனைக் கூட்டிட்டு வந்தது நல்லதாப்போச்சு.

உள்ளுக்குள் மெல்லியதாய் கோபமடைந்தாள்.

சுகுமாரனுக்குப் பிடிக்கவில்லை. ''உங்கப்பாவ்ால என்னா வேலை செய்ய முடியும். வாசல்ல சேர்போட்டு காவல் காக்கலாம். அதுக்கெல்லாம் ஆள் வேணாமா.''

''ஒரு நாயைப் போட்டா செய்யும்டி''

சுகுமாரன் அவளை முறைத்துப் பார்த்தான்.

''அதுக்குப் பதிலாதான் எங்கப்பாவை வச்சுக்கோங் கோன்னு சொல்றேன். தப்பா''.

கலாவதி தாழ்ந்து போவது போல் நடித்தாள். ஆனால், அவளுக்கு இலக்கு உச்சியில் இருந்தது.

என்ன வேலை அவருக்குத் தருவது என்று தவித்தார்கள்.



தயார் செய்யப்படும் பாட்டில்களும், வெளியே போகும் பாட்டில்களும் சரியாக இருக்கிறதா என்று மேற்பார்வை யிடவும், ஒட்டு மொத்தமாய் உள்ளே வருவதையும் வெளியே போவதையும் கவனித்துக்கொள்ளவும் அன்னபூரணி அவரை நியமித்தாள்.

ஆனால், அவளுக்கு அவன் வருகை சங்கடமாகவே இருந்தது. ஒவ்வொரு பிரச்சினையாக முளைக்கிறதே என்ன செய்ய என்று தோன்றியது.

சமயசந்தர்ப்பம் தெரியாமல் மகேஸ்வரியின் பேச்சைக் கேட்டோ மற்றவர்கள் பேச்சைக் கேட்டோ இவர் இந்த மகாதேவியை மடக்கிவிட்டால் விஷயம் பெரியதாகுமே. கிழவர் கையைப்பிடித்து இழுத்தார் என்று மகாதேவி சொன்னால் ஊர் நம்புமே. இதை மிகக் கவனமாகக் கையாள வேண்டிய சாமர்த்தியம் இவருக்கு இல்லையே என்று கவலைப்பட்டாள்.

மகேஸ்வரியைக் கூப்பிட்டு ''திருடன் போவதை யாரிடமும் சொல்லாதே. நானே கண்டுபிடிக்கிறேன்'' என்று சொன்னாள்.

மகேஸ்வரி துப்பு கொடுத்ததும் மகாதேவியை வெளியே போக விட்டாள். அப்பொழுது ஜாக்கெட்டில் நான்கும், டிபன்பாக்ஸில் ஆறும், இடுப்பில் பர்லாங் போவதற்குள் இடுப்பு பாட்டில் மிகவும் உறுத்தியது. கீழே விழுந்துவிடும் போல் இருந்தது. அவ்வப்போது சரிசெய்துகொண்டு சைக்கிள் ரிக்ஷாவில் ஏறினாள்.

அவளைத் தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த அன்னபூரணி சுகுமாரனைக் கூப்பிட்டு வண்டி எடுக்கச் சொன்னாள். சைக்கிள் ரிக்ஷாவின் பின்பக்கம் போகச் சொன்னாள். மோட்டார் சைக்கிள் சிறிது இடைவெளிவிட்டு சைக்கிள் ரிக்ஷாவை மெல்ல பின் தொடர்ந்தது.

''என்னம்மா, யார் போறாங்க ரிக்ஷாவுல.''

''மகாதேவி.''

''எதுக்கு சைக்கிள் ரிக்ஷாவுல போகுது.''

''பாட்டில் திருட்டிக்கிட்டு போகுதுடா. இது ரெண்டு வாரமா நடக்குது. எப்படி நிறுத்தறதுன்னு தெரியலை.''

''மயிரைப்புடிச்சு சுவத்துல இடிக்க வேண்டியது தானேம்மா.''

''அப்படியெல்லாம் செய்யக் கூடாதுடா.''

''ஏன்.''

''அவ சொல்றதுதான் உண்மை யாகும்.''

''திருடிட்டு அவ என்னம்மா உண்மை சொல்றது. உண்மை நான் இல்ல சொல்லணும்.''

''இல்லை, ரொம்ப ஜாக்கிரதையா கையாளணும். அவங்க ஜனத்துக்கு நடுவுல மாட்டிக்கிட்டோம்னா நம்மள பிச்சிப் போட்டுடுவாங்க.''

மகாதேவி மளிகைக்கடையிலல் இறங்கினாள். எல்லா பாட்டில்களையும் எடுத்து வைத்தாள். திருடுகிறாள் என்று அவள் எடுத்து வைத்த விதத்திலிருந்தே கடைக்காரனுக்குத் தெரிந்துவிட்டது.

''இப்போ வச்சுட்டுப்போ. பின்னாடி துட்டுதரேன். எங்கிட்ட காசு இல்லை.''

''தே... எனக்கு அவசரமா காசு வேணும். துட்டு கொடு'' என்று கேட்க, அவன் இல்லவே இல்லையென்று சாதித்தான்.

''வேணும்னா மொத்த பாட்டிலையும் எடுத்துட்டுப் போயிடு'' என்று பாட்டில்களை அவள் பக்கம் தள்ளினான்.



வேறு வழியில்லாமல் அவனையே பாட்டில்களை வைத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு சோர்வோடு திரும்ப சுகுமாரனும், அன்னபூரணியும் கீழிறங்கினார்கள்.

''என்னா மகாதேவி. நீ பண்றது நல்லாயிருக்கா. ஏன் திருடற. உனக்கு என்னா குறை வச்சோம். நல்லா சோறு போடலையா. சம்பளம் கொடுக்கலையா. இடுப்புல பத்து, அங்க பத்து, இங்க பத்துன்னு திருடறியே. எத்தினை பாட்டிலப்பா.'

# 30

**14.**6.2002

சுகுமாரன் அந்தப் பையை எடுத்துப் பார்த்தான். உள்ளே இருபதுக்கும் மேற்பட்ட பாட்டில்கள் இருந்தன. கோபமானான். ஓடிப்போய் பளீரென்று அவள் கன்னத்தில் அடித்தான். முடியைப் பிடித்து உலுக்கினான். அன்னபூரணி எவ்வளவு தடுத்தும் அவளை விதம்விதமாக அடித்து நொறுக்கினான்.

ஜனம் சுற்றிக்கொண்டது. ஒரு பெண்ணை ஒரு ஆண் அடிக்கிறான் என்பதுதான் அங்கு விஷயமாயிற்று.

மகாதேவி அலறிக்கொண்டு தன்னுடைய வீட்டுப்பக்கம் போனாள். அங்கிருக்கிற ஜனங்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

''யார்ரா எங்க வீட்டுப் பொண்ணுமேல கையவச்சவன்.''

குறுந்தடிகளும், நெடுந்தடிகளும், பட்டாக் கத்தியுமாய் வெளியே வந்தார்கள்.

மோட்டார் சைக்கிளில் ஏறி அன்னபூரணியும், சுகுமாரனும் அந்த இடம் விட்டுத் தப்பித்தார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனார்கள். நடந்ததைச் சொன்னார்கள்.

''திருடுன்னா எங்கிட்ட சொல்லுங்க நீங்க ஏன் பொம்பளைமேல கைய வக்கிறீங்க அப்போ திருட்டே வராது. நீங்க போட்டு அவளை அடிச்சதா, கற்பழிக்க முயன்றதா, கொலை செய்ய முயன்றதா அவங்க குற்றம் சாட்டப் போறாங்க. எப்படி சமாளிக்கப் போறீங்க. அந்தப் பொண்ணு இருவது பாட்டில் திருடிக்கிட்டு போவுது அப்படின்னு தகவல் சொன்னனா நாங்க பின்னாடி போய் அலாக்கா தூக்கிட்டு வந்துடுவோமில்லை. நாங்களே பொம்பளைய அடிக்க முடியாது. நீ ஏன்ப்பா புகுந்து அடிக்கற''

''எரிஞ்சுபோச்சு சார் வயிறு.''

''உன்னை நிக்கவச்சு எரிச்சுடுவாங்கப்பா. என்னபண்றது. மாதர் சங்கமெல்லாம் வந்துவிடும். கட்சிக்காரங்க வந்துடுவாங்க. நீ அடிச்சது தான் முக்கியம். திருட்டு முக்கியமாவே இருக்காது. தப்பு பண்ணிட்டியேப்பா. நீங்க யாரு.''

அன்னபூரணி, அறிவானந்தம் பெயர் சொன்னார்கள்.

''அடடே...தலைவரா. முதல்ல அவரைக் கூட்டிக்கிட்டு வாங்க. இல்லைன்னா பேஜார் ஆயிடும்.''

தொலைபேசியில் தொடர்பு கொண்டு அறிவானந்தத்தை வரவழைத்தார்கள்.

அறிவானந்தம் யாரிடமோ கடன் வாங்கிய செல்போன் மூலம் உயர் அதிகாரிகள் பலபேரைத் தொடர்பு கொண்டார்.

போலீஸ் ஸ்டேஷன் வாசலில் கும்பல் கூடியது.

போய்



அவர் வீட்டிற்குத் தொடர்பு கொண்டு காசு எடுத்துவரச் செய்தார்.

கூலியாள் யாரோ வந்து மத்தியஸ்தம் பேச, ''என்ன விலை சொல்லு. திருட்டு முண்ட திருட்டு முண்டதான். ஆனா,நாங்க அடிச்சது தப்பு.

ஆத்திரப்பட்டு அடிச்சிட்டாரு. அவளை உத்தமின்னு சொல்லாத அவளை எப்படி கவனிக்கணும்னு எனக்குத் தெரியும். இப்படியே அவ வாழ்ந்துடமாட்டா. அவ வாழ்வு எங்கையில எழுதிவை. அவ சினிமாக்குப் போகும்போது இருட்டோட இருட்டா மூஞ்சியில துண்டை மூடி கழுத்தை இறுக்கி நான் கொலை பண்ணலை, என் பேரை மாத்தி வச்சிக்கறேன். எவ்வளவு விலை அதை சொல்லு.''

அவர்கள் லட்சரூபாயில் ஆரம்பித்து ஏழாயிரம் ரூபாயில் முடித்தார்கள். அடித்ததற்கு நஷ்ட ஈடாக ஏழாயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டு 'எங்களுக்குள் எந்தப் பிரச்சினையும் இல்லை' என்று எழுதி வாங்கப்பட்டது.

''இதுவரைக்கும் நானூத்தி அறுவத்தஞ்சு பாட்டில் திருடியிருக்க நாயே'' என்று அவளைப் பார்த்து அறிவானந்தம் உயர்த்திக் கேட்டார்.

''இல்லீங்க. நூத்திப் பன்னெண்டுதான் திருடினேன்'' என்று அவள் உளறினாள்.

போலீஸ்காரர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

ஒரு பெண் போலீஸ் ஓடிப்போய் அவள் பிடரியில் அடித்தாள். கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளினாள்.

''உட்காரவச்சு சோறுபோட்டு, காபி கொடுத்து, சம்பளம் கொடுத்ததுக்கு எங்கிட்ட ஏழாயிரம் ரூபா வாங்கிகிட்டு

போவயில்லை. நீ அழியப்போறடி. நீ அழியப்பேற. ரொம்ப கேவலமான சாவு உனக்கு வரப்போறதுடி. இது சத்தியம்.''

அன்னபூரணி உரத்துக் கத்தினாள். கீழிருந்து மண் எடுத்து ''அம்மா திரௌபதி, இந்தப் பன்னாடைய நான் கேட்டா அடிக்க வராங்க. நீ கேளு... நீ கேளு... நாக்கைப் புடிங்கிக்கிட்டு சாகறமாதிரி நீ கேளு.'' மண் எடுத்து தரையில் வீசினாள்.

அந்தக் கூட்டம் தலை குனிந்து கொண்டு போயிற்று.

ஐந்து இளைஞர்கள் மட்டும் 'அதுக்கெல்லாம் ஒண்ணும் கவலைப்படாத. நாங்க இருக்கோம்' என்று அவள் மடியிலிருந்த காசுக்கே கண்வைத்திருந்தார்கள்.

அன்னபூரணி வீட்டிற்கு வந்து சுருண்டு படுத்துக்கொண்டாள்.

அவளுக்கு நல்ல ஜுரம் வந்தது.

சுகுமாரன் மகேஸ்வரியைத் திட்டினான்.

''இதை ஏன் எங்கிட்ட சொல்லலை'' என்று கோபித்துக் கொண்டான்.

மகேஸ்வரி கண் கலங்கினாள்.

''என்னையும் வேலையை விட்டு எடுத்துடுங்க'' என்று கை கூப்பினாள்.

திலகவதி சமாதானம் செய்தாள்.

அந்த தைலக்கம்பெனி இரண்டுநாள் எந்த வேலையும் செய்யாது இடிந்துபோய் உட்கார்ந்திருந்தது.

''என்ன ஆயிப்போச்சுன்னு இப்படி சுருண்டு சுருண்டு உட்கார்ந்திருக்கறீங்க. இதுக்கெல்லாம் நம்மால தாங்க



முடியலைன்னா நாம் கம்பெனியே ஆரம்பிச்சிருக்கக்கூடாது. இதைவிட மோசமால்லாம் விஷயங்கள் வரும். இதைவிட கேவலமால்லாம் ஆட்கள் இருப்பாங்க. வியாபாரம்னு இறங்கிட்டோம்னா நாம எதிர்கொள்ள வேண்டியது பொறுக்கி, ரௌடி, ஃப்ராடு பசங்களைத்தான். நம்பவச்சு சரத்துண்டு போட்டு கழுத்தை அறுக்கறவன் நிறையபேர் இருக்கான். மூணுகோடி ரூபா பேங்க்ல கடன் வாங்கிட்டு ஒரு வருஷமா வட்டியும் கட்டாத அசலும் இல்லாத, ஏண்டான்னு கேட்கப் போனா, கேட்கப்போன பேங்க் ஆபீஸர்மேல நாயை ஏவிவிட்டவனெல்லாம் இருக்கான். மூணுகோடி ரூபாம்மா. மக்கள் பணம். மூணு வேளையும் நல்லா சாப்ட்டுகிட்டு இருக்கான். விதவிதமான பொம்பளைங்களோட சுத்தி கிட்டிருக்கான். கேட்பாரே கிடையாது. அப்படிப்பட்ட அநியாயத்தையெல்லாம் பார்க்கிறபோது நூத்திபன்னெண்டு பாட்டில் எடுத்தது தப்பா.

கவர்மெண்ட் ஓரமாபோட்டு வச்சிருந்த இரும்புக் கம்பியை மொத்தமும் எடுத்துட்டுப்போய் அடுத்த மாநிலத்துல வித்துட்டாம்மா. ஆற அமர பன்னெண்டு லாரியில எடுத்துக்கிட்டு போனான். எதுக்கு எடுத்துட்டுப் போறான்னு யாரும் கேட்கலை. எங்க கொண்டுபோய் வித்தான்னு யாருக்கும் தெரியலை. தெரியாத இருக்குமா. தெரியுமா. அங்கங்க மாமூல், அங்கங்க கையூட்டு. யாரெல்லாம் கேள்வி கேட்கறானோ அவனெல்லாம் லட்சத்துல அடிச்சான். ஏன் கோடியில சம்பாதிச்சதுனால. திருட்டுக் காசு. மக்கள் பணத்தைத் திருடினவன். சௌக்கியமா இருக்கான். சினிமா பார்க்கறதுக்கும், சீட்டு விளையாடறதுக்கும், பிரியாணி தின்றதுக்கும் திருடறான்.

நம்பிக்கைத் துரோகம்கறது உலகத்துல சர்வ சாதாரணமான விஷயம். பத்துபேர் இருந்தா அதுல மூணுபேர்

நம்பிக்கைத் துரோகம் பண்றவன். இன்னும் மூணுபேர் நம்பிக்கைத் துரோகம் பண்ணலாமான்னு யோசனை பண்றவன். மிச்ச நாலுபேர்தான் ஓரளவுக்கு கடவுளுக்கு பயந்து உழைச்சு சாப்பிடலாம்னு நினைக்கிறவன். இதுதான் உலகம். இதுதான் சதவிகிதம்.

# 31

''நீங்க வியாபாரத்துக்கு புதுசு.ஒரு பொருளைத் தயாரிக்கிறான் பாருங்க, அவனுக்கு எப்பவுமே பிரச்சினை ஜாஸ்தி. வாங்கி விக்கிறான் பாருங்க, அவனுக்கு பிரச்சினை கம்மி. ஆயிரம் பாட்டில் உங்ககிட்ட கடனுக்கு வாங்கி முடிஞ்ச அளவுக்கு வித்துட்டு அதுல லாபம் பார்த்துட்டு மிச்சம் விக்கலேன்னு கொண்ணாந்து உங்ககிட்ட கொடுத்துருவான். மாட்டிப்பீங்க. அவன் பொழைச்சுப்பான். யார் கடைபோட்டு சாமான்களை விக்கிறதுக்கு ஆரம்பிக்கறானோ அவனுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், அவனுக்கு பிரச்சினை வேற ரூபத்துல வருது.''

அறிவானந்தம் அழுத்தமாய்ச் சொல்லி நிறுத்த அன்ன பூரணி 'என்ன...என்ன...' என்று ஆவலானாள்.

''கடைபோட்டு சாமான்களை வாங்கி விக்கறவனுக்கு பிரச்சினை எப்படித் தெரியுமா வருது.''

அறிவானந்தம் அன்ன பூரணியை நோக்கி கேள்வியாகக் கேட்டு அவரே அதற்கு பதில் பேச ஆரம்பித்தார்.

''டக்குனு நாலுபேரு வந்து கட்சிக்கு நன்கொடை கொடுன்னு கேட்கறான். எந்தக் கட்சி, யாரு ஆளு



ஒண்ணுமில்லை. கொடுக்காட்டி பாட்டிலை ஒடிச்சுடுவான். மோட்டார் சைக்கிள்ள வந்து பளார் பளார்னு கண்ணாடியில கல் அடிச்சுட்டுப் போவான். உள்ள வாங்கற கஸ்டமரை கத்தி காட்டி மிரட்டுவான். அதனால எவன் வந்து கேட்டாலும் நன்கொடை கொடுக்கணும்கறது ஒரு நியதி ஆயிப்போச்சு. போலீசுக்கு சொன்னா, 'கொடுத்துட்டுப் போங்களேன் ஸார்'னு சொல்றாங்க. அவங்களும் கேட்டு வாங்கிக்கறாங்க.

இது என்னமோ இந்தியாலதான் நடக்குதுன்னு நினைக்காதீங்க... அமெரிக்காலயும் இது நடக்குது. லண்டன்ல நடக்குது. சிங்கப்பூர்ல நடக்குது. வடகொரியா, இந்தோனேஷியா எல்லா இடத்துலயும் நடக்குது. தைவான், சிலி, தென்அமெரிக்க நாடுகள் எல்லா இடத்துலயும் இந்த வம்பு உண்டு. அரசியல்வாதிக்கூட்டமும், ரௌடிக் கூட்டமும், உற்பத்தியாளர்களைத் தொந்தரவு பண்றதுங்குறது காலம் காலமா இருக்கற விதி. உற்பத்தியாளர்கள் இதுக்கு பயப்படறதே இல்லை. ஏன், இந்தச் செலவையும் சேர்த்து ஜனங்க தலையில் கட்டிடுவாங்க.

வியாபாரம் பிடிபட்டுப்போச்சு, உங்களுக்குக் கிடைக்கிற லாபம் அற்புதம். நாப்பது ரூபா பவுடர் டின்ல எல்லாவித எழவுக்கணக்கும் போக பத்துரூபா நிக்கும். மாசம் மெட்ராஸ்ல மட்டும் ஒரு லட்சம் பவுடர் டப்பாக்கு மேல போகும். எப்படிப் போகுது. தொடர்ந்து டி.வி.யிலயும், சினிமாலயும், பேப்பர்லயும், பத்திரிகையிலும் பொம்பளை முகத்தைப் போட்டுப் போட்டு மலர்கள் போலவே நறுமணமே அப்படின்னு பாட்டுப்பாடறா. பாட்டுப் பாடற போதெல்லாம் இந்த பவுடர் ஞாபகம் வரும். இந்த பவுடர் போடறபோதெல்லாம் பாட்டு ஞாபகம் வரும். உடம்புல ஊசி குத்தி மருந்து ஏத்தறா மாதிரி மூளையில இந்தப் பாட்டையும், அந்தப் பவுடரையும் ஏத்திட்டானுங்க.

மிட்டாய்மேல காகிதம் சுத்தி ஒரு சாக்லெட் விக்கும் தெரியுமா. ஊர்ல இருக்கற அத்தனை பத்திரிகையிலும் விதம்விதமா விளம்பரம் பண்ணிக்கிட்டே இருப்பான். ரெண்டு மாசத்துக்கு ஒரு முறை விளம்பரம் மாத்துவான். வருஷத்துக்கு ஆறுவிளம்பரம். கோடிக்கணக்குல செலவு பண்றாங்க அத்தினி செலவும் எங்க. யார் சாக்லெட் சாப்பிடுறாங்களோ அவங்க தலையில. ஊர்ல இருக்கற அத்தனை பசங்களையும் சாக்லெட் சாப்பிட வச்சுட்டு அந்தக் காசுல சுகமா இருக்கானுங்க. அவங்களுக்குகெல்லாம் வராத மிரட்டலா, அவங்களுக்கெல்லாம் ஏற்படாத தொந்தரவா.

இன்னும் அதிகாரபூர்வமா தைலம் தயாரிக்கறத நாம ரிஜிஸ்டர் பண்ணலை. இதை என்னான்னு சொல்லி ரிஜிஸ்டர் பண்றது. மருந்துப்பொருளா, காஸ்மெடிக்ஸா அதிகாரிகள் வந்து பரிசோதனை செய்தா என்ன பண்றது. அங்கேயிருந்து வருவாங்கன்னு நான் கவலைப்பட்டுகிட்டிருக்கேன். தலையில ஒட்டின தூசுமாதிரி தொடைச்சுட்டு எழுந்திருங்க வெறிபுடிச்சாமாதிரி நாம வேலை செய்வோம். இன்னும் கூடுதலா சம்பளம் கொடுப்போம். தெள்ளத்தெளிவா வாசல்ல ஆள்வச்சு பரிசோதனை செய்து வெளிய அனுப்புவோம். டிபன் பாக்ஸைத் திறந்து காமிச்சிட்டுத்தான் வெளியே போகணும்னு சொல்லிடுவோம்.''

அறிவானந்தம் சொல்ல, அந்தப் பொறுப்பைத்தான் ஏற்பதாக கலாவதியின் அப்பா சொன்னார்.

அன்னபூரணி மனம் தேறினாள். மேலும் சில கலவைகள் செய்தாள்.

கரிசலாங்கண்ணியையும், நெல்லிக்காய் சாறையும் அதிகம் சேர்த்தாள். செம்பருத்தியையும், மருதாணியையும் ஊறவைத்துக் கொதிக்க வைத்து கஷாயம் இறக்கி அவைகளையும் கலந்தாள்.



தெருவில் எல்லார் வீட்டிலும் ஐவர் தைலமே மிக முக்கியமான தைலமாக இருந்தது. மெல்ல மெல்ல எல்லாக் கடைகளிலிருந்தும் ஆர்டர்கள் வந்தன. குறிப்பாய் கோயம்புத்தூரும், மதுரையும் அதிக பாட்டில்கள் கேட்டன. முன்பணமாகக் காசோலை அனுப்பின.

ஆறாவது மாதம் எல்லாச் செலவும்போக நிகர நஷ்டம் இரண்டு லட்ச ரூபாய் என்பதாகக் கணக்கு தெரிவித்தது.

''பயமேயில்லை.ரொம்ப குறைச்சல். லாபம் என்னன்னு பார்த்தீங்கன்னா மொத்தம் இருபத்தொன்பது இடம் நமக்கு ஆர்டர் கொடுக்க ரெடியா இருக்கான். ஒரு வருஷத்துக்குள்ள இது நூறு இடமா மாறணும். வெறும் தேங்காய் எண்ணெயா விக்காம தலைக்கு ஷாம்ப்பூ செய்ய முடியுமான்னு பார்க்கணும். இதைத்தவிர வேற ஏதாவது கூட விக்க முடியுமான்னு பார்க்கணும். ஒரே சரக்குக்கு ஆள் போயிட்டு வரத்துக்கு பதிலா மூணு சரக்குக்கு ஆள் போயிட்டு வந்தா மூணுவிதமான லாபம். தயாரிப்பு நம்மகிட்ட இருக்கு. வேலைப்பளு முதல் மறுபடியும் அடியைப்புடிடா பாரதபட்டான்னு ஆரம்பிக்கணும்.''

''நம்மால முடியுங்களா. ஏற்கனவே தலையில நூறுபவுண்ட் வெயிட் இருக்க. இன்னொரு நூறு பவுண்ட் வைக்கச் சொல்றீங்களே.''

''தூக்கித்தாம்மா ஆகணும். ஆரம்பிச்சுட்டோமில்லை. இனிமே கீழ வைக்கவே முடியாது. கீழவச்சா அதல பாதாளத்துக்குப் போயிடுவோம். இதுதான் வியாபாரத்துல கஷ்டம். ஆரம்பிச்சுட்டோம். புலி வாலை கெட்டியா பிடிச்சுட்டோம். விட்டுட்டோம்னா புலி அடிச்சு கொன்னுடும்மா. ஒண்ணுமே இல்லாத தெருவுக்கு வந்துடுவோம். தம் புடிச்சு நின்னோம்னா புலியை மெறிச்சு,

அறுத்து தோலை எடுத்துதோள்ல போட்டுகிட்டு நடந்து போகலாம்.''

எல்லோருக்கும் அறிவானந்தம் பேச்சு மலைப்பாக இருந்தது.

மறுபடியும் கமிஷன் ஏஜண்ட்டுகள் வந்தார்கள். இந்த முறை மிகப்பெரிய கம்பெனி ஒன்று காரில் வந்து இறங்கியது.

''உங்க தைலம் ரொம்ப நல்லாயிருக்குன்னு மார்க்கெட்ல பேசிக்கறாங்க. மொத்தமா எங்க கிட்ட கொடுத்துடறீங்களா. நாங்க மார்க்கெட் பண்ணிக்கிறோம். எங்ககிட்ட மார்க்கெட் பண்ணின பிறகு இந்தத் தைலத்தை நீங்க எந்தக் காரணம் கொண்டும் விக்கக்கூடாது. நாங்க என்ன விலைக்கு வேணாலும் விப்போம். அதைக் கேட்கக் கூடாது. தெளிவா சொன்னா நீங்க பாட்டில் போடற வேலைகூட வேண்டாம். பாட்டிலைக் கவர்ச்சிகரமா நாங்க தயார் பண்ணிக்கிறோம். உங்க பாட்டில் கவர்ச்சிகரமா இல்லை. வெறுமனே தயார் பண்ணி பீப்பாய்ல அடைச்சு கொடுத்துடுங்க. பீப்பாயை நாங்க கொண்டுவந்து இறக்கறோம். வேற ஏதாவது உதவி வேணுமா. மிஷின் வேணுமா. அதுவும் கடன் தரோம். எல்லா உதவியும் செய்யறோம். நீங்க ஒரு லாபம் வச்சுகிட்டு மிச்சத்தை எங்ககிட்ட கொடுத்துருங்க.''

''என்னாங்க இப்படிச் சொல்றாங்க.'' அன்னபூரணி ஆச்சரியப்பட்டாள்.

''சரக்கு நல்லா விக்கிதுன்னு அர்த்தம். இல்லைன்னா இவன் வரவேமாட்டான். அடுத்தமாசம் சொல்றேன்னு அனுப்பிட்டு நாம இன்னும் மும்முரமா வேலையில இறங்கலாம்.''

அறிவானந்தம் தொடை தட்டிக் கொண்டார். அங்கே மறுபடியும் ஒரு சூடு பிடித்தது. முன்னிலும் அதிகமாக



மூலப்பொருட்கள் வந்து இறங்கின. இருக்கிற கிரைண்டர்கள் போதாது; மிகப் பெரிய கிரைண்டர்கள் தனிப்பட்ட முறையில் கொள்ளளவு அதிகமாகக் கொடுத்து அரைக்கும் கிரைண்டர்கள் வேண்டும் என்று திட்டமிடப்பட்டது.பெரிய மோட்டார்கள் பொருத்தப்பட்டன. வெளியே அதிக சத்தமும், புகையும் வராமலிருக்க சுவர்கள் பலப்படுத்தப்பட்டன. புகைபோக்கி வைக்கப்பட்டது. காசு வேகமாய்க் கரைந்தது.

உள்ளே அடிவயிற்றில் ஒரு பயம் இடையறாது இருந்தது.

''எல்லாத்துக்கும் ஒரு உச்சி இருக்கு. உச்சியைத் தள்ளிப் போட்டுக்கிட்டே இருக்கணும். அந்த உச்சியைத் தொட்டுட்டோம்னா அடுத்த ப்ராடக்ட்டுக்கு போகறதுக்கு தெரியணும். இது உங்களுக்குத் தெரியாது. மார்க்கெட்டிங் ஏஜண்ட்டான எங்களுக்குத் தெரியும்.''

மறுபடியும் அந்தப் புதுக்கம்பெனி வந்து பேசியது.

''வண்டி நிக்கக்கூடாது. ஓடிக்கிட்டே இருக்கணும். அதனால ஐவர் தைலம் மட்டுமில்லாத வேற எதுனா இருக்குமான்னு பாருங்க. அதையும் செய்யுங்க.''

''ஏங்க, இது சின்ன பாட்டில். தேங்காய் எண்ணெய்ல கலந்துவிட்டாலும் பத்துநாள் தான் வரும். தினம் ஒரு நாளைக்கு ரெண்டு தடவையாவது தலைக்கு எண்ணெய் தேய்ச்சுக்கணும், இல்லை ஒரு தடவை தேய்ச்சுக்கிட்டாகூட போதும். மறுபடியும் பத்துநாளைக்கு அப்புறம் இன்னொரு பாட்டில் வாங்கித்தான் ஆகணும். இதுல வந்து உச்சியைத் தொடறதுங்கறது எங்க. அரிசி என்னிக்காவது உச்சியைத் தொட்டிருக்கா. கோதுமை என்னிக்காவது உச்சியைத் தொட்டிருக்கா. இனி கோதுமை வேணாம்னு யாராவது சொல்லியிருக்காங்களா.''

அறிவானந்தம் பேச சுகுமாரன் ஆமாம் என்று ஆமோதித்தான்.

# 32

"அப்படியல்ல. அரிசி விலை வீழ்ச்சி அப்படின்னு பேப்பர்ல படிச்சிருக்கீங்களா. அது எதனால வருது. நிறைய பேர் நெல்லு போட்டு நல்லா நெல் விளைஞ்சா அரிசிவிலை குறையும். சிலசமயம் விவசாயி நஷ்டத்துக்குகூட வித்திருக்கான். அதேபோல ஐவர் தைலம் நல்லா விக்கிதுன்னு ஆரம்பிச்சு பார்த்து அங்கங்க நிறையபேர் இதே மாதிரி தைலம் ஆரம்பிச்சு, டைவர் தைலம், சைபர் தைலம் அப்படின்னு போட ஆரம்பிச்சாக்க உங்க மார்க்கெட் கொஞ்சம்கூடும். அப்போ இன்னும் ஸ்டெடியா இருக்கறதுக்கு இன்னும் வேகமா போகறதுக்கு நீங்க சில கெட்டிக்காரத்தனங்களைப் பண்ணி வைக்கனும். வேற என்ன ப்ராடக்ட் உங்களால பண்ண முடியும்னு யோசனை பண்ணுங்க.

உதாரணத்துக்கு ஒண்ணு சொல்றேன். வெறும் தேங்காய் எண்ணெய் விக்கலாம். ஐவர் தைலம் பாட்டில்ல விக்கணும். ஐவர் தைலம்னு ஸ்டேம்ப்புல போட்டு விக்கணும். இதுக்கெல்லாம் முன்னாடி தயவு செய்து இந்த வியாபாரம் பண்றோம்னு அரசாங்கத்துகிட்ட ஒப்புதல் வாங்கிடுங்க."

"நீங்க வாங்கித்தரீங்களா."

"நல்லா செய்யறேன். நான் சுத்தி சுத்தி வரது என் கம்பெனிக்கு தைலத்தை வாங்கவா. உங்களுக்குள்ள புகுந்துடமுடியும்னு தானே பார்க்கறேன்."



அவர் வெளிப்படையாகச் சொல்லிவிட்டு வாய்விட்டுச் சிரித்தார்.

அவர் நல்லவரா, கெட்டவரா பயமாக இருந்தது.

உலகத்தில் எல்லோரையும் இப்படித்தான் அணுக வேண்டியிருக்கிறது.

"ஆனால், அவரால் லாபம் இருக்கிறதே" என்று அறிவானந்தம் அடிக்குரலில் அன்னபூரணியிடம் தெரிவித்தார்.

"இந்த வேலையெல்லாம் நமக்குத் தெரியாது இல்லை. இவங்க செய்யட்டுமே. செஞ்ச வேலைக்கு கூலி கொடுத்துடுவோமே."

"மாச சம்பளமா கேட்பாரோ."

"வேணாம். மாச சம்பளமா உட்கார வைக்க வேணாம்."

"கவர்ன்மென்ட்ல சகலமும் வாங்கிக் கொடுத்துடறேன். எனக்கு லட்சரூபா கொடுத்துடுங்கோ."

அவர் உரத்த குரலில் கேட்க வீடு அதிர்ந்து போயிற்று.

"என்னங்க, வீட்டைவித்து கைகாசு போட்டுகிட்டிருக்கோம். லட்சரூபான்னு சர்வசாதாரணமா சொல்றீங்களே."

"உடனே தரவேண்டாம். ரெண்டு தவணையா கொடுங்க."

"ஜாஸ்திங்க. தரமுடியாது."

ஐம்பதாயிரம் ரூபாய்க்கு பேரம் படிந்தது.

"எனக்கு அம்பத்தேழு வயசாச்சு. கம்பெனியில இருந்தா ரிடையர்ட் ஆகற வயசு. ஆனா, ரிடையர்ட் ஆக முடியலை. இந்த அம்பத்தேழு வயசுல நான் நாப்பது கம்பெனி பார்த்துட்டேன். இனியும் எதனாலயோ என்னால உட்கார்ந்து

வேலை செய்ய முடியலை. உங்களுக்கு என்ன உதவி வேணுமோ அதைச் செய்துட்டு ஒதுங்கிக்கறேன். அதுக் குண்டான காசை வாங்கிக்கறேன். அப்படிப் பண்ணா போறும்'' என்று அவர் சொல்ல அவர்கள் தலை யாட்டினார்கள்.

அவர் எல்லா இடத்திற்கும் சுகுமாரனை அழைத்துக் கொண்டு போனார். என்ன செய்யவேண்டும் என்று தெளிவு படுத்திக்கொடுத்தார்.

அவர் நீட்டிய இடங்களில் அன்னபூரணியும், சுகுமாரனும் ஒப்புதலுக்குப் பிறகு கையெழுத்துப் போட்டார்கள்.

மூன்றுபேர் பாகஸ்தர்களானார்கள். அறிவானந்தம், அன்னபூரணி, சுகுமாரன் என்று தீர்மானிக்கப்பட்டது. மற்ற இரண்டு பேரும் முதலீடு போட்டவர்களாக இருந்தார்கள். இதற்கு இன்ன வட்டியைத் தருவதாக மட்டுமல்லாது இத்தனை சதவீதம் லாபம் என்றும் சொல்லப்பட்டது.

எந்த நேரமும் கம்பெனி பற்றிய யோசனையே இருந்தது. உடுத்திக் கொள்வது பற்றியோ, உண்பது பற்றியோ, வெளியே போவது பற்றியோ, உலகத்தின் மற்ற விஷயங்கள் பற்றியோ, டி.வி. பார்ப்பது பற்றியோ,சினிமா பற்றியெல்லாம் மறந்து போயிற்று.

சிறிதுகூட தயாரிப்பு சுணங்காமல் இருக்க திலகவதி எல்லா வேலைகளையும் செய்தாள்.

விசாலாட்சி வேலை செய்கிற பெண்கள் மீது கண்வைத்துக் கொண்டாள். வீட்டுச் சமையலைக் கவனித்தாள்.

கலாவதி கணக்கு வழக்குகளைக் கவனித்துக் கொண்டாள்.



சுகுமாரன் கடைகளுக்குப் போய் காசு வசூலிப்பதையும், ஆர்டர் வேண்டுமா என்று கேட்பதையும் தன்னுடைய வேலையாக வைத்துக்கொண்டான்.

அறிவானந்தம் எல்லா இடத்திலும் சுற்றிச் சுற்றி வந்தார். தயாரிப்பு ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. ஐவர் தைலம் மட்டுமில்லாமல் இன்னும் சில அழகுசாதனப் பொருட்களும் தயாரிக்கப்படும் என்று எழுதி அதற்கு அரசாங்க அனுமதி வாங்கிக் கொண்டார்கள். அவ்வப்போது தயாரிப்பைக் காட்டி கூலி வாங்கிக் கொள்வதாகவும் எழுதிக் கொடுத்தார்கள்.

''நல்ல களிமண் வேணும். எங்க கிடைக்கும்.''

அன்னபூரணி இரண்டு நாள் யோசனைக்குப்பிறகு சபைக்கு நடுவே உட்கார்ந்து கேட்டாள்.

''என்னாங்க. களிமண்ணா எதுக்கு. என் மண்டைக்குள்ள இருக்கு. வேணும்னா எடுத்துக்கோங்க'' என்று அறிவானந்தம் சொல்ல வீடு மெல்லியதாகச் சிரித்தது. முன்பு போல் வீட்டில் கலகலப்பும், வெடிச்சிரிப்பும் அரட்டையும் இல்லை. எல்லோருக்கும் வியாபாரம் பற்றிய கவலை வந்துவிட்டது.

சட்டென்று அறிவானந்தம் சுதாரித்துக் கொண்டார்.

''எதுக்கு கேட்கறீங்கன்னு சொன்னா அதுக்கேத்தபடி பேசறேன்.''

''ஓடற ஆத்துக் களிமண், அது வேணும்'' என்று அன்னபூரணி சொல்ல அவர்கள் வேகமாக யோசித்தார்கள்.

கோதாவரிக் கரையிலிருந்து கொண்டு வரலாம் என்று சொன்னார்கள். கேரளாவில் பரதப்புழா என்ற ஆற்றின் களிமண்ணை அங்கேயே சுத்தம் செய்து தருகிறார்கள். பாலித்தீன் கவர்களில் போட்டு விற்கிறார்கள் என்று சொல்லி,

அறிவானந்தம் கோதாவரிக்கும் சுகுமாரன் கேரளாவிற்கும் போய் உடனே திரும்பி வந்தார்கள்.

வீடு அவர்களை ஆவலாய் வரவேற்றது.

கேரளாவிலிருந்தும், ஆந்திராவிலிருந்தும் ஆளுக்கொரு களிமண் மூட்டையைக் கொண்டு வந்திருந்தார்கள்.

இரண்டு களிமண்ணுமே மிக நன்றாக இருந்தது. களிமண்ணை உரலில் போட்டு இடித்து சத்தம் செய்து மறுபடியும் மெல்லியதாகச் சலித்து கசடுகளை நீக்கி அந்தக் களிமண்ணோடு சந்தனப் பவுடர் சேர்த்து மஞ்சள் பவுடர் சேர்த்துக் குழைத்து ஆண்களையும், பெண்களையும் முகத்தில் அப்பிக்கொள்ளச் சொன்னாள். வீடு முழுவதும் வேலையாட்கள் உட்பட குழைத்து அதை முகத்தில் அப்பிக் கொண்டார்கள். காயவைத்தார்கள். முகத்தில் அப்பிக் கொண்டிருக்கும் போது அதிகம் பேசாமல் இருக்கும்படிச் சொன்னாள். அவர்கள் உம்மென்று உட்கார்ந்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பதினைந்து நிமிடத்திற்குப் பிறகு நன்கு காய்ந்ததும் முகத்தைக் கழுவிக் கொண்டார்கள்.

எல்லார் முகமும் பளிச்சென்று எண்ணெய்ப் பிசுக்கின்றி மெல்லிய பளபளப்போடு இருந்தது.

''அட...பிரமாதமா இருக்கே. சோப்பைப் போட்டு அலம்பறதவிட இது ஜோரா இருக்கே. கொஞ்சம் பயத்தமாவும் கலந்துடலாம். இன்னும் நல்லாயிருக்கும்''

''இதுக்கு என்னா பேரு.''

'ஃபேஸ் பேக்''

''அப்படின்னா.''



''முகத்தை களிமண்ணால பேக்கிங் பண்றது. பண்ணி துடைச்சுடறது. முகத்துல இருக்கிற எல்லா அழுக்கும் பிரமாதமா போயிடும்.''

''இவ்ளோதான் சமாச்சாரமா.''

''ஆமாம்.''

''என்ன விலை விக்கலாம்.''

''களிமண்ணுக்குத்தான் பெரிய விலை ஆயிப்போச்சு. மஞ்சளோ, சந்தனப் பவுடரோ அத்தினி விலை இல்லை. ஏதாவது காட்டுக்குப் போய் சந்தன்க் கட்டை வாங்கிட்டு வந்துட்டீங்கன்னாக்க அதைத் துண்டு பண்ணி நாமளே பொடி பண்ணிக்கலாம். விரல் உசரம் டப்பா. சுண்டுவிரல் அளவுக்குதான் சந்தனப் பவுடர். கட்டை விரல் அளவுக்கு மஞ்சள் பவுடர். கொஞ்சம் களிமண். கொஞ்சம் பயத்தமாவு.''

அறிவானந்தம் போக்குவரத்துச் செலவு எழுதித்தர அதை வைத்து சுகுமாரன் கணக்குப்போட, ஒரேயொரு டப்பா இருபதுரூபாய் என்று வைத்தார்கள். ஐவர் முகப்பூச்சு பவுடர் என்று அதன்மீது எழுதப்பட்டது.

கரும்புள்ளி, செம்புள்ளி மற்ற தோல்வியாதிகள், கருப்புத்திட்டுகள் எல்லாம் நீங்கி பிரகாசமாய் முகம் மலர வெகுநிச்சயமான பவுடர் ஐவர் முகப்பூச்சு பவுடர். தெரு முழுவதும் வழங்கப்பட்டது.

''ஐய்யய்ய... இதைப்போய் மூஞ்சியில பூசிக்கறதா.''

பெண்கள் எதிர்த்தார்கள்.

''மூஞ்சி இருக்கிற லட்சணம் போறும்'' என்று மறுத்தார்கள்.

''எண்ணெய்க்கு இருந்த வரவேற்பு பவுடருக்கு இல்லை.

அன்னபூரணி கவலைப்பட்டாள்.

''எனக்கு இது பயமா இருக்கே.'' சுகுமாரன் எதிர்ப்பு தெரிவித்தான்.

''எனக்கும் சந்தேகமா இருக்கு.'' அறிவானந்தம் தன் கருத்தைத் தெரிவித்தார்.

''எனக்கு இல்லை. மூஞ்சி பளிச்சுனு இருக்குன்னு அத்தனை பேரும் நினைக்கறாங்க. ஒரு சோப்பை தூக்கி பையில போட்டு ஆபீஸ் போகறதுக்கு பதிலா இந்த டப்பாவைப் போட்டுக்கலாம். கொஞ்சம் பொடியை எடுத்து மூஞ்சியில தடவிகிட்டு ஒரு நிமிஷம் பாத்ரூம்லயே இருந்துட்டு கைகால் சுத்தம் பண்ணிகிட்டு மறுபடியும் வந்து முகம் கழுவினா பத்து தடவை சோப்பு போடறதுக்கு இணையா இது இருக்கும். இந்த ஊர் பொண்ணுங்களுக்குத் தெரியலை. குறிப்பா, சிந்தாதிரிப்பேட்டை. இந்தப் பொண்ணுங்களுக்குத் தெரியலை. பெசன்ட் நகர் பக்கம் போ. எங்கேயாவது டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ல நின்னு இலவசமா கொடு.''

''இதுக்கு நீங்க போய் நிப்பானேன். இதுக்குன்னு பசங்க இருக்காங்களே. சேல்ஸ் பீப்பிள்னு பேர் அவாளுக்கு, எது வேணா விப்பா. வெறுமனே விக்காம டை கட்டிண்டு விப்பான். ரோடுல பார்த்ததில்லையா. குரங்கு பொம்மை, கோட் ஸ்டேண்ட், ஹேண்ட் பைப்புன்னு நிறைய விக்கறானே. ஒரு க்ரூப்பா இருக்காங்க. கொண்டு போய் ப்ராடக்ட் கொடுத்தா அவங்க, அறிமுகப்படுத்துவாங்க.''

ஏஜென்ஸி கேட்டு வந்தவர், அரசு அலுவலகத்தில் அனுமதி வாங்கித் தந்தவர் விவரித்தார்.

''எவ்ளோ கொடுக்கணும்.''



''ஒரு ஆயிரம் டப்பா கொடுங்கோ.''

''ஏன் இந்தாளு எப்பவுமே ஆயிரம், ரொண்டாயிரம்னே பேசறான்.''

விசாலாட்சி மெல்லியதாய்க் கடிந்து கொண்டாள்.

''நானா பூசிக்கப்போறேன். கொடுத்தாதான் ஜனங் களுக்குப் பிடிபடும்.''

அன்னபூரணி சரி என்று தலையசைத்தாள்.

உடனே ஒரு படை திரட்டினார்.

அன்னபூரணி அம்மாளிடம் அது என்ன சமாச்சாரம் என்று விவரிக்கச் சொன்னார்.

பதினாறு இளைஞர்களும், ஆறு யுவதிகளும் அதைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டார்கள். தாங்களும் தடவிக் கொண்டு பார்த்தார்கள்.

''ஹ... ஏ க்ளாஸா இருக்கே'' என்று சொன்னார்கள்.

சுகுமாரன் ஒரு சிறிய விளம்பரக் காகிதம் அச்சடித்துக் கொடுத்தான்.

நல்ல மூலிகைகள் அடங்கியது. ரசாயன மாற்றமும் இதில் ஏற்படாது. முகத்திற்கு மிகமிகப் பாதுகாப்பானது. சோப்பைப் போல தொந்திரவு கொடுக்கக்கூடிய விஷயம் எதுவும் இல்லை என்றெல்லாம் எழுதியிருந்தான்.

நல்ல நாள் பார்த்து விளம்பரத்திற்குப் பையன்கள் இறங்கினார்கள்.

அன்னபூரணியும் விசாலாட்சியும், திலகவதியும், சுகுமாரனும், கலாவதியும் சுற்றிச் சுற்றி வந்தார்கள். பையன்கள் எப்படிப் பேசுகிறார்கள் என்று தள்ளி நின்று கவனித்தார்கள்.

மாலைக்குள் எல்லாம் தீர்ந்துவிட்டது என்று ஒரு பையன் சொல்ல ''அதுக்குள்ளயா ஆயிரம் பாக்கெட் தீர்ந்துபோச்சு.''

''இல்லீங்க ஐநூறுதான் கொடுத்தாரு. ஆயிரம் எங்க கொடுத்தாரு'' என்று சொன்னார்கள்.

# 33

**5**.7.2002

வியாபாரம் என்று இறங்கினால் ஏன் உலகத்திலுள்ள எல்லா மனிதர்களும் முதுகில் குத்துகிறார்கள் என்ற கவலை அன்னபூரணிக்கு ஏற்பட்டது.

''விடுங்க கண்டுக்காதீங்க. அப்படித்தான்.''

அறிவானந்தம் அவளைச் சமாதானப் படுத்தினார்.

ஆனால் இது முதுகில் குத்துகிற காரியமல்ல. தலையிலேயே கல்லைத் தூக்கிப் போடுகிற மனிதர்கள் அருகே இருக்கிறார்கள் என்பது அன்னபூரணிக்குப் புரியவில்லை.

மகாதேவியிடம் சுத்தமாகக் காசு இல்லை. சினிமா பார்த்துப் பதினைந்து நாளாகி விட்டது. டி.வி. பார்ப்பதும் போதவேயில்லை. சினிமா பார்த்தால்தான் அதிலேயே மூழ்கிக் கரைந்து போக முடிகிறது. அப்படி மூழ்கிக் கரைந்து போக முடியாதபோது வாழ்க்கையினுடைய வெம்மை சுட்டெரிக்கிறது. அக்கம்பக்கத்தில் நிறைய கடன் வாங்கிவிட்டாள். அவர்கள் கண்டபடி ஏசுகிறார்கள். காசு கொடுத்து விட்டுப்போ என்று சொல்கிறார்கள்.



நாடார் கடையில் ''இன்னும் அறுபது பாட்டில் வைத்திருக்கிறேன். கொண்டு வந்து கொடுக்கிறேன். ஒரு பதினைந்து ரூபாய் கொடு'' என்று வாங்கி இரண்டு படம் பார்த்துவிட்டாள். நாடார் ''பாட்டில் எங்கே... பாட்டில் எங்கே'' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். வீட்டுக்கும் ஆள் அனுப்பிவிட்டார். என்ன செய்தால் மறுபடியும் காசு கிடைக்கும் என்று தெரியவில்லை. மறுபடியும் போய் வேலை செய்யலாம் என்றால் மனம் அதற்கு ஒப்பவில்லை. சோம்பலாக இருந்தது. வேலை செய்து சம்பாதிப்பது என்பது சிரமமாக இருந்தது. வேலை செய்யாமல் பெரும் காசு வந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது.

வேலை செய்கிறோமோ இல்லையோ, ஏதேனும் கொஞ்சம் பாட்டில் எடுத்துவந்து நாடாரிடம் கொடுத்துகூட காசு வாங்கிக் கொள்ள வேண்டும். போய் ஒரு கோணிமூட்டை நிறைய பாட்டில் எடுத்துவரவேண்டும். எப்படி எடுத்து வரலாம் என்று யோசித்தாள்.

அன்னபூரணியின் வீட்டுக்குறுக்கேயும், நெடுக்கேயும் நடந்து போனாள். ஒரு பெரிய வேன் வந்து நின்றிருந்தது. எதற்கு என்று கேட்டாள். சாயந்தரம் லோடு ஏத்தணுமில்லையா என்று சொன்னார்கள்.

பார்த்தால் சாத்தி விடுவார்கள். குறிப்பாக இந்த சுகுமாரன் வேகமாக அடிப்பான் என்று பயம் வந்தது. சுற்றிக் கொண்டு வீட்டின் பின்புறம் போனாள். அந்தப் பக்கம் ஒரு கடை இருந்தது. அந்தக் கடையை ஒட்டி சந்து இருந்தது. அந்த சந்து வழியே போனால் கடைக்குப் பின்னால் இருக்கிற கோடவுனும், ஆட்கள் தங்குகின்ற இடம் இருந்தன. அவள் போய் அந்த கடைசிப் பக்கக் கதவோரம் நின்று கொண்டாள். அடுத்தது மிகப் பெரிய சுவர் அந்தச் சுவர் தாண்டி உள்ளே குதித்தால் அன்னபூரணி வீட்டின் கொல்லைப் புறம்

குதிக்கலாம். அதாவது பாட்டில் அடுக்குகின்ற இடத்தில் குதிக்கலாம். காத்திருந்த அவளைப் பார்த்து இரண்டு, மூன்று பேர் என்ன என்று கேட்டார்கள்.

''இங்க வேலை செய்யற அம்மா வரச்சொல்லிச்சு அதுக்கு முடியலையாம். கூடமாட ஒத்தாசை செய்யணுமாம்.''

அவர்கள் அப்படியா என்று சொல்லிவிட்டுப் போனார்கள். அங்கு யார் யாரோ வேலை செய்கிறார்கள். எந்தம்மா கூப்பிட்டார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை.

அது பிளாஸ்டிக் கடை. குழந்தைகளுக்கான விளையாட்டு பொம்மைகள் நிறைய இருந்தன. மூட்டை மூட்டையாக ஊதுகுழலும், பந்துகளும் சின்ன விரல் நீள உயர பொம்மைகளும் இருந்தன.

அந்தப் பொம்மைகளுக்கு மாடியில் உள்ள சில பெண்கள் உடை தைத்துப் போட்டிருந்தார்கள். அல்லது தைத்த உடையை மாட்டிக் கொண்டிருந்தார்கள். சிலர் கழிப்பறைக்கு வந்து போனார்கள்.

எதுக்கு நிக்கற என்றால் 'பெருக்கறதுக்காக என்னை வரச் சொல்லியிருக்காங்க' என்று சொன்னாள்.

யாரும் வராதபோது உள்ளே நுழைந்தாள்.

அங்கு வைத்திருந்த ஏணியை எடுத்து ஓட்டின் மீது போட்டு ஏறி நின்றாள். ஓடு தாண்டியும் சுவர் இருந்தது. அந்த ஏணியிலேயே கால் வைத்து அந்த சுவர் பகுதியைப் போய் எக்கிப் பிடித்தாள். தம் பிடித்து ஏறி எட்டிப் பார்த்தாள். உள்ளே ஆட்கள் நடமாட்டம் அதிகமிருந்தது.

அவள் நீண்ட கயிறு எடுத்து அந்த ஏணியை அருகிலுள்ள குழாயோடு இறுக்கக் கட்டினாள். மடமடவென்று வெளி யேறினாள்.



அவளுக்கு அதிகம் பசித்தது. மறுபடியும் அவள் பக்கம் இருக்கின்ற டீக்கடைக்குப் போய் கடன் சொல்லி பன்னும், டீயும் சாப்பிட்டாள்.

''நாளைக்குக் கார்த்தால நிச்சயமா கொடுத்துடுவேன்'' என்று சத்தியம் செய்தாள்.

ஒரு வடையும் எடுத்துக் கொண்டாள். வடை சாப்பிட்டபடியே மறுபடியும் அந்த இடத்திற்கு வந்தாள். நோட்டமிட்டாள். யாருமே இல்லாதபோது சரக்கென்று உள்ளே புகுந்தாள்.

கட்டப்பட்ட ஏணி கட்டப்பட்ட விதமாகவே இருந்தது. பல பேர்கள் வேலை செய்கிற இடத்தில் ஏதேனும் ஒரு விஷயம் மாற்றினால் ஏன் மாறியது என்று யாரும் கேட்க மாட்டார்கள். யாரோ மாற்றியிருக்கிறார்கள் என்று நினைத்துக் கொள்வார்கள்.

ஏணியின் மீது மடமடவென்று ஏறினாள். ஏறி சுவர்மீது படுத்துக் கொண்டாள். பேசாமல் உள்ளே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்னபூரணி வீட்டில் வேலை செய்கிறவர்கள் போய்விட்டார்கள். ஆனால், கொல்லைக் கதவு திறந்திருந்தது. யாராவது எப்போதாவது வந்து விட்டுப் போயிருப்பார்கள் என்று நினைத்து அவள் கம்பிபிடித்து பாய்லர் பைப் பிடித்து இறங்கினாள். பாய்லர் பைப் சூடாக இருந்தது. கால் வைத்தால் கொப்பளித்து விடுமோ என்று பயமாக இருந்தது. ஆனாலும், மூடியின் மீது கால் வைத்துவிட்டுக் கீழே குதித்தாள்.

கொல்லைப்புறக் கதவை மூடி இந்தப் பக்கம் தாழ் போட்டுக் கொண்டாள். மடமடவென்று பாட்டில்களை வாரி

கோணி மூட்டையில் போட்டுக் கொண்டாள். கோணி மூட்டையில் எடுத்து முடிந்த அளவு பாட்டில்களை எடுத்துக்கொண்டு பாய்லரில் ஏறினாள். பாய்லர் சூடு ஆறியிருந்தது. கோணியின் நுனியைப் பல்லால் கடித்துக் கொண்டாள். தாடை பிய்ந்துவிடும் போலிருந்தது. இரண்டு எக்கில் கோணி மூட்டையோடு பாய்லர் பைப்பில் ஏறினாள். கம்பியைப் பிடித்தாள். கம்பியின் மீது ஒரு கை வைத்து இன்னொரு கையால் மூட்டையைத் தூக்கி சுவர் மீது அமர்ந்து கொண்டாள். பாட்டில்களை மெல்ல ஏணியில் சரித்து இறக்கி அவளும் ஏணியிலிருந்து சரிந்து இறங்கினாள்.

கோணி தூக்கிய தாடை பயங்கரமாக வலித்தது. பலமுறை அசைத்துப் பார்த்துக்கொண்டாள். கைகளால் தடவினாள். கோணி மூட்டையைத் தலையில் வைத்துக் கொண்டாள். வேகமாக வந்தின் வழியே நடந்தாள். எதிரே யாரோ எதிர்ப்பட்டார்கள் ஆனால்,அவள் கவலையே படவில்லை. மேலாக்கைப் பல்லால் கடித்தவாறு பாதி முகத்தை மூடியபடி அவள் வெளியே போனாள்.

''என்னாது?'' அந்த ஆள் தடுத்து நிறுத்தினான்.

''பாட்டில் பழைய பாட்டில்'' என்று சொன்னாள்.

அவன் தடவிப் பார்த்தான். சரியென்று சொன்னான்.

அந்த இடத்திற்கும் பழைய பாட்டிலுக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்பதால் எதுவும் சொல்லாமல் நகர்ந்து விட்டான்.

அவள் குதியலோடு பாட்டில் எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். வீட்டில் வைத்துவிட்டு நாடாரிடம் பதினைந்து ரூபாய்க்கான பாட்டிலைக் கொண்டு போய்க் கொடுத்தாள்.



''இன்னும் நிறைய பாட்டில் இருக்கு. எவ்ளோ தருவ'' என்று கேட்டாள். பேரம் பேசினாள்.

பன்னிரண்டு ரூபாய் பாட்டில் ஆறு ரூபாய்க்குப் படிந்தது.

நூத்திப்பதினேழு பாட்டில்கள் வீட்டில் இருந்தன. கொண்டு போய்க் கொடுத்து எண்ணி காசு வாங்கிக் கொண்டாள்.

பஸ் பிடித்து தாம்பரம் பக்கம் போய் அசைவ ஹோட்டலில் கேட்டுக் கேட்டுச் சாப்பிட்டாள். சினிமாவுக்குப் போனாள்.

அவள் மடியில் காசு இருந்தது. இன்னொரு பஸ் பிடித்து திருவள்ளூர் பக்கம் போய் கோவில் வாசலில் படுத்துக் கொண்டாள்.

கட்டணக் கழிப்பிடத்திற்குப் போய் காசு கொடுத்துக் குளித்தாள்.

சிறிய பையில் காசைப் போட்டு சொருகிக் கொண்டாள். கயிற்றில் கட்டி இடுப்பில் கோர்த்து அடி வயிற்றுக்குக் கீழே இருக்கும்படி வைத்துக் கொண்டாள். மேலே புடவை கட்டினாள்.

அப்பொழுது புதுப்படம் வந்திருந்தது. பெண்கள் பக்கம் மிகப் பெரிய சண்டையும், கூச்சலுமாக இருந்தன.

அவர்கள் எல்லோரையும் தாண்டிக்கொண்டு உள்ளே போனாள். டிக்கெட் கவுண்ட்டரில் ''ரெண்டு டிக்கெட் வேண்டும்'' என்று கேட்டு வாங்கினாள்.

''இந்தப் பொண்ணு சாமர்த்தியத்தைப் பாரேன். உள்ள பூந்து டிக்கெட்டோட வெளிய வருது'' என்று ஒருவள் சொல்ல அவளைப் பார்த்து இவளும் சிரித்தாள்.

''டிக்கெட் இருந்தா கொடேன்'' என்று அந்தப் பெண் கேட்க 'டபுள் ரேட்' என்று இவள் பதில் சொன்னாள்.

''பரவாயில்லை கொடு'' என்று அவள் காசு பிரிக்க, ''வேணாம் டிக்கெட்டுக்கு உண்டான காசே கொடு'' என்று சொல்லி வாங்கிக் கொண்டாள்.

மகாதேவியின் மனமாற்றம் அந்தப் புதிய பெண்ணுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இரண்டு பேரும் படம் ஆரம்பித்து விட்டது என்று வேகமாகப் போனார்கள்.

''போய் இடம் புடி வரேன்'' என்று சொல்லி மகாதேவியை முன்னுக்கு அனுப்பிவிட்டு அவள் கேன்டீன் பக்கம் போனாள்.

ஒரு தூக்கில் இரண்டு டம்ளர் தண்ணீரும், இரண்டு டம்ளர் டீயும் தனித்தனியே வாங்கிக் கொண்டு உள்ளுக்குள் வந்து தடவி மகாதேவி குரல் கொடுக்க அவளுக்கருகே போய் உட்கார்ந்து கொண்டாள்.

தூக்கைக் கீழே வைத்து தண்ணீரை அவளுக்குக் கொடுத்தாள்.

''எப்படி தண்ணி வாங்கிட்டு வந்த.''

''நான் கேட்டா கொடுத்துடுவாங்க'' என்று சொன்னாள்.

தண்ணியைக் குடித்து டீ குடித்த போது மிகப்பெரிய தெம்பு ஏற்பட்டது. படம் படு தமாஷாக இருந்தது. இரண்டு பேரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். ஒருவர் கையை ஒருவர் கோர்த்துக் கொண்டார்கள். சிரிப்பில் கட்டிப் பிடித்துக் கொண்டார்கள். இடைவேளையின்போது ஒருவரை யொருவர் பார்த்தார்கள். பேசிக் கொண்டார்கள். அவளுக்குப் பெயர் பேபி என்று தெரிந்தது.



''பொழப்புக்கு என்னா பண்ற''

''எதுனா பண்ண வேண்டியதுதான்'' என்று சொல்லி பேபி கண்சிமிட்டினாள்.

''கஞ்சா விக்கிறியா''

''அதெல்லாம் தெரியாதுப்பா.''

''பழ வியாபாரமா?''

''இல்லை அதெல்லாம் இல்லை.''

''வேற என்னா''

''பிளேடு போட்டு பர்ஸை எடுத்துடுவேன். உன்னாண்ட துட்டு இருக்குன்னு தெரிஞ்சுகிட்டேன். ஆனா துட்டை ஜாக்கிரதையா வச்சுக்கற. அடிவயித்துல குழலை விட்டு கட்டிக்கற போலிருக்கே. தொட்டுப் பார்த்துட்டேனே'' என்று சொல்லி கண்சிமிட்டிச் சிரித்தாள்.

சிறிது நேரம் பயத்தில் உறைந்திருந்த மகாதேவி மெல்ல பேபியைப் பார்த்துச் சிரித்தாள்.

# 34

**12.** 7.2002

திருடுவதற்குக் காரணம் வறுமை மட்டுமல்ல. அதுவொரு தினவு. அதுவொரு திமிர். திருடி மூன்று முறை அகப்படாமல் தப்பித்து விட்டால், திருடியதை ஆற அமர அனுபவித்துப் பழகிவிட்டால் வாழ்நாள் முழுவதும் இந்தத் திருட்டுக் குணம் உடம்பை விட்டு, மனதை விட்டு வெளியே

போகாது. மரண பரியந்தமும் திருடனாகத்தான் வாழ வேண்டியிருக்கும்.

''நம்ம வூட்டு சந்து வழியா போயி அடுத்த வீட்ல இறங்கி உள்ள இருக்கற சாமானை எடுத்துட்டு வந்துடலாமா. அப்படிச் செய்ய முடியுமா.''

''அது என்னா வீடு.''

''வீடு இல்லை, கம்பெனி.''

''அப்படியா.''

பேபி துருவித் துருவி விசாரித்தாள்.

''இதுக்கெல்லாம் எங்களாண்ட ஆள் இருக்குது.நீ இடம் சொல்லிட்டா போதும். நாங்க போய் உண்டானதை ரொப்பிக்கிட்டு வந்துடுவோம். உனக்கு என்னா உண்டோ அதைக் கொடுத்துடுவோம். பால்மாறவே மாட்டோம். எத்தினி மணிக்கு கம்பெனி மூடும். எட்டு மணிக்கு மூடும்னு வச்சிக்கட்டுமா.

ஏன், பத்து மணிக்கு மூடட்டும். நம்ம சமாச்சாரமே ஒரு மணிக்கு மேலதான். ஒண்ணுலேர்ந்து மூணுக்குள்ள எந்த வேலை முடிச்சாலும் யாருக்கும் ஒண்ணும் தெரியாது. ஏறி இறங்கி போய்ப் பார்த்துட்டு வந்து அதுக்கப்புறம் எடுக்கணும்னு தோணிச்சுன்னா எடுப்பாங்க. இல்லைனா எடுக்கமாட்டாங்க. பேப்பர்ல படிச்சியா சேட்டு கடையில பின்னால ஓட்டை போட்டு திருடினது நாங்கதான். நீ என்னமோ பாட்டில் பாட்டிலுன்றியே, நானூத்தி சொச்சம் பவுன் திருடிக்கிட்டு வந்துட்டோம்.''

''திருடியும் சினிமா தியேட்டர்ல தானே வந்து முட்டற.''

''மாமூல் கொடுக்கத் தேவலையா. ஜெயில்ல நம்மாள் நாலுபேர் இருந்தாங்க. அந்தத் துட்டை வச்சுதான் வெளிய



எடுத்தோம். வேற ஆளுங்க போனா நானூறு ரூபா கேட்கற வக்கீல் நாம போனா நாலாயிரம் ரூபா கேட்கறான்.

போலீஸ் மோப்பம் பிடிச்சிடும். நீதானடான்னு வந்து கேட்கும். ஆமான்னு சொல்லணும். அவனுக்கு மாமூல் கொடுக்கணும். பேர்பாதி துட்டு அவனுங்கதானே வாரிக்கிட்டுப் போறாங்க. அதுவும் தவிர துட்டு இருக்கறதாவே நாம் காட்டிக்கக் கூடாது. திருட்டு வேலைக்கு அது உதவாது. நான் நெசப்பாக்கம் பக்கம் நிலம் வாங்கிப் போட்டிருக்கேன். ஒட்டுமொத்தமா மடக்கிட்டோம். எங்க ஊட்டுக்காரரு என் பேருதான் வச்சிருக்காரு. பேபி நகர்.'' உரக்கச் சொல்லி அவள் வாய்விட்டுச் சிரித்தாள்.

மகாதேவிக்கும் சிரிப்பு வந்தது.

''எங்க ஆளுங்களாண்ட சொல்லிப் பார்க்கிறேன், வா.''

அவள் தன்னுடைய இருப்பிடத்திற்கு அழைத்துப் போனாள்.

தகவல் சொன்னவுடன் அங்குள்ள மூன்று ஆட்கள் சுறுசுறுப்பானார்கள்.

''சும்மாவா இட்டாந்த. எதனா சாப்ட கொடுக்கக் கூடாதா.. டேய்.. போய் பிரியாணி வாங்கிட்டு வாடா.''

அவள் பசி தெரிந்து ஒரு ஆள் உரக்கக் கூவினான்.

அத்தனை மாமிசத் துண்டுகளுடன் சுவையான ஒரு பிரியாணி அவள் சாப்பிட்டதில்லை.

ஆறு மணிக்கு இருட்டத் துவங்கியபோது அவர்கள் எல்லாம் கொசுக்குப் பயந்து புகைபோட்டு மேலே மெல்லிய துணியைப் போர்த்திக்கொண்டு சுருண்டு படுத்துத் தூங்கினார்கள்.

நகரம் வேலையை முடித்து இருப்பிடங்களுக்கு வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

தொலைக்காட்சிப் பெட்டிகள் அழத் துவங்கின.

அன்னபூரணியின் வீடு எல்லா கணக்கு வழக்குகளையும் முடித்துவிட்டு வாசற் கதவைச் சாத்திக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தது.

''என்னா திடீர்னு இன்னிக்கு சாயந்தரம் சாப்பாடு செய்திருக்கீங்க.''

''மத்தியானம் சாப்பாடு பழசாயிப் போச்சி. வேலைக்கு வந்த பொண்ணுங்க சாப்பிடலைன்னு சொல்லிச்சிங்க. அதுங்களுக்கு போட்டுட்டேன். கத்தரிக்காய் கறிசெய்து பார்க்கணும்னு தோணிச்சு. கூட்டு மாதிரி சாப்பிட்டு பாருங்களேன்.''

காரக்குழம்பும், கத்தரிக்காய் கறியும் எல்லோருக்கும் பரிமாறப்பட்டன.

அவர்கள் நன்றாகச் சாப்பிட்டார்கள்.

''ஒரே விஷயத்தை மட்டும் நம்பிட்டு இருக்கக் கூடாதுன்னு நீ சொல்றது கரெக்ட்டும்மா. வேற விஷயம் வேணும். ஆனா அதுக்கு வந்து ஃபேஸ்பேக்கா களிமண் பூச்சு இல்லாத வேற ஏதாவது செய்யக் கூடாதா.''

''வேற ஒரு எண்ணெயும் செய்யலாம். மூஞ்சிக்கு வெளுப்பு ஆகறதுக்கு ஒரு எண்ணெய் செய்யலாம். கசகசா இல்ல, அதை மையமா அரைச்சு சில விஷயங்கள் கலந்து பவுடரா வித்துடலாம். அந்த பவுடரை ஒரு அஞ்சு நிமிஷம் தண்ணியில ஊறவச்சு, இல்லை பால்ல ஊறவச்சு மூஞ்சியில



தடவிக்கிட்டோம்னு வச்சுக்க, மூஞ்சி பளிச்சுனு ஆயிடும். ஒரு சொட்டு தேன் விட்டோம்னு வச்சுக்க, இன்னும் நல்லா ஆயிடும்.''

''தேன் கலந்தே கசகசா வித்தா.''

''நிக்காது. வாடை வந்துடும்.''

''கசகசாவையும், தேனையும் ரெண்டு பாட்டில்ல போட்டு ஒரே அட்டைப்பெட்டியில வச்சா.''

''நல்லாயிருக்கும். தேன் காசு, கசகசா காசு, அட்டைப் பெட்டி காசு அதை யோசனை பண்ணிக்க.''

''அம்மா...எனக்கு ஒண்ணு புரிஞ்சிபோச்சு. நம்ம கொடுக்கற விதம் நல்லாயிருந்தா சாமானுக்கு ஒரு மரியாதை வந்துடுது. பாட்டில் பழசா இல்லாத புதுசா இருந்தா அதுக்கொரு எடுப்பு வந்துடுது. இவங்க எல்லாரும் பாட்டிலை வச்சுதான் ஏமாத்தறாங்க. முன்னெல்லாம் சோப்பும் ஆயிலும் கல்கத்தாலேர்ந்தும், டெல்லியிலேர்ந்தும் பாம்பேலேர்ந்தும் வந்தது. இப்போ அப்படி இல்லை. காரைக்குடி, கோவில் பட்டின்னு வருது. கோவில்பட்டியிலேர்ந்து ஒரு சின்ன கம்பெனி காயகல்பம்னு ஒரு வாசனை சோப்பு செய்யுது. ரொம்ப நல்லாயிருக்கும்மா. நாம சோப்பு செய்ய முடியாதா.''

''நல்லா செய்யலாம். சோப்பு செய்யறது பிரச்சினையே இல்லை. நான் சின்னவளா இருக்கும்போது சோப்பு விக்காது. இப்போல்லாம் சோப்பு உபயோகப்படுத்தாதவங்களே இல்லை. அறுபது ரூபா கொடுத்து பெரிய கம்பெனி சோப்பு வாங்கறதுக்கு இருவது ரூபால சோப்புத்தூள் வாங்கி நல்லபடியா உபயோகப்படுத்தலாம்.''

''எது கேட்டாலும் பதில் சொல்றியேம்மா. எப்படி.''

'' இது ரொம்ப ஆசைடா. உங்கப்பா எனக்கு சரியா அமையலை. அவரு கொஞ்சம் உதவி செய்திருந்தா நான் ரொம்ப நல்லா செய்திருப்பேன். இன்னும் பெரும் பணம் சம்பாதிச்சிருப்பேன். இன்னும் கம்பீரமா இருந்திருப்பேன். நீயும் உற்சாகமில்லாத சுருண்டு சுருண்டு படுக்கற ஆளா இருந்தியா, எனக்கு சே... போ...ன்னு போச்சி. இப்போ நீ கூட வரது ரொம்ப சந்தோஷம்டா.''

அன்னபூரணி மகனின் தலையைத் தடவினாள்.

''அறிவானந்தம் ரொம்ப பிரமாதமான ஆளு. அவரு இன்னிக்கு மத்தியானம் ஒண்ணு சொன்னாரு. நீ சேல்ஸ் கவனிச்சுக்க. நான் புரொடக்ஷன் கவனிச்சுக்கறேன். அவரு விதம்விதமா சொல்றாரு. ராத்திரியெல்லாம் போய் அதைப்பத்தி குறிப்பெல்லாம் எடுத்துட்டு வரேன். களிமண் பூச்சுக்கு கொஞ்சம் முயற்சி பண்ணா சரியாப் போயிடும். நல்ல லாபம் இருக்கு அப்படின்னாங்க. இங்கிருந்து ஆளைக் கூட்டிகிட்டுப் போய் நாமளே வெட்டி எடுத்துட்டு வந்தோம்னா அதுல பதினைஞ்சு மூட்டை மண்ணுதேறும். அங்கயே சலிக்காத, ஊர் எல்லையிலேயே கேளம்பாக்கம், வேளச்சேரி, மாம்பாக்கம்னு ஏதாவது ஒரு இடத்துல ஓலைக்குடிசை போட்டு சலிச்சு அங்கேர்ந்து எடுத்துக்கிட்டு வந்துடணும். பதினஞ்சு மூட்டை எடுத்துட்டு வந்துட்டோம்னா அதை வச்சு கொஞ்சம் டப்பா பண்ணிடலாம் அப்படின்னாரு. ஒரு கணக்கு போட்டு வச்சிருக்கறாராம். இருவத்தஞ்சு ரூபான்றது இருநூத்தி அம்பது சதவீதம் லாபம். லேடீஸ் மேகஸின்ல போய் சொல்லி பூசிக்காமிச்சு, எவ்ளோ அற்புதமா இருக்குன்னு யாராவது பெரிய மனுஷாள விட்டு சொல்லச் சொன்னோம்னா ஜம்முனு ஆயிடும். நல்லா விக்கும். இருவத்தஞ்சு ரூபா ஒரு விஷயமே கிடையாது.



எல்லாப் பொண்ணுங்களும் வேலை செய்யுது. ஆம்பளைங்களும் பொம்பளைங்களுக்கு நிகரா மூஞ்சிய, தலைய அழகா மாத்திக்கறாங்க. சென்ட் போட்டுக்கறாங்க. ஒரு விஷயம் கேரளாக்குப் போற போதோ, வேற எங்கனா போறபோதோ சந்தன எண்ணெய் எங்க விக்குதுன்னு பாரு. ஒட்டுமொத்தமா ஒரு டிரம் வாங்கிட்டு வந்துடு. அந்த எண்ணெய் கெட்டே போகாது. டின்ல சீல் பண்ணி விக்க ஆரம்பிச்சுட்டோம்னா நூறு ரூபா எண்ணெயைக் கொதிக்கவச்சு இறக்கி அதை அந்த சந்தன எண்ணெயோட கலந்தோம்னா ஒண்ணும் தெரியாது.''

''இதெல்லாம் எங்கம்மா கத்துக்கிட்ட''

''எங்கம்மாக்கு ஆசைடா இப்படியெல்லாம் செய்யணும், வியாபாரம் பண்ணணும்னு எங்க பாட்டி செய்வாங்களாண்டா. தாத்தா பெருந்தன்மையா விட்டிருக்காரு. எங்கப்பா விடலை. சின்னச் சின்னதா விதம்விதமா நிறைய எங்க பாட்டி வியாபாரம் செய்திருக்காங்க. சாந்து இல்லை, சாந்து, ஜவ்வரிசையைக் காய்ச்சி கறுத்துப் போறவரைக்கும் பண்ணி அதை கொட்டாங்கச்சி, கொட்டாங்கச்சியா ஊத்தி ஒரு கொட்டாங்கச்சி ஓரணான்ன வித்திருக்காங்க. மூணு பொண்ணுங்க இருக்கற குடும்பத்துக்கு ஒரு கொட்டாங்கச்சி சாந்து மூணு மாசம் வரும். மஞ்சள்ல சுண்ணாம்பு தோய்ச்சு உலரவச்சு குங்குமம் பண்ணுவாங்க. அதை விக்க மாட்டாங்க. எல்லாருக்கும் கொடுப்பாங்க. நெத்திக்கு இடறபோதே வாசனையா இருக்கும். இதைப்போய் யாராது விப்பாங்களா. யாராவது முடிஞ்சா நல்ல மஞ்சளா வாங்கிக் கொடுங்க அப்படின்னு கேட்பாங்க. ஊர்ல பல பேரு பாட்டிக்கு கொண்ணாந்து மஞ்சா கொடுப்பாங்க.

# 35

## 19.7.2002

பாட்டி விளக்கெண்ணெய் விப்பாங்க. வயித்துக்கு உண்டான விளக்கெண்ணெய், உடம்புக்கு உண்டான விளக்கெண்ணெய்னு ரெண்டுவிதமா விப்பாங்க. எங்களையெல்லாம் பாலேடு எடுத்து மூஞ்சியில தடவிக்கச் சொல்வாங்க. அதுக்கு முன்னாடி எலுமிச்சம் பழத்துல தேன்விட்டு அதையும் தடவிக்கச் சொல்லுவாங்க. நாங்க எல்லாம் பளிச்சுனு இருப்போம். எப்படி அது எப்படின்னு தெருவுல இருக்கற அத்தனை பேரும் கேட்பாங்க. எங்களுக்கெல்லாம் உத்தரவு. யார் கேட்டாலும் சொல்லக் கூடாதுன்னு உத்தரவு.

பாட்டி மருதாணி இட்டா செக்கச்செவேர்னுபத்தும். என்னான்னமோ கலப்பாங்க. என்னான்னே சொல்ல மாட்டாங்க. பாட்டி சந்தோஷமா இருக்கறதுக்குக் காரணம் எங்க தாத்தா. கையில மருதாணி இட்டுகிட்டு அவரு ஃப்ரெண்டுங்ககிட்ட காமிச்சு 'இது என் பொண்டாட்டி இட்டா. நீ வேணா உன் மகளை என் பொண்டாட்டிகிட்ட அனுப்பு. ரொம்ப அழகா அலங்காரம் பண்ணிவிடுவா' அப்படின்னு அவரா போய் சொல்லுவாரு. உள்ள நாலு லேடீஸ் வந்தவுடனே வெளியே போய் திண்ணையிலேயே போய் பழியா கிடப்பாரு. வீட்டுப் பெண்கள் மேல, ஏன், எல்லாப் பெண்கள் மேலயும் அவருக்கு அவ்ளோ மரியாதை. சின்னப் பொண்ணு வந்தாகூட வாங்கம்மா அப்படின்னு கூப்பிடுவாரு.

அப்போ புரியலை. இப்போ யோசனை பண்ணிப் பார்த்தா எங்க தாத்தா மாதிரி ஒரு ஹீரோ உலகத்துல யாருமே



இருந்ததில்லை. உன்னால முடியுமா. எட்டு வயசு பொண்ணைப் பார்த்து வாங்கம்மா, வாங்கன்னு உன்னால சொல்ல முடியுமா. பட்டுனு வாடி போடின்னுதான் வரும். சொல்லவே கூடாது. ஒரு பொண்ணையும் அப்படிச் சொல்லக்கூடாது.''

''எனக்குப் புரியுதும்மா. நாம விக்கறது லேடீஸுக்கான அழகு சாதனம். நாமளே லேடீஸை அசிங்கமா சொன்னா நல்லாயிருக்குமா. நம்ம நினைப்புலயே லேடீஸ் பெரிய விஷயம், முக்கியமான விஷயம், மரியாதையான விஷயம் அப்படின்னு வந்துடுச்சின்னா அவங்களுக்குன்னு பண்ற எல்லா பொருளும் மரியாதையா விக்குமில்ல.''

''புடிச்சிட்டா. சரியா புடிச்சிட்ட. இதான், இதான் தொழில் பக்தின்றது. உன் பொண்டாட்டி என்ன சொல்றா நம்மோட இந்த வேலையைப் பத்தி.''

''அவளுக்கு உன்மேல பெரிய மதிப்பு. எங்க மாமியார் மாதிரி முடியாதுன்னு வேற யார்கிட்டயோ போன்ல சொல்லிக்கிட்டிருந்தா.''

''அவ பொறந்த வீட்ல என்ன சொல்றாங்க.''

''அவங்களுக்கும் ரொம்ப பெருமை. இவ ஏதோ ஆறேழு பாட்டில் அனுப்பியிருக்கா போல இருக்கு. இன்னும் ஆறேழு பாட்டில் கொடுங்கன்னு கெஞ்சறாங்க போலிருக்கு. அப்புறம் அனுப்பறேன். டக்டக்குன்னு அனுப்ப முடியாதுன்னு இது என்னவோ பந்தா பண்ணுது.''

''இன்னும் முப்பது பாட்டில் அனுப்பச் சொல்லுடா.''

''எம்மா.. சோப்பு வியாபாரம் ஆரம்பிச்சுடலாமா.''

''பொறுத்துக்க. நிதானமா ஆரம்பிக்கலாம். நமக்கு இடம் போறாது.''

''அதாம்மா சொல்றேன். கொஞ்சம் வெளியூர்ல போய் வீடும் கட்டிக்கிட்டு ஃபாக்டரியும் கட்டிக் கிட்டா நல்லாயிருக்காது.''

''ஆக இந்த வீட்டை எப்போடா விக்கலாம்னு இருக்க அறுவதுலட்ச ரூபா கடன் இருக்குடா என்ன பண்ணப்போறாம்.''

''அடைச்சுட்டுதாம்மா. அடைச்சிட்டு லாபம் வந்தா நகர்ந்து போயிடலாம்னு சொல்றேன்.''

''லாபம் வரும்னு உனக்குத் தோணுதா.''

''நிச்சயம் தோணுதும்மா. நீ முகத்துக்கு க்ரீம்னு ஏதோ சொல்றியே.''

''ஆமாம். க்ரீம் இருக்கு... பேரு... மஞ்சளும், குங்குமப் பூவும் இன்னும் சில விஷயங்களையும் போட்டு கொழகொழன்னு பண்ணி டியூப்ல அடைச்சு வித்துடலாம்.''

''அம்மா எனக்கு இன்னொண்ணும் தோணிச்சு. பர்மா பஜார் பக்கம் போயிருந்தேன். நிறைய மூஞ்சிக்கு என்னென்னமோ விக்கறான். மாய்ஸ்சரைசிங் க்ரீம், சில குழம்பு தடவிக்கிட்டு அது உலர்ந்த பிறகு பிச்சி எடுக்கறது அப்படின்னு என்னென்னவோ சொல்றான். அதெல்லாம் நாம பண்ண முடியாதா.''

''தாராளமா பண்ணலாண்டா. இந்த மாதிரி ரசாயனமா போனா துட்டு ஜாஸ்தி செலவாகும். எழுவது ரூபா, எண்பது ரூபா வைக்க வேண்டியிருக்கும். வாங்கறவங்க கம்மி. என்னுடைய குறியெல்லாம் சாதாரணமா நம்ம கம்பெனிக்கு வருதுங்களே அந்த மாதிரி பொண்ணுங்க, அச்சாபீஸ் போகுதுங்களே அந்த மாதிரி பொண்ணுங்க, பளிச்சுனு இருக்கணும்ங்கறதுக்கு சில விஷயங்கள் கண்டுபிடிக்கணும் பரு போறதுக்கு மருந்து கண்டுபிடிக்கணும்.''



''என்னா சலசலசன்று பேசிக்கிட்டிருக்கிங்களே அம்மாவும், புள்ளையும், போய் படுங்களேன்.''

திலகவதி பின்கட்டுக் கதவைச் சாத்திவிட்டு உள்ளே வந்தாள். டியூப்லைட்டை அணைத்தாள்.

அம்மாவும், பிள்ளையும் கிளம்பி மாடிக்குப் போனார்கள். பிள்ளை அம்மாவைத் தாண்டி முன்னேறினான். மேலே போனான்.

அவன் மனைவி உட்கார்ந்து டி.வி.பார்த்துக் கொண்டிருக்க, கதவு சாத்திவிட்டு அவளுக்கு அருகே போய்க் கட்டிக்கொண்டான்.

''இதுதான் ஓடா.''

பேபி கேட்க மகாதேவி ஆம் என்று சொன்னாள்.

''நீ இங்கே நில்லு.''

எந்த பயமும் இல்லாமல் பேபி சந்து வழியே பின்பக்கக் கதவை அடைந்தாள். உள்ளே போய் தட்டுமுட்டுச் சாமான்களுக்கு அருகே உட்கார்ந்து கொண்டாள். முகத்தைச் சட்டென்று அப்பாவியாய் வைத்துக்கொண்டாள்.

மனம் அந்த இடத்தை வெகுவேகமாகக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தது. சுவரினுடைய நீளம், உயரம், இறங்கும் வசதி, ஏறும் வசதி என்றெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தது. சட்டென்று எடுத்து அடிக்க என்னென்ன இருக்கிறது,எதனால் தாக்கப்படலாம், எதனால் தாக்கலாம் என்றெல்லாம் அவள் யோசித்துக் கொண்டிருந்தாள்.

''யார் உட்கார்ந்துட்டு இருக்கிறது.''

யாரோ ஒரு கிழவன் பின்பக்கக் கதவைத் திறந்து வந்து கேட்டான்.

அவள் எழுந்து நின்று எனக்கு ஒன்றும் தெரியாது என்பதுபோல் பார்த்தாள்.

''இதெல்லாம் எடுக்கறதுக்கு வந்திருக்கியா'' என்று கேட்க, ''வரச் சொன்னாங்க.'' என்று சொன்னாள்.

''தனியா எப்படி எடுப்ப. ஆள் வேணாம்.''

''வருது, ரெண்டு மூணு ஆள் வருது.''

''சரி சரி; பார்த்து எடுத்துக் கிட்டுப் போங்க. இந்த பக்கெட்டெல்லாம் எடுத்துக்கிட்டு போகக் கூடாது'' என்று கையில் இருக்கிற பக்கெட்டைக் காட்டினான்.

''போனதடவை அடாசு எடுத்துட்டுப் போகும்போது இந்த மாதிரி பாக்கெட்டையெல்லாம் எடுத்துக்கிட்டு போயிட்டான். எனக்கு ரொம்ப பேஜாராப்போச்சு.''

''இல்லை. நாங்க எடுக்க மாட்டோம்'' என்று அவள் பதில் சொன்னாள்.

அவன் போனபிறகு எட்டி சந்தின் வழியாகப் பார்த்தாள்.

சுவரில் கால்வைத்து சுவர்பற்றி சுவரின் சந்தில் கால்வைத்து ஏறி மறுபக்கம் பார்த்தாள்.

விளக்குகள் போடப்பட்டிருந்தன. சமையல் அறை யிலிருந்து குழம்பு வாசனை அடித்தது. எண்ணெய் காய்தல் தூக்கலாக இருந்தது.

இறங்கிவிடலாமா என்று யோசனை செய்தாள்.

சுவரில் கால் ஊன்றி ஆளுயரம் ஏறி நின்றாள். சுவர்மீது ஏறி உட்கார்ந்து கொண்டாள். என்ன இருக்கிறது என்று பார்த்தாள். பெட்டி பெட்டியாக அதிகம் இருந்தன. எல்லாப் பெட்டிகளிலிருந்தும் அவள் சொல்வதுபோல அந்த விரல்



நீளம் பாட்டில்கள் எடுக்கலாம். ஒரு பாட்டில் பன்னிரெண்டு ரூபாயாம். ஆறு ரூபாய்க்குக் கொடுத்தாலும் போதும். ஒரு பெட்டிக்கு கிட்டத்தட்ட நூற்றுநாப்பது ரூபாய் கிடைக்கும்.

ஆனால், பேபி மட்டும் போதாது. மகாதேவி எவ்வளவு தூரம் உதவி செய்வாள் என்று தெரியவில்லை. ஒரு மாட்டுவண்டி லோடு இருக்கிறது. நாலு பேர் இருந்தால் பெட்டி பெட்டியாய் மொத்த லோடையும் எடுத்துவிடலாம். பீப்பாய்களையும் உருட்டி எடுத்துவிடலாம். சமையல் முடிந்ததும் பின்பக்கக் கதவைச் சாத்திவிடுவார்கள். இந்தப்பக்கம் உள்ளே நுழைய முடியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சமையலறைக் கதவை உடைத்தால் அங்கேயும் பெட்டிகள் இருக்கின்றன. வேறு ஏதோ விஷயம் இருக்கிறது. அதையும் வாரிக்கொண்டு போகலாம். அரைமணி நேரம் நாலுபேர் வேலை செய்தால் அத்தனையும் எடுத்துக்கொண்டு போய்விடலாம். இரண்டுபேர் அந்தப்பக்கம், இரண்டுபேர் இந்தப் பக்கம், மகாதேவி வாசலில் நின்றால் போதும்.

அவள் சுவர்விட்டுக் கீழிறிங்கினாள். மறுபடியும் போய் உட்கார்ந்து கொண்டாள். திரும்பவும் நீள, அகலங்கள் பார்த்தாள். மரக் கதவு எவ்வளவு அடியில் அடையும் என்று யோசித்தாள். ஏணி இருந்தால் நல்லது என்று தீர்மானம் செய்தாள். ஏணி மாதிரி வேறு என்ன இருக்கும் என்று யோசித்தாள்.

பீப்பாய்மீது பீப்பாய் போட்டு விடலாம். பீப்பாய்மீது ஸ்டூல் போட்டு விடலாம். சாமான்கள் எடுப்பதற்கு வேறு ஏதேனும் செய்ய வேண்டும். அந்தப்பக்கம் ஒரு சிறிய ஏணி அவசியமா என்று உற்று இறங்கிய இடத்தைப் பார்த்துவிட்டு மடமடவென்று வெளியேறினாள்.

யாருமே அவளைக் கேட்டுக் கொள்ளவில்லை. ஜன்னலைத் தாண்டுகிறபொழுது அந்த இடத்தைப் பூட்டுவதாகப் பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது.

வாசலில் நின்ற மகாதேவியோடு சேர்ந்து கொண்டாள். அந்தத் தெரு தாண்டிப்போய் ஒரு டெலிபோன் பூத்திலிருந்து யாருக்கோ போன் செய்தாள்.

இரண்டு தெரு தள்ளிப் போய் பிளாட்பாரத்திலுள்ள பலகாரக்கடையில் உட்கார்ந்து தோசையும், மீன் குழம்பும் சாப்பிட்டாள்.

மகாதேவிக்கும் வாங்கிக்கொடுத்தாள். ஜரிதா பாக்கு போட்டுக்கொண்டு அந்த வீட்டிற்கு எதிரே வந்து நின்றாள்.

யாரோ இரண்டுபேர் மோட்டார் சைக்கிளில் வந்து அவள் எதிரே நின்றார்கள்.

அவர்கள் முகத்தைப் பார்க்கும் போதே அவர்கள் சாமானியப்பட்டவர்கள் இல்லை என்று தெரிந்தது.

மகாதேவியை அங்கேயே உட்காரச் சொல்லிவிட்டு அவள் எதிர்வீட்டைக் காட்டினாள். காதோரம் ரகசியமாக என்ன இருக்கிறது என்று விளக்கினாள்.

''அந்த அயிட்டம் பேரு என்னா...''

பெயர் சொன்னாள்.

''ஐவர் தைலமா. இரு'' என்று அவர்கள் சொல்லிவிட்டு மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு அந்தத் தெரு முனைக்குப்போய் ஐவர் தைலம் இருக்கிறதா என்று கேட்டு இரண்டு பாட்டில் வாங்கினான். திறந்து முகர்ந்து பார்த்தான். உள்ளங்கையில் விட்டு சற்று தலையில் தேய்த்துக் கொண்டான். அடுத்தவனுக்கும் கொடுத்தான். அவர்கள்



ஏதோ சிரித்தபடி தேய்த்துக் கொண்டார்கள். பிறகு அந்தப் பாட்டிலை குப்பைத் தொட்டியில் வீசினார்கள். திரும்பி இந்தப்பக்கம் வந்தார்கள்.

''வண்டியோட வரோம். சாப்டியா'' என்று கேட்டார்கள்.

நூறு ரூபாயை எடுத்து பேபியிடம் கொடுத்தார்கள். பேபி அவர்கள் எதிரிலேயே நூறு ரூபாயை எடுத்து மகாதேவிக்குக் கொடுத்தாள்.

அவர்கள் வண்டி புகை கக்கி மறைந்துபோயிற்று. அவர்கள் அங்கேயே காத்திருந்தார்கள். தலைக்கு கல்வைத்து மறுபடியும் படுத்துக் கொண்டார்கள். தூங்கிப் போனார்கள்.

வாழ்க்கையினுடைய எல்லாக் கேவலமான நேரங்களையும் அவர்கள் அனுபவித்தவர்கள். எதுபற்றியும் கவலைப்படாமல் அவர்களால் தூங்கமுடிந்தது.

அன்னபூரணி வீட்டுவாசலில் மணிச்சத்தம் கேட்டது.

திலகவதி போய் கதவு திறந்தாள். அறிவானந்தம் உள்ளே நுழைந்தார்.

''வாங்க... வாங்க...'' வாய் நிறைய அவரை வரவேற்றாள்.

''என்னமோ வீட்டுக்குப் போகவே பிடிக்கலை.''

''என்னாச்சு.''

''இந்த அன்னபூரணி அம்மா எதுவோ சொன்னாங்களா, அது என்னா... என்னான்னு கேட்டுக்கணும்னே தோணிச்சு. போனேன், சாப்பிட்டேன், கைகழுவிட்டு வந்துட்டேன், வீட்ல சொல்லிக்கவே இல்லை.''

''கவலைப்படப் போறாங்க.''

''ஆமாம். ஒரு போன் போட்டு சொல்லிடணும்.''

அவர் போனுக்கு அருகே போனார்.

''இங்க அன்னபூரணி அம்மா வீட்ல இருக்கேன். இங்க கொஞ்சம் வேலை இருக்கு. காலையில வந்துடுவேன்'' என்று சொன்னார்.

# 36

**26.** 7.2002

வீட்ல ஏதாவது தப்பா நினைச்சுக்கப்போறாங்கப்பா. திடுக்குனு இப்படி வந்துட்டீங்களே.'' திலகவதி அடிக் குரலில் கேட்டாள்.

''அதெல்லாம் இல்லை திலகவதி. என்னை கோபக் காரன்னு சொல்லுவாங்களே தவிர கேவலமானவன்னு எங்க வீட்ல யாருமே சொல்ல மாட்டாங்க. அன்னபூரணி அம்மாவை சொந்த தங்கச்சி மாதிரி நினைக்கிறேன் அப்படின்னு அவங்களுக்கு நல்லா தெரியும். அன்னபூரணி அம்மா இல்லை. படுக்கப் போயிட்டாங்களா.''

''இல்லை பூஜை ரூம்ல உட்கார்ந்து துடைச்சுக் கிட்டிருக்காங்க.''

''அடடே... காலையில வரட்டுமா.''

''இருங்க. நான் போய் சொல்றேன்.''

திலகவவதிபோய் அன்னபூரணி அம்மாளிடம் அறிவானந்தம் வருகையைச் சொன்னாள்.



எடுன்னா அவனால் முடியுமா. எது சவாலோ அதுதான் நல்லாயிருக்கும். அப்போதான் உயிர்ப்போட இருக்க முடியும்.

ஏண்டா பெசன்ட் நகர் போகணும்னு கேட்டேன். 'பெசன்ட்நகர் போகணும்னாதான் இன்னும் முன்னேறணும்னு தோணும். இங்க உட்கார்ந்தா முன்னேறணும்னு தோணாது. சிந்தாதிரிப்பேட்டையிலேயே இருந்தா... இது போறும்... இது போறும்னுதான் ஒரு எண்ணம் வருமே தவிர அந்த மாதிரி பத்து பங்களாக்குள்ள வந்து வேலை செய்தோம்னா அவன் கார் மாத்திட்டான், வீட்ல மாடி எழுப்பிட்டான் அப்படின்னு விதம் விதமா படும். அதுக்கேத்தாப்போல நாமும் நடக்கணும்னு தோணும்.

சிந்தாதிரிப்பேட்டையை பார் எப்போ பார்த்தாலும் தூங்கிக்கிட்டே இருக்கு. வீட்டுக்குள்ளே வந்தாலும் தூக்கம் – வெளியே நடந்தாலும் தூக்கம். பெசன்ட் நகர் மாதிரி இடத்துல போய் பத்து பேரோட பேசினா உடனடியா அவங்க வெளிநாடு போறதப்பத்திதான் பேசறாங்க. என் புள்ளை இருக்கான், என் மச்சான் இருக்கான், என் தம்பி இருக்கான். அப்படின்னுதான் சொல்றாங்க. நமக்கும் வெளிநாடு போகணும்னு தோணும். உலகம் சுத்த சுத்தத்தான் நாம ரொம்ப சாதாரணமா இருக்கறது தெரிய வரும். நல்லா முன்னேறணும்னுதான் பெசன்ட் நகர் போகணும்னு சொன்னேன். என் பொண்டாட்டியும் அது தான் சொன்னா

அப்படின்னா. எனக்கு அவன் பேச்சு ரொம்ப புடிச்சிருந்தது. அவன் சாதாரணம் இல்லை. அவனைப் போட்டு அடக்கி வச்சிருக்கீங்கன்னு தோணிச்சு.

அப்போ நான் சுகுமாரன்கிட்ட சொன்னேன். நானும் என் வாழ்க்கையில இது மாதிரிதான் நினைச்சிருக்கேன்.

பங்களா...பங்களாவா...போகனும்னு ஆசைப்படுவேன். தலைவர் வீடு...தலைவர் வீடா போகனும்னு ஆசைப் பட்டேன். ஏன்னா எனக்கு மாலை போட்டுக்கனும். மேடையில பேசனும். நான் பேசி முடிச்சவுடனே ஜனங்க விடாத கைதட்டனும் அப்படின்னு ஒரு மயக்கம் இருந்தது. என் பீரியட்ல அது ரொம்ப பெரிய மயக்கம். என் கூட படிச்ச பையன் பாலிடிக்ஸ்ல பெரிய ஆளாயிட்டான். இந்த மொள்ளமாறிக்குப் போய் இத்தனை கைத்தட்டலான்னு யோசிச்சேன். அப்போ நாம இதைப் பழகிகிட்டா நல்லது அப்படின்னு தோணிச்சு. அவனையே கேட்டேன். கேட்டபோது அவன் சொன்னான். தினம் எங்கிட்ட வந்து பேசு. அப்போ புரிஞ்சுடும்னான். ஒருநாள் போனேன். எனக்குப் புரிஞ்சு போச்சு, இவன் வெறும் சப்பாணி; இவனைவிட வெரிய கில்லாடியெல்லாம் இருக்காங்கன்னு. அங்க அவன் வீட்ல ஒருநாள் இருந்தபோதே தெரிஞ்சு போச்சு.

எந்தக் கட்சியிலும் சேராத எல்லா தலைவர் வீட்டுக்கும் போனேன். அவங்க வீட்டு வாசல்ல போய் நிப்பேன். அந்த வீட்டு வாசல்ல ஒரு சின்ன கும்பல் இருக்கும். அந்த கும்பலோட உட்கார்ந்து பேசிக்கிட்டிருப்பேன்.

அவங்களெல்லாம் பேசறபோதே மேடையில பேசற மாதிரி பேசுவாங்க. வாக்குவாதம் பண்ணுவாங்க. அவன் இதைச் சொன்னானே அதுக்கு இது பதில், அவன் இப்படி பதில் சொன்னானா, இதான் என் கேள்வி அப்படின்னுவாங்க. எப்படிடா இவ்ளோ அற்புதமா யோசனை பண்றாங்கன்னு ஒரே சந்தோஷம். ஒரே ஆச்சரியம்.

நான் உங்க ஆதரவு, நான் உங்க ஆதரவுன்னு கீழ்மட்டப் பசங்களோட சேர்ந்து அவங்க பேசற மாதிரியே பேசி, அவங்களை மாதிரியே கைய மடிச்சு அவங்களை மாதிரியே ஏய்... அப்படின்னு குரல் கொடுத்து ஊரைப் பயமுறுத்தி



ஒவ்வொருபடியா முன்னேறினேன். எனக்கு தச்சு வேலை தெரியும். சுத்தமா அது மறந்து போச்சு. ஆனா, அதே தச்சு வேலை தெரிஞ்ச ஆசாரி இன்னொரு பெரிய அரசியல்வாதியா இருக்காருன்னவுடனே அவராண்ட போயி 'உங்களோட சேர்ந்துடலாம்னு நினைக்கிறேன்'னு சொன்னேன். 'எதுக்காக, என் கொள்கை புடிச்சிருக்கா'ன்னு கேட்டாரு. 'இல்லீங்க, நானும் ஆச்சாரி, நீங்களும் ஆச்சாரி. நாம ஒண்ணா சேர்ந்துக்கலாமேன்னு நினைச்சேன்' அப்படின்னேன். 'வா...வா...'னு ரெண்டு கையையும் விரிச்சு கட்டிக்கிட்டாரு. கூப்பிட்டு பக்கத்துல வச்சிக்கிட்டாரு. அவரு வளர வளர நானும் வளர்ந்தேன். மேடையில பேச வேண்டிய அவசியமே இல்லை. மேடையில பேசாத அரசியல்வாதியா இருக்கலாம், துட்டு சம்பாதிக்கலாம் அப்படின்னு ஒண்ணுமில்லாத நான் துட்டு சம்பாதிச்சு வீடு வாங்கி, நிலம் வாங்கி பெரிய இடத்துக்கு வந்தேன்.

எந்த சமயத்துலயும் நான் பெரிய ஆளா இருக்கறத காட்டிக்கவேயில்லை.''

''ஏன் கல்யாணம் கட்டலை.''

''எப்போ வேணாலும் ஜெயிலுக்குப் போகலாம். எப்போவேணாலும் குத்திக் கொன்னுடலாம். நாம பத்து பேரை அடிச்சிருக்கோம். அந்தப் பத்து பேர்ல ரெண்டு பேர் நம்மள கொன்னுடலாம். நாம போய் கல்யாணம் கட்டி என்னாத்துக்கு. அதுவும் தவிர கல்யாணம்னு ஒரு விஷயம் அரசியல்வாதிக்குத் தேவையில்லை. கட்சியிலேயே இதுக்குன்னு பொண்ணுங்க உண்டு. 'என்னம்மா சௌக்கியமா இருக்கியா'ன்னு கேட்டா 'நல்லாயிருக்கேன் மாமா. வீட்டுக்கு வாங்க மாமா' அப்படின்னு அந்தப் பொண்ணு கூப்பிடும். நமக்கு உதவியா இருக்கும். நம்மள உதவியா வச்சுக்கிட்டு அதுங்களும் முன்னேறும். நான் அப்படியும் இருந்திருக்கேன். அது ஒரு வயசு.

பொம்பளையவிட போதையான விஷயம் எது தெரியுமா. பவர். நம்மள பார்த்துட்டு போலீஸ்காரன் சல்யூட் அடிக்கறான். அத்தினி பேரும் எழுந்து நின்னு கைகூப்பறாங்க. காலை எடுத்து வச்சோம்னா நதி பொளந்தா மாதிரி எதிர்க்க இருக்கற கூட்டம் பொளத்து போவுது. திரும்பினா என்னாங்க அப்படின்னு பார்க்கறான். உட்கார்ந்தா எல்லாரும் உட்கார்ந்துக்கறாங்க. அனுபவிச்சுப் பார்த்தாதான் திலகவதி தெரியும். ஒரு தடவை அனுபவிச்சுட்டோம்னா அப்புறம் தனியா முடியாது.''

''ஏன் அப்புறம் அரசியல்லேந்து வெளியே வந்துட்டீங்க.'' திலகவதி எதிரிலேயிருந்த அறிவானந்தத்தைப் பார்த்துக் கேட்டாள்.

''இது ஒரு நல்ல கேள்வி. எப்படி மரியாதை கிடைக்குதோ, அதே விதத்துல அதைவிட அதிகமா அவமரியாதையும் கிடைக்கும். கூப்ட்டு கூப்ட்டு செருப்பால அடிப்பான். வேணும்னாலும் அவமரியாதை பண்ணுவான். அவனுக்கு நாம ஒரு கெடுதல் கூட பண்ணியிருக்கமாட்டோம். ஆனா, நம்ம தலையில சாணியைக் கரைச்சு ஊத்துவான்.

இதை உவமானமாவே சொல்லலை. நிஜமாவே சொல்றேன். ஒரு ஆளு பலம் குறைஞ்சு போறார்னா சத்தை சருகு எல்லாமே வந்துரு நின்னு அசிங்கமா பேசும். உன்னை வெட்டி பொலி போட்டுருவேன் அப்படின்னு சொல்லும். மனசு நொந்துபோற அளவுக்கு, பிஞ்சி போற அளவுக்கு அசிங்கப்படுத்துவாங்க. எல்லாம் சரி பண்ணிடலாம், பொண்டாட்டியை அனுப்பிவை அப்படின்னுவான். கூசாத பேசுவான். நம்மகிட்ட கையேந்தி 'அண்ணி சோறு நல்லாஇருந்தது'ன்னு சொன்னநாய் அதே வாயில இந்த வார்த்தையும் சொல்லும். அதை சகிச்சுக்கக் கத்துக்கணும்.

# 37

**2.**8.2002

''என்னால சகிச்சுக்க முடியலை. அதுமட்டுமில்லை, கோபம் வந்தது. மறுபடியும் எங்க கட்சி ஜெயிச்சுதுன்னு வச்சுக்க, ஒரு ஆறு பேரை சொலை பண்ணணும்னு நினைச்சேன். ஆறு கொலையில ஒரு கொலையில மாட்டினாலும் நான் உள்ளதான் போகவேண்டியிருக்கும். அப்பவும் கைவிட்டுடுவாங்க. காப்பாத்த மாட்டாங்க. அரசியலில் காழ்ப்புகள் சகஜம். காயங்கள் சகஜம். அதைப் பெரும் போக்காக எடுத்துக் கொள்ளவேண்டுமேயொழிய வெறித்தனமான கொலையிலே ஈடுபடக்கூடாது.''

நண்பர் அறிவானந்தம் சற்று உணர்ச்சிவசப்பட்டு விட்டார். ''தூண்டிவிட்டதே இவனா இருப்பான். இவன் யோக்கியன் மாதிரி பேசுவான். இதெல்லாம் யோசனை பண்ணி இதுக்கு இணையா இன்னொரு கம்பீரமான இடம் என்னான்னு பார்த்தேன். அது வியாபாரம். அரசியல், வியாபாரம் ரெண்டும் ஒரே விதம்.

ஒரு வியாபாரி தோத்துட்டா ஐயோ, பாவம்னு சொல்லுவானே தவிர, முடிஞ்சா உதவி பண்றதுக்கு வருவானே தவிர, அவனை இன்னும் அடிச்சுக் கொல்லணும்னு ாவனும் நினைக்கமாட்டான். ஒரு வியாபாரி மேல வந்தா அவனை மாதிரி உண்டா அப்படின்னு புகழறதுக்கு நூறுபேர் இருப்பான். ஆக, அரசியலைவிட வியாபாரம் நல்லது. வியாபாரிக்குக் கீழதான் அரசியல்வாதி இருக்கான்னு தெரிஞ்சுகிட்டு நான் இதுல இறங்கிட்டேன்.

இப்போ அம்பத்துநாலு வயசு. இன்னும் இருவது வருஷம் வீட்டோட இருப்பேன். இன்னும் பத்து வருஷம் நல்லா நடமாடுவேன். ஏதாவது பண்ணிக்கிட்டிருக்க வேணாமா. எங்க வீட்ல சொன்னாங்க, 'சாமி, கோயில்னு போகலாம் 'போறதா இருந்தா போயிக்க, நான் எதுனா பண்ணி ஜெயிக்கப் போறேன்' அப்படின்னு சொல்லிட்டேன்.''

''இந்த வேலையில ஜெயிச்சுடுவீங்களா மாமா. தலைக்கு எண்ணெய் நல்ல இடமா.''

''எனக்குத் தெரிஞ்சு அன்னபூரணி அம்மா ஆசிர்வாதத்துல இதைவிட ஜெயிக்கறதுக்கு சுலபமான விஷயம் எதுவுமில்லை. இதை இன்னும் பத்து வருஷம் முன்னாடி ஆரம்பிக்காம இருந்'தோமேன்னுதான் எனக்கு வருத்தமே தவிர, வேறெதும் வருத்தமில்லை. நம்ம இடத்தை நாம ஒழுங்கு பண்ணவேண்டிய நேரம் வந்துருச்சு. நான் புரோடக்ஷன், தம்பி சேல்ஸ் அப்படின்னு பிரிச்சுக்கணும். இல்ல, அம்மா இப்போ சொன்னாங்களே மூஞ்சிக்கு பூசற களிமண் பவுடர், அதனோட மொத்த ரைட்டும் எனக்குக் கொடுங்கன்னு கேட்கப்போறேன். கம்பெனி ஒரே கம்பெனி. கணக்கு வேறயா இருக்கும் இன்கம்டாக்ஸுக்காக வெவ்வேறாகப் பிரிச்சுக்கலாம்.''

''என்னா, கம்பெனி, கணக்குன்னு நிறைய பேச்சு ஓடுது.''

அறிவானந்தம் தம் மனதில் பட்ட விஷயத்தை அன்னபூரணியிடம் சொன்னார்.

''நீங்களும் உழைச்சிருக்கீங்க. நீங்களும் காசு போட்டிருக்கீங்க. எதுக்கு ரெண்டா பிரிக்கணும். நீங்க புரொடக்ஷன்ல இருங்க. தம்பி சேல்ஸ் பார்க்கட்டும். நீங்க இருக்கீங்கங்கற தைரியம்தான் எனக்கு ரொம்ப பெருசா இருக்கு சுகுமாரன் மட்டும் இதைத் தூக்கவே முடியாது.



நான் வித்துத் தரேன்னு எவனாவது வந்து நிப்பான். சுகுமாரனுக்கு ஒரு சோம்பல் தட்டும். சரி, வித்துக் கொடுன்னு அவங்கிட்ட கொடுத்துடுவான். அதுவும்தவிர களிமண் வாங்கவோ, வேற எதுனா வாங்கவோ அவனுக்குத் தெரியாது. அறுநூத்தி அம்பது ரூபா ஒரு பாட்டில்னு வாசனை பண்ணி டவுன்ல விட்டா போதும், சொம்பு தண்ணி முழுக்க வாசனை அடிக்குது. இப்போ பன்னீர் வந்ததுன்னாக்க, கடைக்கே போய் வாங்கிட்டு வந்துட்டோம்னாக்க, மூஞ்சிக்கு போடற பவுடர் வாசனையைவிட பன்னீர் வாசனை மூக்குக்கு இதமா இருக்கும். சுகுமாரனால பண்ணமுடியாது. உங்களால பண்ணமுடியும். உட்கார்ந்து தான் வேலை செய்ய முடியுமே தவிர, அலைய முடியாது. நீங்க அலையவும் முடியும், புரொடக்ஷனும் பார்க்க முடியும். எல்லாருக்கும் பொறுப்பு செய்து கொடுத்துட்டு நான் பேசாம உங்க வீட்ல இருக்கறவங்களோட சேர்ந்து, கலாவதி அம்மாவோட சேர்ந்து கோயில் கோயிலா போகலாமான்னு பார்க்கறேன். நேத்து கூட போன் பண்ணிச்சு, நீங்க வருவீங்களா கூப்டாக்க அப்படின்னு எனக்கு ரொம்பநாள் ஆசை ஊர் ஊரா போகணும்னு.''

''தாராளமா போங்க. நாங்க பார்த்துக்கிறோம். வெய்யில்நாள்ல வேணாம். கொஞ்சம் மழை பெய்யட்டும். அப்புறம் போகலாம்.''

ஐவர் சிலைக்கு அன்னபூரணி சந்தனம் குங்குமம் இட்டாள்.

அந்த ஆட்கள் கதவு திறந்து உள்ளே நுழைந்தார்கள். பின்கட்டு வழியாக ஏணிபோட்டு ஏறினார்கள். வரிசையாய் சுவரில் உட்கார்ந்து கொண்டார்கள். காத்திருந்தார்கள்.

அவர்கள் இருப்பது அறியாது திலகவதி கொல்லைப்புறக் கதவைச் சாத்தினாள். தாழ்போட்டாள்.

அவர்கள் தரையிறங்கினார்கள். அவர்கள் குதித்த போது கட்டிலில் படுத்திருந்த அன்னபூரணிக்குத் திக்கென்று நெஞ்சில் ஒரு கனம் விழுந்தது. மனதில் ஏதோ ஒரு இனம்புரியாத சங்கடம் பரவியது.

நெஞ்சு அடைக்கிறதா, வாயுக் கோளாறா, வயிற்றில் அமிலச்சுரப்பு அதிகமா, ஏன் இப்படி ஒருக்களித்துப் புரண்டு பிறகு கை ஊன்றி எழுந்திருந்தாள்.

பளிச்சென்ற ஏப்பம் வந்தது. தலை லேசாகச் சுற்றியது. ஏதோ உணவு தப்பு. செரிமானமாகவில்லை என்று நினைத்துக்கொண்டாள்.

இப்படி எல்லோருக்கும் இருக்குமா. இதற்கு என்ன மருந்து.

சீரகப்பொடியைச் செய்து, வெந்தயம், சுக்குப்பொடி என்று மூன்றும் கலந்து எடுத்துக் கொள்ளலாமா. வயிறு உபாதைக்கு உடனடி நிவாரணம் என்று சொல்லலாமா. புதினாவை அரைத்து மாத்திரையாக்குகிறார்களே. புதினா வாசனை வாய்விட்டு மூன்று நாள் போகாது. அதைவிட சீரகப்பொடி உத்தமமில்லையா. தூக்கம் வரவில்லை. போய் சுகுமாரன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்ற பார்க்கலாமா.

அவள் வெளியே வந்தாள். சாலையின் விளக்கு வெளிச்சம் படிமுனையில் விழுந்திருந்தது. கீழ் படியிலிருந்து மேலே பார்த்தாள். ஏதோ பேச்சுக் குரல்கள் கேட்டன. கதவு சாத்தி இருந்தது.

சுகுமாரன் அவன் மனைவியோடு சந்தோஷமாக இருக்கின்ற நேரத்தில் அவனைக் கலைக்க வேண்டாம்.

அப்பா இல்லாமல் வளர்ந்த பிள்ளை என்று பலபேர் சொன்னார்கள். ஆனால், அவன் பலப்பட்டு விட்டான்.



ஆரம்பத்தில் பயமாக இருந்தது. இப்பொழுது அப்படி யில்லை. அவனுக்கு ஆர்வம் வந்து விட்டது. தொழில் செய்ய வேண்டும் என்ற வேகம் வந்துவிட்டது. அவன் எந்த இடத்திலும் தவறு செய்யவில்லை. முன்பு இருந்த சிடுசிடுப்பு கூட இப்போது இல்லை. வெற்றி பெறாத நிலையில்தான் இளம் வாலிபர்களுக்கு வேதனையான பேச்சுக்களும் பொருமல்களும் வெளியாகின்றன.

அவன் வியாபாரி, கூச்சல் போடாதே, கனிவாகப்பேசு என்று சொன்னதும் அவன் எல்லா இடத்திலும் கனிவாகப் பேச ஆரம்பித்து விட்டான். இது ஒரு நல்ல சகுனம். பிள்ளையை சரியானபடி திசை மாற்றிவிட்டேன் என்பதில் பெருமையாகத்தான் இருக்கிறது.

அவள் மறுபடியும் தன் அறைக்குப் போக கொல்லைப் புறத்தில் சப்தம் கேட்டது. பாட்டில்கள் மோதும் சத்தம்.

யார், பாட்டில்கள் இவ்வளவு வேகமாக மோதுவதற்கு என்ன காரணம். பெருச்சாளிகூட இத்தனை சப்தம் எழுப்பாதே. திலகவதி எங்கே.

அவள் நகர்ந்து எதிர் அறைக்குப் போனாள்.

திலகவதி போர்த்தியபடி சுருண்டு தூங்கிக் கொண்டிருந்தாள்.

மறுபடியும் பாட்டில்கள் மோதும் சப்தம் கேட்டது.

அறிவானந்தம் இங்கேதானே இருக்கிறார், அவர் ஏதேனும் கொல்லைப் புறத்தில் வேலை செய்து கொண்டிருக் கிறாரா.

அவள் கொல்லைப்புறம் போக சற்று பயந்து மறுபடியும் அறிவானந்தம் எங்கே என்று பார்க்க வாசற்கதவு திறந்திருந்தது.

அறிவானந்தம் வாசற் கதவுக்கும் வெளிக்கதவுக்கும் நடுவே இடைப்பட்ட வராண்டாவில் கால்நீட்டிப் படுத்திருந்தார்.

ஐவர் கோவிலில் ஒரே ஒரு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. ஊதுவத்தி வாசனை பரவியிருந்தது.

ஐவர் கோவிலில் ஒரே ஒரு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. ஊதுவத்தி வாசனை பரவயிருந்தது.

அறிவானந்தம் ஒரு அற்புதமான மனிதர். எல்லாவிதமான ஆட்டமும் ஐம்பது வயதுக்குள் ஆடிவிட்டு பிறகு மெல்ல, மெல்ல நிதானமாகி இப்பொழுது வியாபாரம் செய்ய வந்துவிட்ட மனிதர். அவர் மிகப்பெரிய பலம்.

உத்தியோகத்திலிருந்து ஒய்வு பெற்றவர்களைவிட அரசியலிலிருந்து ஒய்வு பெற்றவர்கள் மிகத் திறமை யானவர்கள். கிட்டத்தட்ட இவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் போல. உலகத்தின் சகல நெளிவு சுளிவுகளும் இவர்களுக்குத் தெரியும். தேவையானால் பந்தா காட்ட முடியும். அப்படி இல்லாத நேரத்தில் மிகுந்த புன்சிரிப்போடு சகலமும் கேட்டுக்கொண்டு சாமர்த்தியமாக பதில் சொல்லமுடியும். இவர் கூட இருப்பின் சுகுமாரன் இன்னும் அதிகம் கற்றுக் கொள்வான்.

திலகவதிக்குத்தான் ஓயாத வேலை. அவள் எவ்வளவு தூரம் இதைத் தாக்குப் பிடிப்பாள் என்று தெரியவில்லை. ஆனாலும் திலகவதிக்கு இன்னும் வயது இருக்கிறது. இதில் இன்னும் மனம் ஒப்பி ஈடுபட்டால், இன்னும் அதிகம் இதைப்பற்றி யோசித்தால் அவளுக்கும் இது நேசமாகிவிடும். எந்த ஆதரவும் இல்லாத இந்தப் பெண்மணிக்கு இந்த வியாபாரம் மிகப்பெரிய ஆதரவாக இருக்கும்.



சுகுமாரனின் மனைவி கலாவதி இவளை மிக நேசமாகக் கவனித்துக் கொள்கிறாள். இதுவும் பெரிய கொடுப்பினை.

மறுபடியும் கொல்லைப்புறத்தில் பாட்டில்கள் உருட்டும் சத்தம் கேட்க, அவள் சட்டென்று திடுக்கிட்டு வேகமாகக் கொல்லைப்புறம் நோக்கிப் போனாள்.

நாலாயிரம் பாட்டில்கள் வெளியேறிவிட்டன. மூட்டையைத் தூக்கும்போதுதான் சத்தம் வருகிறது. அட்டைப் பெட்டிக்குள் வைத்தது அலுங்காமல் போகிறது.

# 38

அவள் அட்டைப் பெட்டியை முதலில் வைத்துவிட்டு பாக்கியிருந்த மூன்று கோணி மூட்டைகளை மெல்ல தூக்கிக்கொடுத்தான்.

சத்தம் பெரிதாக இருந்தது. ''மெல்ல...'' என்று கடிந்து கொண்டான். அவனுக்கு தலை வழுக்கையாக இருந்தது.

முதல் மூட்டையை ஏற்றினான். அடுத்த மூட்டையை அவனே தலையில் தூக்கிக்கொண்டு நின்றான் குனிந்த சுவர் மேல் இருந்தவன் வாங்கிக்கொள்ள அவன் தளர்ந்தான். மூன்றாவது மூட்டையைப் பிரித்து அந்த பாட்டிலில் என்ன என்று பார்த்தான்.

இருட்டில் எதுவும் தெரியவில்லை. தெருவில் இருந்த மெல்லிய வெளிச்சத்தில் அது என்ன என்று படித்தான்.

தலைமுடி வளர்கிறதாமே என்று ஆச்சரியப்பட்டான். மூடியைத் திருகினான். உள்ளங்கையில் கவிழ்த்துக்கொண்டு தலையில் தேய்த்துக்கொண்டான்.

''தே... அறிவிருக்காடா உனக்கு.'' கிழவன்போல் இருந்தவன் சுவர் மீதிருந்து கத்தினான்.

''இப்போ போய் எண்ணெய் தேய்ச்சிக்கறியே.''

''இல்லீங்க. முடி வளர உதவுமாம் இந்த எண்ணெய். எனக்கு முடியே இல்லை. அதனாலதான் தேய்க்கப் பார்த்தேன் வருதான்னு.''

''அந்தக் கருமாந்தரத்தை அப்புறம் செய்துக்கக்கூடாதா. கையில எண்ணெய் வச்சா வழுக்காதா.''

''ஒண்ணும் இல்லீங்க. நல்லா கீழ மண்ணுல போட்டு புரட்டித் தேய்ச்சிடலாம்.'' அவன் அடுத்த கையில் ஊற்றி தலையில் தேய்த்துக் கொண்டிருந்த போது கொல்லை கதவு பக்கம் சத்தம் கேட்டது.

சுவர் மீது இருந்தவன் சட்டென்று இறங்கி ஏணியில் பதுங்கிக்கொண்டான்.

அவன் தலை மட்டும் அங்கு தெரிந்தது. கீழேயிருந்தவன் என்ன செய்வது என்று தெரியாமல் கொல்லைக் கதவைப் பார்த்தான். கொல்லைக் கதவு விரியத் திறந்தது.

அன்னபூரணி நின்றிருந்தாள்.

ஒரு அட்டைப்பெட்டி கூட இல்லாமல் ஆள் மட்டுமே நிற்பதும், கையில் பாட்டில்களுடன் நிற்பதும் பார்த்துத் திடுக்கிட்டாள்.

கதவை மூட முயற்சிக்கும் முன்னர் ''யாருடா நீ'' என்று கத்தினாள்.

கையிலிருந்த பாட்டிலைத் தூக்கி மிக வேகமாக அவளைப் பார்த்து அந்த ஆள் அடித்தான். பாட்டில் பறந்து வந்து சட்டென்று அவள் நெற்றியின் நடுப்பக்கம் தாக்கிற்று.



அவள் மீது ஐவர் தைலம் வழிந்தது. சுருண்டு கீழே விழுந்தாள். கதவு பெரிய ஓசை போட்டது. அறிவானந்தம் விழித்துக் கொண்டார்.

'எங்கிருந்து இவ்வளவு பெரிய ஓசை. வீட்டுக்குள்ளிருந்தா. யாராவது இடித்துக்கொண்டு விட்டார்களா.''

எழுந்திருந்து கதவைத் திருப்பிப் பார்த்தார்.

கதவு விரியத் திறந்திருந்தது. 'ஒருக்களித்து வைத்தோமோ ஏன் கதவு திறந்திருக்கிறது. யாராவது உள்ளே போய் விட்டார்களா.' பதறினார்.

கொல்லைப்பறத்தில் பாட்டில்கள் அசையும் ஓசை கேட்டது.

கடைசி மூட்டையைத் தூக்கி அவன் சுவர் ஆளிடம் கொடுக்க சுவர் ஆள் அதை நீட்டி வாங்கிக் கொண்டான்.

''செமத்தியா போட்டடா,என்னாச்சு பாரு கிழவிக்கு.''

''அதெல்லாம் ஒண்ணும் பார்க்கவேணாம்,போ.''

அவன் சுவர்மீது தாவி ஏறினான். சுவர் விளிம்பில் கால்வைத்தான். கையில் எண்ணெய்ப் பிசுக்கு அதிக மிருந்தது. சுவரில் தேய்க்க முற்பட்டான். ஆனால், எண்ணெய்ப் பிசுக்கு போகவில்லை.

பாட்டில் மூட்டையை அடுத்த பக்கம் கொடுத்துவிட்டு அதை வாங்கியவன் வேகமாகக் கோணியோடு நடப்பதைப் பார்த்துவிட்டு ஏணியில் கால்வைத்துக்கீழே இறங்கினான். ''போப்பா...'' என்று குரல் கொடுத்தான்.

அறிவானந்தத்திற்கு அந்தக் குரல் கேட்டது. தபதபவென்று ஓடினார். வழியில் அன்னபூரணி இருப்பது தெரியாமல் தடுக்கித் தரையில் விழுந்தார்.

அந்த ஆள் சுவரில் கைவைத்து 'எகிற கை வழுக்கியது சட்டென்று முகவாய் சுவரில் மோத அவன் அடிபட்டுக்கீழே விழுந்தான்.

''என்னாடா ஆச்சு.''

மறுபடியும் மறுபக்கமிருந்து குரல் கேட்டது.

அவனுக்குச் சரியான அடி. தாடையில் அடித்தது உச்சந்தலை வரைவலித்தது.

ச்சே...இந்த எண்ணெயைத் தொட்டிருக்கக்கூடாது என்று ஆத்திரப்பட்டான். மறுபடியும் வேகமாகப் பீப்பாயில் கால் ஊன்றி சுவரின் விளிம்பில் கால் வைக்க அறிவானந்தம் எழுந்து பார்த்தார். திருட்டு என்பது தெரிந்துவிட்டது. அட்டைப் பெட்டிகள் காணோம் என்பது தெரிந்துவிட்டது.

சட்டென்று பக்கத்திலிருந்த இரும்பு பக்கெட்டை எடுத்தார். ஓடிப்போய் ஏற முயற்சித்த அவன் பிருஷ்டத்தில் ஓங்கி அடித்தார். இடுப்பில் மறுபடியும் வேகமாக அடிபட்டது. அவன் ஊன்றி எழுந்திருக்கும் பொழுது எகிறி மறுபடியும் அவன் காலில் அடித்தார். இந்த முறை நெஞ்சில் சுவரில் மோதிக் கொண்டான். இந்தப் பக்கமாக விழுந்தான். பல் கடித்தான். ஆத்திரமானான்.

அன்னபூரணி தடுமாறி எழுந்திருந்தாள். திருட்டு நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தாள். ''திருடன்...திருடன்'' என்று கத்தினாள். பலமாகக் கதவைப் பிடித்து ஆட்டி சப்தம் எழுப்பினாள். திலகவதி விழித்துக் கொண்டாள். சுகுமாரன் விழித்துக்கொண்டான்.

அந்த வீடு மொத்தமும் விழித்துக் கொண்டது. அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் விழித்துக் கொண்டார்கள்.



ஒருவன் அதில் மதில்சுவர் மீது ஏறி நின்றான். அவன் இடுப்பிலிருந்து ஒரு அரிவாளை எடுத்தான்.

''பொம்பளை தானே கத்தினா அதை அரிவாளாலேயே மிரட்டிடலாம்'' என்று சொல்லி கால் வைத்து ''ஏய்...'' என்று குரல் கொடுத்தான்.

ஆட்கள் இருப்பது தெரிந்ததும் பயந்து பின்வாங்கினான். அறிவானந்தம் பக்கெட்டால் மறுபடியும் ஓங்கி அவன் தலையில் அடித்தார்.

அடிபட்டவன் குரல் தெருவெங்குப் கேட்டது.

அவனைக் காப்பாற்றியே ஆகவேண்டும். இல்லையென்றால் அவன் நிச்சயம் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுவான் என்று மறுபக்கம் இருந்தவனுக்குத் தெரிந்தது. வேகமாக ஏணியில் கால்வைத்து ஏறினான். சுவர்மீது அமர்ந்து கொண்டான். அங்கிருந்து சட்டென்று கீழே இறங்கினான்.

அந்த அரிவாளால் அறிவானந்தத்தைத் தாக்கத்துவங்க அதை பக்கெட்டால் தடுத்தார். அவன் நெஞ்சில் அடித்தார்.

அவருக்கு சண்டை தெரியும். ஆனால் மறந்து போயிருந்தது. மூட்டுகள் வலித்தன.

அறிவானந்தத்தால் முடியவில்லை என்று தெரிந்து கொண்ட அன்னபூரணி சுகுமாரனை உரக்க ''சுகுமாரா.. சுகுமாரா.'' என்று முடியாமல் திக்கித் திணறி கத்தினாள்.

அறிவானந்தம் ஒருமுறை பக்கெட்டைச் சுழற்றி ஒருவன் தோளில் அடிக்க இரண்டாமவன் தடுமாறி தலையில் விழுந்தான். எட்டி அவர் காலில் உதைத்தான்.

அறிவானந்தம் மல்லாக்க விழுந்தார்.

அவன் ஓடிப்போய் விழுந்தவனைத் தூக்கினான். ''கிட்ட வந்தீங்க கொன்னுடுவேன்'' என்று அவனைத் தூக்கி நிறுத்தியபடியே கையிலிருந்து சிறிய அரிவாளைக்காட்டினான்.

அது கறி கொத்தும் கருவி. குத்தியே ஆக வேண்டும் என்ற வெறி முதலில் அடிபட்டவனுக்குத் தோன்றி அவன் இந்த முறை அழுத்தமாகக் கால் வைத்து சுவரை உடும்புப் பிடியாகப் பிடித்து அடுத்த பக்கம் தடேரென்ற விழுந்தான். அதிலும் அடிபட்டது.

இங்கே குதித்தவன் அரிவாளைக் காட்டியபடியே சுவர்மீது ஏறி உட்கார அன்னபூரணி சற்று முட்டாள் தனமாக உணர்ச்சி வசப்பட்டு ஏறுபவன் காலைப் பிடித்து இழுத்தாள்.

இதற்கு முன் இருந்தவன் எண்ணெய் வைத்து வழுக்கிய இடத்தில் இவனும் கைவைக்க இவனுக்கும் வழுக்கியது. அவன் சட்டென்று பீப்பாய்க்கு இறங்கினான். வலக்கையில் இருந்த கறி கொத்தும் அரிவாளை உறுதியாகப் பிடித்துக் கொண்டு அருகே வந்து மறுபடியும் கால்பிடித்து இழுக்கும் அன்னபூரணியின் தலையில் ஓங்கி வெட்டினான்.

அன்னபூரணி சாய்ந்தாள்.

அவன் எகிறி அடுத்த பக்கம் போனான்.

அன்னபூரணியை வாரி மடியில் போட்டுக் கொண்டு கீழேயிருந்த துணிக்கந்தையைத் தூக்கி அவள் தலையில் வைத்து ''சுகுமாரா..சுகுமாரா'' என்று அறிவானந்தம் கத்தினார்.

அவர்கள், அடுத்த பக்கம் இருந்தவர்கள் பாட்டில் களோடு ஏறி மறைந்தார்கள். அவர்கள் ஏறி வந்த வேன் சிந்தாரிப்பேட்டையை விட்டு வெகுதூரம் பயணப்பட்டது.



அன்னபூரணிக்கு நினைவு தப்பியது. மறுபடியும் வந்தது. நினைவு தப்பியது. மீண்டும் வந்தது.

கண்விழித்து அறிவானந்தத்தைப் பார்த்தாள்.

''எங்க...சு...கு...மா...ர...ன்...எ...ங்...க'' திணறித்திணறிக் கேட்டாள்.

மாடியிலிருந்து உருண்டு வருவது போல் கீழே வந்தான்.

கொல்லைக் கதவு விரியத் திறந்திருப்பது பார்த்து அந்தப்பக்கம் ஓடினான். வாசற்கதவு திறந்திருக்கிறது என்று அவன் மனைவி ஓடினாள். திலகவதியும் பின்னால் ஓடினாள்.

அனைவரும் போய் அன்னபூரணியைச் சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள். எல்லா விளக்குகளையும் போட்டார்கள். தண்ணீரும், பஞ்சும் எடுத்து வந்தார்கள். மருந்து போட்டார்கள். தலையில் வைத்துக் கட்டினார்கள்.

சுகுமாரன் ஓடிப்போய் கதவு திறந்து அக்கம்பக்கம் குரல் கொடுத்து, போகின்ற ஆட்டோவை நிறுத்தி அள்ளி எடுத்துக்கொண்டு மருத்துவ மனை நோக்கிப் பறந்தார்கள்.

சுகுமாரன் மனைவி மட்டும் அங்கிருந்தாள் போலீஸுக்குப் போன் செய்தாள்.

# 39

**16.**8.2002

கபாலம் உடைந்திருக்கிறது. மூளை தாக்கப் பட்டிருக்கிறது. ரத்தம் இன்னும் கசிகிறது. உடனடியாக ரத்தக் கசிவை நிறுத்த வேண்டும். அவர்கள் ரத்தக்கசிவை

நிறுத்துவதற்கு ஊசி போட்டார்கள். தலையில் சரியானபடி பாண்டேஜ் கட்டினார்கள். தையல் போட்டார்கள். கழுத்து அசையாமல் இருக்க இறுக்கக் கட்டி கட்டிலில் படுக்க வைத்தார்கள். உடைகளை உறுவி வேறு உடை மாற்றினார்கள்.

தனியார் மருத்துவமனைக்கு எடுத்துப்போ. இது கடினமான விஷயம் என்று சொல்ல ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு தனியார் மருத்துவமனைக்கு அன்னபூரணி மாற்றப்பட்டாள்.

அங்கே உடனடியாக ரத்தம் கொடுக்கப்பட்டது. வலியை மறக்க இன்னொரு ஊசி போடப்பட்டது.

அன்னபூரணி மெல்ல கண் விழித்தாள்.

'ஆஹோ...யாருடா அது.''

''தெரியலையேம்மா.''

''மகேஸ்வரின்னு ஒரு பொண்ணு இருந்துதே அந்தப் பொண்ணு மூஞ்சிய சுவத்துல பார்த்தேன்டா. அந்தப் பொண்ணு குரலை அப்புறம் கேட்டேன். கீச்சீச்சுனு பேசும். மகேஸ்வரியான்னு பாருடா.''

''யார் வேணாலும் இருந்துட்டுப் போகட்டும்மா. எனக்கு அது முக்கியமில்லை. உனக்கு எப்படிம்மா இருக்கு.''

''தலை ரொம்ப பாரமாஇருக்குடா. தாங்கலை எங்கயோ கண்ணெல்லாம் வலிக்குதுடா. பல்லெல்லாம் வலிக்குது. காதுக்குள்ள ஒய்ங்...னு சத்தம் கேட்குது.''

''சரி ஆயிடும்மா. சரி ஆயிடும்.''



''ஆவாதுன்னு தோணுதுடா.''

''ஏம்மா–ஏன் அப்படிச் சொல்ற.'' ''வியாபாரிக்கு ஜெயிச்சாலும் வெட்டு, ஜெயிக்காட்டாலும் வெட்டு. வியாபாரியா இருக்கறது ரொம்ப கஷ்டம்டா.''

''ஏம்மா இப்போ அதெல்லாம் நினைக்கற''

''ஆனாலும்... நாம வியாபாரியாத்தான் இருக்கணும். நம்மள உட்காரவச்சு வேற யாரு சாப்பாடு போடு வாங்க சொல்லு.''

''அம்மா நமக்கு இந்த வியாபாரமே வேணாம். நாம இந்த வீட்டை வித்துட்டு பெசன்ட் நகர்ல இன்னொரு வீடு வாங்கி...''

''ச்சேய்... நிறுத்துடா பேச்சை...'' அவள் கூவினாள். மூச்சிரைத்தது. கண்கள் சொருகின.

''ஒண்ணுபத்தா பெருகணுமே தவிர பத்தை ஒண்ணு ஆக்கக் கூடாதுடா. உட்கார்ந்து சாப்பிடற ஆம்பளைக்கு மரியாதையே இல்லை நீ மேல வாணும்னுதான்டா இத்தனை கஷ்டப்பட்டேன். நீ வந்துட்டா. ஏன் மறுபடியும் அப்படியே பேசற. ஐவர் தைலம் எனக்கு ஆரம்பிச்சேனா, இல்லை திலகவதிக்கு ஆரம்பிச்சேனா. உனக்குடா. உனக்காக ஆரம்பிச்சேன். அறிவானந்தம் மாதிரி ஒரு ஆள் கூட இருக்கறபோது நீ என்னாத்துக்கு வியாபாரம்னு சொல்லதடா. பெருசா கொண்டு வா. எனக்கு சரி ஆயிடும். பத்து நாள்ல சரியாயிடும் நான் கொஞ்சம் அதிகமா அலைஞ்சிட்டேன். எல்லார் கண்ணு முன்னாடியும் நின்னுட்டேன். அதான் திருஷ்டி பட்டுப்போச்சு.''

அவள் சோர்வோடு கண்களை மூடிக்கொண்டாள்.

மருத்துவர்கள் இன்னும் ஆறுமணி நேரத்தில் அறுவை சிகிச்சை என்று தீர்மானம் செய்தார்கள். மூளையிலுள்ள ரத்த உறைதலை நீக்கவேண்டுமென்று சொன்னார்கள்.

கைகளில் ஊசிகுத்தி, உணர்விருக்கிறதா என்று கேட்டார்கள். அவள் வலது காலில் உணர்வு மரத்துக் கொண்டு வருவது தெரிந்தது. அது ரத்த உறைவினால்தான் என்று டாக்டர்கள் சொன்னார்கள்.

''தலையில உள்ள முடியெல்லாம் எடுக்கப் போறோம்.அசையவே கூடாது. அசையாம இருங்க'' என்று சொல்லி கழுத்தைத் தூக்கி வைத்தார்கள். தலையில் தண்ணீர் தெளித்தார்கள்.

அவள் கைதூக்கி நிறுத்து என்று காட்டினாள்.

''முடி எடுக்கப்போறீங்களா.''

''ஆமாம்மா.''

''எடுக்காத செய்ய முடியாதா.''

''முடியாதும்மா.''

''அப்போ எங்க வீட்ல இருக்கறவங்களை ஒரு தடவைபார்த்துக்கறேனே.''

''எதுக்கும்மா.''

''நான் முடியில்லாத அவங்க பார்த்ததில்லை. என்னை முடியோட அவங்க ஒரு தடவை பார்த்துக்கட்டும்.''

''இதெல்லாம் தேவையில்லைம்மா.''

''தேவை.''



அவள் தெளிவாகச் சொன்னாள். உறவினர்கள் உள்ளே அழைக்கப்பட்டார்கள்.

அறிவானந்தத்தைப் பார்த்து அவள் கைகூப்பினாள்.

அறிவானந்தத்தைப் பார்த்து அவள் கைகூப்பினாள்.

''ஆப்ரேஷன் பண்ணப் போறாங்களாம். பிழைப் பேனான்னு தெரியலை. சுகுமாரனைப் பார்த்துக்கோங்க. இது ஒரு நல்ல தொழில். மேல மேல வளர்ந்துடலாம். கூடவே திலகவதியைக் கூப்ட்டுக்கோங்க. எல்லாரும் ஒத்துமையா இருங்க.''

''என்னாம்மா ஏன் அப்படி பேசறீங்க. கடைசி காலத்துல பேசற மாதிரி. நீங்க குணமாயி வந்துருவீங்கம்மா.''

''வரணும்டா. வரணும்னு எனக்கு ஆசை. வந்து நீங்க எப்படி தொழில் பண்றீங்கன்னு பார்க்கணும்னு ஆசை. டேய்... நான் வருவேண்டா. உடம்போட வராட்டாலும் சூட்சுமமா இந்த திரௌபதி சிலையாண்ட உட்கார்ந்து கிட்டிருப்பேன். அந்த பஞ்சபாண்டவர்கள் அஞ்சுபேரையும் சுத்திச் சுத்தி வருவேன். விளக்கேத்தி வைங்கடா. ஊதுவத்தி கொளுத்துங்க.''

''அம்மா... தப்பு தப்பாபேசற.''

''இல்லைடா. என்னமோ உள்ள ஒரு பயம் வந்துடுச்சி.''

''ஏன் பயப்படற.''

''உங்கப்பாக்கு உடம்புசரி ஆயிடுச்சிடா. தகதகன்னு இருக்காரு.''

மெல்ல மெல்ல அவள் உளற ஆரம்பித்தாள். பேசியது போதும் என்று தாதிகளும், டாக்டர்களும் கைகாட்ட அவர்கள் வெளியே வந்தார்கள்.

சுகுமாரன் முகம் பொத்தி அழுதான். கபாலத்தை மெல்லப் பிளந்து மூளையைப் பார்த்தபோது பல பகுதிகளில் ரத்தம் உறைந்திருந்தது. முதலில் உறைந்திருந்த ரத்தத்தை நீக்கியபோது அவள் உடம்பு விலுக்கென்று இழுத்தது.

அடுத்த மூன்றாவது நிமிடம் அன்னபூரணி மரண மடைந்தாள்.

''இந்நேரம் இருந்ததே பெரிய விஷயம். அந்தம்மா மூச்சைப் பிடிச்சு ஏதோ சொல்லிட்டுப் போகணும்னு சொல்லிட்டுப் போயிருக்கு. முடியைத் தூக்கிப் போட்டுட்டியா.''

''இல்லை.''

''அப்படியே மேல ஒட்டவச்சு சுத்தி பேண்டேஜ் போட்டு இறுக்கக் கட்டிடு.

முடி எடுக்காத மாதிரியே இருக்கட்டும். இந்தம்மா முடியோட இல்லாம இருக்கறதுக்கு வெட்கப்பட்டாங்க. முடியோட இருக்கறா மாதிரியே செய்'' என்று அவருக்கு டாக்டர் உத்தரவிட தாதி அவ்விதமே செய்தாள்.

ஊர் கூடி கதறிற்று.

சுகுமாரன் ஆடிப்போய்க்கிடந்தான்.

அறிவானந்தம்தான் சுதாரித்துக்கொண்டு முன்னும் பின்னும் அலைந்தார். அறிவானந்தத்தின் வீடு ஒட்டு



மொத்தமாய் இவர்கள் கூட்டுக்குள் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தது.

போலீஸ்காரர்கள் சுற்றிச் சுற்றி வந்தார்கள். பலரைக் கேள்வி கேட்டார்கள். திருடன் தப்பிக்கும்போது வெட்டி விட்டான் என்பது சகலருக்கும் புரிந்தது. கைரேகைகள் எடுக்கப்பட்டன.

அரைமணி நேரத்தில் கைரேகையை வைத்துக்கொண்டு யார் கொள்ளையன் என்று கண்டு பிடித்துவிட்டார்கள்.

அவன் வீடு நோக்கிப் போய் எட்டி உதைத்து எல்லோரையும் இழுத்துப்போட்டு அடித்தார்கள். எங்கே... எங்கே என்ற கேட்டார்கள். வண்டியை விவரம் தெரிந்து கொண்டார்கள். வண்டியைத் தேடச்சொன்னார்கள்.

பெங்களூரில் நின்று வேறு வண்டிக்கு சரக்கு மற்றிக் கொண்டிருக்கும்போது அவர்களால் அடையாளம் காட்டப்பட்டது. ஆட்கள் சுற்றி வளைக்கப்பட்டார்கள். மகேஸ்வரி இறங்கி அந்த இருட்டு காட்டுக்குள் ஓடிப் போனாள். அவளைத் தேட முடியாமல் ஆண்களை போலீசார் அடித்து நொறுக்கினார்கள்.

சென்னைக்குப் போனால் போலீசார் மடக்கிக் கொன்று விடுவார்கள் என்று மகேஸ்வரிக்குத் தெரியும். எனவே, பையிலுள்ள அறுநூறு ரூபாயோடு வேறு ஊருக்கு பஸ் ஏறினாள்.

அன்னபூரணிக்குப் பல பேர் வாய்க்கரிசி போட வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். வரிசையில்

நின்றார்கள். ஒருவர் அரிசியை வாங்கிவந்து எல்லோருக்கும் பிடிப் பிடியாய்க் கொடுக்க சுகுமாரன் தள்ளிநின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிந்தான்.

அறிவானந்தம் அருகே வந்தார்.

''கொள்ளி வைக்கும்போது அழாத. அழுதா உங்கம்மாவுக்குப் புடிக்காது. ஒரு வியாபாரி எதுலயும் ரொம்ப நேரம் சிக்கக்கூடாது. ரொம்ப நேரம் அழுவக்கூடாது. ரொம்ப நேரம் துக்கப்படக்கூடாது. அப்பப்போ உதறிட்டு அடுத்த வேலை என்னன்னு பார்க்கணும். எல்லாப் பேப்பர்லயும் அம்மாவோட சாவு வந்திருக்கு. எல்லாப் பேப்பர்லயும் ஐவர் தைலம்னு சொல்லபட்டிருக்கு. அம்மா யாரு, அம்மா எப்படி மேல் வந்தாங்க, ஐவர் தைலம் எப்படி கண்டுபிடிக்கப் பட்டிருக்குன்னு நான் சொல்லிட்டேன். அம்மா சொன்னா மாதிரி சொல்லிட்டேன். பேப்பர்ல வரும். அம்மா செத்தபோது கூட அதை வியாபாரமா நாம மாத்திக்கணும். இனி ஐவர் தைலத்தை கொடிகட்டிப் பறக்கவைக்கணும். இது என் ஆசை இல்லைடா. உன் ஆசையும் இல்லை. அன்னபூரணி அம்மா ஆசை.

அதான் சொல்றேன். கொள்ளி வைக்கறபோது அழுவாத.''

நெருப்பு வைக்கோலில் வைக்கப்பட்டு மெல்ல வைக்கோல் எரிய புகை எழுந்தது. மெல்ல மெல்ல தீப் பிழம்புகள் தோன்றின.

அவன் திரும்பிப் பார்க்காமல் அறிவானந்தம் அணைத்துக் கொள்ள சுடுகாட்டைவிட்டு வெளியேவந்தான்.



வண்டியிலுள்ள மனைவியைப் பார்த்து வாய்விட்டு அழுதான். அவன் மனைவி அவனை இழுத்து மடியில் போட்டுக் கொண்டு முகத்தோடு முகம் வைத்துக் கொண்டு அவளும் அழுதாள்.

''பெசன்ட் நகர்ல வீடு வாங்குவோம். சத்தியமா வீடு வாங்குவோம். இந்த வீட்டை வித்துட்டு இல்ல. இந்த வீட்டை அன்னபூரணி அம்மாள் இல்லம்னு வச்சுகிட்டு இந்த வீட்ல செய்யற தொழிலால பெசன்ட்நகர்ல வீடு வாங்குவேன். வீடு மட்டுமில்லை, எல்லா இடத்துலயும் நிலம் வாங்குவேன். கட்டடம் கட்டுவேன். கோயில் கட்டுவேன். ஐவருக்கு, பஞ்ச பாண்டவருக்குக் கோயில் இல்லை அதே மாதிரி அன்ன பூரணிக்கும் கோயில் இல்லை அன்னபூரணி ஆலயம் அப்படின்னு மெட்ராஸ் தாண்டி ஒரு இடத்துல பெரிய கோயில் வரும்.

யாருக்கெல்லாம் சோறு போட்ட தாயா நினைப்பிருக்கோ அவங்களெல்லாம் வந்து பாருங்க, யாரெல்லாம் சோறுபோட்ட தாயை தெய்வமா நினைக்கறீங்களோ அவங்களெல்லாம் வந்து பாருங்கன்னு நான் விளம்பரம் பண்ணுவேன்.

அன்னபூரணி சுகந்த பாக்கு, அன்னபூரணி இஞ்சி மிட்டாய். விடமாட்டேன் அறிவானந்தம் மாமா, நான் விடமாட்டேன். என்னைத் தூக்கி நிறுத்தின அம்மாவுக்கு கோயில் கட்டாத நான் ஓயமாட்டேன்.''

அவன் அழுகையை நிறுத்தினான்.

அந்த வண்டிக்குள் இருந்தவர்கள் அமைதியாக இருந்தார்கள்.

அன்னபூரணி அம்மாள், அவர்கள் மனம் முழுவதும் நிரம்பிக்கிடந்தாள்.

அன்னபூரணி என்பது ஒரு பெண்மணியின் பெயரல்ல. அது ஒரு சக்தி. அது வேறு விதமாக அவர்களிடமிருந்து வெளிப்படும் ஒருநாள். வெகு நிச்சயமாய்.

சென்னை மாவட்ட கிளை நூலகம்
36838
5328632
சென்னை - 99.